# மலையகப் பரிசுக் கதைகள்



கலைஒளி முத்தையாபிள்ளை
நினைவுச் சிறுகதைப் போட்டி

# மலையகப் பரிசுக் கதைகள்

கலைஒளி முத்தையாபிள்ளை
நினைவுச் சிறுகதைப் போட்டி

# மலையகப் பரிசுக் கதைகள்

கலைஒளி முத்தையாபிள்ளை
நினைவுச் சிறுகதைப் போட்டி

தொகுப்பு:
மணிமேகலை கமலகாந்தன்

கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு
1994

MALAIAKAP PARISUK KATHAIGAL
(Collection of Srilankan upcountry short stories)

Edited by: MANIMEGALAI KAMALAKANTHAN

First Edition: December 1994

Copyright Reserved


Published by : H.H. Wickremasinghe,
Kalai Oli Muthiah Pillai
Memorial Committee,
39/21, Alwis Place, Kotahena,
Colombo-13, Sri Lanka.
Ph: 435652

Wrapper designed by : M. Trotsky Marudu

Typeset by : Indhu Lassers, Madras-28.
Ph: 4935082

Printed at : Ark Printers, Madras-28.

Price: 75/-



மலையகத்தின் பத்திரிகை முன்னோடியான
பதுளை கலைஒளி முத்தையாபிள்ளை அவர்களின்
மலரடிகளுக்கு அன்புக் காணிக்கை

# உள்ளடக்கம்


முன்னுரை - தெளிவத்தை ஜோசப்

போட்டியும் கதைகளும் தொகுப்பும் - சில குறிப்புகள்
- எச்.எச். விக்ரமசிங்க

1. விரக்தி - அல் அஸூமத் 1

2. தலைக்கொரு கூரை - மாத்தளை வடிவேலன் 11

3. கப்பல் எப்பங்க? - கே. கோவிந்தராஜ் 20

4. இனி எங்கே? - மு. சிவலிங்கம் 27

5. அந்த ஜானகியைத் தேடி - மல்லிகை சி. குமார் 34

6. சந்தனக்கட்டை - புலோலியூர் க. சதாசிவம் 47

7. பொறுத்தது போதும் - பெ. ராஜதுரை 55

8. விடியல் எப்போது? - சுகந்தி வெள்ளைய கவுண்டர் 61

9. உயர்ந்த உள்ளங்கள் - இ. பரமேஸ்வரன் 65

10. இருட்டு - மெய்யன் நடராஜா 74

11. இங்கெவர் வாழவோ? - ஏ.எஸ். பாலச்சந்திரன் 80

12. சாபக்கேடு - நளாயினி சுப்பையா 83

13. பசி - பாலரஞ்சனி சர்மா 89

14. சமர்ப்பணம் - த. மயில்வாகனம் 97

15. சட்டி சுட்டுவிடும் - ரோஹினி முத்தையா 103

16. இது ஒன்றும் புதிதல்ல - பேபி ராணி இம்மானுவேல் 108

மலையகத்தின் பத்திரிகை முன்னோடி 110

எழுத்தாளர்களின் விபரங்கள் 116

# முன்னுரை

பதுளை கலை ஒளி முத்தையா பிள்ளை அவர்களின் நினைவுக்கான மலையகச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளின் தொகுப்பு இது.

ஈழத்துப் பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்ட சிறுகதைகளில் தேயிலை, ரப்பர் தோட்டங்களின் உடல் உழைப்புத் தொழிலாளர்களாக வாழும் இந்திய வம்சாவளி மக்களைப்பற்றிய படைப்புகளுக்கு ஒரு தனி மதிப்புண்டு.

இக்கதைகள் பத்திரிகை, சஞ்சிகை ஆகியவற்றில் வெளிவரும்போது 'மலையகக் கதை' என்னும் அடையாளத்துடன் வெளியிடப்பட்டமையும் இதற்கொரு உதாரணமாகும்.

இலங்கையில் ஆங்கிலேயரின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் அறிமுகமே தோட்டத் தொழிலாளர் என்னும் இம்மலையகச் சமூகத்தினரின் ஆரம்பமாகும். ஏறத்தாழ 160 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டில் வாழ்ந்தாலும் இரண்டு மூன்று தலைமுறைகளைக் கடந்து விட்டாலும் மிக அண்மைக்காலம் வரை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட அந்நிய மனப்பான்மை கொண்ட சமூகமாகவே இவர்கள் இருந்துவிட்டது வேதனையுடன் குறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவர்களின் பிரதான அம்சமாக பெருந்தோட்டத்தொழில் இருந்ததாலும், அடிப்படைத் தேவைகள் அனைத்தும் தோட்டங்களுக்குள்ளேயே தீர்க்கப்பட்டதாலும், தாங்கள் புலம் பெயர்ந்து வந்த இந்தியக்கிராமிய சமூக, சமய, கலை கலாசார நிலைமைகளையே இங்கும் பேணக்கூடிய வகையில் பெருந்தொகையாக இடம்பெற்ற பெருந்தோட்டக் குடியேற்றத்தாலும் தோட்டத்துக்கு வெளியே செல்லும் தேவை இம்மக்களுக்கு இருக்கவில்லை. வெள்ளைக்காரர்களும் இவர்கள் தோட்டங்களுக்குள்ளே தனிமைப் பட்டிருப்பதையே விரும்பினர்.

வெளித்தொடர்புகள் இவர்களுக்குக் குறைவாகவே இருந்ததுடன் தோட்ட நிர்வாகத்தினரால் சட்டரீதியாகவும் தடுக்கப்பட்டிருந்தனர். அரசியல், பொருளாதாரம், கல்வி போன்ற சகலவற்றிலிருந்தும் இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததே இவர்களுடைய இன்றைய வரையிலான பரிதாப நிலைக்கு முக்கிய காரணியாகத் திகழ்கின்றது.

இலங்கையில் நிலபிரபுத்துவ பொருளாதாரத்தை மாற்றி ஏற்றுமதியை ஆதாரமாகக் கொண்டதொரு புதிய பொருளாதாரத்தை ஆங்கிலேயர் அறிமுகம் செய்ததன் மையவிளைவே இந்த மலையக மக்களின் வருகை! இவர்களது வருகையும் வரலாறும் சரித்திரத்தில் இடம்பெற வேண்டியவை. இவர்களின் உழைப்பும், உற்பத்தியும் இலங்கையின் பொருளாதாரத்தைக்

கட்டி எழுப்புவதாக இருந்தும்கூட இவர்களைப்பற்றிய அக்கறை யாருக்குமே இல்லாததுடன் அசட்டை மனப்பான்மையே வலுவுற்றிருந்தது. மலையக மக்கள் பற்றிய அரசியல் சட்டப் பிரகடனங்கள், இந்திய இலங்கை உடன்படிக்கைகள், வரலாற்றுரீதியான ஆய்வுகள், இலக்கியங்கள் என்பன மிகவும் சொற்பமே. இதற்கான இன்னுமொரு மூலகாரணம் இம்மக்கள் கல்வி அறிவற்றவர்களாகவே வைத்திருக்கப்பட்டமையாகும்.

1827ல் இவர்களது வருகை தொடங்கியிருப்பினும் பத்து வயது வரை குழந்தைகளுக்கு கல்வி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்னும் சட்டம் 1907லும் கட்டாயக் கல்வியை வலியுறுத்தும் கல்விக் கட்டளைச்சட்டம் 1937லுமே அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது.

தங்களைப்பற்றி தாங்களே எழுதிக்கொள்ள இம்மக்களுக்கு கல்வி கிடைக்கும்வரை இவர்களைப்பற்றி மற்றவர்களே எழுதி வந்தனர். தங்கள் தங்கள் தனிப்பட்ட விருப்பத்துக்கும் கருத்துக்களுக்கும் ஏற்ப தென் னிந்தியர்கள் சிங்களவர்களுக்கு ஒரு பாரம்பரிய எதிரிகள் என்றும், இந்நாட்டைச் சுரண்ட வந்த அன்னியரான ஆங்கிலேயர்களுக்கு துணையாக வந்த இன்னுமொரு அன்னியர்கள் என்றும், இவர்கள் உழைத்துச் சம்பளம் பெறும் தோட்டத்து நிலங்கள் ஏழைச்சிங்கள விவசாயிகளிடமிருந்து ஏமாற்றிப் பறிக்கப்பட்டவை என்றும் சரித்திர ஆசிரியர்களே கூட எழுதியுள்ளனர். இந்தச் சரித்திரத்தைப் படிக்கும் ஒரு பெரும்பான்மையின மாணவனின் இவர்களைப்பற்றிய மனோநிலை எப்படி இருக்கும்?

இன்றைய அரசியல் தலைவர்களின் வாயிலாக இன்றைய அரசியல் மேடைகளில் இருந்து நாம் இதற்கு மாறான கருத்துக்களையா கேட்கின்றோம்!

மலையக சமுதாயத்தின் மூத்த பரம்பரையினர் கல்வியறிவற்றவர்கள். தோட்டங்களில் உழைப்பதற்கும் வேளைவரும் முன்னமே செத்து மடிவதற்குமே பிறந்தவர்கள் நாங்கள் என்றே இருந்துவிட்டவர்கள். இது பற்றி எல்லாம் சிந்திக்க அவர்களுக்கு வாய்ப்போ நேரமோ இல்லை. ஆகவே இந்தச் சமூகத்தின் உயர்வும் முன்னேற்றமும் படித்த இளம் தலைமுறை யினரிடமே தங்கியிருக்கின்றது. படித்தவர்கள் அனைவருமே - விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய சிறு தொகையினர்தான் என்றாலும் - தனது சமூகம் அதன் உயர்வு என்று சிந்திக்கக் கிளம்பி விடுவதில்லை. சமூக அக்கறை கொண்ட கற்றவர்கள் மற்றவர்களை இதுபற்றிச் சிந்திக்கத் தூண்டி விட வேண்டும். இந்தத் தூண்டுதல்களுள் முக்கியமானதொன்றாகக் கொள்ளப் படத்தக்கது இவர்களுக்காக நடத்தப்படும் சிறுகதைப் போட்டிகள் என்பது எனது கருத்து.

தங்களது சமூகத்தை மதிக்கவும், அதைப்பற்றி அறிந்து கொள்ளவும், அதன் குறைபாடுகளை உணர்ந்து அவற்றை அகற்றவும் தங்களது சமூகம் பற்றிய சிந்தனை அவசியமாகிறது. மலையகத்தின் படித்த இளைஞர்கள்

மலையக மக்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க ஒரு வழியமைத்துக் கொடுக்கும் சக்தி இச்சிறுகதைப் போட்டிகளுக்கு இருக்கிறது. மலையக எழுத்தாளர்களுக்காக நடத்தப்பட்ட மலையகச் சிறுகதைப் போட்டிக் கதைகள் இம்மக்களின் சோகம் மிகுந்த வாழ்வின் வரலாற்றுக் குறிப்புகளாகப் பரிணமித்துள்ளமை மறுக்க முடியாத உண்மைகளாகும். இன்று மலையகத்தின் சிறந்த படைப்பாளிகளாக இருப்போரில் தொண்ணூறு வீதத்துக்கும் கூடியவர்கள் மலையகச் சிறுகதைப் போட்டிகள் மூலம் அறிமுகமானவர்களே. அரசியல், பொருளாதாரம், கல்வி, குடியுரிமை, இருப்பிட வசதி, சுகாதாரம் போன்ற சகல அடிப்படைத் தேவைகளிலிருந்தும் அனாதரவாக்கி விடப்பட்ட ஒரு சமூகம், வடக்கத்தியான், தோட்டக்காட்டான், கூலிக்காரன், கள்ளத்தோணி என்று ஏளனப்படுத்தப்பட்ட, அலட்சியப்படுத்தப்பட்ட ஒரு சமூகம் இன்று எழுந்து காலூன்றி நின்று கேள்வி கேட்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறதென்றால் அவர்களின் பொறுமையையும் தங்கள் சமூகம் பற்றிய சிந்தனையுடன் தங்களது சமூகத்தை மதிக்கவும் தொடங்கியுள்ள கற்ற இளைஞர்களின் சமூக உணர்வும் போற்றுதலுக்குரியன.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரியினூடாக மலைநாட்டு எழுத்தாளர்களுக்காக நடத்திய முதல் சிறுகதைப் போட்டி 1962ல் நடந்தது. அதன்பிறகு மேலும் ஐந்து போட்டிகளை நடத்திய இம்மன்றம் தங்களுடைய முதல் நூலாக 1971ல் கதைக்கனிகள் என்னும் பரிசுக்கதைத் தொகுப்பை வெளியிட்டது. இத்தொகுப்பில் முதல் நான்கு போட்டிகளிலும் முதல் மூன்று பரிசுகளைப் பெற்ற சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. மலையகச் சிறுகதைகளை ஒன்றாகச் சேர்த்துப் படிக்கக் கிடைத்த முதல் நூல் இதுவே. இப்போட்டிகளை முன்னின்று நடத்தி பரிசுக்கதைகளடங்கிய கதைக் கனிகளையும் வெளியிட்டு மலையக இலக்கியத்துக்கு ஒரு மதிப்பைப் பெற்றுத்தந்த திரு. கார்மேகம் அவர்களை இந்த இடத்தில் நினைவு கூர்தல் அவசியமானதே. பரிசு பெற்ற மலையகச் சிறுகதைகளின் தொகுப்பாக வரும் இரண்டாவது நூல் இது.

மலையகம் தவிர்ந்து ஈழத்தில் பரிசு பெற்ற சிறுகதைகளின் தொகுப்பாக வந்துள்ள இன்னும் இரண்டு நூல்கள் பற்றியும் இங்கு குறிப்பிடல் பொருத்தமானது. வெவ்வேறு சிறுகதைப் போட்டிகளில் - ஈழம் - தமிழகம் - பரிசு பெற்ற ஈழத்தவர்களின் ஒன்பது சிறுகதைகளைத் தொகுத்து "ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள்" என்னும் பெயரில் 1963ல் தமிழ் எழுத்தாளர் மன்றம் ஒரு நூலை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கென கல்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற செந்தூரனின், "உரிமை எங்கே?" இத்தொகுதியில்தான் இடம்பெற்றுள்ளது. இலக்கிய ரசிகர் குழு என்னும் அமைப்பு 1962ல் மரகதம் மூலம் அறிவித்த சிறுகதைப் போட்டி மரகதம் நின்று போனதால் பின்போடப்பட்டு பிறகு நடத்தப்பட்டது. இச்சிறுகதைப்

போட்டியில் பரிசுபெற்ற ஒன்பது கதைகளும் "போட்டிக்கதைகள்" என்னும் பெயருடன் ஜனாப் எம்.ஏ. ரஹ்மானால் 1966ல் வெளியிடப்பட்டது.

இந்த இரண்டு நூல்களும் அகில இலங்கை ரீதியில் நடந்த சிறுகதைப் போட்டிகளின் பரிசுக்கதைகளைக் கொண்டவை. மற்ற இரண்டும் மலையகத்துக்கென நடத்தப்பட்ட மலையகச் சிறுகதைப் போட்டிகளின் பரிசுக் கதைகளைக் கொண்டவை.

நெதர்லாந்தில் வாழ்ந்தாலும் மலையகத்தை மறக்கமுடியாத திரு. நித்தியானந்தன் அவர்கள் பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மலையக இலக்கியத்துக்காக அதன் அறிமுகத்துக்காக, வளர்ச்சிக்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஆற்றிய பணிகள், செய்து காட்டிய அருஞ்செயல்கள் ஆச்சர்யப்படத்தக்கன. தினகரனில் சில காலம் பணியாற்றியபோது அவர் நடத்திய 'தொழிலாளர் உலகம்' என்னும் பகுதி காத்திரமானது. யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தபோது அவர் ஆற்றிய பணிகள் மலையக இலக்கியத்துக்குப் பசளையாக அமைந்தவை. மலையகப்படைப்புக்களை நூலுருவில் காணமுடியாத அந்தச்சூழ்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து வைகறை என்னும் வெளியீட்டு நிறுவனத்தை ஆரம்பித்து மலையக நூல்களை வெளியிட்டுக் காட்டிய மகத்துவத்தை யார் மறக்கமுடியும்! வைகறையின் முதல் நூலாக 1979ல் என்னுடைய 'நாமிருக்கும் நாடே' – 1980ல் என்.எஸ்.எம். ராமையாவின் 'ஒரு கூடைக்கொழுந்து' – 1981ல் சி.வி. வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்'. மூன்று வருடத்தில் மூன்று நூல்கள். முதலிரண்டிற்கும் அந்த அந்த ஆண்டிற்கான அரச சாகித்திய விருது! நினைக்கும்போதே புல்லரிக்கச் செய்கிறது இப்பணிகளின் சிறப்பு!

1990 செப்டம்பரில் (3.9.90) என்.எஸ்.எம். ராமையா அமரரானார். நானும் ராமையாவும் பதுளைக்காரர்கள். அண்டை அண்டை தோட்டங்களில் தொழில் பார்த்தவர்கள். தோட்டத்தை விட்டு அவர் கொழும்புக்கு வந்த சில ஆண்டுகளின் பின் நானும் கொழும்புக்கு வந்துவிட்டேன். இங்கும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எங்களுக்கிருந்தது. அவருடைய மரணச்செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது உண்மை என்றாலும் அந்தக்கணம் என் மனக்கண்ணில் தோன்றிய முகம் நித்தியானந்தன் அவர்களுடையதுதான். நித்தியின் அரும்பணியால் 'ஒரு கூடைக்கொழுந்து' வந்திருக்காவிட்டால் இந்த ராமையா 'யாரோவாகிப்' போயிருப்பார். என்.எஸ்.எம். ராமையா இனிச்சாக மாட்டார் என்ற நினைவே நித்தியின் முகத்தோற்றம்.

'வீடற்றவனு'க்குப் பிறகு வைகறை செயல் இழந்தது. இலங்கையின் அமைதியற்ற சூழ்நிலையும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாரிய இழப்புக்களும் பின்விளைவுகளும் நாமறிந்தவையே. இச்சூழலில் வெளிநாடு

சென்றுவிட்ட நிலையில் திரு நித்தியானந்தன் ஐரோப்பிய நகரங்களில் மலையக இலக்கியம் பற்றி ஆற்றிய உரைகளும், எழுதிய கட்டுரைகளும் மலையக இலக்கியம் பற்றியதொரு ஆர்வத்தினை அங்கும் ஏற்படுத்தியுள்ளமை மிகவும் ஆரோக்கியமான செயலாகும். நெதர்லாந்தில் இருந்து இலங்கையில் மலையகச் சிறுகதைப் போட்டியை ஏற்பாடு செய்து நடத்திக்காட்டி பரிசளித்து, பரிசுக்கதைகளைத் தொகுத்து நூலாக்கியும் காட்டியுள்ள சாதனை போற்றத்தக்கது. இச்சாதனையின் இன்னொரு பங்காளரான திரு எச்.எச். விக்கிரமசிங்கவை இந்த இடத்தில் நான் கட்டாயம் நினைவு கூர்தல் வேண்டும். 1971ல் "கதைக்கனிகள்" தொகுக்கப்பட்ட போது திரு. எஸ்.எம். கார்மேகம் தனதுரையில் இப்படி எழுதுகின்றார்: "குறிப்பிட்ட நேரத்தில் இப்புத்தகத்தை வெளிக்கொணர்வதில் இரவு பகல் என்று பாராது உழைத்தவர்களில் குறிப்பாக பி.கே. கருப்பையா, எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோருக்கு எம் நன்றி உரித்தாகிறது". அந்த நூலுக்கு இவருடைய பங்களிப்பு எப்படி இருந்ததோ அதே அளவும் அதற்கு மேலாகவும் இந்தச் சிறுகதைப் போட்டிக்கும் இந்த நூல் வெளியீட்டிற்கும் இருந்திருக்கிறது. என்.எஸ்.எம். இறந்த பிறகு அவருடைய "ஒரு கூடைக் கொழுந்தை" மறுபிரசுரம் செய்ய முன்நின்றுழைத்து இரண்டாம் பதிப்பை வெளியிட்ட பெருமையும் இவரையே சார்கிறது. மலையக இலக்கிய உலகிற்கு இவருடைய பணி மிகவும் தேவையானது என்பதை செயல் மூலம் நிரூபித்து வருகிறவர் விக்கி அவர்கள்.

இந்தத் தொகுதிக்கான முழுமுதற் காரணம் திரு. முத்தையா பிள்ளை அவர்களின் நினைவு. யார் இந்த முத்தையா பிள்ளை என்று பரபரத்தவர்கள் பலர். மலையக பத்திரிகையியல் முன்னோடிகளில் இவரும் ஒருவர் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அறியப்படவில்லை என்பதால் உண்மைகள் பொய்யாகி விடுவதில்லையல்லவா!

மலையகம் என்னும் ஒரு கோஷத்தை முன்வைத்து இப்பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அடையாளத்தைத் தேடித்தர அரசியல் சமூக உணர்வு கொண்ட படித்த மலையக இளைஞர்கள் உத்வேகத்துடன் பங்காற்ற தொடங்கிய 1956ஆம் ஆண்டைத் தொடர்ந்து இந்தப் புது உத்வேகத்துக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் மலையகத்தில் இருந்து இங்கொன்று அங்கொன்றாகப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. 1959 இறுதியில் பதுளையிலிருந்து "கலை ஒளி" என்னும் சஞ்சிகை வெளிவந்தது. இந்தச் சஞ்சிகையை வெளியிட்டவர்தான் அமரர் முத்தையா பிள்ளை. காந்தீயவாதியான இவர் புதுக்கோட்டை ஜில்லாவைச் சேர்ந்த வடகாடு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மலையகத்தைச் சேர்ந்தவராகிய பின் இம்மக்களின் அறியாமையைப் போக்கி விழிப்புணர்வை ஏற்படுத்த தன்னாலான பணிகளை மேற்கொண்டவர். இதன் தாக்கமே 'கலை ஒளி' என்னும் சஞ்சிகை வெளியீடு. 1961-1962 காலப்பகுதியில் 13 இதழ்களை

வெளியிட்டு ஒரு சாதனையையே நிலைநாட்டியவர் இவர். காந்தீய வாதியான கலை ஒளி முத்தையா பிள்ளை பெருந்தோட்ட மக்களின் கல்வி, கலை கலாசார விழிப்பு, அடிமைக்குணம் ஆகியவற்றிற்கெதிரான ஒரு போராட்டத்தை இக்கலைஒளி சஞ்சிகை வெளியீடு மூலம் ஆரம்பித்தார். இவரின் நினைவாக இவருடைய மகன் மு. நித்தியானந்தன் அவர்களால் நடத்தப்பட்ட இச்சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகள் இத்தனை துரிதமாக நூலுருப் பெற்றிருப்பதே ஒரு மகிழ்ச்சியான செய்திதான்.

இத்தொகுப்பின் படைப்பாளிகளில் அல் அஸூமத், மாத்தளை வடிவேலன், கே. கோவிந்தராஜ், மு. சிவலிங்கம், மல்லிகை சி. குமார், புலோலியூர் க. சதாசிவம் ஆகியோர் மலையகத்தின் – ஈழத்தின் – முன்னணி எழுத்தாளர்கள். ஏனையோர் புதியவர்கள். எழுத்துலகிற்குப் புதியவர்களை அறிமுகப்படுத்தும் ஒரு மகத்தான பணியினையும் இதுபோன்ற சிறுகதைப் போட்டிகள் செய்வதுண்டு. பத்திரிகைக்காரர்கள் பிரபலமானவர்களையும் எழுதிப் பெயர் பெற்றவர்களையுமே பிரசுரிப்பதுண்டு; நம்பியிருப்பதுண்டு! புதியவர்களுடைய படைப்புக்களைப் படித்துப் பார்த்துத் தரமறிந்து பிரசுரிக்க வேண்டுமெனும் கட்டாயமோ, அதற்கான அவகாசமோ பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஆகவே புதியவர்கள் அறிமுகமாவது அபூர்வமாகவே இருக்கும். சிறுகதைப் போட்டிகளைப் பொறுத்த வரையில் வந்திருக்கும் சகல கதைகளையும் எழுதியவர் இன்னார் என்னும் பெயர் குறுக்கீடு இல்லாமல் வாசிக்க வேண்டிய ஒரு கட்டாயம், அதற்கான நேர ஒதுக்கீடு ஆகியவை முன்நிறுத்தப்படுகின்றன. ஆகவே புதிய எழுத்தாளர்கள் அறிமுகமாவது இதுபோன்ற போட்டிகள் மூலமே சாத்தியப்படுகின்றது. புறக்கணிப்பிற்குள்ளான மலையகத்தைச் சேர்ந்த பெரும்பாலான எழுத்தாளர்கள் நான் முன்னமே குறிப்பிட்டது போல் இது போன்ற சிறுகதைப் போட்டிகள் மூலமே அறிமுகமாகியுள்ளதும் இப்போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன.

இத்தொகுதியின் அனைத்துக் கதைகளுமே மலையகச் சிறுகதைகள் என்னும் பண்புக்குள் அடங்கும் சிறுகதைகளாகவே இருக்கின்றன. மலையக மக்களின் பல்வேறு விதமான பிரச்சினைகள் இக்கதைகளில் ஆசிரியரின் அனுபவம், சொல்லாற்றல், கலைத்துவம் என்பவைக்கேற்ப அலசப் பட்டுள்ளன. பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களே படைப்பாளி களாகவும் மாறும்போது அந்த எழுத்துக்கு ஒரு அபரிமிதமான வேகமும், அழுத்தமும், ஜீவனும் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தும் கதைகளும் இவைகளுள் இருக்கின்றன என்பதே இத்தொகுதிக்கானதொரு இலக்கிய வெற்றியாகும்.

உண்ட மயக்கத்திற்கும் உறக்கத்துக்குமிடையிலான மெத்தை மிதப்பு களுக்கும், போக மறுக்கும் பொழுதை போக்கிக் கொள்வதற்கும் எழுதப்படும் கதைகள் அல்ல இவை.

கதை என்பது 'பொய்யும் புனைவும்' என்பதே மரபாகிவிட்ட ஒரு சூழலில் இவைகளை எப்படி கதைகள் என்பது! இவைகள் பொய்யும் அல்ல புனைவும் அல்ல. சிறுகதை என்னும் கலை வடிவிற்குள் ரத்தமும் சதையுமாகக் காட்டப்படும் மலையகத்து வாழ்க்கைப் பின்னங்கள்.

......சொந்தமாகாத அந்தக் குத்தகைப் பூமிக்கு ஒன்பது வருஷங்களுக்குப் பிறகு போகும் அவன் காணும் காட்சிகள்...

தலைகுனிந்து சிரிக்கும் மீதமாகிப் போன சில மரபுக் கட்டிடங்கள்.

அப்பாவையும் தம்பியையும் அடக்கிய இடங்களைக் காணவில்லை... மண்ணாகிப் போய்விட்டனர்...

அறுநூத்தி சொச்சம் ஏக்கர்! அறுபது எழுபது வேலிகளைக் கொண்டு பங்கப்பட்டுப் போய்...

பிரித்துக் கொண்ட பங்குதாரர்களின் பொருளாதாரமும் இவ்வளவுதான் ஐக்கியமும் இவ்வளவுதான் என்று தப்படித்துக் கொண்டிருந்த பாதை...

தோட்டமுமில்லை தொழிலுமில்லை! ஒரு தோட்டத்து மக்களே பல தேசத்து மக்களாக உடைந்துபோன அந்த மண்ணில்... அல் அஸூமத் தனது படைப்பிற்கிட்டிருக்கும் பெயர்: விரக்தி.

இதுதான் - இதுதான் இம்மக்களை சீரழிக்கிறது - கொல்கிறது - கொடுமைப்படுத்துகிறது என்று சொல்லாமலே அத்தனை அத்தனை சீரழிவுகளையும் சித்திரமாய்க் காட்டிவிடும் ஒரு கலைப்படைப்பு... உள்ளே குமுறலும் வெளியே கிண்டலுமாய். அவர் செல்லும் ஸி நைண்டியின் வேகத்துக்கு ஈடு கொடுத்துச் செல்லும் அஸூமத்தின் அபார நடை... இரண்டு மூன்று தடவை வாசித்துப் பாருங்கள் சலிக்கிறதா அன்றி புதிது புதிதாக ஏதாவதைக் கற்பிக்கிறதா என்று!

...ஆனந்தனின் குழிமேட்டை கும்பிட்டு சூடம் கொழுத்திவிட்டு தாங்கள் போகவேண்டிய தோட்டங்களுக்கான வாகனங்களில் ஏறுகின்றனர். ஒரு காலத்தில் திரும்பி வந்தால் ஆனந்தனின் குழிமேட்டில் எவனோ ஒருவன் வீடு கட்டியிருப்பான்...

தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டு பிரித்து கொடுக்கப்படப் போகிறது என்றதும் போராட்டம், ஒரு மரணம், ஒரு தோட்டத்து மக்கள் பல தோட்டத்து மக்களாக மாறிவிடும் அனித்தியமே மு. சிவலிங்கத்தின் "இனி எங்கே?" கதைக்கும் கருவாகிறது. என்றாலும் உயர்ந்து நிற்கிறது விரக்தி. மிக அநாயாசமாக வந்து விழுகின்ற அஸூமத்தின் வார்த்தைகள் இன்னொரு தடவை இன்னொரு தடவை என்று வாசிக்கத் தூண்டுகின்றன.

மூன்று தலைமுறையின் சோகங்களைத் தாங்கிக் கொண்டும் மழை வெய்யில் காற்று ஆகிய இயற்கைச் சீற்றங்களை சகித்துக் கொண்டும் சூறையாடல், கல்வீச்சு, எரியூட்டல் ஆகிய இனவெறிச் செயல்களினால் புண்பட்டு நிலைகுலைந்து போன தோட்டத்து மக்களின் வசிப்பிடமாகிய லயத்துக் கூரையை மனிதாபிமான உணர்வுடன் திருத்தப் போய் தோட்ட நிர்வாகத்தின் முன் குற்றவாளியாக நிற்கும் தலைவரையும் இம்மக்களின் வசிப்பிடச் சிக்கலையும் நிர்வாகத்தினரின் கெடுபிடிகளையும் காட்டுகிறது மாத்தளை வடிவேலனின் "தலைக்கொரு கூரை".

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு மாரியம்மன் கோவிலில் அகதிகளாக இருக்கும் தோட்டத்து மக்கள் இனி தோட்டத்துப் பக்கம் போக மாட்டோம், எங்களை இப்படியே இந்தியாவுக்குக் கப்பலேற்றி விடுங்கள் என்று குரல் எழுப்புகின்றனர். அவர்களை சமாதானப்படுத்திய ஒரு இளைஞன் இது நமது நாடு, நாம் இங்குதான் இருக்க வேண்டும், போராட வேண்டும் என்று தோட்டங்களுக்குக் கூட்டிப் போய் புதிதான தலைமைத்துவத்தை உருவாக்க முனைகின்றான். தங்களது அராஜகத்தின் மூலம் அவனைச் சிறைக்கனுப்பி இனி விடுதலை எப்போது, கப்பல் எப்போது என்று ஏங்குமளவுக்கு அவனைத் துரத்திவிடும் தொழிற்சங்கக் கெடுபிடிகளைக் காட்டுகின்றார் கே. கோவிந்தராஜ் தனது "கப்பல் எப்பங்க?" கதை மூலம்.

ஆஸ்பத்திரிக்குச் செல்ல தோட்ட லொறி வருமுன் றோட்டுக்கேறிவிடும் எத்தனத்தில் தோல்வி கண்டு விடும் சந்தனம் மயங்கி மலையில் வீழ்கின்றாள். அத்தனை படிகள் எப்படி ஏறமுடியும் அவளால். ஸ்ரீலங்கா என்றதும் வெளிநாட்டவர்க்கு எமது தேயிலையின் மணம்தான் நினைவில் வருமாம்... அதற்காகவே பாடுபடும் சந்தனம்... புலோலியூர் சதாசிவத்தின் "சந்தனக்கட்டை" இவ்வவலங்களைக் காட்டி நிற்கின்றது.

'அந்த ஜானகியைத் தேடி' அலையும் அனுமாரைக் காதலின் மென்மையுடன் சித்தரிக்கின்றார் மல்லிகை சி. குமார். ஒரு வித்தியாசமான காதல் கதை! பெண்மையின் கதை. சிட்டிஷன் இல்லை என்பதால் ஜானகியை இழந்து மீண்டும் அடையும்போது... போராட்டத்தின் மூலமாகவோ வேலை நிறுத்தங்களின் மூலமாகவோ தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளும் இங்குண்டு!

மலையக இலக்கிய உலகின் மற்றுமொரு மகிழ்ச்சிகரமான அறுவடை இந்நூல். இம்மாதிரி முயற்சிகள் தொடர் சகலரினதும் ஒத்துழைப்பு அவசியம்.

தலைவர் — தெளிவத்தை ஜோசப்

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் — December 1994

# போட்டியும் கதைகளும் தொகுப்பும்

## – சில குறிப்புகள்

மலையக மக்களின் இனத்தனித்துவம் குறித்தும் அவர்களின் பண்பாடு, கலாசாரம் குறித்தும் ஆழ்ந்த விழிப்புணர்வு வேரூன்றி வரும் இன்றைய கட்டத்தில் மலையகத்தின் ஆக்க இலக்கியத்துறையில் கலைஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழு தன் கவனத்தைக் குவித்துச் செயல்பட முனைந்தது. வீரகேசரி பத்திரிகை நிறுவனத்துடனும் இந்து கலாசார அமைச்சுடனும் இணைந்து மலையக எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியை நடத்த கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு 1993ம் ஆண்டு ஒழுங்குகள் மேற்கொண்டது.

இலங்கையில் இதுகாலவரை நடந்த சிறுகதை இலக்கியப் போட்டிகளில் பரிசுத்தொகையாக 15000/- வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். பாரதியும், புதுமைப்பித்தனும் நண்பர் என்.எஸ்.எம். ராமையாவும் வறுமையில் வாழ நேர்ந்ததை அடிக்கடி நினைவு கூரும் கலைஒளி முத்தையாபிள்ளையின் ஆத்மாவிற்கு எமது முயற்சிகள் நிறைவு தேடித்தரும் என்பதில் எந்த ஐயமுமில்லை. அதே நேரம் பரிசுத்தொகைகளே தரத்தை நிர்ணயிக்கும் அளவுகோலாக அமைந்துவிட மாட்டாது; அமைந்து விடக்கூடாது. ஆனால் எழுத்திற்கு கௌரவத்தையும் எழுத்தாளனுக்கு சுயமரியாதையையும் ஈட்டித் தருவதில் இது ஒரு சிறுபங்கினையாவது ஆற்றமுடியும் என்று நியாயமாகவே நாம் நம்புகிறோம்.

வீரகேசரியில் பரிசுப்போட்டி அறிவிக்கப்பட்டு ஒரு மாத கால எல்லைக்குள்ளேயே இருநூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் மலையகம் எங்கனும் இருந்து வந்து குவிந்தமை இச்சிறுகதைப்போட்டி மலையக எழுத்தாளர்கள் மத்தியில் ஏற்படுத்திய பெருந்தாக்கத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. இச்சிறுகதைப் போட்டி அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் ஹட்டன், நுவரெலியா, மாத்தளை, பதுளை, பண்டாரவளை, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களுக்கு நான் சென்றிருந்தபோது அங்கெல்லாம் எழுத்தாளர்கள் இச்சிறுகதைப் போட்டியில் காட்டிய பேரார்வத்தை நேரில் கண்டு நான் பெருமகிழ்ச்சியுற்றேன். அவர்களின் எழுத்தார்வமும் வேகமும் குன்றிவிடக்கூடாது என்று கருதியே இச்சிறுகதைத் தொகுப்பினை நூல்வடிவில் வெளிக்கொணர நான் பெரிதும் விரும்பினேன்.

மலையகச் சிறுகதைத்துறையில் நாம் சாதிக்க நிறைய இருக்கின்றன. விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய அளவிலேயே நமது சிறுகதைத் தொகுப்புக்கள் அடங்கி விடுவது நமது கையிருப்பு போதாது என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இதுகாலவரை வெளியான மலையகச் சிறுகதைத் தொகுப்புகளை இங்கு குறித்துச் செல்வது பயனுடையதாயிருக்கும்.

1. **கதைக்கனிகள்** (1971), எஸ்.எம். கார்மேகம் (தொகுப்பு) மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், கொழும்பு.

2. **நாமிருக்கும் நாடே** (1979), தெளிவத்தை ஜோசப், வைகறை வெளியீடு, யாழ்ப்பாணம்.

3. **ஒரு கூடைக்கொழுந்து** (1980), என்.எஸ்.எம். ராமையா, வைகறை வெளியீடு, யாழ்ப்பாணம்.

4. **தோட்டக்காட்டினிலே** (1980), மலரன்பன், மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் ஆகியோர், மாத்தளை தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், மாத்தளை.

5. **நமக்கென்றொரு பூமி** (1984), மாத்தளை சோமு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

6. **வாழ்க்கைச் சுவடுகள்** (1987), நயிமா.ஏ. சித்திக், தமிழ் மன்றம், கல்லின்ன.

7. **மேகமலைகளின் ராகங்கள்** (1988), மொழி வரதன், மலையக வெளியீட்டகம், கண்டி.

8. **கோடிச்சேலை** (1989), மலரன்பன், சுஜாதா பிரசுரம், மாத்தளை.

9. **மலைகளின் மக்கள்** (1991), மு. சிவலிங்கம், குறிஞ்சி வெளியீடு, கொழும்பு.

10. **அவன் ஒருவன் அல்ல** (1991), மாத்தளை சோமு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

11. **வாழ்க்கையே ஒரு புதிர்** (1992), ஏ.பி.வி. கோமஸ், தமிழ்மன்றம், கல்லின்ன.

1. **கதைக்கனிகள்**, மறுபிரசுரம் (1991), குறிஞ்சிப்பதிப்பகம்.

2. **ஒரு கூடைக்கொழுந்து**, மறுபிரசுரம் (1991), மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்.

இந்தக் கையிருப்புக்கணக்கு அத்துணை உற்சாகந்தருவதாக இல்லை என்பது வருத்தந்தரும் செய்திதான். ஆயினும், ஆயிரம் மைல் தொலைதூரப் பயணத்தின் முதல் காலடிகள் இப்படித்தான் எடுத்து வைக்கப் பட்டிருக்கின்றன என்பதில் நாம் ஆறுதல் பெறலாம். நம் முன்னவர்கள் சென்ற காலடிகளைத் தொடர்ந்து நாமும் நடக்கிறோம்; அந்த இலக்கியப் பயணத்தின் அறுவடைதான் இந்தச் சிறுகதைத் தொகுப்பு.

கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுச் சிறுகதைப் போட்டிக்காக வந்த சிறுகதைகளில் 16 மலையக எழுத்தாளர்களின் கதைகள் இதில் அடங்கியுள்ளன. மலையகத்தின் முன்னணி எழுத்தாளர்களும் புதிய எழுத்தாளர்களுமாய் இச்சிறுகதைத் தொகுப்பிற்கு அணி சேர்த்திருக்கிறார்கள். மலையகத்தின் பரந்த பன்முகப் பார்வையை இத்தொகுப்பு வாசகருக்குத் தருகிறது.

இச்சிறுகதைத் தொகுப்பின் பெருமைப்படத்தக்க தனித்துவமான அம்சம் 5 மலையகப்பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் முதல் தடவையாக மலையகத் தொகுப்பொன்றில் இடம் பெற்றிருப்பதாகும். இச்சிறுகதைப் போட்டிகளில் கணிசமான அளவில் பெண் எழுத்தாளர்கள் பங்கு கொண்டதை இது சரியாகவே பிரதிபலிக்கிறது என்று நாம் கருதுகிறோம். "பெண்களின் கல்வி பற்றியும் பெண்கள் கல்வி வளர்ச்சி பெற்றுத் தொழில் செய்வது பற்றியும்" (மணிமேகலை முத்தையாபிள்ளை, "புதிய பிரக்ஞையின் வெளிப்பாடு", மலையருவி சிறப்பு மலர், 1994) பேரார்வம் கொண்டிருந்த அமரர் முத்தையா பிள்ளையின் நல்ல கனவின் ஓரம்சம் சிறு அளவிலாயினும் இத்தொகுப்பில் பலிதமாவது மகிழ்ச்சிக்குரியது.

இந்தச் சிறுகதைத் தொகுப்பின் தர நிர்ணயம் பற்றிச் சில வார்த்தைகள். ஒரே ஒரு சிறுகதைப் போட்டிக்கு மட்டும் வந்த கதைகளில் பதினாறு கதைகளைத் தெரிவு செய்யும்போது சில கதைகளின் தரம் கைநழுவிப் போவதையும் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை என்பதைச் சொல்வதில் கௌரவக் குறைச்சல் எதுவுமில்லை. சிறுகதையோ, நாவலோ, கவிதையோ போட்டிக்கு என்று வரும்போது பல சமயங்களில் மூன்றாவது இடத்திற்கு வரும்போது தரம் என்பது கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்ட ஆரம்பித்து விடுவது ஒன்றும் புதியதல்ல.

இத்தொகுப்பு முயற்சி ஆழ்கடலில் மீன்பிடிக்கும் வேலையோ, தங்கச்சுரங்கம் அகழ்ந்தெடுக்கும் வேலையோ இல்லை. வீட்டுக் கொல்லையின் பின்பக்கம் மண்வெட்டியால் தோண்டிப்பார்க்கையில் காதறுந்த செருப்பு, வெற்று பவுடர் சுண்டு, பூரான், பூச்சி, நெளிந்த கும்பா, பிளாஸ்டிக் பை, அப்பா ஆறு வருஷத்துக்கு முன் தொலைத்த தங்க மோதிரம் எல்லாமே அகப்படுகிற மாதிரித்தான் இதுவும். இத்தொகுப்பில் எங்கோ ஒரு மோதிரம் இருக்கிறது என்ற எங்களின் நம்பிக்கை வீண் போகாது என்று நம்புகிறோம். மோதிரமே அகப்படாது போனாலும் நெளிந்து போன பித்தளைக் கும்பாவையாவது சரிப்படுத்தி பாவித்துக் கொள்ளக் கூடுமானால் போதும் என்று நிறைவடைகிறோம். இப்படியும் கதையா என்பதிலிருந்து நல்லாகவே செய்திருக்கிறார் என்பது வரை பல தரங்களில் இக்கதைகள் அமைந்துள்ளன. சிலருடைய சிறுகதைகள் கன்னிப்பிரசவங்கள். நீச்சல் காட்டும் மீன்குஞ்சின் லாவகம் தெரிகிறதா என்று சுவைஞர்கள் பார்த்துச் சொன்னால் சரி. நுங்கும் நுரையுமாய் - வண்டலாய் - கலங்கிய நீராய் - அடித்துச் செல்லும் புதுவெள்ளமாய் இத்தொகுப்பு தோற்றங் காட்டவும் கூடும்.

மலையகத்தின் ஆக்க இலக்கியத் துறையில் சிரத்தையைக் குவித்த அதே நேரத்தில், கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு மலையகத் தமிழ் மாணவர் மத்தியிலும் தன் அக்கறையைக் காட்டி நின்றது. 1993ம் ஆண்டில் மலையக மாணவர் மத்தியில் நாவன்மை, மொழித்திறன், கட்டுரை, கவிதை ஆகிய துறைகளில் தமிழ்த்திறன் தேர்வுகளை மலையகமெங்கனும்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியது. முதற்பரிசு பெற்ற முதல் ஐந்து மாணவருக்கு தங்கப் பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தது. மலையகமனைத்தும் பரந்துபட்ட அளவில் தமிழ் மாணவர்கள் மத்தியில் இம்மொழித்திறன் போட்டி பெரும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியமை எமக்கு மனநிறைவு தருவதாகும். மலையகக் கல்விச் சமுதாயத்தைச் சேர்ந்த கல்விமான்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுநலன் விரும்பிகள் அனைவரதும் ஏகோபித்த ஆதரவை இம்மொழித்திறன் போட்டி பெற்றுக் கொண்டமை எமக்குப் புத்துணர்வை ஊட்டியுள்ளது. மலையகத்தின் கல்வி, இலக்கிய, கலாசார முயற்சிகளில் தொடர்ந்தும் பணியாற்ற எமக்கு இவை பேருந்துதலைத் தந்திருக்கிறது.

மலையக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு விடிவு சமைக்கும் வழிவகைகளை கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு ஆர்வத்தோடு வேண்டி நிற்கிறது. எமது பணி பற்றிய விமர்சனங்களையும், ஆலோசனை களையும் நாம் மனமுவந்து வேண்டி நிற்கிறோம்.

அமரர் முத்தையாபிள்ளை நல்லெண்ணங் கொண்ட மனிதர். அந்த உத்தம மனிதரின் பெயரில் நாம் மேற்கொண்ட அனைத்துமே நல்லவர்கள் வாழ்த்த நல்லபடியாக முடிந்தது எம் பேறு.

அவரின் எண்ணம் போல் மலையகம் சிறப்பதாக!

**எச்.எச். விக்ரமசிங்க**

# விரக்தி

## அல் அஸூமத்

சொந்தமாகாத அந்தக் குத்தகைப் பூமிக்கு ஒன்பது வருஷங்களுக்குப் பிறகாவது ஒரு முறை போய்வர என் மனைவியும் ‘15 வருஷங்களுக்குப் பிறகு’ என்ற ‘சி–சா’ ஒப்பந்தமும் குருட்டாம்போக்கில் ஒரு வழி வகுத்துக் கொடுத்தபோது

‘யாதும் ஊரே...’ என்று நாக்கில்; ‘மாத்தளை என் சொந்த ஊர்’ என்று நெஞ்சில்!

என்னால் அவ்வூரோ அதனால் நானுமோ சிறப்படையாமல் இதென்ன முரண்பாட்டுப் பிரகடனம்...?

‘என்னூர் என்னூ’ரென்று சகபாடிகள் பாடாய்ப் பெருமைப்படுகிறார்கள்; பைத்தியமாய் ஓடுகிறார்கள்...!

ஊரில் அப்படி என்னதான் கொட்டிக் கிடக்கிறது எனக்கு? ஒவ்வொரு முறையும் இவர்கள் இந்தச் ‘சொந்த’ ஊர்களிலிருந்து வரும்போது அப்படி என்னதான் லாட்டறித்தனமாகக் காணப்படுகிறார்கள்?

பட்டினக் காட்டானாகி விட்ட இந்தத் தோட்டக்காட்டானுக்கு இதொரு புரியாத புதிர்!

மாத்தளைக்கென்று பீத்திக் கொள்ளும்படி எதுவுமே இல்லாததால் எனக்கப்படித் தோன்றலாம்.

அப்பா - அம்மா அங்கே பிறக்கவில்லை; முன்பரம்பரையின் மூச்சே இல்லை; என் சகோதரங்களில் பலர் கூட அங்கே பெர்த் செட்டிஃபிக்கேட் எடுக்கவில்லை. காணி பூமி இல்லை; வாக்குச் சாவடி இல்லை. எனக்கு திருமணச் சம்பந்தம் கூட இல்லை.

ஆக, யாதும் ஊரே யாவரும் கேளிர்.

இந்தத் தியறி சொல்கிறது முழு உலகமுமே நமக்குத்தான் சொந்தமென்று; இடுகாடு சொல்கிறது புல் முளைக்கும் வரை ஆறடிதான் என்று. ஆனால் தோட்டக்காட்டுச் செக்றோல் சொல்கிறது, ‘ஒரு மில்லி மீட்டர் கூட இல்லை - போடா!’ என்று!

மாத்தளையில் பிறந்தேன்; உண்மை, ஓர் அட்டவணைக்காக ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதற்காகவெல்லாம் சொந்தம் கொண்டாடிவிட முடியுமா? சும்மா விடுவானா இவன்? எம்ஜியார் கூட ஏதோ கண்டியில்தானாமே பிறந்து தொலைத்தார்?...

டிக்கிறியாத் தோட்டத்து ஸ்டோர் லயத்தின் மண்ணை மிதித்தவன் நான். பிறந்த வருஷமே பெற்றார்களின் தோட்டச் சஞ்சாரம் ஆரம்பமாகி விட்டது. மாத்தளை மாவட்டத்தின் தோட்டங்கள் சகலவற்றிலுமே எங்கள் தந்தையார் கொட்டை போட்டவர்! இதனால் நான் அசல் தோவன்னா காவன்னா!

கொழும்புக்கு வந்தவுடன் சில ஜீவன்கள் கொள்ளுப்பிட்டியிலோ குருந்துவத்தையிலோ பிறந்து கொள்வதைப் போல் என்னால் முடியவில்லை என்பதுவும் இன்னொரு காரணம்.

பிறந்ததிலிருந்து பதினேழு வருஷங்கள் வரை பெற்றாரின் நெஞ்சுகளின் மேல் நடந்து நடந்து வளர்ந்த காலத்தில்தான் எனக்கும் மாத்தளைக்கும் ஒரு வகைக் குத்தகைத் தொடர்பிருந்தது. பத்தாம் வகுப்பு மூலதனத்தோடு வெளியூர்களில் சம்பாதிக்க கிளம்பிவிட்டதோடு அதுவும் சரி.

அறுபதிலிருந்து இதுவரையிலும் ஓர் இருபது தடவைகள் அங்கே போயிருப்பேனா?...

அப்பா, தம்பி இறந்த சமயங்களில், அவர்களின் முப்பது கும்பிடு-திவசங்கள் சிலவற்றில்; சகோதரங்கள் கொடிகளை ஏற்ற சமயங்களில், கொம்புகளைக் கண்ட சமயங்களில், எழுபத்தேழும் எண்பத்து மூன்றும் இங்கே அடித்துப் பறித்து ஓட்டிவிட்ட சமயங்களில்...

தோவன்னா காவன்னா என்றைக்கு நன்றாக இருந்தான்? அவனென்ன தொழிற்சங்கமா நடத்துகிறான்? எனவே நானும் கெட்டுத்தான் போனேன்; எழுபத்து நாலில் பட்டினமும் சேர்ந்தேன்.

எண்பத்து மூன்றுக்குப் பிறகு மாத்தளைக்குப் போகவே இல்லை! அம்மா அடிக்கடி இங்கே வந்து போவார். இந்தியன் பிஸினெஸ்காரி மாதிரி. அதனால் நான் போக வேண்டும் என்ற பாசமில்லை.

மாத்தளையை என்னால் மறக்க முடியாதென்பது வேறு கதை; அதைச் சொந்தம் கொண்டாட முடியவில்லை என்பது வேறு கதை.

சுடுகந்தைத் தோட்டம்; இரண்டாம் நம்பர் லயம்; இரண்டாவது காம்பறா. இன்னும் அம்மா அங்கேதான், அம்மாவோடு, ஜித்தாவில் வேலை செய்யும் கட்டைத் தம்பியின் மனைவி, மூன்று பிள்ளைகள்; செத்துப்போன குட்டப்பன் தம்பியின் மூன்று பிள்ளைகள்.

இதை வைத்துக் கொண்டு சுடுகந்தையையோ அதன் தபாலாகிய மாத்தளையையோ என்னால் சொந்தம் கொண்டாட முடியுமா?

அம்மா ஒரு யதார்த்த ஞானி. லண்டன், பாரீஸ்களில் பிறந்திருக்க வேண்டியவர். எங்களுக்காக இங்கே! கட்டைத் தம்பியின் காலமும் குட்டப்பன் தம்பியின் பிள்ளைகளின் காலமும் எப்படிப் போகும்

என்றுதான் அவர் சுடுகந்தைக் கூட்டிலிருந்து அசைகிறாரில்லை. இல்லாவிட்டால் எனக்கோ மற்றைய சகோதரங்களுக்கோ கிரீடமாக அமைவார்.

அப்பாவையும் தம்பியையும் புதைத்த இடத்திலேயே தம்மையும் புதைக்க வேண்டுமென்பது வேறு அம்மாவின் தனிமை விரதம். எங்களின் நகர நாகரிகத்துக்காக அவரின் இத்தகைய அந்தரங்க அற்புதங்களை மதிக்காமல் விட நாங்கள் யார்?

'பெத்த தாயத் தோட்டத்ல தவிக்க உட்டுப்புட்டு மஹெங்காரெங் கூத்தடிக்றான் டவுன்ல!' என்று சுடுகந்தை வெறும் வாயை மெல்கிறது. ஆனால் அவல் எங்கள் அம்மாவின் வாயில்.

இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு கடிதம் அம்மாவிடமிருந்து. டிக்கிறியாத் தோட்டத்தின் ஸ்ட்டோர் லயத்துப் பகுதி பர்ச்சஸ் கணக்கில் வியாபாரம் ஆகிறதென்றும் ஒரு பத்துப் பர்ச்சஸை வாங்கிப் போட்டால் நல்லதென்று கட்டைத் தம்பிக்கு எழுதியிருப்பதாகவும் தகவல்.

இந்த நெட்டையனை நம்புவதைவிட அந்தக் கட்டையனை அம்மா நம்புகிறார். நானும் அவனை நம்புகிறேன். ஜித்தாப்பணம்; வாங்கிப் போடுவான், என் கொழும்புப்பணம் காற்று வாங்கவே போதாதென்று அம்மாவுக்குத் தெரியும்.

கட்டையன் இனிமேல் 'மாத்தளை தன்னூர்' என்று சொல்லிக் கொள்ள விரும்புவானா அல்லது என்னைப் போலவே ஓடெடுப்பானா தெரியவில்லை. ஒரே ஓட்டாண்டியின் பிள்ளைகள் தாமே நாங்கள்!...

* * *

சொந்தமாகாத அந்தக் குத்தகைப் பூமிக்கு ஒன்பது வருஷங்களுக்குப் பிறகாவது ஒரு முறை போய்வர என் மனைவியும் '15 வருஷங்களுக்குப் பிறகு' என்ற 'சி-சா' ஒப்பந்தமும் குருட்டாம்போக்கில் ஒரு வழி வகுத்துக் கொடுத்தபோது.

தினசரி என் சேப்புகளை மேய்ந்தே மாமிக்கென்று சில புடைவை-அநாமதேயங்களை வாங்கி வைத்துக் கொண்டு 'போய்ட்டு வாங்களேன்ப்பா' என்று புடுங்கி எடுத்தாள்.

ஆளுமை இருந்த காலத்தில் அடக்கிவிட்டுப் பென்ஷன் வாங்கும் காலத்திலாவது எனக்கேது பென்ஷன்? கொடுத்திருந்த தேசிய பதிவைப் பகிர்ந்து கொள்ளவாவது ஆகட்டுமென்று நானும் என் பங்குக்குச் சில வகையறாக்களைக் கட்டினேன். இரண்டாவது மகனையும் இழுத்துக் கொண்டு ஸீ நைண்டியில் ஏறினேன்.

நிர்மலமான வானத்தை நம்பி "மழ வரப்போறது போங்க!" என்று விடை கொடுத்தாள் மனைவி.

அடுத்த மூன்றாவது மணித்தியாலத்தில் மாத்தளையின் எல்லைக்காற்று வீசியதே தவிர மழை எதுவும் வந்துவிடவில்லை.

அந்தக் காற்று என் மனத்தில் பட்டபோதே புதுமையான ஒரு கிளுகிளுப்பு ஏற்படத்தான் செய்தது. நீண்ட காலத்துக்குப் பிறகு போனதால் ஏற்பட்டிருக்கலாம். சீதோஷ்ண பேதத்தாலும் அப்படி இருந்திருக்கலாம். வண்டிகளைப் பார்த்தேங்கிய வாண்டுப்பயலாய் இருந்தேனே, அதே நிலத்தின் மீது இப்போது செய்த சொந்த வண்டிச் சவாரியாலும் அது உண்டாகியிருக்கலாம். எதுவாக இருந்தாலும் 'சொந்த ஊர்ப்பித்து' பற்றிய பிரக்ஞை அல்ல அது.

ஒப்பந்தம் குடைபிடிக்கிறது என்பதற்காக உயிரோடிருக்கையில் மாண்டுவிடவா போகிறது தொட்டிற் பழக்கம்?

மகனுக்கும் மாத்தளை புதிய பூமிதான். மூன்று வயதில் என் மார்பில் ஒரு தரம் வந்திருக்கிறான். அவனுக்கேதாவது கிளுகிளுப்பேற்பட்டதா என்று எனக்கு தெரியாது.

இந்தக் கிளுகிளுப்பையே எனக்கெதிராகத் திருப்பி 'அதுதாண்டா சொந்த ஊர் சிறப்பு' என்று வெந்த புண்ணில் வேல் பாய்ச்சாதீர்கள்.

என் மனத்தைப் போலவே மாத்தளையும், சில மீதான மரபுக் கட்டிடங்கள் தலைகுனிந்து சிரித்தன. பல புதுக்கவிதைகள் ஆணவமாகப் பார்த்தன. பேசிப்பழகியிராத ஆனால் தினசரி கண்டு பழகிய உருவங்கள், மாத்தளைப் படிமங்களாகப் பல் விழுந்தோ கூனல், நரை, திரை விழுந்தோ அல்லது எல்லாமாகச் சேர்ந்து விழுந்தோ ஊர்ந்தன. கோம்பிளிவளைச் சிற்றாறு மக்ர்வலி நீரால் இளமை பெற்றிருந்தது சவூதி போய் வந்த சில கிழவிகளைப் போல.

மருந்தெடுக்காத கவுருமேந்தாஸ்ப்பத்திரி. சகவாசித்த மேடுகள், வியர்வை போக்கிய வெளிகள், பூங்கா, சாகும் முன்பே போய் வந்த மயானம் என்று மகனுக்குக் காட்டியவாறே ஒரு நனவோடைக் கிளர்ச்சியோடு வட்டம் சுற்றி மீண்டும் அதே பாதையில் தேங்காய்க்கடி தந்த பிள்ளையார் கோவிலும் கற்ற கூடமும்.

இங்கேதான் உதைக்கிறது. பழைய மாணவர்களாகப் பெருமைப்பட எங்களுக்கு விதி இல்லை. காலாகாலத்தில் போய்ச் சேர்ந்துவிட்ட கந்தசாமியாரின் இலட்சியத்தையும் எங்களின் உரிமையையும் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள் மண்ணாசைக்காரர்கள்.

ஒரு பெருமூச்சோடு செந்தோமாஸ், ஆலமரம், மாரியம்மன் கோவில், அழகர் மலை, பழைய சதானந்தா பீடிக் கம்பெனி, குணசேன முதலாளி வீடு, மந்தண்டாவளைச் சந்தி, இரத்தோட்டைப் பாதை, முக்கோண மயானம், தோக்குத் துவானின் இருண்ட காணி என்ற பட்டியலில் களுதாவளை இறக்கமும் சேர்ந்தது. இடது புறத்து வயல் வெளிக்கப்பால் நான் பிறந்த ஸ்டோர் லயம் ஒளிந்து கிடந்தது எனக்கே வெட்கப்படுகிற மாதிரி.

"அந்தா பாரு, அதுதான்..." என்று கட்டையன் வாங்கவிருக்கும் (வாங்குவானா) நிலத்தையும் சேர்த்து மகனிடம் விளம்பரப்படுத்தினேன்.

இவன் எங்கே பார்த்தானோ! எனக்கு லூஸ் என்று கூட நினைத்திருக்கலாம். தான் பிறந்த மடுவக்கொல்லை ஆஸ்பத்திரியைப் பற்றிய நன்றியுணர்வே இல்லாத இவன், நான் பிறந்த லயத்தைப் பற்றி என்ன நினைக்கப் போகிறான்?

தோட்டம் நெருங்க நெருங்கப் பெரிய மாற்றங்கள் தென்பட்டன. லூஸ் துரையின் தென்னந்தோப்பில் வெளிப்படாத ஏதோ வியாபார ரகசியம்; வேளாளத் தாத்தாவின் குயவக் குடிசைகளில் வெவ்வேறு சமாச்சாரங்கள்; பாராவத்தை டிவிஸனில் பஸ் கொட்டகை; கட்டாண்டிக் கடையில் காடு...

சுடுகந்தை ஆற்றின் மகாவலிச் சுழிப்புகளை முன்னரே பார்த்திருந்ததால் மாற்றம் தெரியவில்லை. பாலம் தாண்டிய கையோடு.

சுடுகந்தை! எட்டு வருஷங்களாக என்னை வளர்த்த பூமி...

உள்ளே ஓர் அலை தோன்றி மறைந்தது.

இடமாகப் பாதைக்கு அப்பால் அப்பாவையும் தம்பியையும் அடக்கிய இடங்கள் தென்படவில்லை... அவர்கள் மண்ணாகியே போய்விட்டார்கள். ஆவியாகிக் கொண்டிருந்த கண்ணீரோடு மகனிடம் எட்டிக் காண்பித்தேன்.

அந்த ரபரும் கொக்கோவும் எங்கே?... பிடுங்கப்பட்ட நிலத்துண்டுகள் தாத்தாவையும் பாட்டியையும் நினைவூட்டின. வெள்ளையன் வருமுன்னர் இப்படித்தான் இந்த நிலம் இருந்திருக்க வேண்டுமோ?...

என் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

தார்ப்பாதையிலிருந்து தோட்டத்து மண்பாதையில் வண்டி விழுந்தது. பால்ய காலத்தை என் மனக் கம்ப்யூட்டர் முத்தமிட்டது. வாண்டுகளாய்க் கூட்டங்கள், ஜில்போலைச் சண்டைகள், கள்ளச் சினிமா விமர்சனங்கள், மலைக்குக் கொண்டு போகும் தேத்தண்ணித் தர்மங்கள்.

வண்டியைப் பற்றிய புதிய அச்சம் கிளம்பியது. பாதையில் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும். அவை என் பால்ய நினைவுகளையே பகிடி பண்ணிய மாதிரி ஒரு பிரமை.

வண்டியை அந்தப் பழம் பெருமையில் கொண்டு போகலாமா கூடாதா என்ற தயக்கம் பிறந்தது. தெரிந்து கொண்டுதான் போக வேண்டும். விசாரிக்கலாமென்று பார்த்தால் தெரிந்த முகங்கள் இல்லை.

காளிகோயில் மேட்டிலே நின்றது, நவீன சுரண்டல் ஸ்தூபிகளுடன். பள்ளத்தில் மண்பாதை; மடங்கித் திரும்புகிறது. சைக்கிளை நிறுத்திவிட்டு அந்த மூலையைப் பார்த்தேன். வெறும் உன்னிச் செடிகள் 'உத்தரவின்றி உள்ளே போகக்கூடாது' என்ற பலகையைக் காணோம். போகலாம்; ஆனால் பாதை பயமுறுத்தியதே!

வந்தது வரட்டுமென்று பத்தடி மேலும் சைக்கிளைப் பலாத்காரப்படுத்தினேன். 'பாவீ! பத்திரமடா பத்தாயிரம்!' என்று பாதையே அலறுவதைப் போலிருந்தது.

அட, எப்படி இருந்த பாதை படுத்துப் புரளலாமே! அறுநூத்திச் சொச்ச ஏக்கர்த் தோட்டத்தின் நிர்வாகப் பாதை!

இப்போது இந்த ஒரு வேலித்தோட்டம் அறுபது எழுபது வேலிகளைக் கொண்டு பங்கப்பட்டு விட்டதாக முன்பே அம்மா விசனித்திருந்தார். தோட்டமும் இல்லை; தொழிலும் இல்லை. பிரித்துக் கொண்ட பங்குதாரர்களின் பொருளாதாரமும் இவ்வளவுதான், ஐக்கியமும் இவ்வளவுதானென்று பாதை தப்படித்துக் கொண்டிருந்தது.

ஒரு தோட்டத்து மக்கள் பல தேசத்து மக்களாக உடைந்து போன அந்த மண்ணில், (நல்ல காலமாக இருப்பிடங்கள் மட்டும் சொந்தமாகின) என் வண்டி உடையப்போகிறதே என்று நான் கவலைப்பட்டு நின்றேன்.

"சைக்கிள் பேச் போய்றும் போல இருக்கே!" என்றேன் நான். "சைக்கிள கோயில்ல போட்டுட்டு நடந்து போவமா?"

"இன்னுங்கொஞ்சம் போய்ப்பாப்பமே!" என்றான் இந்தச் சோமாறி. "இதக் கோயில்ல போட்டுட்டுப் போனா எவனாவது கையடிப்பான்...?"

"அப்பிடி யாருந்தொட மாட்டாங்க..." என்று இழுத்தேன் நான்.

கட்டைத்தம்பியின் மாமாதான் காளிப்பூசாரி. சைக்கிளுக்குப் பழுது வராது என்றாலும் எனக்குள் திடீரென்று வேறொரு காரணம் தோன்றியது.

மகனும் பேரனும் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்த மோட்டாரு தன் காம்பறா வாசலில் நிற்பதையிட்டு மகிழாத தொழிலாளத்தாய் யாராவதுண்டா?

நடப்பதானால் முந்தியெல்லாம் கால் மைல்தான். காளியைத் தாண்டியதும் தேரியில் குறுக்காக ஏறி அப்படி ஒரு வளைவு வந்தால் லயம். இன்று குறுக்கின் மூஞ்சியிலேயே வேலி. ஆகவே அரை மைல் ஆற்றோரமாக

நடக்க வேண்டும். வெள்ள மரத்தைத் தாண்டிய முடக்கில் ஒரு தேரிக்குறுக்கு; நூலேணி மாதிரி; ஒரு கால் மைல். முந்தி பத்திருபது வாட்டி ஓடியடைந்த படிகள்தாம். இன்றெல்லாம் மூச்சு வாங்குவேனோ என்று பயமாக இருக்கிறது. ஆனால் வண்டியில் போவதானால் மூன்று மைல் சுற்று நிச்சயம்.

இனி விசாரிக்க ஆள் தேவையில்லை. எப்படியும் வண்டியிலேயே போவதென்று தீர்மானித்துப் புறப்பட்டு வளைவைக் கடந்தபோது,

ஓய்வு நடையில் எதிரே வந்து கொண்டிருந்தார் அவர். எவ்வளவுதான் எண்பதுக்குக் கிழண்டு போயிருந்தாலும் எனக்குப் பிடிமானமாகி விட்டது. அப்பாவின் அடுத்த வெட்டுக் கூட்டாளி ஜயசேகர பாஸுன்னே.

என்ன நரை, என்ன திரை, என்ன குளிர்ச்சி! அப்பா உயிரோடிருந்தால் இப்படித்தான் இருப்பாரோ? இல்லை. அப்பா இறந்த அறுபத்தைந்தில் ஒரு நரை கூட இல்லை. அம்மாவுக்கும் இப்போது அறுபத்தைந்து; ஒரு நரை கூட இல்லை. நான்தான் ஐம்பதிலேயே....

அவர் எங்களைக் கூர்ந்தவாறே அணுகினார்.

சைக்கிளை நிறுத்தி, "பாஸுன்னே!" என்று சிரித்தேன் நான்.

நின்றார். யாருடையவோ ஞாபகங்களையெல்லாம் என்னில் பொருத்தினார். "மாத்தியா கவ்த?" என்று துழாவினார். அந்தத் தடுமாற்றம் குரூரமான ஒரு புளகாங்கிப்பை எனக்குள் மூட்டியவுடனேயே தவறென்றுபட்டது. ஹெல்மட்டைக் கழற்றினேன்.

ஒரு விநாடி என் மூச்சுக்கு மேல் குறுகியவர், "ஹா ஹா ஹா!..." என்று நிமிர்ந்து "ஷா ஷா ஷா!" என்று வெடித்துப் பின்னால் வீசுண்டார். "அப்பப்பே!" என்று முகம் விரியத் தம் கவலைகளைத் தொலைத்தார். "இதி நம்ப மலயாலங் பொன்னய்யா அய்யாவோட பெரிய மகேங் இல்லையா!" என்று அறிமுகம் செய்தார். "நாங் யாரோதாங்னு இல்லியா பார்த்தது!... ஆஹாஹா!" என்று நொந்தார். "இப்பத்தாங் வாறதா?... நல்ல ஸொகங்தானே?... கொலம்புலதானே இரிக்கிறது?... இதுயாரு?..." என்றெல்லாம் அடுக்கினார்.

"ரெண்டாவது மகன்!" என்றேன் நான்.

"ஷா, அப்பிடியா! இவ்ளோ பெரிய மகேங் இரிக்கிறதா!" என்று தம் கண்களையே கடையடுப்பில் பிடுங்கிப் போடச் சொன்னார்.

மூத்தவனைத் தாடியும் மீசையுமாகக் கண்டாரானால் என்ன புலம்பியிருப்பாரென்று நான் தேடினேன்.

என்மேல் விழாத குறையாகக் குசலத்தின் குரல் உயர்ந்துயர்ந்து போனது. குடும்ப எண்ணிக்கை, வரவு, செலவு, தொழில், வீடு, சொத்து, சுகம்

என்றெல்லாம் என் மர்மங்கள் எல்லாவற்றையுமே அந்த முச்சந்தியில் நின்று கிராமிய இலக்கியமாகக் கிண்டி எடுத்துவிட்டார். எனக்கும் மாற்றமான ஒரு கிளர்ச்சியாகவே அது இருந்தது.

அரை மணித்தியாலம் போல நானும் அப்பாவின் கையடக்க மகனாக மாறியிருக்க, இவர் 'நாசமாப்போச்சி' என்ற மாதிரி ஒரு கல்லின் மேல் முக்காலியாகி விட்டான். எங்கள் சம்பாஷணையிலிருந்த உள்ளோட்டத்தையோ பெறுமதியையோ எனக்கேற்பட்டிருந்த ஃப்ளேஷ் பேக்கையோ இவன் உணர வேண்டும் என்பதில்லையே!

முச்சந்தியில் கூட்டம் சேர்ந்தது. தனியாகவும் ஜோடியாகவும் வந்த ஏழெட்டுப் பேர்கள் வினாவாரியமொன்றே உருவாகிவிட்டது. அம்மா இவர்களோடு அடிக்கடி கதைப்பார் போல் தெரிந்தது. அந்த அபிமானத்துக்கு நானும் உரம் பரப்பி வைத்தேன். என் ஆரம்பகாலத்துத் தவழுகை வேதனைகளும் அப்பாவின் கனவுகளும் அவர்களுடைய வினாக்களில்; அவற்றின் பென்ஷன் என் விடைகளில்.

சலிப்பேற்படுவதற்கு முன்பாகப் பாதையில் இறங்கினேன்.

"வெள்ள மரத்துக்குக்கிட்ட மோட்டார நிப்பாட்டிட்டுத் தேரில நடந்து போலாந்தான்...! ஆனா ஒராளு காவலுக்கு நிக்கணும்!" என்று மனைவியிடம் நான் எப்படி மொத்து வாங்குவதென்பதைச் செவிட்டுத் திருமலை விளக்கினார்.

"நம்ப பங்களாத்துண்டு தொரகூட இந்த மாதிரி சைக்கிளிலதானே தெனம் அஞ்சாறு வாட்டி போறாரு வாறாரு!" என்று ஊக்குவித்தார் முத்துவேல் ஓச்சரைய்யா.

"றோட்டுன்னா அவ்ளோக்கு மோஷமில்லே. கொஞ்சம் சறுக்றது! மொல்லப் போனா ஷரி!" என்றார் ஜயசேகர பாஸூன்னே.

"நேராப் பாடமாத்தி சந்திக்குப் போங்க. பங்களா றோட்டல உடுங்க. அப்படியே போயி லயத்துக்குப் போற குறுக்குப் பாதைல உட்டீங்கனாத்தான் நேரா ஊட்டுக்கே வண்டியக் கொண்டுகிட்டுப் போய்றலாமே! என்னா, ஒங்களுக்குத் தெரியாத சுடுகந்த றோட்டா!" என்றார் வேலண்ணன்.

சத்தியக் கடதாசிகளை அடுக்கிக் கொண்ட நான் வண்டியைக் கிளப்பினேன். ஒரு புதிய உற்சாகம் இருந்தது.

* * *

வெள்ளமரத்தைக் கடந்த பிறகுதான் பாதையின் ஆழம் தெரிய வந்தது. பங்களாத்துண்டுத் துரை 'யக்காபைக்'கைத்தான் ஓட்ட வேண்டும்.

சத்தியக் கடதாசிக்காரர்களை நொந்து கொள்வது புத்தியில்லை. அவர்களுடைய வாழ்க்கைப் பாதையை விட இந்த மண்பாதை அவர்களுக்கு மேலானதாக இருக்கலாம்.

சோம்பேறிக் கொள்கையைக் கைவிட்டதைப் போல மகன் இறங்கிக் கொண்டான். டியூபில் எத்தனை ஓட்டுக்கள் என்பது மனப்பாடமாதலால் நானும் இறங்கிக் கொண்டேன். எஞ்சினை ஓடவிட்டு 'த்றொட்டி'லை இலேசாகத் திருகி வண்டியோடு நடந்தேன்.

அஞ்சலுக்கு மகனும் சேர்ந்த ஒன்றே முக்கால் மைலில் பாடமாத்தி, வியர்வைக் குடம் உடைத்து இடப்பக்கமாக பங்களா பாதையில் ஏற்றினோம். இன்னும் முக்கால் மைலில் லயம் பார்த்து இறங்கும் அந்தக் குறுக்கு. சர்வமும் ஜாக்கிரதை மையமாக அதில் வண்டியை அமுக்கினேன்.

'கார்ட்றோட்' போல் அக்காலத்திலிருந்த குறுக்கு, காட்டு றோடாக இன்று, பாம்புகளைப் போல நீண்டு கிடந்த செடி கொடிகளுக்கு மகனின் வெள்ளைக் காற்சட்டை பலி.

அவன் பின்னாலிருந்து இழுக்கவும் நான் முன்னால் தள்ளவுமாகப் பள்ளக் குறுக்கில் கால்கட்டை போன போது எங்கள் லயத்தின் எல்லை சகல அசௌகரியங்களுடனும் கிழண்டு கிடந்தது.

வலப்பக்க மேட்டில் லயம்; குறுக்குப்பாதை ஒன்று, பதினைந்தடியில். நாங்கள் வந்த குறுக்கு அது பாட்டுக்கு கீழே ஓடியது காளியம்மாவைத் தேடி

மேட்டுக் குறுக்கில் வண்டியை உந்தினேன்.

என் 'ஸீ நைண்டி'க் குஞ்சு டுஹண்றட் எருமையாய் கனத்தமேடு அது, சர்க்கஸ் சாகசத்தில் அந்தப் பதினைந்து அடிகளையும் கடந்தபோது லய முற்றத்தின் விளிம்பு, அழகர் மலைக்கு எதிர்மலை போல் உயர்ந்து நின்றது. ஒன்றரை அடி உயரக்கல்லுக் கட்டிடம். ஒற்றிவிட்டால் ஜெக் போட்தான்.

தொங்க காம்பறா சிதிலமாகிக் கிடந்தது.

நாங்கள் இருவரும் மூச்சுக்களைத் தேடிக் கொண்டிருந்த போது தொங்கவூட்டுக் காமாட்சி சம்சயமாக எட்டிப் பார்த்தாள். மத்திய கிழக்கிலிருந்து பரோலில் வந்திருப்பதாகக் காட்சி தந்தாள்.

"யாரு... சரசவுங்க அண்ணனா, வாங்க வாங்க!" என்று தோரணத்தைத் தொங்கவிட்டாள் அவள் "சரசவுங்க அம்மோ...வ்...!"

காமாட்சியின் அந்தக் கிணற்றுக் குரலை விட ஜெயாவின் குரல் செவிட்டுக் கங்காணியினுடையதைப் போலிருக்குமே என்று பழங்காலத்தில் நான் சிரித்தபோது, லயத்தின் நடுப்பகுதியிலிருந்து அந்த ஜெயாவே கதறிக்கொண்டு ஓடி வந்தாள்.

"எங்கடோ போய்ட்ட, அடே..ய்..ய்... ராதா! ஒங்க பெரியப்பாவும் யாரோ ஒரு பொடியனும் வாராங்கடா! சைக்கிளத் தூக்க வாடோய்!"

கட்டைத்தம்பியின் சரோஜினி திண்ணையிலிருந்து பாய்ந்து இறங்கினாள். "யாரோ இல்ல புள்ள, மச்சான் ஊட்டு ரெண்டாவது மகேன்!..."

மளமளவென்று லயம் களைகட்டியது - கிழடு தட்டிப் போன ஆதிகளும் குஞ்சு குழுவான்களுமாக.

இப்பத்தான் வாறியளாக்கள், இதொங்க மகனாக்கள், 'அக்கா வரலியா அண்ணேன்'கள், 'அடே ராதா, நீ முன்றோதயப் புடிரா'க்கள் 'இன்னைக்கிக் காலைல காக்க கரயக்குள்ளயே யாராச்சும் வருவாங்கன்னு சரசவுங்கம்மா சொல்லிக்கிட்டுத்தான் இருந்திச்சு'க்கள்.

அனாயாசமாக லயமுற்றத்தில் பவனி வந்தது ஸீ நைண்டி.

* * *

அம்மாவின் மௌன மகிழ்ச்சிக்கு எல்லை இருக்கவில்லை.

மருமகளின் அன்பளிப்புகளால் உடல் பூரித்தது. தான் சமைத்தவற்றை மூத்த மகனும் பேரனும் உண்டதால் பெற்ற வயிறு குளுகுளுத்தது. இரு லயத்தார்களும் வந்து முறை வைத்துக் கதைத்துச் சென்றதால் மனம் பெருமிதப்பட்டது. நள்ளிரவு நெருங்குமுன் முச்சந்தி மண் களவெடுத்து வந்து திட்டி சுற்றிப் போட்டதால் கலக்கமும் அறுந்தது.

தாயாரின் இத்தகைய நிறைவுகளுக்காக அவர் அங்கே தலையாடிக் கொண்டிருக்கும் வரையிலுமாவது அந்த ஊரை நான் குத்தகைச் சொந்தம் கொண்டாடினாலும்...

தாயோடு அறுசுவை மட்டுமா போகும்?

மறுநாள் நாங்கள் புறப்பட்டபோது அம்மா ஒரு தசாப்தத்தை அடக்கி வினாவினார்.

இனி எப்ப வருவீங்க?

# தலைக்கொரு கூரை

## பி. வடிவேல்

குஞ்சரங்கள் கூட்டம் கூட்டமாக தூங்குவதைப் போல் குவிந்து... குவிந்து கிடக்கும் தீப்பாறைக் குவியல்களை சுற்றி வளைத்து ஆயாசத்துடன் ஓடி வந்த "டாட்டா" பஸ் வண்டி அந்த இராட்சதப் பாறைகளின் பாதச்சுவடென படிந்திருக்கும் பஸ் நிலையத்தினுள் புகுந்து பெருமூச்சு விட்டவாறு நின்றது.

நகரின் கிழக்கு எல்லையினுள் கரும்பூதமென குந்தியிருக்கும் "எத்தாகல்லுக்கு" மேலே மெல்லிய இரும்புக் கம்பிகளினால் தொடுக்கப் பட்டிருக்கும் சமாதி நிலையிலான போதி மாதவனின் பிரதியமைப்பில் இழையோடியுள்ள மின் குமிழ்கள் உயிர்ப்புப் பெற மலையிடுக்கில் எழுந்த பெருமானின் பிரம்மாண்டமான முகம் நகரை ஆசீர்வதித்துக் கருணை மழையைப் பொழிந்து கொண்டிருந்தது.

"மாத்தலே... மாத்தலே..." "ரிதிகம... ரிதிகம..." "நுவர... நுவர..."

ஒவிலிகந்த... ஒவிலிகந்த... கொழும்பிலிருந்து குருணாகலுக்கு கடைசியாக புறப்பட்ட இப்பஸ் வண்டியில் வந்து சேர்ந்த பயணிகள் எப்படியேனும் பஸ் எடுத்து தத்தம் வீடுகளுக்கு போய் சேர்ந்துவிட வேண்டும், அந்தரிப்பில் முட்டிமோதி இடித்துக் கொண்டு இறங்கும்போது "ரன்னர்கள்" போட்டி போட்டுக்கொண்டு போகும் கோஸங்கள் வரவேற்பளிக்கின்றன.

இன்று வெள்ளிக்கிழமை வார விடுமுறைக்காக வீடு வருவோர் தொகை அதிகம். எனவேதான் நெருக்கடி. எல்லா பஸ்களிலும் நிரம்பி வழிகின்றன. உள்ளே இருப்பவர்கள் "சாடின் அடைப்பின்" நெரிசலில் விழிபிதுங்கி நின்றாலும் மிதிப்பலகையில் கால் வைத்தவரை இறங்கி "திரும்பிப்போ" என்று மறுக்காமல் உள்ளே அடைபட்டிருப்போரை திட்டி ஏசி இடம் எடுத்து வந்தவரையும் உள்வாங்கி அணைத்துக் கொள்ளும் மினி பஸ்சின் தாராள மனசு நம் அனைவருக்கும் இருந்துவிட்டால் உலகில் எத்தனையோ பிரச்சினைகளுக்கே இடம் இல்லாமல் போய்விடும்.

பூதத்தையே ஒரு சிறு புட்டியில் அடைத்து விடும் சூ... மந்திரவாதிகள் இந்த மினி வேன் பொடியள்களிடம் பாடம் கேட்க வேண்டும்.

"அரக்கப் பரக்க இறங்கி ஆவப்போவதுதான்" என்ன? என்ற நியாயத்தின் அடியில் எழுந்த சலிப்பில் தாவி, முண்டியடிப்போரின் போட்டியிலிருந்து ஒதுங்கி, எல்லோருக்கும் வழிவிட்டு தன் இனத்திற்கேயுரிய மகா பொறுமையுடன் தம் வாழ்வின் பயனே போன்ற ஏமாற்றத்துடனும் நகர்ந்து கொண்டிருந்த கறுப்பையாவையும்

நந்தபாலவையும் இக்மன்ட்ட... இக்மன்ட்ட என்று அதட்டும் கண்டக்டரின் குரல் துரிதப்படுத்தியது.

இருவரும் மூடிய 'றப்பர்' சிரட்டையில் கரந்துரைந்த 'சுருட்டை' தீண்டியதுபோல வெடுக்கென பஸ்சை விட்டு இறங்கினர்.

"மட்காட்" தரையில் அரைந்து தேய புல்லோட் அடித்து கிறீச்சிட்டு ஈனக்குரல் எழுப்பி நகரும் அளவத்தகொட வேன் இந்த இருவரையும் பார்த்து யனவாத..? என்று கேட்டு நே... நே... என்ற தலையசைப்பினால் கோபமும் வெறுப்பும் கொண்டு ரைட்... ரைட்... என்ற குரலோடு ஒரு குலுக்கலுடன் உரசிக் கொண்டு கடந்து சென்றது.

பஸ் நிலையத்தை விட்டு இருவரும் வெளியே வந்தனர். முன்னால் பெரகும்பா வீதி, வீதியின் கடைசிக் கோடியில் அமைந்திருந்த நைட்கடை மட்டுமே திறந்திருந்தது. கடையின் முன் உள்ள பக்கிஸ் பெட்டியில் இருவர் குந்திக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரினதும் தோற்றமே 'பஜார் பேர்வழிகள்' என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தது. "யாரை மடக்கலாம்" என்ற அவர்களின் பார்வையில் படாமல் கறுப்பையாவும், நந்தபாலவும் எதிர்திசையில் நடந்தனர். கடையின் முன்பகுதியில் கேஸ் அடுப்பில் தகிக்கும் கொத்து ரொட்டித் தகரம் போடும் தாளம் இருவரையும் தொடர்ந்து அழைத்தது.

பாதையோரத்தில் கண்ணி வைத்து நின்ற ஆட்டோகாரன் இந்த இருவரையும் கண்டு முதலில் சுறுசுறுப்படைந்தாலும், பின்னர் வாடிச் சோர்ந்து வரும் இருவரையும் பார்த்து சலிப்புற்று இந்த கேஸ் நடை வண்டி சரிப்படாது என ஊகித்து மீண்டும் ஆட்டோ வண்டியினுள்ளே தன்னை புதைத்துக் கொண்டான்.

"நந்தபால..." இருவருக்கும் இடையே நிலவிய மௌனத்தைக் கலைப்பது போல் மெதுவாக பேச்சை எடுத்தான் கறுப்பையா தலைவர். இருவரும் இப்போது புதிய மார்கட் தொகுதியைக் கடந்து ரவுண்ட் போட்டிற்கு சமீபமாக நடந்து கொண்டிருந்தனர்.

மார்கட் கட்டிடத் தொகுதிக்கு எதிரே இரண்டாம் உலக மகாயுத்தத்தில் நேச நாட்டு படைகளுடன் சேர்ந்து சமர் செய்து மடிந்த நம் நாட்டு வீரர்களின் நினைவாக எழுப்பப்பட்ட மணிக்கோபுரம் இரவு மணி பத்து என்பதை பெருமையுடன் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

"தலைவர் இப்ப கடையில் போய் தேத்தண்ணி குடிச்சிட்டு மெழுகுதிரியும் நெருப்பெட்டியும் வாங்கிட்டு பத்தரை மணிக்கு புறப்படுற மாத்தளை பஸ்சில போய் ரேந்தகொட சந்தியில இறங்கி நடந்து தோட்டம் போயிறுவோமா...?"

"இல்ல நந்தபால முந்தி நடந்தது அதுக்குள்ள மறந்திட்டியா. நம்ம சைவக்கடைக்குப் போய் இருக்கிறத சாப்பிட்டு கோச்ஸ்டேசன் முன்னுக்கிருக்கிற விறாந்தையில கொஞ்ச நேரம் கண் அசந்தமுனா விடிஞ்சிடும். முதல் காலையில பஸ் எடுத்து தோட்டத்திற்கு போனோம்னா நாளைக்கி வேலைக்கும் போயிறலாம்."

தலைவர் கறுப்பையாவின் பேச்சுக்கு மறுப்பின்றி, அவன் பின்னே நடந்தான் நந்தபாலா.

இருவரும் சைவக்கடையை அடைந்தபோது கடையை மூடி பலகை போட்டுக் கொண்டிருந்தார்கள். டீ மேக்கர் சுடு தண்ணீர் பாய்லரைக் கழுவி சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

கறுப்பையா தலைவரைக் கண்ட கடை முதலாளி "வாங்க தலைவரே வாங்க" என்று அழைத்தபடியே, "என்ன இந்த ரெண்டாங்கெட்ட நேரத்தில்" என்றார். தோட்டப் பகுதியில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் போலீசுக்கு செல்லும் முன்னர் தலைவர் கடை முதலாளியைக் கண்டு ஆலோசனை கேட்க தவறமாட்டார்.

"இப்பதான் கொழும்பில இருந்து வாரோம். எல்லாம் இந்த லயத்து விசயமாகத்தான் எட்ஓப்பீசுக்கு போயி ஜீ.எஸ்ஸை கண்டு பேசி எல்லா பிரச்சினையும் கூறிவிட்டு வார்ரோம். பஸ் இல்ல வீட்டுக்கிப் போறதுக்கு, முதல்ல வயிற்றுக்கு ஏதும் சாப்பிடுவோம்மேன்னு இந்தப் பக்கம் வந்தோம்." தலைவரின் குரலில் பெருமை இழைந்தது. ரொபட் புறாசின் முயற்சியாக இந்த தடவைதான் அவர் கொழும்பு சென்றதிற்கு பெரியோர்களை நேரில் சந்தித்து தம் குறைகளை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அதுதான் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றார்.

"என்னதான் இருந்தாலும் இப்ப காலம் கெட்டுப்போய் கெடக்கிறபோது நேரங்காலத்தோடு வீடு வாசல் போய் சேர தெரிஞ்சிக்கிறணும். இங்கேயும் நேரத்தோட சாப்பாடெல்லாம் முடிஞ்சிறிச்சி இல்லன்னு சொல்ல முடியாது. ஏதோ இருக்கிறத சாப்பிடுங்க. டேய் தம்பி தலைவருக்கு பாத்துவை" என்று குரல் கொடுத்தார்.

கடையை மூடி படுப்போம் என்ற நினைப்பில் மேசை நாற்காலிகளை துடைத்து அடுக்கிக் கொண்டிருந்த பையன் மீண்டும் வேலை செய்ய வேண்டியுள்ளதே என்ற வெறுப்பில் வேண்டா வெறுப்புடன் இலை போட்டு மீதியிருந்த தோசைகளை பரிமாறி ஊசிப்போன சாம்பாரை தடாலென ஊற்றினான்.

தாமரை இலையைக் கடந்து வழியும் சாம்பார் சாரத்தில் இறங்கியது. வழியும் சாம்பாரை துடைத்தபடி கோபத்துடன் சப்ளை பையனைப்

பார்த்த நந்தபாலாவை சாடையில் கையமர்த்தி சமாதானப்படுத்தினார் கறுப்பையா தலைவர்.

இவர்கள் பசி இவர்களுக்கு. அவன் கோபம் அவனுக்கு பெரிது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் தலைவரிடம் சில்லறையை எண்ணி கணக்கிட்டபடியே முதலாளி கேட்டார். "என்ன தலைவரே, மாதம் தவறாமல் கொழும்பு கொழும்புன்னு போய்கிட்டுதான் இருக்கிறீங்க. இந்த லயத்து பிரச்சினைக்கு ஒரு முடிவு வருமா?" சைவக்கடை முதலாளியும் முன்பு அட்டனில் தோட்டப் பகுதியில் வாழ்ந்தவர்.

"அப்பாடா இங்க மாதிரியா அங்க என்னா ஒற்றுமை" ஒன்னுன்னா குளவிக்கூட்டை கலைச்சா ஒன்னா சேர்ந்து துரத்துமே அந்த மாதிரின்னு பெருமைப்பட்டுக் கொள்வார்.

முதலாளி அப்படி கூறும் பொழுது, "இங்க அப்படி ஆவுங்களா. இங்கேயும் நாங்க தமிழன்னு வாழுறோமே அதுவே பெருசுதாங்கன்னு", தலைவர் கறுப்பையா எடுத்துச் சொல்லி திருப்திப்பட்டுக் கொள்வார்.

கண்டி மாத்தளை குன்றுகளுக்கு வடமேற்கில் தாழ்ந்து செல்லும் மலைப்பகுதிகளிலும் மாவத்தகம குருணாகல் சரிவுகளிலும் பாரிய கிராமங்களுக்கிடையேயும் வரண்ட காடுகளுக்கு மத்தியிலும் அநாதரவாக, குட்டி குட்டி தோட்டங்களாக சிறைபட்டுக் கிடக்கும் றப்பர் தென்னந் தோட்டங்களில் வாழும் நம்மவரின் நிலை கயிறறுந்த பட்டம் போல் தொடர்பற்றதுதான்.

அந்த தனிமைதான் அவர்களின் தனித்துவம்! தோட்டங்களில் இழையோடி கிடக்கும் கிராமியச் செல்வாக்கும், மொழியும் பேச்சு மொழியில் கூட ஒரு மணிப்பிரவாளத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

தொடர்ச்சியில்லாது ஆங்காங்கே தொட்டம் தொட்டமாக பரந்து கிடக்கும் தோட்டங்கள், தொடர்பில்லாது அறுபட்டுக் கிடக்கும் உறவுகள். தீர்வே இன்றி நீக்கமற நிறைந்து கிடக்கும் பிரச்சினைகள்... ஓயாத உழைப்பு இவற்றின் கூட்டுக்கலப்புதான் இவர்கள்.

"லயத்தை ரிப்பேர் செய்யும்படி கடிதம் எழுதுறதாக சொன்னாங்க. போன மாசமும் இப்படித்தான். ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தோம். துரை ரீஜனல் ஆபிசு அனுமதி கொடுக்கல்ல நம்மால் முடியாதுண்டான். இன்னைக்கி நேத்து கட்டின லயமா? வெள்ளக்காரன் கட்டுனது. இந்த பயலுகளும்தான் வன்செயல் கொளப்பமுன்னு நெருப்ப வச்சி... வச்சி கொழுத்தினாங்க. எத்தனை காலத்து லயம். மழை காத்துன்னு இத்துப்போய் உக்கி இப்ப ஒழுகுது. காம்பிரா உள்ளுக்கும் புளங்க வசதியில்லை. பின்பக்கம் குசினி இறக்கி கட்டினா அதையும் இடிச்சி ஒடைக்கச் சொல்லுறானுக. இப்ப எங்க வீட்டில் என் மகன் குடும்பம், மகள் குடும்பம்னு மூணு குடும்பங்கள்

இருக்கிறோம். நாங்க குடும்பம் நடத்துறதே பெரிய அசிங்கமுங்க" தலைவர் பெருமூச்சு விட்டுக் கூறினார்.

"என்ன தலைவரே, எனக்கு தெரியாத தோட்டத்து சங்கதிகளா... என்னமோ நம்ம ஆளுக தலைவிதி இறைவன் விட்டபடி நடக்கும். தோசை சாப்பிட்டிங்களா. எப்படி நல்லா இருந்திச்சா தெரியல பிளேன்டி குடிக்க முடியாது பொயிலரை அணைச்சாச்சி. இப்ப எங்க தங்க போறீங்க, கடைசி பஸ் போயிருக்குமே, முந்தி மாதிரி வெளியாளுக இங்க தங்க முடியாது. நாங்க கடையில உள்ளவிங்க பெயர்களை போலீசில் பதிவு செய்திருக்கோம். எந்த நேரத்தில் போலீஸ் வந்து செக் பண்ணுதோ சொல்ல முடியாது."

"இல்லங்க, நாங்க கோச்ஸ்டேசன்ல படுத்திருந்திட்டு விடியற்காலையில் வெள்ளன வீடு போய் சேர்ந்திருவோம். உங்களுக்கு என்னத்திற்கு எங்களால வீண் தொல்லை..." முதலாளியிடம் விடைபெற்றுக் கொண்டு புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தனர். நந்தபால ஒரு பீடியை பற்ற வைத்து உடலுக்கு தெம்பேற்றிக் கொண்டான்.

பத்தரை மணிக்கு இங்கிருந்து புறப்படும் மாத்தளை பஸ்சில் ஏறி ருக்கதென சந்தியில் இறங்கி கிராமங்களுக்கூடாகவும் பற்றைக் காடுகளுக்கூடாகவும் நடந்து தோட்டத்திற்குப் போய் சேர்ந்துவிட அவர்கள் உடலில் தெம்பு இல்லாமல் இல்லை.

ஒரு காலத்தில் நேரம் காலம் பாராது இப்படி வந்து போனவர்கள்தான். ஆனால் இன்று காலம் கெட்டுப்போய் கிடக்கின்றது.

பட்டப்பகலிலேயே ஒத்தை செத்தை வந்துவிட்டால் "காசை எடு" உருளோசை கழட்டுங்கிற காலமாச்சே. போதாதற்கு இவர்கள் சங்கத்திற்கு ஆள் சேர்க்கின்றபடியால் துரை வேற "நாட்டில்" அடி ஆள் வைத்திருக்கின்றான்.

சங்கத்திற்கு சேர்ந்த பின்னர் துரைமார்களின் தட்டிக்கேட்க முடியாத அதிகாரத்திற்கு ஆபத்து வந்துவிட்டது. அரைப்பேர் போடாதே, குறைவாக அளக்காதே, லயத்தை திருத்து என்றெல்லாம் கோரிக்கைகள் வர இந்த பிரதேசத்தில் புகுந்த இந்த புது நோயையும் அதன் சூத்திரதாரிகளான கறுப்பையா தலைவர், நந்தபால உட்பட இன்னும் பல தோட்டங்களில் உள்ள சிலரையும் எப்படியும் மடக்கி விட வேண்டுமென துரைமார்கள் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் அந்த சம்பவம் நிகழ்ந்தது. கறுப்பையா தலைவரும் நந்தபாலவும் கொழும்பு போய், இது போல் இரவில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் ரேந்தகொட சந்தியில் வைத்து காடையர்களினால் தாக்கப்பட்டனர். நந்தபால சிங்களத்தில் கூச்சலிட்டபடியால் பக்கத்து கிராமவாசிகள் ஓடிவந்து இருவரையும் காப்பாற்றினர்.

எனினும் இருவரும் ஒரு வாரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டி இருந்தது. எனவேதான் இவ்வாறான வேளைகளில் தோட்டங்களுக்கு திரும்பிச் செல்வதை தவிர்த்துக் கொண்டார்கள்.

புகையிரத நிலையத்திற்கு செல்லும் வழியில் கோயிலை கடக்கும் போது நந்தபால, தலைவரை கேட்டான், "இந்த வருஷம் நம்ம தோட்டத்தில காமன்டி ஊன்றுறது இல்லையா?"

"காமன் மட்டுமில்ல சிந்தாகட்டி தேர்கல் எல்லாம் கும்பிடனும். அதோட உச்சி மலையில இருக்கிற கலேபண்டார கோயிலயும் பொங்க வைக்கனும். ஆனா இப்ப தோட்டத்திலே அநேகமானவுங்க சேர்ச்சிற்குதானே போறாங்க எப்படி வரி வசூலிக்கிறது...?" தலைவரின் குரல் சோகமாக ஒலித்தது.

"ஆமா தலைவரே, நானும் சொல்லனும்னுதான் இருந்தேன். நம்ம தோட்டத்தில உள்ள மொத்தம் எழுபது குடும்பத்திலே அஞ்சி குடும்பம் நாங்க சிங்களவங்க. நாங்க ரிதிகம பன்சலைக்கு போறதோட, பத்தினி தெய்யோ கோயிலுக்கும் வந்து சாமி கும்பிடுறோம். நம்ம தோட்டத்தில உள்ளவங்க சடங்கு, கல்யாணம்னு டவுன்ல உள்ள கோயில்களுக்கு போனா நம்ம ஆளுகளுடைய நெலமை தெரியாம அங்க உள்ள ஐயர்மாருக சின்ன விசயத்திற்கெல்லாம் ஐநூறு, ஆயிரம்னு புடிங்கி திங்கிறாங்களாம். குளியாபிட்டி பக்கம் ஒரு ஐயர் கழிப்பு கழிக்கணும் நூல் கட்டனுன்னு ஊர் உலகத்தில இல்லாத சாமான் சட்டெல்லாம் கேட்கிறதொட, ஏழைகளுக்கு ஒரு மாதிரியும் பணக்காரங்களுக்கு ஒரு மாதிரியும் நடத்துராராம். இதுனாலதாம் நம்ம சனங்க இப்ப ஆதரிப்பார் இல்லாம கோயிலுக்கு போகவே பயப்படுறாங்க. ஆனா பாதிரிமார்களும் சிஸ்டர்மார்களும் இப்ப தோட்டம் தோட்டமா வந்து உடுப்பு துணி வகைகள் எல்லாம் கொடுக்கிறதோட, காசு பணம் வாங்காம ஜெபம் சொல்லிக் கொடுத்து ஆதரிக்கிறாங்க. இப்ப அவுங்க நம்ம தோட்டத்தில கூறின புத்திமதிகளாலதான் நம்ம தோட்டத்து ஆம்புள பொம்புளங்க ஸ்பிரிட் காயவைச்சி குடிக்கிற பழக்கத்தை விட்டிருக்காங்க..."

"ஆமா நந்தா இப்ப அநேகமான கோயில்களை நம்ம ஏழைகள் மதிக்காமல் நடக்கிறபடியால்தான் இதெல்லாம் நடக்குது. நான் முந்தி சொன்னது ஒனக்கு ஞாபகம் இருக்குமுன்னு நெனைக்கிறேன். முந்தி நாங்க வன்செயல்ல அடிபட்டு காட்டுல ஒளிஞ்சி இருந்து பிறகு அகதி முகாம்ல இருந்தோம் இல்ல, அங்கேயும் எங்கள தோட்டத்து ஆளுன்னு பிரிச்சு வைச்சுத்தான் நடத்துனாங்க. பாண் வாங்கிற போலிம்ம கூட வேற வேறயாகத்தான் வைச்சாங்க..."

"அநியாயக்காரனுக... மழை வுருற மாதிரி இருக்கு. வாங்க வேகமா நடப்போம்" என்றவாறு "ஆமா தலைவரே நம்ம இருக்கிற லயன் காம்பிரா நமக்கே சொந்தமாகப் போகுதுன்னு ஒரு பேச்சி அடிபடுதே..."

தலைவர் கறுப்பையா எட்டி நடையைப் போட்டவாறு கூறினார், நந்தா உனக்கு நாட்டுல வயல், வீடு இதெல்லாம் இல்ல."

"உன்ன போல குடும்பங்கள் எங்க மாதிரி தோட்டத்தில இருக்கீங்க. நான் இந்த தோட்டத்து லயத்திலதான் பிறந்தேன். எங்கப்பாவும் இதே தோட்டத்தில இந்த லயத்தில பிறந்திக்காம். நாங்க பரம்பரையா இந்த தோட்டத்திலதான் வாழ்ந்தோம். இந்த லயத்தை விட்டு எங்கள போகச் சொன்னா நாங்க எங்க போவோம். இப்ப அஞ்சி வருஷம் பத்து வருஷம் ஒரு வீட்டுல கூலிக்கு வாடகைக்கு இருப்பவங்களைக் கூட வெளியே அனுப்ப முடியாம இருக்கு. அப்படி இருக்க நேரம் பரம்பரையா இருக்க நமக்குத்தான் இந்த லயம் காம்பிரா எல்லாம் சொந்தம்." இப்பொழுது மழை கொட்டத் தொடங்கிவிட்டது. இருவரும் ஓடி ரயில்வே நிலையத்திற்கு முன்பிருக்கும் விறாந்தையை அடைந்தனர்.

ரயில் நிலையத்தில் பலர் இரவு வண்டிகளுக்காக காத்து நின்றனர். தம் கைவசம் இருந்த அன்றைய செய்தித்தாளை இருவரும் தரையில் விரித்து படுத்த சிறிது நேரத்திற்குள் இருவரும் மெய்மறந்து தூங்கிவிட்டனர்.

தூறிக் கொண்டுவந்த மழை பெரும் பாட்டமாக பெய்து கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் தூங்கினோம் என்று தெரியாத இருவரும் பெரும் மழையோடு பயங்கரமாக இடித்து முழங்கும் ஓசை கேட்டு திடுக்கிட்டு எழுந்தனர்.

மூன்றாம் சாமம் கழிந்து பொழுது புலரும் வேளை அடைமழை விடாது பெய்து கொண்டிருந்தது. வரவர அதன் வேகம் அதிகரித்து ஓங்காரத்துடன் பெய்யத் தொடங்கியது. எங்கும் வெள்ளக்காடு. ஒருவாறு இருவரும் மறுநாள் வீடு வந்து சேரும்போது நண்பகல் தாண்டிவிட்டிருந்தது.

மழை... மழை... பெருமழை... மழை விட்டபாடாக இல்லை. தோட்டத்து கான் குட்டைகள் கூட நிரம்பி வழிந்து பெருக்கெடுத்து ஓடுகின்றன. வானம் லயத்துக் கூரையாக பொத்துக் கொண்டு ஒழுகுகின்றது. மேட்டு லயத்தில் இருந்து ஓடி வந்த ஒருவன் "தலைவரே எங்க லயத்துமேல் ஈரப்பலா மரம் விழுந்திருக்கின்னு ஐயையோன்னு" ஒப்பாரி வைத்தான்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் எல்லோரும் அங்கு ஓடினர். நல்ல வேளை லயத்திற்கு பெரிதாக சேதம் ஒன்றும் இல்லை. ஈரப்பலா மரத்தின் சிறிய வாது ஒன்று மட்டுமே லயத்தைத் தாக்கி இருந்தது.

மழை... மழை.. பெரு மழை... போதாதற்கு ஊளையிட்டுச் சீறும் காற்றும் சேர்ந்து சுழன்று மரங்கள் பேயாட்டமாடி பயமுறுத்தின.

பண்பட்ட இதயம் போல் மூன்று தலைமுறையின் சோகங்களைத் தாங்கிக் கொண்டு மழை, வெயில், காற்று ஆகிய இயற்கையின் சீற்றங்களை சகித்துக் கொண்டும் கல்வீச்சு, சூறையாடல், எரியூட்டல் ஆகிய இன வெறிச் செயல்களினால் புண்பட்டும் நிலைகுலைந்து போன தோட்டத்து லயங்களின் தகரங்கள் தம் ஆற்றாமையைச் சொல்லி அழ சுவர்கள் கரைந்து காரை பெயர்ந்து இடிந்து விழத்துடிக்கின்றன.

தொடர்ந்து பெய்யும் மழையினால் தரை ஊற்று கிளம்பி பொங்குகின்றது. துரையைத் தேடி ஓடினார் தலைவர். அவர் கொழும்பில் நடைபெறும் றகர் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள போய்விட்டிருந்தார்.

அவருக்கும் கீழே இருப்பவர்கள் ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலை தலைவர் ஏமாற்றுதலுடன் திரும்பி வந்தார்.

இனியும் பார்த்துக் கொண்டிருந்தால் நிலைமை மேலும் மோச மடையலாம். எல்லோருமே கறுப்பையா தலைவரை நச்சரித்துக் கொண்டிருந்தனர்.

கூரைகள் பெருமளவில் ஒழுக தரை ஊற்று கண்டு போய்விட்டது. எவ்வளவு தண்ணீரைத்தான் அள்ளி அள்ளி வெளியே ஊற்றுவது. அள்ளிய கைகள் அசந்து போய்விட்டன.

லயத்தை ரிப்பேர் செய் என்ற கோரிக்கையை அன்றே கவனித்திருந்தால் இன்று நிலைமை வேறு. அதைப்பற்றி இப்போது பேசிப் பலனில்லை. காற்றில் பறக்கத் துடிக்கும் தகரங்களையும் இடிந்து சாய்ந்துவிட நழுவும் சுவர்களையும் தாங்கிப் பிடிக்க வேண்டும்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சிறுவர்கள் உட்பட அனைவரும் புறப்பட்டனர். தோட்டத்தை அடுத்து காட்டுத் தொங்கலில் இருக்கும் மானாப்புல் மலையிருந்தும் சிந்தா கட்டில் இருந்தும் கட்டு கட்டாக இலுக்கு மானாவும் கம்புதடிகளும் வந்து சேர்ந்தன.

இற்றுப் போய் உடைந்த "பரால" ரீப்பை களுக்காக காட்டுத்தடிகளும் உக்கிப்போய் ஒழுகும் கூரைத் தகரங்களுக்கு மேலாக இலுக்கு மானாப்புல் கட்டு கட்டாக கட்டிப் போடப்பட்டு நிரவி விடப்பட்டன.

கூரையை ஊடறுத்து நிலத்தில் கொட்டிய நீர் குறைய தரை காய்ந்தது. சுவர்களும் நிமிர்ந்து கொண்டன. அன்றிரவு அனைவரும் அமைதியாக தூங்கினர். மறுநாள் மழை குறைய சூரியன் எட்டிப் பார்த்தான்.

மரம் காஞ்சிட்டா இன்னைக்கு இல்லாட்டியும் நாளைக்காவது பால்வெட்டலாம் என்று பேசிக் கொண்டனர். அப்போது மேட்டு லயத்துப்

பக்கமாக துரையும் பெரிய கன்டக்டரும் வருவதாக ஒருவர் ஓடி வந்து தகவல் கூறினார்.

தலைவர் கறுப்பையாவும் நந்தபாலாவும் ஓட்டமாக அங்கு ஓடிச் சென்றனர். துரை மழையினால் ஏற்பட்ட சேதங்களையும் லயங்களையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். துரைக்கு சலாம் தெரிவித்த கறுப்பையா தலைவர் "பார்த்தீங்களா, துரைகளே நான் எத்தனை தடவை லயத்தை ரிப்பேர் செய்ங்க செய்ங்கன்னு ரிப்போட் செஞ்சேன். இப்ப பார்த்தீங்களா, எங்களுக்கு நடந்த கதியை. நாங்க மட்டும் இந்த தடவை காட்டுக் கம்பு தடிகளை வெட்டிப் போட்டு இலுக்கு மானாவை வச்சி கட்டாட்டி லயமே மழையிலே ஊறிப்போய் இடிஞ்சி விழுந்திருக்கும்ங்க. அதுனால துரை இனியும் சுனங்காமல் லயத்தை ரிப்பேர் செய்து கட்டித்தாங்க" பவ்யமாகக் கேட்டார் கறுப்பையா தலைவர். தான் எடுத்த சமயோசித நடவடிக்கையை துரை பாராட்டுவார் என்ற நம்பிக்கையில் வார்த்தைகள் பெருமிதப்பட்டுத் தெறித்தன.

"அது இல்ல தலைவரே, இப்ப நீங்க பெரிய குத்தம் செஞ்சிட்டீங்க. இந்த லயம் தோட்டத்து சொத்து. தோட்டம் அரசாங்கத்தினதும் கம்பெனியினதும் சொத்து. இதுல உள்ள ரீப்ப பராலகளை உடைச்சி மாத்தி காட்டுக் கம்புகளை போட்டுக் கட்ட உங்களுக்கு அதிகாரம் கிடையாது. தகரத்திற்கு மேலே இலுக்கு மானாப் புல்லு வைத்து யாரைக் கேட்டுக் கட்டினீங்க. இதுக்கெல்லாம் நம்ம மேல் இடத்தில அனுமதி பெறனும். உங்க உங்க விருப்பத்திற்கு இதெல்லாம் நடக்க முடியாது. அதனால நான் பொலீசில் என்றி போட்டிட்டு ரீஜனல் ஆப்பீசுக்கும் அறிவித்து உங்களுக்கு நடவடிக்கை எடுத்து தண்டம் போடப்போறேன். இதை இப்போது நான் அறிவிச்சி நடவடிக்கை எடுக்காட்டி பின்னுக்கு எனக்கும் குத்தம் கிடைக்கும்.

துரை இதென்னங்க அநியாயம், கறுப்பையா தலைவர் கண் கலங்கி குரல் கொடுத்தார்.

கறுப்பையா தலைவரின் பேச்சைக் கேட்க அங்கு துரை இல்லை. அவர் தூரத்தில் நிறுத்தியிருக்கும் ஜீப் வண்டியை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றார்.

இதுவரை ஊமையாகக் காய்ந்த வெயில் சற்றே தணிய வானத்தில் மீண்டும் கரு மேகங்கள் திரண்டுவர வானம் இருண்டு கொண்டு வருகின்றது. வானம் ஒரே கூரைதான். மெல்லிய தூறல்கள் பனித்துளியென தூமிக்கிறது. மழை மழை.

மீண்டும் பெரும் மழை ஒரு பாட்டம் பெய்து அழுதுதான் தீர்க்கும் போலிருக்கிறது.

# கப்பல் எப்பங்க...?

கே. கோவிந்தராஜ்

அந்த பயங்கர சம்பவம் நடந்து மூன்று நாள்களாகி விட்டன. இதுவரைக்கும் எந்த பேச்சுவார்த்தைகளோ அல்லது அதுபற்றி யாரும் கவலைப்படுவதாகவோ தெரியவில்லை.

முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் என்று தினமும் ஆள்கள் கோவிலுக்கு பயங்கர அனுபவங்களுடன் வந்து சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

மாத்தளை மாரியம்மன் எல்லாருக்கும் அடைக்கலம் கொடுத்து இருக்கிறாள். நடந்து முடிந்த வன்செயல் காரணமாக மாத்தளை வட்டாரத்திலுள்ள தோட்டங்களிலிருந்து சுமார் பத்தாயிரம் பேருக்கு மேல் அகதிகளாக வந்து சேர்ந்துவிட்டனர்.

தேர்த்திருவிழாவுக்குக்கூட இப்படி சனங்கள் வந்ததில்லை.

அகதிகளோடு வந்து சேர்ந்த வீரையாவும் அவனது சகாக்களும் மாத்தளை நகரக் கடைகளில் முடிந்தளவு பணம் வசூல் செய்து அகதிகளுக்கு உணவு வழங்குவதில் சுறுசுறுப்பாக இருந்தனர்.

மாத்தளை வாழ் பணம் படைத்தவர்கள் தாராள மனம் கொண்டு முகம் சுழிக்காமல் உதவி ஒத்தாசைகளை செய்து வந்தனர். பல சமூக நல சங்கங்களும் சேர்ந்து கொண்டன.

புண்ணியவான்களின் உதவியால் மூன்று நாள்களாக சாப்பாடு கிடைத்தது. எத்தனை நாளுக்கு எத்தனை பேருக்குத்தான் தருமம் பண்ணுவார்கள். பொதுநலன் கருதி உதவி செய்த வாலிபர்களின் மூலம் அகதிகளை அரசாங்கத்துக்கு பாரம் கொடுத்து விட்டனர்.

நாடெங்கிலும் நடந்த வன்செயல்களால் பல பாடசாலைகள், கோவில்கள் அகதி முகாம்களாகிவிட்டன.

தோட்டத்து தலைவர்மார்கள் கண்டிக்கும் கொழும்புக்கும் தொழிற்சங்கங்களோடு தொடர்பு கொண்டு - தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தினர்.

அகதி முகாம்களை நடத்துவது அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியாகிவிட்டது. பேச்சுவார்த்தைக்கு இணங்கியது.

நான்காவது நாள்!

தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கத்தோடு பேசிவிட்டு அகதி முகாமுக்கு வந்தார்கள். அவர்களுக்கென ஓர் அவசர மேடை அமைத்து அதில் நின்று பேசினார் தலைவர்.

"பெரியோர்களே, சகோதர சகோதரிகளே, உங்கள் எல்லாருக்கும் இப்படியான ஒரு நிலைமை வருமுனு நாங்க எதிர்பார்க்கல... இந்த மாதிரி சம்பவம் மாத்தளை வட்டார தோட்டங்களில் மட்டுமல்ல, நாட்டில் பல பகுதிகளிலும் நடந்திருக்கு. அதுக்கு நாங்கள் தகுந்த நடவடிக்கை எடுப்போம். கவனமா கேட்டுக்கிருங்க. ஒடைச்ச லயன்கள, காம்பறாக்கள திருத்தித் தர சொல்றோம். களவு போன சாமான்களுக்கு நஷ்ட ஈடு வாங்கித் தருவோம். இனிமே இந்த மாதிரியான வன்செயல்கள் வராமல் தோட்டங்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு தர்ரதா அரசாங்கம் சொல்லியிருக்கு... அதனால நீங்க எல்லாரும் திரும்பவும் தோட்டங்களுக்குப் போய் நாளையிலிருந்து வேலை செய்யணும். நான்கு நாள்கள் வேலை செய்யாமல் இருப்பது அரசாங்கத்துக்கு எவ்வளவு நட்டமுனு தெரிஞ்சிக்கிட்டாங்க. எதுன்னாலும் நாங்கள் பேசி முடிவு பண்ணுவோம்."

அகதி முகாம் சலசலத்தது.

கூட்டத்தில் ஒரு பெரியவர், "ஐயா, நீங்க ஆயிரத்த சொல்லுங்க. இனிமே நாங்க தோட்டங்களுக்கு போகமாட்டோம். இந்த நாட்டுலேயும் இருக்கமாட்டோம். நீங்க எங்களுக்கு வேற ஒன்னுமே செய்ய வேண்டியது இல்ல... எங்கள இப்பிடியே கூட்டிக்கிட்டுப் போய் கப்பல்ல ஏத்துங்க... இல்லாட்டி ஏதாச்சும் நஞ்சுக்குடுத்து கொன்னிருங்க... ஆனா நாங்க இனி தோட்டத்துக்கு போகமாட்டோம்" என்றார்.

அவர் சொல்வது சரி என்பது போல் எல்லாரும், "நாங்க இனி தோட்டங்களுக்கு போகமாட்டோம்" என கோஷித்தனர்.

"ஆமாங்க பரம்பரை பரம்பரையா இந்த நாட்டுக்காகவே ஒழைச்சி ஒழைச்சி எத்தனையோ பேர் இந்த தேயிலைக்கே உரமாகி போயிட்டாங்க... நீங்ககூட அன்னைக்கு மேதின கூட்டத்துல பேசினீங்களே... "இந்த நாட்டு பொருளாதாரத்துக்கு தோட்டத் தொழிலாளிதான் ஆணிவேருன்னு..." இந்த நாட்டுல விசுவாசம் இல்லாமலா ஒழைச்சிக்கிட்டு வாறோம். எங்களை எல்லாம் இப்பிடி அடிச்சி, லயன்கள ஒடைச்சி அகதிகளா ஆக்கின ஒடனே... நீங்க வந்து.. தோட்டங்களுக்கு போங்க... வேலை செய்யீங்கன்னு சொல்லுவீங்க. நாங்களும் செக்குமாடுக கணக்கா ஒங்க பேச்சக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சி..." என்றார் இன்னொருவர்.

தலைவர் அசந்து போனார். பேசியவர் முன்னாள் ஒரு தோட்டத்தில் தலைவராக இருந்தவர்தான். தான் மே தின கூட்டத்தில் பேசியதைக்

குறிப்பிட்டு பேசியது அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது என்றாலும் இப்போது என்ன பேசுவது என்று யோசித்தார்.

அகதி முகாமின் சாப்பாட்டு விடயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வீரையாவும் வாலிபர்களும் வந்து சேர்ந்தனர்.

பெரியவர்களின் பேச்சில் வீரையாவுக்கு எப்பவுமே நம்பிக்கை இருந்ததில்லை. "என்னா நீங்க எல்லாரும் ஆளாளுக்கு பேசிக்கிட்டு இருக்கீங்க... வந்தவுங்கள பேசவுடுங்க..." என்றான்.

அவர் தொடர்ந்தார். "நீங்க சொல்றத பாத்தா இந்தியாவுக்கு போறதுனு தீர்மானம் பண்ணிட்டீங்க போல இருக்கு."

"தீர்மானம் என்னங்க தீர்மானம், முடிவே பண்ணிட்டோம். வேறு என்னங்க பண்றது? எழுவத்தி ஏழுல ஒரு வன்செயல் வந்து படாதபாடுபட்டோம். சரி வன்செயல்தான் முடிஞ்சிருச்சேனுட்டு ஒங்க மாதிரி தலைவர்மாருக பேச்சக்கேட்டு, போட்டது போட்டபடி விட்டுட்டு ஓடிவந்த லயத்துக்கே திரும்பவும் போனோம். அப்பொறம் என்னடான்னா? மதுரையில இடி இடிச்சா கும்பகோணத்துல மழை பெய்யிறமாதிரி எங்கயாச்சும் ஒருத்தன் சூடுபட்டு செத்தா எங்கள போட்டு அடிக்கிறானுங்க, ஒதைக்கிறாங்க..."

"இப்படி வன்செயல், டூ செயல், திரி செயல்னு வந்து இப்பிடி அகதிகளாகிட்டோம்.... இனி ஃபோர் செயலும் வந்து ஒரேயடியா போயிறாம ஆண்டவன் செயல்னு நெனைச்சு அக்கரைக்கே போயிடுரோமுங்க... நாங்கதான் இப்பிடி ஆகிட்டோம்... எங்க புள்ளைகளாவது நிம்மதியா இருக்க வேண்டாங்களா?"

இவ்வளவு காலமும் பட்ட அனுபவங்களும் எதிர்காலம் பற்றிய அவரது கனவுகளும் அவர் பேச்சில் தென்பட்டன. அவரின் மனோபாவத்தை புரிந்து கொண்ட தலைவர்...

"நீங்க ஏன் இப்பிடி பயப்படுறீங்க... துணிஞ்சி நிக்கனும். எது வந்தாலும் வரட்டுமுனு" என்றார்.

"நல்லா கேட்டீங்க... நீங்க... நாங்க ஒன்னும் அடிச்சிக்கிறதுக்கு பயப்புடலீங்க... கூட்டமா நாப்பது அம்பது பேரு கத்தியும் வாளும் தோக்கும் தூக்கிக்கிட்டு வாரப்ப நாங்க என்னா பண்ணமுடியும்? நாங்க என்னா தோக்கா வச்சிருக்கோம் தூக்கிச்சுட.... ஆகமிஞ்சினா மம்பட்டி களையும் கவ்வாத்து கத்தியுந்தான்..." என்றார் மற்றொருவர்.

பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த ஒருவர், "துணிஞ்சி நிக்கனுமினு சொன்னீங்களே, நாங்க ஒன்றும் கோழைகளில்ல... இதுவரைக்கும் ஒரு ஈ, எறும்புக்குக்கூட துரோகம் பண்ணியது கெடையாது. அப்பொறம்

எப்படிங்க... குத்துறதும் கொத்துறதும் கொலை பண்ணுறதும்... மோட சனங்கத்தான் இப்பிடி ஈவு எறக்கம் பாக்காம பச்சக் கொழந்தையைக் கூட விட்டுவைக்காம நெருப்புல கூட சுடுறாங்கனா... நாமளும் அப்பிடி செஞ்சா நமக்கும் அவுங்களுக்கும் என்னாங்க வித்தியாசம்? எங்க வம்சத்துக்கே இருக்கிற பொறுமையில எல்லாரும் இருக்கிறாங்க... சாது மெரண்டா காடு கொள்ளாதுங்க... எந்த நாட்டிலேயும் இல்லாத அநீதி இந்த நாட்டுல இருக்குங்க... 150 வருஷத்துக்கு மேலாக வாழ்ந்து வந்த எங்க பரம்பரைக்கு யாரையும் எதிர்த்து பேசக்கூட உரிமை இல்லாத அடிமைகளா இருக்கோம்" என்றார்.

கூட்டமே அமைதியாக இருந்தது.

"நீங்க எல்லாரும் பேசுறதுல ஒன்னும் தப்பில்ல. நாங்களும் எவ்வளவோ பொறுமையாத்தான் இருக்கோம். நான் யாரையும் கோழையினு சொல்லல... அது சரி, நீங்க எல்லோரும் இந்தியாவுக்குப் போய் அங்கேயும் நிம்மதியா இருக்க முடியுமுனு நெனைக்கிறீங்களா?" என்று ஒரு போடு போட்டார் தலைவர்.

"என்னாங்க இப்பிடி கேட்டுப்பிட்டீங்க... இந்தியா நம்ம தாய்ங்க.. எப்பவோ பிரிஞ்சிபோன கொழந்தைங்க தாயைத் தேடிக்கிட்டு வரும்போது தாய் சும்மா உட்டுருங்களா? என்னா செய்யிறதுங்க... ஊர்விட்டு ஊருவந்து எங்க ஒழைப்பையெல்லாம் இங்க வீணடிச்சிட்டு இப்பிடி வீசின கையுமா, வெறுங்கையுமா போற எங்கள அன்போடும் ஆறாத்துயரோடும் அரவணைச்சிக்கிருமுன்னு நெனச்சிதாங்க... தாய்கிட்டேயே போறதுனு தீர்மானிச்சோம்..." என்று கண்ணில் நீர்மல்க கூறினார் பெரியவர்.

இவ்வளவு நேரமும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த வீரையா ஆவேசத்தோடு பொங்கி எழுந்தான்.

யாருடைய பேச்சையும் கேட்க அவனுக்குப் பொறுமையில்லை.

"இந்தா பாருங்க... நீங்க தாய்கிட்டேயும் போறது இல்ல... தகப்பன்கிட்டேயும் போறதில்ல... இனிமே நீங்க எல்லாரும் நாங்க சொல்ற மாதிரிதான் கேக்கணும்... 150 வருசங்களுக்கு மேலாக இந்த நாட்டுல இருக்கிற எங்களுக்கு – எங்க பரம்பரைக்கு இதுதான் எங்க தாய்... இதுதான் எங்க தாய்நாடு... இந்த நாட்டவுட்டுட்டு நாங்க எங்கேயும் போக மாட்டோம்... அந்த வன்செயல் நடந்தபோது நாங்களும் பொறுமையிழந்து வாலிப வேகத்தை காட்டியிருந்தால் ஒரு சமுதாயமே அழிந்து போயிருக்கும். பொறுமைதான் எமக்கு உரிமையைப் பெற்றுத்தரப் போகின்றது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். அதனால தலைவர் சொல்றபடி நாங்க எல்லாரும் திரும்பவும் தோட்டத்துக்கு போறோம்... திரும்பவும் தோட்டத்துக்குப் போறோம்... ஆனால் ஒன்று... நாங்கள் இவ்வளவு காலமும்

எதுக்கு கத்தியைத் தீட்டினோம் என்பது உங்களுக்குத் தெரியும். இனி எதற்காக தீட்டுவோம் என்பதும் உங்கள் போன்ற தலைவர்மார்களுக்கு தெரிந்தால் சரி" என்று முடித்தான் வீரையா.

வீரையாவின் பேச்சு மற்றவர் யாரையும் பேசவிடாமல் தடுத்துவிட்டது. தலைவர் அவன் முதுகில் தட்டிக்கொடுத்து, "ஒங்கமாதிரி இளைஞர்கள் தான் இந்த சமுதாயத்துக்குத் தேவை" என்றவாறு விடைபெற்றார்.

* * *

வீரையாவும் அவனது சகாக்களும் முடிந்தவரை தொழிலாளர்களின் மனதை மாற்றி யாரும் இந்தியாவுக்குப் போறதில்லை இந்த நாட்டிலேயே இருந்து உரிமைகளைப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி கூறி வந்தனர்.

தோட்டத்தில் எது நடந்தாலும்... நடக்க இருந்தாலும் அது வீரையாவின் முடிவில்தான் நடப்பதாக இருந்தது. இவனது நேர்மையான உழைப்பும் பொதுநல சேவையும் முற்போக்கான செயல்பாடும் கண்டு பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இவனோடு சேர்ந்து கொண்டு மலையக சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டனர்.

வன்செயல் காரணமாக இந்தியாவுக்குப் போவது என முடிவு செய்த எத்தனையோ குடும்பங்கள் மனதை மாற்றிவிட்டன.

எந்த விடயத்திலும், 'நாம் ஒற்றுமையாக இருந்தால் எதையும் சாதிக்கலாம்' என்ற நம்பிக்கை மலையக மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின.

இந்த சமயத்தில்தான் மலையக மக்கள் ஓட்டுப் போடும் உரிமையைப் பெற்றார்கள்.

ஓட்டுப்போடும் உரிமை பெற்ற கையோடு நாட்டில் மாகாணசபை தேர்தலும் வந்தது.

"எங்களால்தான் நீங்கள் நாட்டுரிமை, ஓட்டுரிமை எல்லாம் பெற்றீர்கள்" என மாபெரும் தொழிற்சங்கம் உரிமை கொண்டாடி, "எங்களுக்கே ஓட்டுப் போடுங்கள்" என கேட்டுக் கொண்டார்கள்.

வீரையாவும் சகாக்களும் இவர்களுக்கு எதிராக மலையக மக்களைத் திசை திருப்பினார்கள். நூற்றியைம்பது வருடங்களுக்கு மேலாக செம்மறிகளாக வாழ்ந்த மக்கள் வீரையாவின் பேச்சுக்கு செவிமடுத்தார்கள்.

தோட்டங்கள்தோறும் கூட்டங்கள் போட்டு பேசத் தொடங்கினான் வீரையா...

"என் உடன்பிறப்புகளே, ஆரம்பத்தில் இந்திய - பாகிஸ்தான் ஒப்பந்தம், நேரு - கொத்தலாவல ஒப்பந்தம், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் போன்ற ஒப்பந்தங்கள் போல் மலையக மக்களை பிரிக்காமல் எனக்கு இவ்வளவு, உனக்கு இவ்வளவு என்று மலையக மக்களை கூறுபோடாமல் இலங்கை வாழ் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவாக அமைந்தது அந்த ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம்!

அந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் ஆறு அம்சக் கோரிக்கையை யாரோ எழுதி யாரோ கையொப்பமிட்டு சமர்ப்பித்தனர்.

அந்த ஆறு அம்சக் கோரிக்கைகளிலே ஆறாவது அம்சமாக இருந்ததுதான் மலையக மக்களின் பிரஜா உரிமை பிரச்சினை... வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்ட பௌத்த பிக்குமார்கள் - 'இனப் பிரச்சினையைத் தீர்க்குமுன் மலையக மக்களின் உரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்' என்ற கொள்கையில் விடாப்பிடியாக இருந்த படியால் வேறு வழியில்லாமல், 'ஒரு வரிச்சட்ட மூலம்' நமக்கு ஓட்டுப்போடும் உரிமை கிடைத்தது.

பிரஜாவுரிமை இன்றும் தீர்க்கப்படாத பிரச்சினை. நீங்கள் எந்தப் பிரச்சினைக்கு போனாலும் பிரஜாவுரிமை சர்டிபிகேட் கேட்காமல் இருக்கமாட்டார்கள். அதை நாம் போராடியே பெற வேண்டும்.

'காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதை'யாய் தங்களால்தான் மலையக மக்களுக்குப் பிரஜாவுரிமை கிடைத்தது என்று கூறி எம்மை இன்னும் ஏமாளிகளாக்கி எம்முதுகில் சவாரி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் இந்தத் தேர்தல் மூலம் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என கூட்டங்களில் பேசி... மக்களை திசை திருப்பினான் வீரையா.

மாகாண சபை தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரகாலமே இருந்தது.

வீரையா தலைமை தாங்கும் கூட்டங்களுக்கு மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது.

வீரையாவின் புதிய கட்சிப் பிரவேசத்தால் கொட்டை கோப்பியாய் வளர்ந்திருந்த தொழிற்சங்கத்தின் ஆணிவேர் ஆட்டங்கண்டது.

"ஆரம்ப காலத்தில் பிரஜாவுரிமை தேவையில்லை. 'உழைக்க வந்த இடத்தில் உனக்கெதற்கு பிரஜா உரிமை?' என்று கூறிய தொழிற்சங்கம் இன்று எப்படி பெற்றுக்கொடுக்கும்" என்றெல்லாம் வீரையா கூட்டங்களில் பேசியது தொழிற்சங்க மேல்மட்டத்தில் ஒரு பயத்தை ஏற்படுத்தியிருந்தது.

"எப்படியும் வீரையாவை ஜெயிக்க விடக்கூடாது. அவனை ஒழித்துக்கட்டியே தீருவேன்" என்ற கொள்கையில் விடாப்பிடியாக இருந்தனர் அவனது எதிராளிகள்.

***

லயத்தில் வீரையாவின் வீட்டில் மாத்திரம் பெற்றோமெக்ஸ் எரிந்து கொண்டிருந்தது.

நடைபெறவிருக்கும் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் எப்படி வாக்களிக்க வேண்டும் என்ற பிரசாரத்தை எப்படி மேற்கொள்வது என கட்சியின் முக்கியஸ்தர்களோடு அவசரக்கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தான் வீரையா.

திடீரென வந்த போலீஸார் வீரையாவை கைது செய்தனர். மற்றவர்கள் செய்வதறியாது திகைத்துப் போய் நின்றனர். அவர்கள் பேச்சு ஒன்றும் எடுபடவில்லை.

மறுநாள் பேப்பரில், "மலையகத்திலும் பயங்கரவாதம் தலைதூக்கம் - லயக்காம்பறாவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏகே 47 ரக துப்பாக்கிகள் சகிதம் வாலிபர் கைது" என கொட்டை எழுத்தில் வீரையாவின் படத்துடன் செய்தி பிரசுரமாகியது.

பேப்பரில் வந்த செய்தியை வீரையா கேள்விப்பட்டு துடித்துத் துவண்டு போனான்.

'விழிப்புணர்ச்சி கொண்ட மலையக இளைய சமுதாயத்தை இந்த தொழிற்சங்கம் எந்தக் காலத்திலும் எழும்பவிடாது' என்பதை புரிந்து கொண்ட வீரையா இனியும் இங்கு இருப்பதில் அர்த்தமில்லை என்று உணர்ந்தான்.

சிறையில் இருந்து வந்ததும் குடும்பத்தோடு இந்தியாவுக்குப் போவது நல்லது என தீர்மானித்துக் கொண்டான்.

விடுதலை எப்போது... கப்பல் எப்போது...?

# இனி எங்கே...?

## மு. சிவலிங்கம்

"மழ இனிமே வராது... மானம் வெளுத்திருச்சு..."

"ஆமா..! மப்பும் மந்தாரமும் களைஞ்சிருச்சு..."

"வண்ணான் பரியாரிய குழிமேட்டுக்கு வரச் சொல்லுங்க!"

"ஆமா... அட்டமி சரியா அஞ்சி முப்பதுக்கு தொடங்குது... அதுக்குள்ள அடக்கஞ் செஞ்சிறணும்... சனங்களும் நேரகாலத்தோட திரும்பனுமில்ல..."

இந்த உரையாடலை அங்கே நின்ற ஒரு வாலிபன் இடைமறித்தான்.

"அட்டமியோ... நவமியோ அந்த இருவதுபேரும் வராம அடக்கம் செய்யமுடியாது! வுடவும் மாட்டோம்!"

அந்த வார்த்தையில் பிடிவாதமும் கடுமையும் இருந்தது. "யாரும் அவசரப்படாதீங்க... அந்த இருவது பேரும் வந்துக்கிட்டு இருக்கிறதா சேதி வந்திருச்சு..." ஒருவர் சொன்னார். எல்லோரும் நிம்மதியடைந்தார்கள்.

"இப்படியொரு கூட்டம் எந்த சாவுக்குமே வந்ததில்ல... மந்திரி சாவுக்கோ... அரசியல்வாதி சாவுக்கோ... ம்ஹூம்..." என்று ஒருவர் வாயூறிப் போனார். ஆமாம், மக்கள் யாவரும் காகங்களைப் போன்றவர்கள். காகங்கள் சாவிலே மட்டும் ஒற்றுமைப்படும் - சாவிலே மட்டும் கூடிப்பறக்கும். செத்துக்கிடக்கும் பறவையை வட்டமிடும். மனிதர்களும் இப்படித்தான்.

ஆனந்தனின் மரணம் மக்களைக் கூட்டி வைத்திருக்கிறது. அந்த மக்களை வழிநடத்தும் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து வந்திருக்கிறது. காலங்காலமாக அந்த மக்கள் தூக்கிச் சுமந்த சங்கக் கொடிகளெல்லாம் அந்த மலைமேட்டில் வீசும் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. சாவில் கலந்து கொள்ள வந்த மக்கள் அந்த தேயிலை மலைகளையெல்லாம் மனித மலைகளாக மாற்றியிருந்தார்கள்.

ஒரு தலைவர் பேசத் தொடங்கினார். சுடுகாட்டிலே ஒலிபெருக்கி பூட்டியிருந்தார்கள். அவர் கனைத்து இருமி, சட்டையை இழுத்து சரிசெய்து கொண்டு ஒலிபெருக்கியைப் பிடிக்குமுன்னே ஒரு பெரிய பொலிஸ் ஜீப்வண்டி ஓடி வந்தது. சனங்கள் சலசலப்படைந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இருபது இளைஞர்களும் ஜீப் வண்டியிலிருந்து இறங்கினார்கள். ஒருவரது கை இன்னொருவருடைய கையோடு இணைத்து இரும்பு காப்பு.... 'கைமாசு' போடப்பட்டிருந்தது. விளையாட்டுப் போட்டியில் கயிறு இழுப்பவர்களைப் போன்று அவர்கள் நின்றார்கள்.

அவர்களைக் கண்டதும் இளைஞர்கள் ஓடிவந்தார்கள். பொலீஸ் வண்டியை சூழ்ந்து கொண்டார்கள். அங்கு கூடி நின்ற தொழிற்சங்க தலைவர்கள் அத்தனை பேரும் இளைஞர்களைச் சாந்தப்படுத்தினார்கள். அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாதென்று அக்கறைப்பட்டார்கள். தலைவர்களில் ஒருவர் பொலீஸ் அதிகாரியுடன் கதைத்தார். பொலீஸ் அதிகாரி சங்கிலி காப்புகள் பூட்டப்பட்டிருந்த இளைஞர்களின் கைகளை அவிழ்த்து விட்டார்.

இரும்புக்காப்பு அவிழ்க்கப்பட்ட இளைஞர்கள் ஓடிப்போய் ஆனந்தனின் பிணத்தைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்கள். அவனது பாதங்களை தங்கள் கண்களோடு ஒத்திக் கொண்டார்கள். அவர்கள் கூக்குரல் இட்டு அழுத காட்சி உருக்கமாகவிருந்தது. கொலை ஆயுதங்களைச் சுமந்துவந்திருந்த காக்கிச்சட்டைக்காரர்கள் தொப்பிகளைக் கழற்றி கையிடுக்கில் வைத்துக் கொண்டார்கள். மனித உணர்வுகள் அந்த மனிதக் கொலையில் சுடுகாட்டை மௌனமாக்கி கொண்டிருந்தன.

தொழிற்சங்கங்களின் சார்பாக ஒவ்வொரு தலைவரும் பேசத் தொடங்கினார்கள். "இப்படியொரு சம்பவம் இனிமேலும் நடக்கவிட மாட்டோம்" என்றார் ஒரு தலைவர். "தொழிலாளர்களைப் பாதுகாப்போம்!" என்றார் இன்னொரு தலைவர். "நாட்டுல போடுற திட்டங்களுக்கும் நாம் ஒத்துழைப்பு குடுக்கத்தான் வேணும்!" என்றார் இன்னுமொரு தலைவர். இவ்வாறு அங்கே பறக்கும் பல வண்ணக் கொடிகளைப்போல பலவேறுபட்ட பேச்சுக்கள் பேசி முடிந்தன. ஆனந்தனின் உடலில் தொழிற்சங்கக் கொடிகள் போர்த்தப்பட்டு, சகல மரியாதைகளுடன் அடக்கம் செய்தார்கள். கூடி நின்றிருந்த மக்கள் கூட்டம் தங்களது இனத்துக்காக உயிர்நீத்த அந்த வாலிபனுக்கு இறுதிமரியாதை செலுத்திவிட்டு மௌனமாகத் திரும்பினார்கள். ஜீப்பிலே வந்திருந்த வாலிபர்களுக்கு மீண்டும் இரும்புக்காப்புகள் பூட்டப்பட்டன. அவர்கள் ஜீப்பிலே ஏற்றப்பட்டார்கள்.

சுடுகாட்டிலே நின்றிருந்த இளைஞர்கள் துடித்தார்கள் - கொதித்தார்கள் - குமுறினார்கள். அவர்களைத் தொழிற்சங்கத் தலைவர்கள் சாந்தப்படுத்தினார்கள். ஜீப் வண்டி பறந்தது. சிறிது நேரத்தில் சங்கத் தலைவர்களும் தங்கள் வாகனங்களில் ஏறினார்கள்.

குழிமேட்டில் பத்திக்கட்டுகள் புகைந்து கொண்டிருந்தன...

அந்தத் தோட்டத்து தொழிலாளர்கள் மாத்திரம் மிஞ்சியிருந்தார்கள். அவர்கள் ஆனந்தனின் குழிமேட்டைப் பிரிய முடியாமல் பிரிந்தார்கள். அவனது சாவு எப்படி நடந்தது என்று மீண்டும் மீண்டும் அவர்கள் நினைத்துப் பார்த்தார்கள்...

மேகமலை தோட்டத்து முன்னூற்று ஐம்பது ஏக்கர் நிலத்தை அப்படியே கிராமவாசிகளின் குடியேற்றங்களுக்காக அரசு சுவீகரிக்கப் போகிறது என்ற ஓர் அறிக்கையை தோட்ட நிர்வாகி தோட்டத்தலைவர்மார்களின் முன்னிலையில் வாசித்துக் காட்டினார். அந்த தோட்டத்து மக்களை வெவ்வேறு தோட்டங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அடுத்த கிழமை அந்த தோட்டங்களின் விபரங்கள் வரவிருப்பதாகவும் கூறினார். இதைக் கேட்ட தலைவர்மார்கள் அதிர்ச்சியடைந்தார்கள். தோட்ட நிர்வாகி இன்னும் தொடர்ந்தார். பிரயாணங்களைப் பற்றி தொழிலாளர்கள் பயப்படத் தேவையில்லையென்றும் தோட்டக்கணக்கில் லொறிகள் வழங்கப்படுமென்றும் தைரியப்படுத்தினார்.

"இது நடக்கப்போற காரியமில்லே!... நாங்க பாத்துக்கிறோம்!" என்று வெறிகொண்ட வேங்கைகளாக தலைவர்மார்கள் நான்கு பேரும் வீட்டுக்குத் திரும்பினார்கள். மாரியம்மன் கோவிலில் திடீர் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். பீதியடைந்த தொழிலாளர்கள் ஆண்களும் பெண்களுமாக கோவிலில் வந்து குவிந்தார்கள். வயது சென்ற பென்சன் வாங்கிய தொழிலாளர்கள் மண்ணெண்ணெய் பந்தங்களைப் பிடித்துக்கொண்டு தட்டுத்தடுமாறி கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். வேலையின்றி வீடுகளிலிருக்கும் வயது வந்த ஆண்களும் பெண்களும் இந்தக் கூட்டத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கலந்து கொண்டார்கள்.

இரவு ஏழு மணி. கூட்டம் ஆரம்பமாகியது. "நம்ம தோட்டத்த கிராமத்தானுங்களுக்குப் பிரிச்சுக் குடுக்கப் போறாங்க. முன்னூத்தியம்பது ஏக்கரையும் குடியேற்றத் திட்டத்துக்கு எடுத்திட்டாங்களாம்... நம்ம எல்லாத்தையும் வேற தோட்டங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செஞ்சாச்சாம்... இந்த திட்டத்த எதிர்க்கணும்! காணி அளக்க வர்றவங்கள தோட்டத்துக்குள்ள வுடக்கூடாது! கட்சி பாகுபாடு இல்லாம எல்லாரும் அகிம்சா போராட்டம் நடத்தணும்!" என்று தோட்டக்கமிட்டி தலைவர் பேசினார்.

இவர் பேச்சைக் கேட்ட தொழிலாளர்கள் ஆக்ரோஷம் அடைந்தார்கள். "தோட்டத்த விட்டுக்குடுக்க மாட்டோம்... உயிரே போனாலும் போராட்டஞ் செஞ்சி இந்த திட்டத்த எதிர்ப்போம்!" என்று கோசமிட்டார்கள்.

"குடியேத்தம் செய்யணுமுன்னா... தரிசு நெலங்கள தேடிப்பார்த்து குடியேத்தணும்... அது இல்லாமே குடியிருக்கிற சனங்கள வெரட்டிப்புட்டு மத்தவங்கள குடியேத்துறது அநீதியான காரியம்!" என்று ஒரு வாலிபன் கூட்டத்திலிருந்து குரல் கொடுத்தான்.

தேயிலை றப்பர் தோட்டங்களை உண்டாக்குவதற்கு வந்த காலம் முதல் இன்றுவரை நாடோடிகளைப் போலவே தோட்டம்விட்டு தோட்டம் நிலைக்கலைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த மக்கள் கூட்டம் சிந்தை கலங்கிப் போயிருந்தது. "நாங்க நெரந்தரமா ஒரு தோட்டத்துல குடியிருக்க முடியல்ல.... எந்த நேரம்... எந்த லயத்துக்கு - எந்த டிவிசனுக்கு - எந்த தோட்டத்துக்கு அனுப்பப்படுவோமுன்னு நிச்சயமில்லாத வாழ்க்க... இந்த நெலமையை மாத்தியே ஆகணும்!" என்று இன்னுமொரு வாலிபன் குரல் கொடுத்தான்.

மனத்தின் அடித்தளத்தில் தேங்கிக்கிடந்த வேதனைகள்... விரக்தியடைந்த உணர்வுகள் யாவும் அந்தக் கூட்டத்தில் வெளித்தோன்றின.

"காணி அளப்பதுக்கு நாளைக்கு டிப்பார்ட்மெண்டிலிருந்து வர்றானுங்களாம்...! அளக்க வுட்டுப்புடாதீங்க தலைவரே!" என்று தோட்டத்து பெரிய கிளாக்கர் ராஜு தலைவரை இரவு ஒன்பது மணிக்குமேல் வீட்டுக்கு வரச்சொல்லி ரகசியமாகக் கூறினார். சமூகத்திலிருந்து ஒதுங்கி பதுங்கி வாழும் தோட்ட ஊழியர்கள்... காலம் முழுவதும் தொழிலாளர்களின் கழுத்தை அறுத்துக் கொண்டிருந்தாலும் இந்த மாதிரி ஆபத்துக் காலங்களில் தொழிலாளர்களின் நிழல்களில் அண்டிக்கொள்ள வருவார்கள். "நாங்க சொல்றதுக்கு முன்னே ரெடியாகிட்டோம்! தோட்டத்துக்குள்ள எந்தப் பயல்களையும் வுடமாட்டோம்... நாங்க இந்த தோட்டத்தவுட்டுப் போகவும் மாட்டோம்!" என்றார் ராஜு தலைவர்.

தொழிலாளர்களின் கொந்தளிப்பான மன உளைச்சல்களோடு பொழுது விடிந்தது.

தோட்டத்து முகப்புப் பாதையில் போருக்குப் போகும் படையைப்போல தொழிலாளர் கூட்டம் கூடி நின்றது. பலத்த காற்று... உயர்ந்த மரங்கள் வில்லாய் வளைந்து தலைவிரித்தாடின. தூறலும் ஆரம்பித்தது.

இதுவரையிலும் காணி அளப்பவர்கள் வரவில்லை. "இனிமேல் எங்க வரப்போறானுங்க..." என்று அசந்த போதுதான்... திடுதிப்பென உறுமிக்கொண்டு ஐந்து ஆறு ஜீப் வண்டிகள் ஓடிவந்தன. ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாய் பாதையை மறித்து நின்றார்கள். ஜீப்வண்டிகள் நிலைக்குத்தி நின்றன. காணி அளக்கும் அதிகாரிகள் இறங்குவதற்கு முன்னரே காக்கிச் சட்டைக்காரர்கள் இறங்கினார்கள். ஆயுதங்களை நீட்டிக்கொண்டு "பாதையை விடுங்கள், காணி அளப்பவர்களுக்கு இடைஞ்சலாக இருக்காதீர்கள்" என்று அதட்டினார்கள். தொழிலாளர்கள் விடாப்பிடியாக நின்றார்கள்.

ஒரு பொலிஸ் அதிகாரி தாழ்மையாக கதைக்கத் தொடங்கினார். "காணி அளப்பதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் கிடையாது. சட்டத்தை நிறைவேற்ற நாங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்" என்றார். காணி அளக்க

வந்தவர்களும் அவ்வாறே கூறினார்கள். "நாங்கள் சம்பள ஊழியர்கள் எங்கள் கடமையைச் செய்ய உதவுங்கள்" என்று பணிவோடு கேட்டார்கள். தொழிலாளர்கள் அவர்களைத் திரும்பி போகும்படி பணிவாகக் கேட்டார்கள்.

வந்த கோஷ்டிகள் தேயிலை மலைக்குள் இறங்கி தோட்டத்துக்குள் நுழைய முயற்சித்தார்கள். தொழிலாளர்கள் அவர்களை மறித்தார்கள். இரண்டு பகுதியினரும் முட்டி மோதிக் கொண்டார்கள். ஒரே ரகளை... அடிதடி... இவர்கள் கற்களை எறிந்தார்கள்... அவர்கள் வானத்தை நோக்கிச் சுட்டார்கள். வாகனங்கள் உருட்டப்பட்டன. துப்பாக்கியை ஒருவன் தாவிப்பிடிக்க இன்னொரு காக்கிச்சட்டை குறி வைச்சு... "டுமீல்...!" ஓர் உயிர் அந்தப் போராட்டத்தின் நெற்றியில் பொட்டு வைத்தது... ஆனந்தன் என்ற தொழிலாள இளைஞன் துடிதுடித்து ஓய்ந்தான். தொழிலாளர்கள் மலைக்காற்றாக மாறினார்கள். ஓய்ந்து போன அந்த உரிமையைத் தூக்கி மடியில் வைத்து அழமுன்னே நூற்றுக்கணக்கில் ஆயுதந்தாங்கிகள் வந்து குவிந்தார்கள். கூட்டத்தில் கூடி நின்ற இளவட்டங்களை துப்பாக்கி முனையில் அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடினார்கள்.

அன்று காணி அளக்க முடியவில்லை. ஓர் உயிரை மாத்திரமே குடிக்க முடிந்தது...

மயானத்திலிருந்து வீட்டுக்கு வந்தவர்கள் ஆனந்தனின் பெற்றோரை ஆறுதல் படுத்திவிட்டு கோவிலில் கூடினார்கள்.

ஒரு படித்த இளைஞன் அந்த அவசரக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசினான்.

"... இந்த மாதிரி திட்டமிடப்பட்ட குடியேற்றங்களை ஒரு தோட்டத்து மக்கள் மாத்திரம் தனித்துப் போராடி வெற்றி காணமுடியாது...! இது ஒரு தோட்டப்பிரச்சினை இல்லை... இது ஒரு சமுதாயப் பிரச்சினை... நமது இனமே சேர்ந்து போராட வேண்டிய பிரச்சினை... எங்களுக்கு ஒரு ஆனந்தனை மட்டுமே பலிகொடுக்க முடிந்தது. இனிமேல் எவரையும் நாங்கள் இழப்பதற்கு தயார் இல்லை!" என்று ஆவேசமாகப் பேசிய அந்த இளைஞன் தொடர்ந்தும் கதைத்தான். "எங்கள் போராட்டத்தையும் மரணத்தையும் வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அஞ்சலியும் அனுதாபமும் தெரிவித்தார்களே தவிர ஆதரவு காட்ட முன்வரவில்லை... தொழிலாளர்களை வழிநடத்தும் தொழிற்சங்கங்களின் தலையீடு இல்லாத எந்த போராட்டமும் வெற்றியடைய முடியாது! ஆகவே... ஆகவே இந்தப் போராட்டத்தை... கைவிடுவோம்..." என்று கண் கலங்கினான். தோட்டத்தலைவர்கள் தலைகுனிந்து நின்றார்கள். கூடி நின்ற மக்கள் மரணத்தின் மேல் நடத்தப்படும் திட்டங்களைக் கண்டு அஞ்சினார்கள்.

போராட்டத்தை கைவிட சம்மதித்தார்கள். கூட்டம் பேச்சுமூச்சு இல்லாமல் கலைந்தது.

ஆனந்தன் கொலையுண்டு ஆறு மாதங்களாகிவிட்டன.

தோட்ட நிர்வாகம் எல்லா விபரங்களையும் கூறியது. அந்த முன்னூற்றைம்பது ஏக்கர் தோட்டத்திலிருக்கும் ஐந்நூறு தொழிலாளர் களோடு, பென்சன்காரர்கள், பிள்ளைக்குட்டிகள் எல்லோருமாக ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இடம்பெயர வேண்டும். அவர்கள் போக வேண்டிய தோட்டங்களின் விபரங்களும் வந்துவிட்டன. அவர்களை ஏற்றிச் செல்வதற்கு வாகனங்களும் வந்து குவிந்தன.

பல ஆண்டுகள் குடும்பமாக கூடிவாழ்ந்த மக்கள் திடீரெனப் பிரிக்கப்படும் நிலை மனித வதையாகவிருந்தது. அவர்கள் ஒவ்வொருவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதார்கள். இனி ஒரு காலத்தில் எங்கே... எப்போது... எப்படி சந்திக்கப் போகிறோம்... நல்லது கெட்டது நடந்தால் எப்படி கலந்து கொள்ளப் போகிறோம் என்றெல்லாம் நினைத்துப் புலம்பினார்கள். கூக்குரலிட்டுக் கொண்டு வந்து நின்ற வாகனங்களில் ஏறினார்கள். நாய்கள், பூனைகள், கோழிகள், ஆடு மாடுகள் எல்லாம் வண்டிகளில் ஏற்றப்பட்டன. அவைகளும் தோட்டப்புறக்குடிகள்! அவைகளும் நாடுகடத்தப்பட்டன!

அம்மன்கோவில், காட்டுமுனியாண்டி, சிண்டாக்கட்டி, வால்முனி, வனத்துச்சின்னப்பர் கோவில் என்று எல்லா தெய்வங்களையும் வணங்கி, கதறி அழுதுவிட்டு வாகனம் ஏறினார்கள்.

பென்சர் கிழவர் பெருமாள் சிண்டாக்கட்டி கோவில் ஆலமரத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு 'வரவேமாட்டேன்' என்று அடம்பிடித்தார். அவருக்கு எல்லோரும் ஆறுதல் கூறினார்கள். அவர் அந்த தோட்டத்துக்கு வந்த காலத்தில் அவரே கட்டிய கோயில் அவர் நட்டு வளர்த்த ஆலமரம் இன்று வளர்ந்து கிளை படர்ந்து விழுது இறங்கி... அரை ஏக்கர் தேயிலை மலையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. "...பாவிக.. இந்த மரத்தையும் வெட்டிப்புட்டு வூடு கட்டிக்குவானுங்களோ...? சிண்டாக்கட்டி! ஒன்னையும் புடுங்கி வீசி புடுவானுங்களே...? அவனுங்கள சும்மா வுட்டுப்புடாதே!" என்று ஓலமிட்டார். அங்கே நாட்டியிருந்த வீரமிக்க போர்க்கருவிகளைப் போன்ற ஈட்டிகளில் தேசிக்காய்களை குத்தி வைத்தார். ஏன்தான்... இந்தக் கோவிலில் இத்தனை ஈட்டிகள்? தீயவர்களை ஒழிக்கவே இந்த தெய்வங்கள் ஆயுதம் தரித்தார்களாம்... "சிண்டாக்கட்டி! கேடு செய்யிறவனை கேட்டுக்கோ" என்று தள்ளாடி தள்ளாடி நடந்த பெருமாள் கிழவர் தான் வளர்த்தெடுத்த தேயிலைச் செடிகளையும், ஓங்கி வளர்ந்த சவுக்கை மரங்களையும், செம்பு மரங்களையும் பார்த்து கைகூப்பி கும்பிட்டார். அவரை அணைத்தபடி லொறியில் ஏற்றினார்கள்.

இந்த மனிதர்கள்... தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையில், தங்களோடு அறிமுகமாகியிருந்த கல்லும் புல்லும், மரமும் செடியும், கோவிலும் குகையும், காடும் மேடும், ஆறும் ஓடையும்... எல்லாவற்றையுமே பிரிந்து செல்லும் உணர்வுகளை விவரிக்க முடியவில்லை...

இளைஞர்கள் ஆனந்தனின் குழி மேட்டை கும்பிட்டு, சூடம் கொளுத்தி ஒவ்வொருவரும் பிடிமண் அள்ளி முடிந்து கொண்டு தாங்கள் போகவேண்டிய தோட்டத்து வாகனங்களில் ஏறினார்கள். போராட்டத்தில் கைதான இளைஞர்கள் யாவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் ஆனந்தனின் குழிமேட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

.. ஒரு காலத்தில் இங்கே வந்து பார்த்தால் எவனோ ஒருவன் இவனது குழிமேட்டில் வீடு கட்டியிருப்பான்... வேலியடைத்து தோட்டம் உண்டாக்கியிருப்பான்... அல்லது நெடுஞ்சாலை அமைந்திருக்கும்... நாங்கள் வாழ்ந்து முடிந்த தடயங்கள்.... காணாமற் போயிருக்கும்....

லொறிகள் ஒருநாளில் இரண்டு மூன்று தடவைகள் ஓடி திரும்பின.

சில தோட்டங்களில் தொழிலாளர்களை வேலைக்கு ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அந்தத் தோட்டங்களில் ஏக்கருக்கு மேலதிகமான தொழிலாளர்கள். தோட்டங்களில் தொழிலாளர்கள் நிர்க்கதியாக விடப்பட்டார்கள். திக்கற்ற அவர்கள் குழந்தை குட்டிகளோடு கோவில்களில் அகதிகளைப் போல தஞ்சம் புகுந்தார்கள்.

கொந்தராத்து அடிப்படையில் தோட்டங்களை வாங்கிய கம்பெனிக்காரர்கள் புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி நஷ்டப்பட விரும்பவில்லை. அவர்களும் கையை விரித்தார்கள். தொழிலாளர்கள் இருதலை கொள்ளி எறும்புகளானார்கள். சின்னஞ் சிறுசுகளோடு பட்டினியைத் தழுவப்பயந்த அவர்கள் தொழில் தேடி சிதறிப் போனார்கள்.

சில தனியார் தோட்ட முதலாளிகள் இவர்களைத் தேடினார்கள்...! நூறு ஏக்கர், ஐம்பது ஏக்கர் சொந்தக்காரர்கள் இவர்களை வேலைக்குச் சேர்த்தார்கள். ஏதோ ஒரு விதத்தில் இவர்களின் அபயம்! நிலைகுலைந்து போன அந்த மக்களுக்கு கடலில் மிதந்த துடுப்பாகியது...

எந்த பண்ணையார்களுக்கும் ஜெமின்தார்களுக்கும் கூலி விவசாயிகளாக - பண்ணையடிமைகளாக ஊழியம் செய்ய முடியாமல் பயந்து ஓடிவந்தார்களோ... அதே பண்ணை அடிமைகளாக கூலித் தொழிலாளர்களாக மீண்டும் தள்ளப்பட்டு விட்டார்கள்...

காணிநிலம், வீடு என்று சொந்தமேயில்லாமல் தோட்டமென்னும் சிறைக்குள்ளே வியாபார ஸ்தாபனங்களுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் கூலிகளாகவே வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் அந்த மக்கள் சுதந்திர வாழ்வு பெறும் காலத்தைத் தேடிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த தேசத்தின் உரிமையுள்ள அந்த மனிதர்களின் நூற்றி எழுபத்திரண்டு கால வரலாறு பொய்த்துவிடுமோ...?

# அந்த ஜானகியைத்தேடி...

## மல்லிகை சி. குமார்

வாசலில் கிடந்த மிலாறு கட்டைப் பிரித்து சிறு சிறு கத்தைகளாக வாழை மட்டையால் கட்டி வைத்துக் கொண்டிருந்தார் பெரியசாமி.

அவரால் மலையேறி... கவாத்துக்காட்டிலிருந்து தேயிலை மிலாறு கொண்டுவர முடியாவிட்டாலும் மகன் சக்திவேலு மலையிலிருந்து கொண்டுவந்து லயத்து வாசலில் போடும் தேயிலை விறகை பிரித்து இப்படிக் கத்தை கத்தையாக கட்டி, வீட்டு அட்டாலில் எடுத்து வைப்பதற்கு ஏதுவாக வேலை செய்வது அவருக்கு திருப்தியாக இருந்தது.

"ஐயா நல்ல சுகங்களா...?"

கை குவித்தபடி நின்று கொண்டிருந்தான் கிளானட் பரமசிவம்.

"யாரு... பரமசிவமா வாப்பா" என வரவேற்றவர்,

"எங்க தம்பி.. ரொம்ப நாளா இங்கிட்டு காணோமே?" எனக் கேட்டார்.

"எங்கங்கையா... முன்னமாதிரி, இப்பவெல்லாம் ஓடர் கிடைப்பது குறைஞ்சி போச்சி. ஸ்பீக்கர், டி.வி., டெக்கு... இருந்திட்டாலே போதும்... அந்தந்தத் தோட்டத்தில திருவிழாவையே முடிச்சிக்கிறாங்க.

ஏதோ இருந்திருந்து சில தோட்டங்களிலிருந்து வந்து - வெத்திலப் பாக்கு வச்சி ஓடர் கொடுப்பாங்க" என்றவன் "எங்கையா சத்திவேலு?" எனக் கேட்டான்.

நீங்க உள்ளப் போயி உட்காருங்க தம்பி. நான் வரச் சொல்லுறேன்...." என்றவர் குசினிப்பக்கம் லயத்துப் பிள்ளைகளை வைத்து சுவர் எழுப்பிக் கொண்டிருக்கும் சக்திவேலுவின் செவிகளில் விழும்படி...

"சக்திவேலோ ஒன்னப் பார்க்க ஆளு வந்திருக்கு... வா...!" எனச் சத்தமிட்டார் மண் குழைத்த கையோடு.

"யாருப்பா வந்திருக்கா?" எனக் கேட்டபடி வந்தான் சக்திவேல் - அவனுக்குப் பின்னால் வாலு மாதிரி நாலைந்து வாண்டுகளும் உடம்பெல்லாம் மண்ணாக ஓடிவந்தன.

சக்திவேலுவைக் கண்டதும் பரமசிவத்திற்கு சிரிப்பு வந்துவிட்டது.

"என்னா சத்தி... மூக்கு மொகரயெல்லாம் மண்ண அள்ளிப் பூசிக்கிட்டு வந்து..." - என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

"வந்துண்ணே... குசினிப்பக்கம் ஒரு வீடு கட்டுறோம். சுவருக்கு மண்ணடிக்கிறப்ப மூஞ்சி மூக்கெல்லாம் மண்ணு படத்தான் செய்யுது" என்ற சக்திவேல் ஒருபக்க தோள்பட்டையை உயர்த்தி கன்னத்தில் படிந்திருந்த மண்ணைத் துடைக்க முயன்றான்.

"தம்பி உள்ள வந்து உட்காருங்க நான் தேத்தண்ணீ போடுறேன்..." என்று சொல்லிவிட்டு பெரியசாமி குசினிக்கு போய்விட்டார்.

"வீடெல்லாம் கட்டுறியே எதும் விசேஷமா...?" வீட்டிற்குள் நுழைந்து கொண்டே பின்னால் வரும் சக்திவேலுவைக் கேட்டார் பரமசிவம்.

"இல்லண்ணே அப்படி ஒண்ணுமில்ல. இங்க வீடு வசதிக் குறைவு. குசினிப்பக்கம் சுவரை ஒட்டி ஒரு காம்பிரா கட்டிக்கிட்டு இருக்கேன். அந்தி நேரம் ஓய்வா இருக்கிறப்ப இந்த லயத்து வாண்டுகளுக்கும் இலவசமா நைட் ஸ்கூல் நடத்த வசதியாகவும் இருக்கும்" என்றவன் பரமசிவத்தை ஒரு கதிரையில் அமர வைத்துவிட்டு...

"அண்ணே அந்த காம்பிராக் கட்ட - துரைக்கிட்ட அனுமதி வாங்க ஒரு ஆயிரம் தரம் அலைஞ்சிருப்பேன்" என்றான்.

பின் கொடியில் தொங்கிய டவலை மண் குழைத்த கையோடு இழுத்து தோளில் போட்டுக் கொண்டு...

"கொஞ்சம் இருண்ணே கை காலைக் கழுவிட்டு வந்திர்றேன்.." என்று சொல்லிவிட்டு வெளியே போனான்.

கிளானட் பரமசிவம் அமர்ந்த இடத்தில் இருந்து கொண்டே சுவரில் தொங்கிய படங்களையும் மேசைக்கு அடியில் தொங்கிய படங்களையும் கதாயுதத்தையும் கிரீடம் மற்றும் துணித்துண்டுகளால் சுற்றிய கம்பி வளையத்தையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

குசினிக்குள் போயிருந்த பெரியசாமி கண்ணாடி தம்ளரில் தேனீரை ஊற்றிக் கொண்டு வந்து பரமசிவத்திடம் கொடுத்தார். அதை குடித்துக் கொண்டே அவன் கேட்டான்...

"எங்கங்கய்யா அம்மாவக் காணோமே?" என்று.

"சின்ன மகளுக்கு கொழந்த கெடைச்சிருக்குதானே... பார்க்கப் போனவ இன்னும் வல்ல. ஒரு வேள இன்னிக்கு அல்லது நாளைக்கி வந்திடுவா" என்றார்.

"எப்பக் கொழந்த கெடைச்சிச்சாம்?"

"இந்த எலக்ஷன் டைம்லதான். இந்த ரெண்டாவது பிள்ளையும் பொம்பளப் புள்ளதான்"

"ஆமா இந்த முறை எலக்ஷன்ல ஓட்டுப் போட்டிருப்பீங்கதானே...?" என்ற பரமசிவம் கால்வாசி தேநீரோடு தம்ளரை மேசை மீது வைத்தான். வெளியில் போயிருந்த சக்திவேலுவும் டவலில் முகத்தை துடைத்துக் கொண்டே வந்து சுவரில் தாழ்வாக தொங்கிய கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

"தம்பி, நீங்க சொன்னது போல இந்த முறைதான் ஓட்டு போட்டோம். முன்ன நாங்க அக்கரமலையில இருந்தப்ப... சிட்டிஷன் கிட்டிஷன் ஒண்ணுங் கிடக்கல்ல. ஓட்டுக்கூட இந்த முறைதான் போட்டோம்..." பெருமையோடு சொன்னார் பெரியசாமி.

இந்த நாட்டில் இந்த முறை நாங்களும் ஓட்டு போட்டோம் என்று எவ்வளவு பெருமையாக சந்தோஷமாக இந்த பெரியவர் சொல்லுகிறார் என்று நினைத்துக் கொண்ட பரமசிவம் சக்திவேலுவை நோக்கினான். அவனோ ".. இந்த சிட்டிஷன் மட்டும் நாங்க அக்கரை மலையில் இருக்கிறப்ப கிடைச்சிருந்தா..." ஒருவித ஏக்கத்தோடு சொன்னான்.

"அப்பக் கிடைச்சிருந்தா மட்டும் என்ன செஞ்சிருப்ப நெலம் வாங்கி வீடு கட்டியிருப்பியோ..." பரமசிவம் இப்படிக் கேட்டதும்...

"இல்லேண்ணே சும்மா சொன்னேன்" – என்றவனின் உள்ளத்திற்குள் ஒரு குமுறல். கண்கள் கலங்கின.

அதை மறைக்க டவலால் மீண்டும் முகத்தை துடைப்பது போல கண்களையும் துடைத்துக் கொண்டான்.

கதிரையை விட்டு எழுந்த பரமசிவம்...

"சக்திவேலு நான் இப்ப அவசரமா வந்த விஷயம் இதுதான். நாளைக்கு காலையிலேயே நம்ம குழு ரதாள மேல்பிரிவு தோட்டத்துக்கு போயாகணும். நீ காலையிலேயே ரெடியா மெயின் ரோட்டு சந்தியில வந்து நில்லு. நாங்க வாகனத்தில வந்து கூட்டிக்கிட்டுப் போறோம்... என்றவன், மேசைக்கு அடியில் கிடக்கும் சாமான்களை சக்திவேலுக்கு சுற்றிக் காண்பித்து – "அங்கப்பாரு அனுமானுக்கு தேவையான... கதாயுதம், கிரீடம் எல்லாம் எலிகடிச்ச மாதிரி கெடக்கு. அதை எல்லாம் சரி பண்ணி வச்சிக்க, புது எடம்... ஆளுங்களை சந்தோஷப்படுத்தணும்" என்று சொல்லிவிட்டு, பெரியசாமியைப் பார்த்து

"ஐயா அப்ப நான் வரட்டுங்களா...?" என கை எடுத்தான்.

"இருங்க தம்பி, நானும் குறுக்குப் பாதை மொடக்கு வரைக்கும் வாறேன்" என்றவர் மகனைப் பார்த்து, "சத்தி... நீ இப்பவே கிரீடத்த எடுத்து சரிப்பண்ணு" என்று சொல்லிவிட்டு வாசலை அடைத்துக் கொண்டு நிற்கும் வாண்டுகளை நோக்கி... "வெளிச்சத்த மறைக்காம எல்லாம் அங்கிட்டுப்

போங்க என்னமோ யாரோ ஆடுர மாதிரிப் பார்க்கிறீங்களே..." என்று சொல்லிவிட்டு

"நீங்க வாங்க தம்பி..." - பரமசிவத்தை அழைத்துக் கொண்டு வெளியில் நடந்தார். சூழ்ந்து நின்ற வாண்டுகளில் ஒன்று...

"ஏய் நாளைக்கு நம்ம சக்தியண்ணே கொரங்காட்டம் ஆடப்போவுதுடோ..." என்று சொல்லிக் கொண்டே துள்ளிக் குதித்தது.

இரு பக்கமும் அடர்த்தியான வேலிகளுக்கூடே சென்ற பாதையில் நடந்து இரண்டொரு லயங்களையும் கடந்து - தேயிலை ரோட்டு வழியாக குறுக்குப் பாதை வளைவுக்குச் சென்றார்கள். இது வரைக்கும் மௌனமாக வந்த பெரியசாமி இப்பொழுது...

"தம்பி" - என வாய் திறந்தார்.

"சொல்லுங்க" என்ற கிளானட் பரமசிவம்... நின்றுவிட்டான்.

"ஏம்மகன் சத்திவேலு அனுமார் வேஷம் போட்டு ஆடுறது எனக்கு சந்தோஷம்தான். ஏன்னா... இந்தக்கலை இப்ப தோட்டக்காட்டிலே செத்துக்கிட்டு வருது.

அனுமார் வேஷம் போட்டுக்கிட்டு ஆட இந்தக்காலப் பொடியனுக வெக்கப்படுறப்ப - சத்திவேலு துணிஞ்சி ஆடுறான். முன்ன நாங்க அக்கர மலையில இருந்தப்ப இந்த அனுமார் ஆட்டமெல்லாம் கொஞ்சமும் தெரியாது. இந்த தோட்டத்துக்கு வந்தபிறகும் கூட...

எதிலேயும் பற்று இல்லாம மலை வேலைக்கு போறதும் வர்றதுமாத்தான இருந்தான்.

"என்னா உங்க மகன் ஊமையா?"ன்னு கூட சில ஆளுங்க கேட்டிருக்காங்க.

கொஞ்ச நாள் போகப் போக... இந்த தோட்டத்து அம்மன் திருவிழா வந்தச்சி.

அந்த திருவிழாவில சில எளந்தாரிப் பொடியனுங்க பொம்பள வேஷம், அந்த வேஷம், இந்த வேஷமின்னு போட்டுக்கிட்டு ஆடுறாங்க. நம்ம சத்திவேலு என்னடான்னா திடீர்ன்னு... சந்தனத்தையும் குங்குமத்தையும் கொழைச்சி மூக்கோட தாவாய் வரைக்கும் பூசிக்கிட்டு... அம்மன் கோவில் உள்ளுக்கு எப்பருந்தோ கேப்பாரற்று ஒரு மூலையில் கிடந்த கதாயுதத்தை தோளில் தூக்கி வச்சிக்கிட்டு அனுமார் ஆட்டம் ஆட ஆரம்பிச்சுட்டான். நான்கூட அன்னைக்கி அவனோட அந்த அனுமார் ஆட்டத்தப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போயிட்டன். அப்பத்தான் - அதைக் கேட்டதும் பூரித்துப் போன பரமசிவம்...

“ஆமாங்கையா... அன்னிக்கி ஒங்க மகன் ஆடுன ஆட்டத்த இப்ப நெனச்சாலும் கண்ணு முன்னுக்கு ஆடுரமாதிரி இருக்கு. அன்னிக்கி அந்த சத்திவேலோட ஆட்டத்த நான் ரொம்ப பாராட்டினேன். ஆஞ்சினேயரே அவனுக்குள்ள இருந்து ஆடுரமாதிரி இருந்திச்சி.

எங்க குழுவில அனுமாராக இருந்தவன் இந்தியாவுக்கு போயிட்டதால... அனுமாரே இல்லாம இருந்த எங்க குழுவுக்கு அனுமாரா அன்னிக்கே உங்க மகன சேர்த்துக்கிட்டேன்” என்றான் பரமசிவம்.

“தம்பி... அவன் அனுமார் வேஷம் போட்டுக்கிட்டு இந்த தோட்டக் காடெல்லாம் ஆடணும். ஆளுங்களும் அவனப் புகழனுமின்னுதான் நானும் ஆசைப்படுறேன்.”

“ஆனா... வாழ்க்கைப் பூராவும் அனுமாரா...பிரமசாரியாகவே இருந்திடுவானோன்னு நினைக்கிறப்ப... ரொம்ப பயப்படுறேன். ஏன்னா... அவனுக்கு வயசு முப்பத்திமூணு ஆகப்போகுது. கல்யாணமின்னு பேச்சு எடுத்தாலே... எதுக்கு அதெல்லான்னு ஒதுங்கியே போயிடுறான்” என்றவர், “அனுமார் வேஷம் போட்டாப்பில - கல்யாணமே கட்டிக்கக் கூடாதின்னு அர்த்தமா தம்பி...?” என கேட்டார்.

“ஐயா ஒங்க கவல எனக்குத் தெரியுது. அவனோட மௌனம்... கல்யாணமே கட்டிக்கக் கூடாதின்னு அர்த்தமில்ல. ஒரு நேரம் வந்தா கட்டிக்கலாம்ன்னு மௌனமாகவும் இருக்கலாம். நேரம் வந்தா எல்லாம் நடக்கும்” என்ற பரமசிவம்.... “இனிமே... நான் பொயிருவேன். நீங்க வீட்டுக்குப் போங்கய்யா...” என்று அவரிடம் விடை பெற்றுக்கொண்டு மெயின் ரோட்டை நோக்கி போகும் குறுக்குப் பாதையில் இறங்கி சென்றான். அவன் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த பெரியசாமி - சற்று திரும்பி தூரத்தில் சோ...வென விழுந்து கொண்டிருக்கும் நீர்வீழ்ச்சியைப் பார்த்ததோடு தன் பார்வையை தூரத்திற்கு ஓடவிட்டார்.

தூரத்தில்... இள நீலநிற மலைத் தொடர் வரைக்கும் பார்வையைச் செலுத்தினார்.

அந்த மலைத்தொடரின் அடிவாரத்து தேயிலைத் தோட்டங்களில் ஒன்றான ‘அக்கரை மலையை’ அவர் இப்பொழுது நினைத்துப் பார்த்தார். அவர் அன்று அங்கு குடும்பத்தோடு வாழ்ந்தபோது ஒரு சாதாரண சில்லறை கங்காணியாகத்தான் வேலை பார்த்தார்.

தோட்ட மக்களோடு, நாட்டிலிருந்து தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்கு வரும் சில சிங்கள தொழிலாளர்களிடமும் இவருக்கு மதிப்பு இருந்தது. பள்ளத்து நாட்டிலிருந்து மேலே ஏறிவந்து சில்லறை வேலை செய்யும் அவர்களிடம் வேலை வாங்கும் பொறுப்பு இவருக்குத்தான்.

அவர்களிடம் அளவுக்கு அதிகமாக வேலை வாங்கமாட்டார். மனித நேயத்துடன் நடந்து கொள்வதால் அந்த தொழிலாளர்களும் விசுவாசத்துடன் நாட்டிலிருந்து கள்ளு, மரவள்ளிக் கிழங்கு, பலாப்பழம், பப்பாளி, வாழை போன்றவைகளைக் கொண்டுவந்து இவருக்கு கொடுப்பார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் துணைக்கு யாரையாவது கூட்டிக் கொண்டு அந்த ராவணாக்கொடை நாட்டுப் பகுதிக்கு இறங்கிவிட்டால் சரி...

நல்லா வயிறு முட்ட கள்ளையும் குடித்துவிட்டு மரவள்ளிக்கிழங்கு, பலாப்பாழம், கித்துல்பாணி அது இதுவென்று கட்டியெடுத்து - தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ஏத்தத்தில் திணறிக் கொண்டுதான் ஏறி வரவேண்டியிருக்கும்.

மாசி மாதத்தில் இவரே முன்னின்று தோட்டத்தில் நடத்தும் காமன் கூத்துவைப் பார்க்க பள்ளத்து நாட்டிலிருந்து வந்து விடிய விடிய கூத்தைப் பார்த்துவிட்டு போவார்கள்.

அதே போல மார்கழி மாதத்தில் தோட்டத்தில் பஜனை பாடிவரும் கோஷ்டியை ஒரு நாளைக்காவது நாட்டுப் பகுதிக்கு கூட்டிக் கொண்டு போய் வீட்டுக்கு வீடு பஜனை பாடவைத்து எண்ணை, தேங்காய், அரிசி எல்லாம் அன்னதானத்திற்காக சேகரித்து வந்துவிடுவார். அருச்சுனன் தவசு அல்லது பொன்னர் சங்கர் கூத்து தோட்டத்தில் நடக்கும் காலத்தில் நாட்டில் தனக்குத் தெரிந்த சிங்கள வீடுகளுக்கும் சேதியனுப்பி அவர்களையும் வரவழைத்து... நமது கலைகளை அவர்களும் ரசிக்க வைப்பார். ஆனால் அங்கே அந்த நட்புரிமை எல்லாம் தொடர்ந்து நீடிக்கவிடாமல் செய்துவிட்டது கொத்மலை நீர்த் தேக்கவேலை. அந்த அணைக்கட்டு வேலை ஆரம்பமானதுமே பள்ளத்தாக்குகளிலிருக்கும் சிங்கள விவசாயிகளுக்கு நிலம் ஒதுக்குவதற்காக... அக்கரை மலை போன்ற தோட்டங்களில் கைவைத்ததால்... அந்தத் தோட்டங்களில் நிரந்தரமாக தேயிலையை நம்பி வாழ்ந்த தொழிலாளர்கள் அதையெல்லாம் விட்டுவிட்டு... மேட்டுப் பகுதியிலுள்ள வெவ்வேறு தோட்டங்களுக்கு பிரிந்து போகவேண்டியாயிற்று. இரண்டொரு குடும்பங்கள் - ஏற்கனவே வவுனியா கிளிநொச்சிப் பகுதிகளில் போய்க் குடியேறிய தங்கள் உறவினர்களை நம்பிப் போய்விட்டார்கள். அப்படிப் போனவர்களில் பெரியசாமி வீட்டிற்கு பக்கத்தில் வாழ்ந்த முத்துராமன் குடும்பமும் ஒன்று. அந்த முத்துராமன் சின்னச் சண்டைக்குக் கூட... "நா... என்னா அடுத்தவன் மாதிரி சிட்டிஷன் இல்லாதவனா...? ஏங்கையில சிட்டிஷன் இருக்கு, இந்த நாட்டிலை எங்கை போனாலும் வாழமுடியும். ஏம்மகள ஒரு சிட்டிஷன் காரனுக்கு பிடிச்சுக் கொடுத்துட்டு ராஜா மாதிரி இருப்பேன்" என்று வீம்பாகப் பேசும் அவன்

பிள்ளைகுட்டியோடு வவுனியாப் பக்கம் போனது உண்மை. ஆனால் இந்த இடைக் காலத்தில் என்ன ஆனான் ஏது ஆனான் என்றே தெரியவில்லை.

இராணுவத்திற்கும் இயக்கங்களுக்குமிடையே மூண்ட சண்டையில் அவர்கள் குடியேறிய பகுதியும் சிதைந்து... அகதிகளாக இந்தியாவுக்குப் போயிருப்பார்களோ...? என்று இப்பொழுதும் அந்த முத்துராமன் குடும்பத்துக்காகக் கவலைப்பட்டார். முத்துராமனின் ஒரே மகள் ஜானகி இந்த கொழுந்துக் காட்டையெல்லாம் மறந்துட்டு அங்க... யாருக்கு வாக்கப்பட்டு வாழுறாளோ...? அல்லது ஷெல்....கில்... தாக்கி... பெரியசாமிக்கு கற்பனை பண்ணிப் பார்க்கவே பயமாக இருந்தது. "யார் யாருக்கு எப்படி நடக்குமோ அப்படித்தான் நடக்கும்... பாவம் அந்தப் புள்ள..." சொல்லிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தார்.

இரவு வெகு நேரம் வரைக்கும் கதாயுதத்திற்கும் கிரீடத்திற்கும் கோல்ட் கலர் பேப்பரை ஒட்டி அழகு படுத்தினான் சக்திவேல்.

பெரியசாமியோ... அனுமான் வாலை சரிசெய்வதில் கவனமாக இருந்தார்.

பொழுது விடிந்தது.

மகனை வழி அனுப்பிவைத்தார் பெரியசாமி. லயத்திலிருந்து மெயின் ரோட்டு சந்திக்கு வந்த சக்திவேல் அதிக நேரம் சந்தியில் காத்து நிற்கவில்லை. சொன்னது போல சகாக்களோடு ஒரு வாகனத்தில் வந்தான் பரமசிவம். இவனையும் தனக்குள் ஏற்றிக்கொண்ட அந்த வாகனம்... ரதாளையை நோக்கிப் பறந்தது. சக்திவேலுக்கு... அந்த இளங்காலையில் அது ஒரு புது பயணமாகத் தோன்றியது.

ரதாளை மேற்பிரிவு தோட்ட மாரியம்மன் ஆலயத்திலிருந்து ஒலிபெருக்கி மூலம் ஒலித்த பாடல்கள் அந்த மலைப் பகுதி எங்கும் எதிரொலித்தது.

காலங்காலமாய் தோட்டமக்கள் வழிபடும் அம்மனுக்கு இன்று திருவிழாவானதால் தொழிலாளர்களின் வாசஸ்தலம் எங்கும் மாவிலைத் தோரணங்களாக காட்சியளித்தன. மார்கழி மாதம் போல... இன்றும் லயத்து வாசல்கள் எல்லாம் சுத்தம் செய்து கோலம் போடப்பட்டு அழகுபடுத்தப்பட்டிருந்தன. கோவிலிலிருந்து ஊர்வலமாக வரும் அம்மன் சப்பரத்தை தோள்களில் தோட்ட இளைஞர்கள் சுமக்க... சப்பரத்தில் பிரகாசமாக காட்சி தந்தது அம்மன் சிலை. சப்பரத்திற்குப் பின்னால் மலர் கூட்டம் அசைந்து வருவது போல பல வண்ண சேலைகளில், பூவும் பொட்டுமாக சிரித்த முகங்களோடு இளம் பெண்கள் கூட்டம் நகர்ந்து கொண்டிருந்தது.

கூட்டத்திற்குள் ஒருத்தி அம்மனைப் பற்றிப் பாட ஏனைய இளசுகள் ஒரு நேரத்தில் இதழ்குவித்து குலவை போட்டனர்.

சப்பரத்திற்கு முன்னால் மூன்று சக்திக் கரகங்களும், அந்த கரகங்களுக்கு காவலாக மாடசாமி கோவில் வெட்டருவாளைத் தூக்கிக் கொண்டு மருளோடு ஆடும் பூசாரியும், மற்றும் பண்டாரம் சங்கு சேங்கண்டி உட்பட... நடுத்தர வயதினரும் செல்ல.. குறிப்பு சொன்ன பூசாரி உடுக்கை தட்டிக்கொண்டு போக... இதற்கெல்லாம் முன்னால்

பரமசிவம் புதுப்புது பாட்டுக்களை தன் கிளானட்டில் வாசிக்க, அதற்கு ஏற்றவாறு அவனின் குழுவினர் மேளம், தாளம் முழங்க... அந்த இசைகளுக்கெல்லாம் ஏற்றவாறு முத்துப்பாண்டி கரகம் ஆட..... பெண் வேஷம் போட்டுக் கரகம் ஆடும் முத்துப் பாண்டியோடு சேர்ந்து தன் கதாயுதத்தை சுழற்றி சுழற்றி அனுமான் ஆட்டம் ஆடும் சக்திவேலுவும், இடை இடையே பலவித சேட்டைகளும் செய்து கொண்டிருந்தான்.

மக்கள் அவனின் ஆட்டத்தையும் சேட்டைகளையும் வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தனர்.

பொதுவாக பரமசிவத்தின் குழுவுக்கு லயத்திற்கு லயம் நல்ல வரவேற்பு கிடைத்தது. அனுமார் ஆட்டமும் கரகாட்டமும் சிறப்பாகவே இருந்தது.

எல்லா லயங்களுக்கும் ஏறி இறங்கிய சப்பரம் கடைசியாக கோச்சிரோட்டு லயத்திற்கு இறங்கியது. அப்பொழுது பரமசிவம் சக்திவேலுவிடம் சொன்னான்... "சக்தி... இது தலைவரோட லயம், தோட்டத்திலேயே இதுதான் பெரிய லயம். ஒவ்வொரு பக்கமும் இருபதுக்கு மேல காம்பிராக்கள் இருக்கு" என்றவன்... இதுவரைக்கும் உன் ஆட்டம் படுசூப்பர். ஓங்க அப்பாவே இப்ப வந்து உன்னப் பார்த்தா அடையாளமே கண்டுக்க முடியாது. அந்த அளவுக்கு ஆஞ்சிநேயராகவே இருக்கு" என்று பாராட்டினான்.

"அடுத்தவுங்களை கரகமாடி சிரிக்க வைக்க முடியாது. ஆனா.. அனுமார் சேட்டை செஞ்சி சிரிக்க வைக்கலாம். சோகமா இருக்கிற முகத்தைக் கூட சந்தோஷப்படுத்தும் பொறுப்பு.. உனக்குதான். உன்னாலதான் அடுத்தவுங்களை சிரிக்க வைக்க முடியும்..." என்று சக்திவேலுவுக்கு மேலும் உற்சாகத்தைத் தந்தான் கரகமாடி முத்துப்பாண்டி

சப்பரம் தலைவர் லயத்தை அடைந்ததும் ஆட்டம் பாட்டமெல்லாம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது.

ஆடமுனைந்த சக்திவேலுவின் கால்சலங்கை அவிழ்ந்து விட்டதால் அவன் ஓரிடத்தில் நின்று சலங்கையை இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தான். அவனை சூழ்ந்து ஒரு விடலைக் கூட்டமே நின்றது. அதில் ஒருத்தி - அனுமானின் வாலை பிடித்திழுக்கவும் - அனுமான் அவளை வெறித்துப் பார்த்தது.

"ஏன் அப்படி பார்க்கிற.... அங்கப்பாரு அனுமான்... நீ சீதையைத் தேடிய அசோகவனம்...!" என்று கிழக்குப் பக்கமாக தெரியும் நூரளைப் பகுதியை சுட்டிக் காண்பித்தாள்.

"பாவம் அனுமாரு.... இன்னும் சீதையைக் கண்டுபிடிக்கல்ல. நீ குதிச்சிப் போயி அந்த அசோக வனத்தில ஒஞ்சீதையை தேடிப் பாரு அவ கிடைப்பா..." என்ற வார்த்தைகள் சக்திவேலுவை பெரிதும் பாதித்தன. அவன் தன் பார்வையை நுவரெலியா பகுதிக்கு செலுத்தினான். அவனின் கண்கள் கலங்கின.

"சத்தி இன்னும் என்னாப் பண்ணுற..." மேளக்கார கணேசு சத்தமிட்டான்.

சக்திவேல் உடனே சுய உணர்வு பெற்றவனாய்... கதாயுதத்தை தோளில் வைத்துக் கொண்டு "ஜெய்...!" என்று சத்தமிட்டவாறு பாய்ந்து ஓடினான். அவனின் காற்சலங்கை கலகலவென ஒலித்தது. தப்பு சத்தமும் மேளச்சத்தமும் ஒன்று கலந்து ஒலிக்க.... கரகாட்டமும் குரங்காட்டமும் உச்ச நிலைக்கு போயின. வேடிக்கை பார்ப்பவர்கள் வியந்து பார்த்துக் கொண்டிருக்க திடீரென அனுமான் சேட்டைகள் செய்ய ஆரம்பித்தது. கரணம் அடித்து... ஒரு கொய்யா மரத்தில் ஏறி.. கூட்டத்தைப் பார்த்து கண்களை உருட்டி ஈ... ஈ... என்று பல்லைக் காண்பிக்க... அதைப் பார்த்தவர்கள் எல்லாம் கொல்லென்று சிரிக்க... மீண்டும் கூட்டத்தை நோக்கிய அனுமானின் கண்கள் கூட்டத்தில் ஒரு ஓரத்தில் லயத்து சுவரோடு ஒட்டி நிற்கும் அந்த உருவத்தை உற்று நோக்கியது.

சக்திவேலால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"அது... அது அவளா...?" - தனக்குள் கேட்டுக் கொண்டவனுக்கு தலையே சுற்றுவது போல இருந்தது. மரத்திலிருந்து விழுந்து விடுவது போல கால்கள் நடுங்கியது. பொத்தென்று மரத்திலிருந்து விழுபவன் போலக் குதித்தவன்.... அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

"ஏன் அனுமாரு... விழுந்திட்டியா?" பக்கத்தில் நின்ற ஒரு பெரியவர் ஆதரவாகக் கேட்டார்.

"இல்லைங்கய்யா... தலையை சுத்திரமாதிரி இருக்கு..." என்ற சக்திவேலுவை...

"வாங்க தம்பி அப்படி வந்து உட்காருங்க எல்லாம் சரியாப் பொயிரும்..." என்று பக்கத்து வீட்டு வராண்டாவிற்கு அழைத்துப் போய் உட்கார வைத்தார்.

"அனுமாருக்கு என்னா வந்திருச்சாம்..." என்று சிலர் எட்டிப் பார்த்தார்கள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல போங்க..." என்ற பெரியவர் அவனுக்கு தண்ணீரை குடிக்கக் கொடுத்தார்.

பரமசிவனும் கணேசும் வந்து பார்த்தார்கள்.

"சத்தி... கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்ந்திரு. இந்த லயம் மட்டும்தானே... நாங்க சமாளிக்கிறோம்." சப்பரமும் அந்த வீடுகளை கடந்து கொண்டிருந்தது.

அந்தி வெயிலின் மஞ்சள் நிறத்தில்

அனைத்தும் மங்களமாய்த் தெரிய...

அந்த ஒருத்தி மட்டும்...

வராண்டாவில் இருந்தபடி நகர்ந்து போய்க் கொண்டிருக்கும் கூட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூட்டத்தில் ஆக கடைசியாக தயங்கி தயங்கி போகும் அவளைப் பார்த்ததும்.... "ஏ.. ஜானகி...!" என்று அழைக்க அவனின் வாய் படபடத்தது. முயற்சி பண்ணி அதைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்...

"ஐயா..." என்று பெரியவரை அழைக்க...

"என்னா தம்பி இன்னும் தண்ணீ வேணுமா?" என அவர் கேட்டதும்,

"இல்லைங்கையா... வந்து..." வெளிப்பகுதியை சுற்றிக் காண்பித்தவன்...

"ஐயா, இந்த திருவிழாக் கூட்டத்தில் பூவும் பொட்டுமா அலங்காரத்தோடு அத்தனைப் பெண்களும் போக அதோ கடைசியாப் போறாளே... அவமட்டும் ஏய்யா...?" கேள்விக் குறியோடு பெரியவர் முகத்தை அவன் நோக்க...

"தம்பி பாவம் அந்தப் பொண்ணு... பக்கத்து வீட்டிலதான் ஒரு பாட்டியோட இருக்கிது.

அந்தப்புள்ள ஏங்கிட்ட நல்லா கதைக்கும். தன் சோகக் கதையை அடிக்கடி ஏங்கிட்ட சொல்லி ஆறுதல் அடையும்" என்ற பெரியவர்...

"அந்த ஜானகி புள்ளையோடக் குடும்பம் ஆரம்பத்தில... அங்கிட்டு எங்கேயோ... அக்கர மலைப் பக்கத்திலத்தான் இருந்தாங்களாம்.

சின்ன வயசில இருந்தே அந்தப் புள்ளைக்கும் அவுங்க வீட்டுக்குப்பக்கத்தில் இருந்த பையனுக்கும் சினேகிதமாம். அவள் வயசுக்கு வந்தப் பிறகும் அந்தப் பையன் அவளோட சினேகிதமாகத்தான் இருந்தான். அந்தப் புள்ளையும் அவன் மேல உயிரையே வைத்திருந்தாளாம். ஆனால் அந்த புள்ளையோட தகப்பன்...

“ஏம்மகள கட்டிக் கொடுத்தால்... இந்த நாட்டில சிட்டிஷன் எடுத்த எவனுக்காவது கட்டிக் கொடுப்பேனே தவிர இந்த நாட்டு சிட்டிஷன் இல்லாதவனுக்கு கட்டிக் கொடுக்க மாட்டேன்” என்று உறுதியாக இருந்தான்.

அதே நேரத்தில்

அந்தப் பகுதியில் அணைக்கட்டு வேலைகளும் ஆரம்பமானதும்... மலையடிவாரத்து தேயிலைத் தோட்ட ஆளுங்களும்... அவசர அவசரமாக வெவ்வேறு தோட்டங்களுக்கு குடியேற முற்பட்டனர்.

“நாங்க எங்கேயும் போகத் தேவையில்ல.

நேர வவுனியாவுக்குப் போறோம். ஏற்கனவே அங்க போயி குடியேறிவிட்ட எஞ்சொந்தக்காரனுக்கு நெலம் பொலமெல்லாம் இருக்கு...” என்று சொன்ன அவளோட தகப்பன்... யாருகிட்டேயும் சொல்லிக் கொள்ளாமக் கூட குடும்பத்தோட பொயிட்டான்.

அங்கப் போன கையோட அந்த சொந்தக்காரனுக்கும் அவளுக்கும் கல்யாண ஏற்பாடாம்.

பாவம் அந்த பொண்ணு. கல்யாணமே வேணான்னு எவ்வளவு பிடிவாதம் பண்ணியும் யாரும் கேட்கல்ல.

கல்யாணம் முடிஞ்சிச்சி. ஆனா... திடீரென தீவிரவாதிகளுக்கு எதிரா ராணுவ தாக்குதல் நடந்ததால்... இவளுக்கு தாலி கட்டியவனும் அப்பனும் இன்னும் கொஞ்ச பேரும் ஷெல் தாக்குதலுக்கு பலியாகிட்டாங்க. அப்புறம்... அகதியோடு அகதியா அங்க இங்க தங்கி இந்தியா பக்கம் போகாம... எப்படியோ இந்த தோட்டப் பகுதிக்கே ஒரு பாட்டியோட...

அந்தப் பொண்ணு வந்து சேர்ந்திட்டா...

ஏதோ ஒரு நெனப்பில இந்த ரதாள ஸ்டேசன்ல்ல இறங்கி பித்தா பித்தான்னு விழிச்சுக்கிட்டிருந்த அந்தப் பொண்ணையும், அந்த கெழவியையும் இங்க கூட்டிக்கிட்டு வந்ததே நான்தான். அந்த பொண்ணு மட்டும் இந்த ஸ்டேசன்ல இறங்காம... ஒரு ரவ்வு நேரத்தில அடுத்த நாணுஓயா ஸ்டேசன்ல இறங்கிருந்தா அந்தப் பொண்ணோட கதியே வேறமாதிரிப் போயிருக்கும்” என்ற பெரியவரை அவன் நன்றியோடு பார்த்தான்.

“தம்பி அந்தப் பொண்ணுக்கு நான் கூட மாப்பிள்ள பார்த்தேன். ஆனா... அவ எனக்கு கல்யாணமே வேணான்னு சொல்லுறா. இருந்தாலும்... அவ மனசுல ஏக்கமிருக்கு. அடிக்கடி தன்னை நேசித்தவனைப் பற்றி கதை கதையா சொல்றா. தாலி கட்டியவனை மறந்தே போன அவ... தான் நேசித்த, காதலித்த அந்த இளைஞனைப் பற்றி கவலைப்படுவா.

முந்தாநாள் கூட அந்தப் பொண்ணு ஏங்கிட்ட பேசிக்கிட்டிருந்தப்ப...

"தாத்தா... நான் கணவன எழந்ததால வெதவக் கோலத்தில நிக்கல்ல, நேசித்தவனை அடையமுடியாம பொயிருச்சேன்னுதான் நினைச்சி வெதவையா நிக்கிறேன்னு" சொன்னப்ப என் கண்களே கலங்கிரிச்சி என்றவர், "தம்பி... இந்த மலைநாட்டுக்குள்ள நம்ம தொழிலாளர்களின் பிரச்சினை தீர... எத்தனையோ போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள் பண்ணி.... எதையாவது வென்றெடுக்க முடியும். ஆனா.. அந்தப் பெண்ணோட பிரச்சினையைத் தீர்க்க நாம அத்தனைப் பேரும் போராடினாலோ அல்லது பொது வேலை நிறுத்தம் செய்தாலோ தீர்க்க முடியாது. ஏன்னா அது அவளோட மனதைப் பொறுத்த விஷயம். இதேப் போல எத்தனையோ பொண்ணுங்க... இந்த மலைநாட்டுக்குள்ள... வாழ்ந்தும் வாழாம... ஒரு நையப்பட்ட வாழ்க்கையை சுமந்துக்கிட்டு இருக்காங்க.

அவள் நேசித்தவன் இப்ப எங்க எந்தத் தோட்டத்துக்குள்ள வாழுறான்னு தெரியாது."

அந்தப் பொண்ணு அன்னைக்கு ஒரு நாள் என்னிடம் சொன்னா...

"என்னை நேசித்தவர்... கண்டிப்பா இன்னொருத்தியை தாலி கட்டியிருக்க மாட்டாரு. இப்ப இல்லாட்டியும்... நான் கெழவியானதுக்கப்புறமாவது... ஒரு கோச்சியிலோ அல்லது பஸ்ஸிலோ.. இல்லாட்டி... ஆளுங்க கூட்டத்திலயாவது வச்சி... அவரைக் காணத்தான் போறேன்..." "கண்ணீரோட அவ சொன்னாப்பா..." என்ற பெரியவரின் கண்களும் கலங்கின.

"பெரியவரே..." என்று சொல்லியபடி எழுந்த சக்திவேல்... ஆவேஷம் கொண்டவன் போல கதாயுதத்தை தூக்கிக் கொண்டு வெளியே பாய்ந்து போனான்.... சப்பரமும் கூட்டமும் லயத்தின் கடைசித் தொங்கலுக்குப் போய்விட்டது. "ஏய் அனுமார் பாய்ஞ்சி வருதுடோ..." பாய்ந்து வரும் அனுமாரைப் பார்த்து இளைஞர்கள் கத்தினார்கள். தாவிப்போன அனுமான் சப்பரத்தில் அம்மன் சிலையின் மடியில் கிடந்த குங்குமத்தை அள்ளியெடுத்ததோடு, யாரோ நேர்த்திக் கடனுக்காக தட்டில் ஏந்திவந்த அம்மன் தாலியையும் எடுத்துக் கொண்டு அவளை நோக்கி ஓடியது.

"ஏய் அனுமார் தாலியோட ஓடுது... ஓடுது..."

அனுமாருக்குப் பின்னால் கூட்டம் ஓட...

எதிர்பாராத விதமாக... அந்த அனுமான் தன் நெற்றியில் குங்குமம் இடவும் - அவள் திகைத்துவிட்டாள்.

"ஏய் அனுமா... ஒனக்கு பயித்தியமா...?" அவள் கத்தினாள்.

"ஜானகி என்னத் தெரியல்ல நான்தான் சத்தி."

அவனின் முகத்தை கூர்ந்து பார்த்தவள்... "சத்திதான்... என் சத்திவேலுதான்..." என்று உணர்ச்சியோடு சொன்னவள்... குங்குமமும் சந்தனமும் கலந்து பூசிய அந்த ஆஞ்சினேய மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கூட்டம் வியப்பாக இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தது.

"ஜானகி..." அவளைத் தழுவிக் கொண்ட சக்திவேல் - அம்மன் தாலியைக் கட்ட மங்கள மேளம் முழங்கியது.

"சத்தி... அவ யாருடா..." பரமசிவம் அருகில் வந்து கேட்டான். அவனை நிமிர்ந்து பார்த்த சக்திவேலு... அண்ணே இதுதான் என் ஜானகி. அந்த அக்கரை மலையில தோத்துப் போன ஜானகியை இந்த அசோகவனத்தில் கண்டெடுத்திட்டேன். ராமாயணத்தில் ராமனுக்காக அசோகவனத்தில் காத்திருந்த ஜானகியைத் தேடினான் அனுமான்.

ஆனா... இப்ப.. இந்த ஜானகி அனுமானுக்காகவே காத்திருக்கா என்ற இந்த அசோகவனத்து அனுமானை ஆனந்தக் கண்ணீரோடு நோக்கினாள் ஜானகி.

# சந்தனக்கட்டை

## புலோலியூர் க. சதாசிவம்

சந்தனத்தால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அவளுக்கு கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்குகிறது. பலாமரத்து லயத்திலுள்ள அவளது காம்பராவிலிருந்து படிக்கட்டுக்கு வரும் அந்த சமதரையை நடந்து வர இவ்வளவு 'மாய்ச்சல்' என்றால் எப்படித்தான் கரத்த றோட்டுக்குப்போக ஏற வேண்டிய அத்தனை படிகளையும் ஏறப்போகிறாளோ?

பத்துப் பன்னிரெண்டு படிகள்தான் ஏறியிருப்பாள். மேலும் அவளால் ஏறமுடியவில்லை. நெஞ்சு குப்பென்று அடைக்கிறது. தரித்து நின்று வேகமாக மூச்சு விடுகிறாள்.

அந்தத் தோட்டத்திலுள்ள பணியக்கணக்கிலிருந்து வேறு எங்காவது போக வேண்டுமாயின் எப்படியும் அந்தப் படிக்கட்டுகளை ஏறித்தானாக வேண்டும் கரத்த றோட்டை அடைவதற்கு. வரக்கட்டான அந்த டிவிசனுக்கு வாகனங்கள் வரக்கூடிய றோட்டு இன்னும் வரவில்லை. சிறிது காலத்துக்கு முன் ரி.ரி.டி.பி. என்றழைக்கப்படும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியால் லயத்துக்குப் புது றோட்டு போடத் திட்டமிடப்பட்டது. பின்பு அந்த உதவி தோட்டத்திற்கூடாக நாட்டிற்குப் போன ஒற்றையடிப்பாதையை வாகனம் போகக்கூடிய பாதையாக அமைப்பதற்கும் துரையின் பங்களாவிற்குப் போகும் றோட்டை விசாலிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.

ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல தோட்ட வாகனம் வர முன்பு அவள் கரத்த றோட்டில் நிற்க வேண்டும். இந்த ஏற்றம் ஏறி ஆஸ்பத்திரிக்குப் போவதைவிட தோட்டத்திலே 'செவனே' என செத்துவிடலாம் போலிருக்கிறது. சந்தனத்திற்கு வேதனையாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. இந்தத் தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்த அவள் இந்த ஏற்றத்தை எத்தனை தடவைகள் ஏறியிருப்பாள். பாப்பாவாக இருந்த காலத்தில் கன்றுக் குட்டியாட்டம் நாளொன்றுக்கு பல தடவைகள் ஏறுவாள். ஆயாவிற்கு மலைக்குத் தேத்தண்ணி கொண்டு போக, மலையில் மிளார் பொறுக்கிவர, ஸ்டோரில் அரிசிபிடிக்க.... தோட்டத்திலை பேர் பதிந்த பின் பின்னிக்கிடக்கும் தேயிலைச்செடிகளைப் பீறுபோல் விலக்கி கான்களைத் துள்ளிக் குதித்துத் தாண்டி முதலாளாக நிறுவைத்தண்டின் முன் நிற்பாள் சந்தனம் கொழுந்து நிறுப்பதற்கு. இன்று ஒருபடி ஏற எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது?

சந்தனம் கண்ணுக்கு முன்னால் பச்சைப்பசேல் என பூத்துக் கிடக்கும் கொழுந்துக் காட்டைப் பார்க்கிறாள். உடம்பெல்லாம் கிளு கிளுக்கிறது.

சந்தனம் மரங்களில் அரும்பித் துளிர்த்திருக்கும் கொழுந்துகளைக் கைகளினால், தாய் குழந்தையின் முகத்தைத் தடவுவது போல தடவுகிறாள். அவளது கைகள் எட்டும் தூரத்தில் மட்டத்திற்கு மேல் உள்ள முடிச்சுகளையும் வங்கி வாதுகளையும் ஒடித்து விடுகிறது. பதினாலு வயதிலே வெள்ளைக்காரர்கள் துரைமாராக இருந்த காலத்தில் தலையில் போட்ட கூடையை நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பு போன வருடம்தான் கழற்றி வைத்தாள். இப்போது மீண்டும் கூடையைத் தலையில் மாட்டி பொலியோ பொலி சொல்லி கொழுந்தெடுக்க வேண்டும் போல் தோன்றுகிறது.

தோட்டத்தில் வேலை செய்யும் நாட்களில் கொழுந்துக் காலம் வந்து விட்டால் சாப்பாட்டிற்குப் போகாமல் மலையில் நின்று எடுப்பாள். விடிந்தும் விடியாத காலைப் பொழுதில் மலையில் நிற்பாள். கைகள் மந்திர வித்தை போல் - மோட்டோரில் இயங்கும் இயந்திரம் போல அசையும். கூடையும் நிறைய குட்டிச் சாக்கும் நிரம்பிவிடும். அந்த மாதம் அவளுக்குத்தான் நான்கு டிவிசனிலும் சம்பளம் கூடவாக இருக்கும். கம்பெனிக் காலத்தில் வெள்ளைக்கார துரைமார்களிடம் அதிக கூடுதலான கொழுந்து எடுத்ததற்காக பல தடவைகள் 'பிரசண்ட்' வாங்கியிருக்கிறாள். போன வருஷம் தோட்டம் மீண்டும் கம்பெனிக்கெடுத்தபோது, அவள் சந்தோஷப்பட்டாள் மீண்டும் 'பிரசண்ட்' கிடைக்கப் போகிறதென. ஒருநாள் பெரட்டுத்துண்டு பெரியசாமி சந்தனத்தின் காம்பராவிற்கு தேடி வந்து சொன்னான் "நாளைக்கு ஒங்கள ஐடென்ரி கார்ட்டை எடுத்துகிட்டு பெரிய தொரை ஆபீசுக்கு வரச்சொன்னாரு". சந்தனத்திற்கு துரை ஏன் வரச்சொன்னாரென்பது புதினமாக இருந்தது. என்ன சங்கதியாக இருக்கும்? நான் ஒரு குத்தமும் செய்யல்லியே... நல்ல சங்கதியாகத்தான் இருக்கணும். ஆமா, தோட்டம் கம்பெனிக்கு ,எடுத்த கையோட வந்த கொழுந்துக் காலத்தில கொழுந்து கூட எடுத்தது நா தானே. அந்த மாசம் ஒண்ணாம் நம்பர் சம்பளம் எனக்குத்தானே. கம்பனிகாரங்க அதுக்கு 'பிரசண்ட்' ஏதாச்சும் குடுக்க போறாங்களோ.

அன்று கணக்கப்பிள்ளை ஐயாவிடம் கெஞ்சி மன்றாடி இரண்டு மணிக்கு லீவு கேட்டு, சந்தனத்தின் புருஷன் உயிரோடு இருந்த போது - இருபது வருடங்களுக்கு முன் - ஒரு தீபாவளிக்கு எடுத்துக் கொடுத்த சீலையை அடிப்பெட்டியில இருந்து எடுத்துக்கட்டி, தலை வேட்டியால் முக்காடு போட்டுக் கொண்டு ஆபீசுக்கு ஓட்டமும் நடையுமாகப் போனாள்.

யன்னலுக்கூடாக அவளது அடையாள அட்டையை பெரிய கிளாக்கர் வாங்கி பார்த்து விட்டு பெரிய துரைக்கு ஆங்கிலத்தில் ஏதோ சொல்ல, பெரிய துரை தடித்த குரலில் குற்றவாளிக்குக் கூறுவதுபோல "இந்தா சந்தணம் ஒனக்கு ஐம்பத்தி ஆறு வயசு வந்திடுச்சு, அடுத்த மாசம் ஒனக்கு நா வேல நிப்பாட்டிறது வௌங்கிச்சா" சந்தனம் விக்கித்துப் போனாள்.

"தொரை எனக்கு இப்ப ஐம்பத்தி மூனு வயசு தானுங்க இருக்கும். தரும தொரைங்களே, நா கம்மனாட்டிங்க, வேலை நிப்பாட்டி போடாதீங்க. ஐடென்ரி கார்ட் வயசு பிழைங்க. லயத்து ஆயம்மா கெழவி பிரமாயி அடிக்கடி சொல்லுவாங்க. நானும் பெரிய கங்காணியுட்டு மகளும் ஒரே அம்மாசியில் பொறந்தங்க..."

"ஒனக்கு ஒப்பண ஜாதிக இருக்கா...?"

"அதை எங்க ஆய் அப்பன் அந்த காலத்தில எழுதி வைக்கல்லீங்க. பெரிய கங்காணி மகளோட பொறந்த குறுப்பு இருக்குங்க. நாளைக்கி கொணந்து காம்பிக்கிறேங்க. புல்லு மலமாரிமேல சத்தியமா சொல்றேங்க. தொர, கங்காணி மக காமாட்சியும் நானும் ஒரே நாள்ளேதான் பொறந்தோங்க".

"இந்தா சந்தனம் நீ ரொம்ப கதைக்கிறது... ஆள் குறைக்க சொல்லி நம்மளுக்கு கம்பெனி சொல்லி இருக்கு... போ... போ"

சந்தனம் கும்பிட்டு மன்றாடினாள். "போ... போ நா சொன்னது சொன்னதுதான்." அவள் பேயறைந்தவள் போலானாள். கால்கள் லயத்தை நோக்கி நடக்க, சோர்வடைந்த மனம் கடந்தகால நிகழ்வுகளிலும் நிகழ்கால எரியும் பிரச்சனைகளிலும் லயிக்கிறது.

சந்தனம் பத்துக் குழந்தைகளைப் பெற்றெடுத்தவள். நான்கு குழந்தைகள் செத்துப்பிறந்தன. நான்கு குழந்தைகள் பிறந்து செத்தன. ஒரு மகனையும், ஒரு மகளையும் தான் வளர்த்தெடுத்தாள். மகள் கொட்டகலை கிழவித் தோட்டத்தில் முறை மாப்பிளையைக் கட்டி குழந்தை குட்டிகளுடன் இருக்கிறாள். ஆடிப்பூசைக்கு மட்டும் ஆயாவை வந்து பார்த்து விட்டுப்போவாள்.

மகன் அங்கமுத்துவுடன் தான் சந்தனம் இருக்கிறாள். அவளது கணவன் இறந்த அடுத்தமாதம் அங்கமுத்துவுக்கு தலைச்சம் மகன் பிறந்தான். அப்பனின் பெயரான சுப்பையாவை மகனுக்குச் சூட்டி மகிழ்ந்தான் அங்கமுத்து. 'அந்த மகராசனை' பேரனில் கண்டாள் சந்தனம். அவன் மேல் உயிரையே வைத்திருந்தாள். சம்பளத்து வாசலில் பேரனுக்கு பிஸ்கோத்து, கடலை, இன்னும் அவன் விரும்பிக் கேட்டவற்றை அடிமடியில் கட்டிவைத்து அவனுக்கு வாஞ்சையுடன் கொடுத்து மகிழ்வாள். தோட்டப்பாடசாலையில் அவனைப் படிப்பிக்கப் போட்டதும் அவனது படிப்பில் மாஸ்டரின் கவனத்தை ஈர்ப்பதற்காக வாத்தியாரம்மாவுக்கு தட்டுமுட்டு வேலை செய்து கொடுத்தாள் சந்தனம். தோட்டத்துப் பள்ளிக் கூடத்தில் ஒவ்வொரு வருடமும் 'ஒண்ணா'வதாக பாஸ் பண்ணுவது கேட்டு மனம் பூரிப்பாள். சுப்பையா டவுண் ஸ்கூலுக்குப் போகத் தொடங்கியதும்

பஸ் சீசன் டிக்கட்டுக்கு அவளே காசு கொடுப்பாள். கையில் கிடைக்கும் போது கைச் செலவுக்கு ஏதாவது கொடுத்தனுப்புவாள்.

பேரன் பெரிய படிப்பு படித்து, தோட்டத்துல பில்லு வெட்டாம காற்சட்டை சப்பாத்துப் போட்டு பெரிய 'வேல' செய்வான் என அவள் தினமும் ஆசைப்பட்டாள். அது ஒரு நாள் கட்டாயம் நிறைவேறுமென மனப்பூர்வமாக நம்பினாள். ஆனால் படிப்பு முடித்து வேலை தேடத் தொடங்கியதும் அவளது எதிர்பார்ப்புகள் ஆசைகள் ஆட்டம் கண்டன.

அங்கமுத்து பெரிய கிளாக்கரையா வீட்டு மரக்கறித் தோட்டத்தில் சம்பளம் எதுவுமின்றி தினமும் பாடுபட்டான். ஆபீஸில் அல்லது மலையில் வேலை பழக துரைமூலமாக 'ஜனவசம'வுக்கு எழுதி ஒழுங்கு பண்ணலாமென கிளாக்கரையா காலத்தைக் கடத்தினார். காரியம் ஒன்றுமே நடக்கவில்லை. சுப்பையா தோட்டத்தைச் சுற்றியுள்ள, நாட்டிலுள்ள தன்னிலும் படிப்புக்குறைந்தவர்கள் சிலர் தோட்டத்தில் சுப்பவைசராக வேலை செய்வதைச் சொல்லி வீட்டில் கவலைப்படும்போது சந்தனத்தால் இதற்குரிய காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

கடைசியாக டவுனில் உள்ள முதலாளி ஒருவரின் காலைப்பிடித்து, கொழும்பில் கம்பனி ஒன்றில் சுப்பையாவிற்கு வேலைக்கு ஒழுங்கு செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. முதலாளி கேட்ட அந்த தொகையைக் கட்ட சந்தனம் போட்ட அந்தச் சீட்டு உதவியது. சுப்பையா கொழும்பிற்கு வேலைக்குப்போய் ஒரு மாதச்சம்பளம் கூட எடுக்கவில்லை. கொழும்பிலிருந்து ஒரு கடதாசி வந்தது. கொழுந்து நிறுத்துவிட்டு லயத்துக்கு வரும் வழியில் தபால்காரன் தங்கையாவிடம் சந்தனமே வாங்கிவந்தாள். பேரனின் சுக செய்தியாக இருக்கும் என்ற வாஞ்சையுடன் அங்கமுத்துவிடம் அக்கடிதத்தைப் படிக்கக் கொடுத்தாள். அக்கடிதம் சுப்பையாவுடன் கூட இருந்த பையன் எழுதியிருந்தான். சுப்பையா அடையாள அட்டையை பஸ்ஸில் பிக்பொக்கற் அடிப்பவனிடம் பறிகொடுத்து விட்டதாகவும் அது இல்லாததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலை ஒன்றில் தடுப்புக்காவலில் இருப்பதாகவும் எழுதப்பட்டிருந்தது. சந்தனம் இடிவிழுந்தவளாக உட்கார்ந்து விட்டாள்.

அங்கமுத்து கொழும்புக்குப் போய் ஆகவேண்டியதை செய்வதற்கு மடியில் ஒன்றுமில்லாத போது சந்தனம் கையில காதுல உள்ள நகைகளைக் கழற்றிக் கொடுத்தாள். அங்கமுத்து யாரோ தரகனைப்பிடித்து நகைகளை ஈடுவைத்து எடுத்த காசு பூராவையும் செலவு செய்து சுப்பையாவை விடுவித்து தோட்டத்திற்கே கூட்டி வந்துவிட்டான். இவ்வளவு படிப்பு படித்துவிட்டு அவன் வேல வெட்டி ஒன்றுமின்றி வீட்டில் இருக்கும் கவலையில் மூழ்கியிருந்த சந்தனத்திற்கு இன்னும் ஒரு மாதத்தில் தனக்கும் வேலை நிப்பாட்டப்போகும் செய்தி இடிமேல் இடியாக விழுந்தது.

அங்கமுத்து ஆயாவிற்கு ஆறுதல் சொன்னான். "ஆயா இவ்வளவு காலமும் நீ கஷ்டப்பட்டது போதுமாயா. நீ இம்புட்டு சோறு தான் சாப்புடுவ. தனியாவா ஒனக்கு ஒலை வைக்கப்போறம்.

"இல்ல ராச நீ புள்ள குட்டிகாரன். வீட்டுல இரண்டு குமர் இருக்கு. தோட்டத்தில ரெண்டு வருஷமா பேரு பதிய மாட்டேங்குறாங்க. நீங்க புருஷன் பொண்டாட்டி ஒழைச்சு எத்தனை பேருக்கு திங்க குடுக்கிறது".

"இல்ல ஆயா. நாளைக்கு தலைவர கூட்டிக்கிட்டு ஆபீசுக்கு போய் தொரய கேக்க போரேன். ஆயாவிற்கு 'பென்சன்' குடுக்கிறதுன்னா நம்மவூட்ல வேல செய்யக்கூடிய ரெண்டு பிள்ளைக இருக்கு. அவங்களுக்கு பேர் பதிங்க, ஆயாவூட்டு கணக்குவழக்க சொனங்காம செய்ங்க அப்பிடின்னு."

அங்கமுத்து ஆயாவிற்கு வரவேண்டிய பதிநாலு நாள் சம்பளம் என அழைக்கப்படும் சேவைக்காலப்பணம், மூனு சதக் காசு என்ற வேலை கொள்வோர் நம்பிக்கை நிதி, 'பண்டு' என்ற ஊழியர் இலாபநிதி ஆகியவை எவ்வளவு வரும் என மனதில் கணக்குப்போட்டுப் பார்த்தான். "ஆயாவூட்டு பென்சன் சல்லி எடுத்து பாஸ் பொத்தகத்துல போட்டா வட்டி சல்லி எடுத்து கால ஆட்டிகிட்டு சாப்பிட்டுக்கலாம்."

கொழும்புக்குப் போய் எடுக்கும் சம்பளம், சாப்பிட, உடுக்க, வீட்டுக்கூலி கட்ட போதாது, வேறு கெடுபிடிகள்... ஏதாவது சொந்தமாகத் தொழில் செய்தால் தேவலை என்று எண்ணமிட்டிருந்த சுப்பையா சந்தனத்துக்கு கிடைத்த பதினாலு நாள் சம்பளத்தில் லயத்தில் ஒரு கடையை ஆரம்பித்தான்.

சந்தனம் தோட்டத்தில வேலை நிப்பாட்டி மறுநாளே நாட்டிற்கு வேலைக்குப்போய் நாலு காசு தேடினாள். "அப்பாயி ஏன் கஷ்டப்படுறது" என்று சுப்பையா கேட்டான். "ராசா படுத்தா பாயும் பகை, நடந்தால் நாடெல்லாம் ஒறவு" என்பாள். ஆனால் சந்தனத்திற்கு முன்புபோல் ஏற்றங்கள் ஏறமுடிவதில்லை. சிறிது கடினமான வேலை செய்தவுடன் இளைப்பு எடுத்துவிடும்.

சுப்பையாவின் லயத்து கடைவியாபாரம் ஏதோ அவனுக்கு ஒரு தொழில் என்பதே தவிர அதிக வருமானம் தருவதாக இல்லை. "தோட்டத்தை வுட்டுட்டு ஈந்தியாவிற்கு ஓடியா போயிடுவம். அடுத்த மாசம் சேர்த்து தாரம்" எனச்சொல்லி தோட்ட ஆள்கள் வாங்கிய கடன் - நிலுவை - போட்ட முதலிலும் பார்க்க கூடிவிட்டது. சுப்பையாவிற்கு கடை வியாபாரத்துடன் வேறு ஏதாவது செய்தால் தேவலை போல் தோன்றியது. சுப்பையாவுடன் ஸ்கூல் படித்துவிட்டு வேறு தொழில் ஒன்றுமே கிடைக்காத அடுத்த டிவிசனில் உள்ள ஒரு பையன் செய்வது அவனது

ஆசைக்கு தூபம் போட்டது. சந்தனத்திற்கு முப்பதினாயிரம் ரூபாய் சேமலாபநிதி கிடைத்து ஒரு வாரம் கூட ஆகவில்லை சந்தனத்தைக் கேட்டான் சுப்பையா ”அப்பாயி ஒரு டீவியும், டெக்கும் எடுத்து லயத்துல படம் ஓட்டப்போரன். மாசாமாசம் சேர்ர சல்லிய அப்படியே பொஸ்தகத்துல அப்பாயி பேருல போட்டு வைக்கிறன்”. சுப்பையா கேட்பதற்கு அவள் என்றுமே மறுப்பு தெரிவித்ததில்லை. சந்தனத்தின் பாஸ்புத்தகம் காலியாகிவிட்டது.

சந்தனத்திற்கு ஏற்றம் ஏறும்போது மட்டும் இருந்த இளைப்பு இப்பொழுது சாய்ந்து படுக்கும் பொழுதே வரத்தொடங்கிவிட்டது. இருமல், மூச்சுத்திணறல், கை, கால், முகம் எல்லாம் வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. தோட்டத்து டாக்டர் ஐயாவிடம் கைக்காசுக்கு மருந்து வாங்கிக் கொடுத்தான் அங்கமுத்து. மருந்து சாப்பிடும்பொழுது குணங்குறிகள் குறைவது போல் தெரியும். மருந்தை நிற்பாட்டியதும் அதே வேதனைகள். உடம்பில் இரத்தம் இல்லாததால் இருதயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது எனக்கூறி பண்டாரவளை ஆஸ்பத்திரிக்குப்போக டாக்டர் ஐயா துண்டு கொடுத்திருக்கிறார்.

சந்தனம் பல்லைக் கடித்துக் கொண்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு படிக்கட்டிலும் தரித்து நின்று ஏறுகிறாள். அவள் ஏறிய தூரத்தை விட இன்னும் போக வேண்டிய தூரம் அதிகம். அவசர அவசரமாக அவளைக் கடந்து கூடையுடன் கொழுந்துக் காட்டுக்குச் செல்பவர்கள் சிறிது தரித்து நின்று “அக்கா, அண்ணி, மதினி, அத்தை, அம்மாயி” என அன்பாக அழைத்து ஓரிரு வார்த்தை பேசிவிட்டுச் செல்கிறார்கள். ‘என்ன அண்ணி கை, கால், மூஞ்சி எல்லாம் இப்படி வீங்கி இருக்கு’

சந்தனத்தால் தொடர்ந்து ஏற முடியவில்லை. இருதயதுடிப்பு ‘உருலோசு’ போலக் கேட்கிறது. மூச்சு திணற நெஞ்சுக்குள் ஏதோ செய்கிறது, தலை சுற்றுகிறது. படிக்கட்டு, மலை எல்லாம் “ஸ்டோர் காற்றாடி” போல் சுற்றுகிறது. சந்தனத்தின் கைகள் அருகில் உள்ள தேயிலைச் செடியை இறுகப்பற்றிக் கொள்கின்றன.

“ஐயோ! அம்மாயி மயக்கம் போட்டு விழுந்திருச்சி” கொழுந்து காட்டுக்கு சென்று கொண்டிருந்த ஒருத்தி போட்ட சத்தம் மலைகளில் எதிரொலிக்கிறது. வேலைக்குச் சென்று கொண்டிருந்தவர்கள் கூடையைக் கழற்றி பாதை ஓரத்தில் வைத்துவிட்டு ஓடி வருகிறார்கள். ஒருத்தி சேமன் இலையில் நெத்திக்கான் பீலியில் ஓடும் தண்ணீரைப் பிடித்து வந்து முகத்தில் அடிக்கிறாள். சந்தனத்திற்கு மயக்கம் தெளியவில்லை. ஊற்றப்பட்ட தண்ணீர் உள்ளிறங்காமல் கடைவாயில் வடிகிறது. எங்கிருந்தோ ஈ ஒன்று வந்து வாயில் உட்கார்ந்திருக்கிறது. பேர்போடும் கார்ட்டை எடுத்து விசுக்குகிறாள் ஒரு பெண்.

அப்போதுதான் பகல் வேலை முடிந்த கையோடு அலுப்புத் தீர்க்க நாட்டில் உள்ள பண்டா வீட்டிற்கு போன அங்கமுத்து வேகமாக வந்து கொண்டிருக்கிறான். பிணம் போல கிடக்கும் ஆயாவையும் குழுமியிருக்கும் கூட்டத்தையும் பார்த்து விட்டு "ஐயோ! ஆயா எங்களை உட்டுட்டுப் போயிட்டியே, இனி எந்தப்பிறப்பில ஆயா நா ஒன்ன காங்கப்போறேன்" என ஒப்பாரி குரல் எழுப்புகிறான்.

ஒருகணம் கழித்து தன்னை சுதாகரித்துக்கொண்டு ஆயாவிற்கு மூச்சு வருவதைப் பார்த்துவிட்டு சுற்றும் முற்றும் பார்த்து ஏதோ யோசிக்கிறான். 'இனி ஆசுபத்திரிக்கு ஆயாவைக் கொண்டு போறதில வேலைஇல்ல' மறுகணம் சந்தனத்தை தூக்கி தோளிலே போட்டுக்கொண்டு லயத்தை நோக்கி படிக்கட்டுகளிலே இறங்குகிறான். தோட்டத்தலைவர் ஓட்டமும் நடையுமாக வருகிறார். என்ன தலைவரே இந்த தோட்டத்துல நோவாளிய ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக லொறிகேட்டா, நோவாளி செத்தாப்போல பொணப்பெட்டி எடுக்கவா லொறிவரும். இந்த அநியாயத்தைக் கேட்க ஆருமில்லையா? எம்மகேன் காலயில இருந்து ஆயாவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறத்துக்கு நாயா அலைறான். "லொறி சுவீப் தூள் கொண்டு தங்கமலை ஸ்டோருக்கு போயிடுச்சாம். வந்ததுக்குப் பிறகு லொறி அனுப்புறேன்ட்டு டீ மேக்கர் சொன்னாராம். இப்போதைக்கு லொறி வராது. டவுணிலை இருந்து பஸ்ஸில் வந்த பண்டாரத்தையா சொன்னாரு. லொறி டவுனிலை இருக்காம். டீ மேக்கர் நோனா முன் சீட்ல உட்கார்ந்திருக்காவாம். அவங்க டவுணிலை உள்ள சோலி எல்லாம் முடிச்சிட்டு தான் வருவாங்க... ஏன் தலைவரே நம்ம ஆயா தோட்டத்துக்கு ஓழைச்சு குடுக்கல்லையா...? யுனிசெப் ஐஞ்சி தோட்டத்துக்கு ஒரு அம்புலன்ஸ் எடுத்து குடுத்திருக்காங்க. தங்கமலைக்கு 'கோல்'போட்டு எடுத்து குடுத்திருக்கலாம்தானே. அம்புலன்ஸ் எடுத்தா 'கோஸ்ட்' கூடவாம். கூலிக்காரன் வகுத்தில அடிச்சுத்தான் 'கோஸ்ட்' குறைக்கானுமா? கம்பெனிகாரங்களுக்கு ஆனை போற இடம் தெரியல்ல. ஊசி போர இடம்தான் பார்க்கிறான். தோட்டத்தில் அவனவன் கையில சுருட்டிக்கத்தான் பாக்கிறாங்க. ஆயாவுக்கு ஏதாச்சும் நடக்கட்டும், இவங்க எல்லாரையும் ஒரு தொங்கல்லை இருந்து தொலைக்கிறன். "என்ன தலைவரே பேசாம நிக்குறீங்க. நானும் கமிட்டியில இருக்கேன்".

"அங்கமுத்து அத்தைக்கு ஏதாச்சும் நடந்தா நாளைக்கு நாலு டிவிசனும் ஸ்றெக்தான்." தலைவர் நிதானமாகக் கூறுகிறார்.

பண்டாவின் கள்ளுதண்ணி அங்கமுத்துவுக்கு புதிய உற்சாகத்தை கொடுத்து மேலும் நியாயத்தைப் பேசவைக்கிறது.

"தோட்டங்களை அரசாங்கம் எடுக்கிறப்போ நாமெல்லாம் அரசாங்க வேலைக்காரங்க என்று சந்தோசப்பட்டம். அப்பாடா எடுத்த பிறகு நாம்

பட்டபாடு. இப்ப கம்பெனிக்கு குடுத்திட்டு இலாபத்துல பத்துல ஒருபங்கு கிடைக்குமெண்டாங்க. நம்மலுக்கு இருக்கிற சலுகைகளை இல்லாமல் அடிக்கிறது தான் இப்ப கம்பெனி காரங்க நம்மளுக்கு குடுக்கிற லாபம். நம்மல எப்படி எல்லாம் ஏய்க்கிறாங்க. நாம இளிச்சவாயங்க தானே."

"அங்கமுத்து... நா இப்பவே ஆபீசுக்குப் போய் தொரைய சந்திச்சு இதுக்கு ஒரு முடிவு எடுத்துகிட்டு வாறேன்." தலைவர் விரைவாக படிக்கட்டுகளில் ஏறுகிறார். அங்கமுத்து படிக்கட்டுகளில் இறங்குகிறான்.

நேற்றுக் கமிட்டிக்கூட்டத்தில் ஜில்லாப் பிரதிநிதி பேசியது அங்கமுத்துவுக்கு 'சூரில்' பளிச்சென நினைவுக்கு வருகிறது.

"ஸ்ரீலங்க என்கிறப்போ வெளி நாட்டவங்களுக்கு நம்ப தேயிலையின் வாசம்தான் நெனைவுக்கு வருமாம். நம்ம மாரியாயியும், ராமாயியும் மாடாக உழைச்சு தேய்ந்து சந்தனக்கட்டையாகித் தேயிலைக்கு வாசம் ஊட்டுறாங்க".

அங்கமுத்து தோளில் கட்டை போலத் தொங்கும் சந்தனத்தின் முகத்தைத் தடவி நாசி துவாரங்களின் அடியில் விரல்களை வைத்துப் பார்க்கிறான். அவளுக்கு மூச்சு ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது.

சந்தனம் இன்னும் சாகவில்லை.

# பொறுத்தது போதும்...!

## பெ. ராஜதுரை

## 1

“அடியேய் முனியம்மா! கதைய நிப்பாட்டிட்டு நெரய வேகமா எடுத்துவாடி, புல்லு கில்லு இருந்தா பாத்துப் புடுங்கிடனும், இல்லண்ணா வீட்டுக்குத்தான் ஓடுவ” என கங்காணி அலறுகிறார். சிறிதும் இங்கிதமில்லாமல், மரியாதை இல்லாமல் பேசுவதில் வல்லவர்கள் இந்த கங்காணிமார்கள்.

நேரம் பத்துமணிதான் இருக்கும். உச்சிவெயில் உக்கிரமாக எரித்தது. அந்த மலைச்சரிவில் தேயிலைச்செடிகளைவிட கற்பாறைகளே அதிகம். நிழலுக்காக நட்ட மரங்கள் பட்ட மரங்களாய் நின்றன. இந்தக் கொடுமையிலும் கொழுந்தெடுக்கும் பெண்கள் சலிப்படையவில்லை.

“முனியம்மா, கங்காணி இப்படித்தான் கத்துவான். நம்ம படுற கஷ்டம் நமக்குத்தானே, இவன் கட்டையிலதான் போவான்” என காவேரி சபித்தாள்.

“அதுவுஞ் சரிதான் காவேரி, நாம ஒழைக்கிறதுக்காக வாழுறவுங்க. அதுனால வாயத் தொறக்கவே கூடாது. எப்படி வேணும்னாலும் கத்திட்டுப் போகட்டும், இப்படிக் கத்திக்கத்தியேதான் நம்ம வாழ்க்கய கவுத்திட்டானுங்களே கவதிப் பயலுக.” இவ்வாறு மெதுவாக முணுமுணுத்த வண்ணம் முனியம்மா கொழுந்தைக் கிள்ளி கூடையில் போட்டாள்.

இது வெறும் முணுமுணுப்பா? இல்லவேஇல்லை! ஒரு சமூகம் முழுவதும் தனக்குள் எரிமலையைப்போல் அடக்கி வைத்துள்ள அவலவாழ்வின் ஒரு சிறுதுளியே! இது பீறிட்டு வெளிக்கிளம்பாதவரை பாதுகாப்புத்தான்.

சின்னத்துரையின் மோட்டார்சைக்கிள் சத்தம் தூரத்தில் கேட்டது.

“அதானே பாத்தேன், கங்காணியாரு காரணமில்லாம கொலைக்கவே மாட்டரே” என காவேரி கூறி முடிவதற்குள் கீழ்ரோட்டில் சின்னத்துரையின் மோட்டார்சைக்கிள் வந்து நின்றது.

மோட்டாரைக் கண்ட கங்காணி முன்னிலும் வேகமாக பெண்களை கெட்டவார்த்தைகளால் ஏசுவதும், திட்டுவதுமாக, வேலைக்காட்டில் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டும் இருந்தார். இந்த துரைமாரின் மோட்டார்சைக்கிள் போடும் சத்தத்திற்குத்தான் எவ்வளவு சக்தி! கொழுந்தெடுக்கும் பெண்களிடமும் ஒரு வேகம். கைகள் இயந்திரமாய்

அசைந்தன. கொழுந்துக்கூடை சிறிதுசிறிதாக நிரம்பியது. கைகளும் சிவப்பேறின.

மோட்டார்சைக்கிளில் அமர்ந்தவண்ணம் துரை கொழுந்துமலையை நோட்டமிட்டபடி வருகிறான். சில இடங்களில், பார்வை எதையோ குறிதவறாது பார்த்தது. கட்டாயம் அது கொழுந்து கிள்ளும் இளம்பெண்களின் அழகைத்தான். துரைக்கு ரசனை, இவர்களுக்கல்லவா சீவன் போகிறது. 'இயந்திரப் பிறவிகளோ' என துரையின் மூளைகூட சிந்திக்க வைத்தது.

"என்னாங் கங்காணிங் நீ கொழுந்திப், பாத்தி எடுக்கச் சொல்லுறாங். நெரயில பில்லி இருந்தாங் தமுஸேட தமாய் (ஒனக்குத்தான்) தெண்டங் போடுறாங்," என அரைகுறை தமிழில் கூறிவிட்டு, கங்காணியின் காதுக்குள் ஏதோ குசுகுசுத்த சின்னத்துரை சைக்கிளில் மீண்டும் பங்களா சென்று விட்டான்.

கங்காணியின் முகம் பேயறைந்தமாதிரி தான் இருந்தது. மனச்சாட்சி இல்லாத மனிதன் எங்கேதான் வாழ்கிறான். தேயிலைச்செடிக்குள் இறங்கிய கங்காணி, "ஏண்டி காவேரி, நம்ம சின்னதொர சாமி மாதிரி மனிஷன் புள்ள" என்றார்.

"ஆமாங்க கங்காணியாரே, அவருமட்டுமா நீங்களுந்தான் எங்களுக்கு சாமி மாதிரி. புராணக்கதையில சாமி மாறுவேசத்துல வந்து பக்தர்களை சோதிப்பாராம். இங்கு அது நெசக்கதை. அதுனாலதான் சாமியே தொரயாவும், கங்காணியாராவும் வேசம் போட்டுவந்து எங்களை சோதிக்கிறாருப்போல" எனக் கூறிமுடிக்கிறாள் காவேரி. வார்த்தைகள் கங்காணியின் இதயத்தில் கத்தியால் குத்தியது போன்று இருந்தது. ஏனெனில் இந்தவார்த்தைகளில் எத்தனையோ ஆயிரம் அர்த்தங்கள் உள்ளன. கங்காணிக்கு விளங்காமலா இருந்திருக்கும்.

## 2

தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து அலறும் சங்கொலி நேரம் பதினொன்றரை என்பதை ஞாபகமூட்டியது. வழமைபோல கங்காணி கத்துகிறார். "ஏய் புள்ளக்காரிக எல்லாம் எறங்கிப் போங்க, அரைநேரத்துக்கு ஸ்டோர்மலைக்கு வெல்லன்னா வந்திரணும்"

பெண்கள் மலையை விட்டிறங்கி கொழுந்துமடுவத்தை நோக்கி நடக்கிறார்கள். கூடைகளை இறக்கி வைத்ததும் அவர்களின் கால்கள் பிள்ளைமடுவத்தை நோக்கி வழமைபோல் நடக்கின்றன. தாய்மாரைக் கண்ட குழந்தைகள் தாவுகின்றன. முத்தமழைகளால் குளித்தவண்ணம் வீடுகளை நோக்கி அந்த ஜீவன்கள் அசைகின்றன.

குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கிவிட்ட காவேரி பகல்சாப்பாட்டிற்கு ரொட்டி சுட ஆரம்பித்தாள். பக்கத்தில் தவழ்ந்து வந்த குழந்தை அவளை வருடியவண்ணம், ஏக்கப்பார்வை பார்த்தவாறு "அம்மா, உ...ங்...கா" என கெஞ்சியவாறு தாயின் ரவிக்கைக்குள் கையை நுழைக்கிறது. குழந்தையைத் தூக்கி மடியில் கிடத்திய காவேரி, வற்றிவரண்டு தன்னெஞ்சோடு ஒட்டிப்போய்க் கிடந்த முலையை குழந்தையின் வாயில் வைக்கிறாள். அளவிலா சந்தோசம் குழந்தைக்கு. பரிதாபமாக பார்த்த காவேரி - தன்னுடைய வேலையில் கவனஞ் செலுத்தினாள்.

"ஆய் சனியனே! பல்லா இது, பேய்க்கி மாதிரி, என் வயித்துல பொறந்து உசிர வாங்கிரியே" என வேதனையால் முனகிய காவேரி குழந்தைக்கு நன்றாய் அடித்து பக்கத்தில் தள்ளிவிட்டாள்.

ஆம்! குழந்தை பாலுக்காக தனது பலங்கொண்ட மட்டும் சப்பி இழுத்தது. பாலில்லை, எங்கிருந்து வரும்? ஏமாற்றமடைந்த குழந்தை கடித்து தனது ஆத்திரத்தைக் காட்டிவிட்டது.

"ஏண்டி சனியனே பச்சக்கொலந்தய போட்டு இப்புடி அடிக்கிற, நீ நாசமாப் போக," எனத் திட்டியவாறு வீட்டுக்குள் நுழைந்த கணவன் ராமசாமி குழந்தையை அணைத்து முத்தமிட்டு அமைதிப்படுத்தினான்.

"இம்ம் இதுல ஒண்ணும் கொறச்சலே இல்ல. கொலந்தமேல பாசம் இருந்ததுனாலதான் நேத்து பால்மாவு வாங்க குடுத்த தூள வித்திட்டு தண்ணிப் போட்டுகிட்டு வந்த" என சிறிது கோபமாகவே கேட்டாள் காவேரி.

சாப்பாட்டுக்காகக் கூடிய பகல்பொழுது ஒரு போர்க்களமாக முடிகிறது. தற்காலிக முடிவே, மீண்டும் மாலை தொடர ஒரு ஒத்திவைப்பு. வறுமை எப்படியெல்லாம் இவர்களை இவர்களறியாமலே ஆட்டிப்படைக்கிறது.

## 3

பன்னிரண்டரை மணி. சூரியனின் உக்கிரம் கடுமையாக இருந்ததால் உடலெல்லாம் வியர்த்துக்கொட்ட செங்குத்தான படிக்கட்டில் "ஸ்டோர்மலையை" நோக்கி பெண்கள் கூட்டம் நகருகின்றது. முதுகுகளில் கொழுந்துக்கூடைகள் நடனமாட, மனதுகளில் எண்ணங்கள் அலைமோத கொலனிப்படிக்கட்டில் ஏறுகின்றனர்.

"என்னா காவேரி சனியன் புடிச்ச வெயிலு வேற நம்ம பங்குல எரிச்சி தொலையுது. முன்னயெல்லாம் குறுக்குப்பாதை நெடுக ரெண்டு பக்கமும் நெழலுக்கு மரம் இருந்திச்சி. இந்தக் கொலனிய போட்டதும் போதும் மரத்தயெல்லாம் அழிச்சிப்புட்டானுங்க" என முனியம்மா கூறுகிறாள்.

ஆளுங்கட்சி கடந்த தேர்தலிலும் வெற்றி பெற்றதால், கிராமங்களில் இருந்த ஐம்பத்தியேழு சிங்கள குடும்பங்களுக்கு ஒரு ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுத்துவிட்டது.

"காணிய மட்டுமா குடுத்தாக, வீட்டயும் கட்டியில்ல குடுத்திருக்காக" ஏக்கத்துடன் காவேரி கூறினாள். முனியம்மா கூறுகிறாள் "காவேரி ஒனக்குத் தெரியுமா நம்ம ஒரப்பட்டில, முந்நாளு பேமதாச மகன் பெட்டிக்கடை போட்டுட்டாறாம்."

முன்னரெல்லாம் தோட்டங்களில் தொழிலாளர்கள் உரிமையோடு சில விடயங்களை அனுபவித்து வந்தார்கள். சுதந்திரமாகப் பயன்படுத்திய சில உரிமைகள் இன்று பறிக்கப்பட்டு, தோட்டத்துக்குள்ளேயே ஒரு கொத்தடிமை வாழ்வு வாழ்கின்றனர்.

"நாம ஒழைச்சி ஒழைச்சி சாகிறதுதான் மிச்சம் ஏன்னா வெள்ளக்கார தொரமாரு நம்ம பரம்பரய இந்த நாட்டுக்கு அதுக்குத்தானே கொண்டு வந்தாகலாம்" என காவேரி தனது தாத்தா தனக்கு சிறு வயதில் கூறும் கதையை ஞாபகமூட்டிக் கூறினாள்.

"அட நீ ஒரு பக்கம் புள்ள, நாம ஒழைக்க வந்த சனங்க, வீடு கேட்டமா, நாடு கேட்டமா, காணிக்கேட்டமா? ஆனா திருவிழா வந்துப் போற மாதிரி நம்மளத்தான் அடிச்சி, ஒதைச்சி நெருப்பு வச்சி கொழுத்துவானுங்க பாவிப்பயலுக," இது இவற்றுக்கு பழகிப்போன முனியம்மா கூறியது.

இம்மக்கள் காலமெல்லாம் உழைத்து உழைத்து கண்ட சுகம் எதுவும் இல்லை. ஒன்றுமறியாத அப்பாவியான இம்மக்களிடம்தான் சிலர் தமது வீரசூரத்தனங்களையும், பழிவாங்குதல்களையும் நடத்தி முடிக்கின்றனர். இவற்றை எதிர்ப்பது யார்?

கொலனியில் எங்கிருந்தோ சிறுவர்கள் சிலர் வழமையைப்போலவே "தெமளு, தெமளு, ஊ, ஊ" எனக் கூச்சலிட்டனர். இவர்களும் எட்டி நடந்து ஸ்டோர்மலையை அடைகின்றனர்.

"அடியேய் காவேரி, காலயில நீ எடுத்த நெர சுத்தம் பத்தாதுன்னு சின்னதொர சொன்னாரு. போயி அத திருத்திட்டு, கொழுந்து நெறுக்க அந்திக்கு வந்திரு" என்றார் கங்காணி. காவேரி ஆச்சரியமடைந்தாலும் மறுக்க முடியாதே. ஏறிய படிக்கட்டில் இறங்கி ஓடுகிறாள். கங்காணியின் கபடத்தனம் இவளுக்கு புரியப்போகிறதா?

காட்டு ஓரத்தில் அந்தக் கொழுந்துமலை. பக்கத்தில் பெரிய ஆறு பாரிய இரைச்சலுடன் பாய்ந்து ஓடுகிறது. இடையிடையே பாறைகள் உருளும் சத்தம். தனிமையில் காவேரி தனது வேலையைச் செய்கிறாள். பயத்தால் மருண்ட அவளுக்கு இச்சூழ்நிலை புது அர்த்தத்தைக் கொடுத்தது. மனதில் ஒரே போராட்டம்.

தனிமைப்பயத்தில் மனச்சாட்சி அவளுடன் பேசிக்கொண்டது. தனிமையில்தான் மனிதனுக்கும், மனச்சாட்சிக்கும் இடையில் உறவு நெருக்கமடைகிறது.

"என்னாங் காவேரிங், நீங்க மட்டுங் தனியா என்னாப் பண்ணுறாங்" என்ற கதைச்சத்தம் கேட்டு திடுக்கிட்டு திரும்பினாள் காவேரி. அங்கே பல்லை இளித்தவண்ணம் சின்னத்துரை நின்று கொண்டிருந்தான். கீழ்ரோட்டில் மோட்டார்சைக்கிள் நின்றது. அது வந்த சத்தங்கூட அவளுக்கு கேட்கவில்லை. விதி செய்த சதியோ!

"இல்லங்க தொரயலே கங்காணியாரு தாங்க அனுப்பினாரு" என வாய்குளறி வார்த்தைகளை காவேரி வெளியிட்டாள்.

துரையின் கைகள் துரைத்தனமிடுக்கோடு, பலமாக காவேரியின் உடலை பற்றி அணைத்தன. கொழுந்துக்கூடை தனியே கழன்று போய் விழுந்தது. அவளுடைய கைகளில் இருந்த இரண்டுபிடிக்கொழுந்திலும், ஆற்றுசாரல் பட்டு தண்ணீர் கண்ணீராய் வடிந்தது. பெரும்போராட்டத்திற்கு மத்தியில் உடல்கள் தேயிலைக்கானுக்குள் உருண்டன.

"ஐயோ சாமி, என்ன ஒண்ணும் பண்ணீடாதீங்க, நான் புள்ளக் குட்டிக்காரிங்க" என துரையின் காலைப் பிடித்து கெஞ்சுகிறாள் காவேரி. அவன் விடுவானா? கொழும்புப் பயிற்சியா? சும்மாவா?

அவள் போட்ட சத்தமும், அலறலும் யாருக்கும் கேட்கவில்லை. ஆற்று நீரும், உருண்டோடும் பாறைகளும் தமக்குள் அவற்றை அடக்கிக் கொண்டன. இயற்கை கூட இவர்களுக்கு விரோதியா?

"காவேரிங் இத யாருகிட்ட சொல்லவாணாங், லபன் சத்திய தவஸ் தெகக் (அடுத்தக் கிழமை இரண்டு நாள்) சும்மா பேர் போடுராங்" எனக் கூறி துரை செல்கிறான்.

காவேரி தேயிலைக்கானுக்குள் அலங்கோலமாய் கிடந்தாள். என்ன நடந்தது என்றுகூட அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. உடைகளில் இரத்தக் கறைகள். வறுமையோடு கூடிப்பிறந்தவர்களுக்கு வறுமையின் நிறமே சகலதிலும். அவள் மனதில் இன்றுகாலை சின்னத்துரையும் கங்காணியும் குசுகுசுத்த காட்சி திரைப்படமாய் தெரிகிறது. மெதுவாக எழும்பியவள், தட்டுத்தடுமாறி கூடையுடன் தள்ளாடி ரோட்டுக்கு இறங்க எங்கோ தூரத்தே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டு மறைகிறது.

இப்படி தோட்டங்களில் நடப்பது சகஜமே, அந்த வரலாற்றுவரிசையில் இடையில் ஒரு பாத்திரமே இவள். இன்னும் எவ்வளவோ நடக்கவுள்ளன. துரைமீது காவேரிக்கு கோபம் வரவில்லை. இவர்களை காலங்காலமாக

தனக்கு அடிமையாக்கி, சோதனைமேல் சோதனை கொடுத்துவரும் வறுமையின்மீதே அவளுக்குக் கோபம் வந்தது.

“ஊ... ஊ... ஊ,” மாலை சங்கொலியில் மனச்சாட்சி விழித்துக் கொண்டது.

“பெண்ணே உனது பரம்பரைக்கு சாபக்கேடா? நேற்று உன் தாய், இன்று நீ, நாளை உனது குழந்தையா? இதைத் தடுக்க உன்னால் ஒன்றுமே செய்யமுடியாதா? மனச்சாட்சி இடித்துரைத்தது.

அவளுடைய மூளையே குழம்பிவிட்டது. சாதாரணப்பெண் தானே, அவளால் என்ன செய்யமுடியும். முடிவுக்கான போராட்டத்துடன் மடுவம் நோக்கி நடையைக் கட்டுகிறாள்.

கொழுந்து நிறுப்பதற்காக பெண்கள் வரிசையாய் நிற்கிறார்கள். கூடைக்குள் கொஞ்சம் ,கொழுந்துடன் கடைசியாய் காவேரியும் நிற்கிறாள். அவளின் கொழுந்தும் நிறுக்கப்படுகின்றது. கங்காணியின் முகத்தில் கோபம். “வேலக்கி வந்தா வேலயோட இருங்கடி சு..ம்..மா” என முணுமுணுத்தார் கங்காணி.

மீண்டும் மனச்சாட்சி விழித்துக்கொண்டது. கங்காணியின் கையில் பளபளக்கும் கோப்பிக்கத்தி. அது அவள் கண்ணுக்குப் படுகின்றது. பாய்ந்து பிடுங்கிய வேகத்தில் முதல் வெட்டு கங்காணியின் பிடரியில்.

“சண்டாள நாயே, செய்யறதயும் செஞ்சிட்டு உத்தமறாட்டம் நடிக்கிறியா, ஒனக்கு இதான் பரிசு.” இது காவேரி. கங்காணி கீழே சாய்கிறான்.

பார்வை துரையின் பக்கம் திரும்ப, அவன் பின்கதவால் பாய்ந்து ஓட்டமெடுக்கிறான். விடுவாளா? துரத்துகிறாள். பொலிசிக்கு செய்தி எட்டியது.

பொலிஸ் ஜீப் தோட்டத்திற்குள் பறக்கிறது.

# விடியல் எப்போது?

## சுகந்தி வெள்ளையகவுண்டர்

காலை சூரியன் முகிற் போர்வைக்குள் இருந்து சோம்பலாய் எட்டி பார்த்தான். தேயிலை தளிர்களில் வெண்பனி முத்துகளை வானமங்கை இறைத்து விட்டிருந்தாள். சில்லென்று வீசிய காற்றில் யூக்கிலிப்பிட்ஸ் மரங்களின் வாசனையும் சேர்ந்து வீசியது.

"சரசு அப்ப நா மலைக்கு போறேன். ஒன்பது மணிக்கு தேத்தண்ணி கொண்டு வந்துரு. தம்பி பயலை தனியா வுட்டுட்டு நீ எங்கெட்டும் புள்ளைகளோட வெளையாட போயிராத. வீட்டையும் கவனமா பாத்துக்க என்னா."

இப்படி அடுக்கடுக்காய் வந்த கட்டளைகளுக்கு சரி சரி என்ற பாவனையில் தலையாட்டினாள் சரசு. சரசுக்கு ஐந்து வயதுதான் ஆகிறது. எண்ணையே கண்டிராத பரட்டைத் தலையும், எப்போதும் ஒழுகிக் கொண்டிருக்கும் மூக்கும் சரசு இன்னும் தனது தேவைகளை நிறைவேற்றி கொள்ள தெரியாத சின்னவள் என்பதை தெளிவாக்கி கொண்டிருந்தது.

"அப்ப நா போயிட்டு வாரேன், தேத்தண்ணி கொண்டு வர மறந்துறாத" என்று கூறியபடி குறுக்குப்பாதையில் இறங்கி மலையை நோக்கி நடக்கத் தொடங்கினான் மூக்கன்.

தந்தையின் தலை எப்போது மறையும் என்று பார்த்துக் கொண்டிருந்த சரசு "ஏ சின்னபொண்ணு வா மாங்கொட்ட எத்தி வெளையாடலாம்" என்று அடுத்த வீட்டுச் சிறுமியை அழைத்தாள்.

பாதையின் ஓரத்தில் தன்னிச்சையாய் வளர்ந்திருந்த மூக்குத்தி பூக்களும், மஞ்சள் பூக்களும் பனித்துளியில் ஒளிந்து பளிச்சென்றிருந்தது. பாதையொட்டி சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் ஓடையில் நண்டுகளும் தவளைகளும் துள்ளிகொண்டிருந்தன.

ஆனால் மூக்கையனின் மனமோ இவ்வற்புதக் காட்சிகளில் படியவில்லை. சோகம் அவன் மனதில் மண்டிக்கிடந்தது. தூரத்தே தெரிந்த தேயிலை மலையில் பெண்கள் கொழுந்து பறிப்பது தெரிந்தது. அப்பெண்களை பார்க்கும் போது தன் மனைவியின் முகமும் அவன் மனத்திரையில் வந்து நிழலாடியது.

ராமாயி அன்றும் வழமைபோல் காலையிலே எழுந்த கணவனின் தேவைகளை நிறைவேற்றி தனது பிள்ளைகளான சரசு, ராமு இருவரையும் பிள்ளை மடுவத்தில் விட்டுவிட்டு மலைக்குப் போனாள். மூக்கனுக்கு அன்று

கவாத்து வெட்டும் வேலை. ஒரு நிரை வெட்டி அடுத்த நிரை தேயிலையை வெட்டுவதற்குக் குனிந்தபோது, அடுத்த நிரையில் கவாத்து வெட்டிக்கொண்டிருந்த ராமையா, "மூக்கையா அண்ணே அங்க பாருங்க நம்ம சின்னதம்பி மாதிரி யாரோ பனிய ரோட்டுல ஓடி வாராங்க" என்றான். "அட நம்ம சின்னதம்பிதான், ஏ இப்படி மூச்செரைக்க ஓடி வாரான்" என்று கேள்விக் குறியோடு பனிய ரோட்டை நோக்கினான் மூக்கன்.

ஓடி வந்த சின்னதம்பி மூக்கன் அருகில் வந்து "அண்ணே ஒங்க பொஞ்ஞாதி ஒம்பதா நம்பர் மலையில கொழுந்து எடுக்கையில மயங்கி விழுந்து பேச்சி மூச்சில்லாம கெடக்கையும் ஆளுகயெல்லா வீட்டுல தூக்கி வந்து போட்டு இருக்காங்க" என்று மூச்சிரைக்கக் கூறினான்.

இதைக் கேட்ட மூக்கனுக்கு மனம் பதறியது. "ஐயோ ராமாயிக்கு என்னாச்சு" என்று அரற்றியபடி ஓட்டமும் நடையுமாக வீட்டை யடைந்தான்.

அங்கே லயத்தில் மூக்கன் வீட்டு வாசலின் முன்னால் வேடிக்கை பார்ப்பதற்காக ஒரு கூட்டம் குழுமியிருந்தது. மூக்கன் அந்தக் கூட்டத்தை விலக்கிகொண்டு வீட்டினுள் நுழைந்தான். அங்கே ஸ்தோப்பு என்று சொல்லப்படும் முன்னறையில் ராமாயியை ஒரு சாக்கில் கிடத்தியிருந்தார்கள். மூக்கன் அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டு "ராமாயி ஒனக்கு என்னாச்சு? காலையில கூட நல்லாதானே இருந்த" என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டான். ராமாயிக்கு மயக்கம் தெளிந்திருந்தாலும் கண்கள் விட்டத்தை வெறித்து நோக்கியபடி இருந்தன. வாய் ஏதோதோ உளறியபடி இருந்தது.

"அது ஒன்னுமில்லப்பா. ராமாயி எதையோ பாத்து பயந்துருக்கு. நம்ம பூசாரி முனியாண்டிய கூப்புட்டு விபூதி புடிச்சு போட்டா எல்லா சரியாயிரும்" என்றாள் பக்கத்தில் அமர்ந்திருந்த நல்லம்மா கிழவி. சுற்றியிருந்த பெண்கள் கூட்டத்திலும் இந்தக் கருத்து ஆமோதிக்கப்பட்டது. மூக்கையனுக்கும் நல்லம்மா கிழவி சொல்வது சரியென்றே மனதுக்குபட்டது.

அன்று இரவு மூக்கையன் வீட்டில் ஓர் அறையில் பெண்களும் ஆண்களுமாக ஏழு எட்டு பேர் அமர்ந்திருந்தார்கள். நடுவில் ராமாயியை படுக்க வைத்திருந்தார்கள். முனியாண்டி பூசாரி அவள் அருகில் அமர்ந்து கொண்டு "டுண், டுண், டுண், டுண்..." என்ற தாள ஒலிக்கேற்ப உடுக்கையை அடித்தபடி தலையை முன்னும், பின்னும் வெட்டி வெட்டி இழுத்தும் சுழற்றியும் அருள் ஆடினார். அவரின் முன்னால் ஒரு தட்டில் விபூதியும் அதன் பக்கத்தில் எலுமிச்சைப் பழமும் இருந்தன.

முனியாண்டி பூசாரியின் அருள் ஆட்டத்தை சுற்றியிருந்தவர்கள் பயபக்தியோடு பார்த்துகொண்டிருந்தனர்.

நேரம் ஆக ஆக பூசாரியின் அருள் ஆட்டமும் உடுக்கை சத்தத்தின் வேகமும் கூடிக்கொண்டே சென்றது.

பக்கத்தில் இருந்த சன்னாசிக் கிழவர் "இப்படி ஆடிக்கிட்டிருந்தா எப்புடி நீ யாரு காடனா, மாடனா, வெள்ளாவி கருப்பனா இல்ல ரோத முனியா சொல்லு", என்று அதட்டினார்.

ஏய் என்னையாடா யாருன்னு கேக்கிற? நா தாண்டா மாடசாமி" என்று அருள் ஆட்டத்தினூடே கூறினார் பூசாரி.

மூக்கனும் சுற்றியிருந்தோரும் தங்கள் குலதெய்வம் மாடசாமிதான் பூசாரியின் மேல் வந்திருக்கிறது என்று எண்ணிக்கொண்டனர்.

ஆ உன்ன பாத்துதான் ராமாயி பயந்துருக்கா நீ எதுக்காக இங்க வந்துருக்க, உனக்க இஷ்டமானதை வாங்கிதாரன் கோழியா, கெடாவா, கள்ளா, சாராயமா, இல்ல பட்டுதுணியா என்னா வேணும் கேளு என்றார் மீண்டும் சன்னாசி கிழவர்.

"டேய் எனக்கு பச்சை முட்டையும், வெட கோழியும் படைச்சியின்னா நா போய்யிருவண்டா! இல்லேன்னா இந்த பெண்ண விட்டு நா கொண்ட இட சேரமாட்டேண்டா" என்று கோபக்குரலோடு கூறியபடி பக்கத்தில் வைத்திருந்த எலுமிச்சை பழத்தை எடுத்து வாயில் வைத்து நரநரவென்று கடித்தார் பூசாரி.

உடனே சன்னாசி கிழவர், சாமி மலையேறப்போகுது என்று கூறியபடி விபூதி தட்டை எடுத்து பூசாரியிடம் கொடுக்க அவர் அருள் ஆடிக் கொண்டே விபூதியை பிடியாய் அள்ளி ராமாயியின் தலையில் போட்டார். பின்னர் சிறிது சிறிதாக அவரின் அருள் ஆட்டம் தணிந்தது. சுற்றியிருந்தவர்களும் அவரிடம் விபூதி வாங்கிக் கொண்டார்கள்.

மற்ற நாட்களில் இந்நேரமெல்லாம் சாராய தவறணையில் போய் தண்ணி அடித்துவிட்டு அங்கேயே விழுந்துகிடக்கும் ஆண்களில் பூசாரியும் ஒருவர் என்று அங்கு கூடியிருந்தவர்கள் அறிந்தவர்களாயினும், இந்த சமயத்தில் பூசாரி அவர்கள் கண்ணுக்கு நடமாடும் தெய்வமாகத் தெரிந்தார்.

சன்னாசி கிழவர் தொண்டையை செருமிக்கொண்டு "ஏம்ப்பா மூக்கா, நம்ம குலதெய்வம் மாடசாமிதா வந்துருக்கு. அது கேட்டத நாம குறைவில்லாம செஞ்சா அது பெரிய மனசு பண்ணிப் போயிரும். அதனால நாளைக்கு நீ டவுனுக்கு போயி பூசாரி என்னென்ன சாமான் செல்றாறோ அதெல்லாம் வாங்கிட்டு வந்துரு என்னா" என்றார். பூசாரி சொல்லும்

சாமான் பட்டியலில் சாராயமும் இருக்கும், அதில் நமக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என்று மனதினுள் நினைத்துக்கொண்டார்.

மூக்கனும் "சரி அப்புடியே செஞ்சிறேன்" என்றான்.

அடுத்த நாள் காலை "ராமாயி எழுந்திருச்சி இந்த தண்ணிய குடிபுள்ள நேத்துலேர்ந்து நீ ஒன்னுமே சாப்புடல" என்று கூறியபடி ராமாயியை எழுப்பிய மூக்கனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

"ஐயோ ராமாயி எங்களையெல்லாம் அனாதையாக்கிட்டு போயிட்டியா" என்ற மூக்கனின் அலரல் அந்த லயத்தை ஒட்டியிருந்த தேயிலை மலைகளில் பட்டு எதிரொலித்தது. மூடநம்பிக்கை ராமாயியின் உயிரை மட்டும் குடித்ததோடு ஓய்ந்து விடுமா? காலம் தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.

# உயர்ந்தவர்கள்

## இ. பரமேஸ்வரன்

துணிகளைத் துவைத்து உலர்த்தி மூட்டையாகக் கட்டிச் சுமந்து வந்தாள் பார்வதி. காலையிலிருந்து வேலை செய்த களைப்பு அவளுக்கு.

ஆற்றோரமாக நடந்து வந்தவள் எதிரிலே சுந்தரம் வருவதைக் கண்டாள். பதறிப்போய்விட்டாள்.

சுந்தரம் தோட்ட முதலாளியின் ஒரேமகன். மகனின் பொறுப்பில் தோட்டத்தை விட்டுவிட்டு முதலாளியும் அவர் மனைவியும் தாய்நாடு சென்று விட்டனர். சுந்தரம் தான்தோன்றித்தனமாக நடக்க ஆரம்பித்தான்.

இளம் பெண்களைக் கண்டால் விட மாட்டான். இதுவரை அவனால் கெடுக்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர், அவர்களில் எத்தனை பேர் தற்கொலை செய்து கொண்டனர், எத்தனை பேர் திருமணமே செய்யாதிருக்கின்றனர் என்ற விபரமெல்லாம் அந்தத் தோட்டத்துப் பெரியவர்களைக் கேட்டால் தெரியும். அவனுக்கு இதற்கெல்லாம் துணை நிற்பவர் தோட்டத்துக் கணக்கப்பிள்ளை ஆறுமுகம்.

இவள் அவ்வாறு எண்ணிக்கொண்டு வருவதற்கும் சுந்தரம் அவள் அருகில் வருவதற்கும் சரியாக இருந்தது.

அவனைக் கண்டு ஒதுங்கிப் போனாள் பார்வதி.

சுந்தரம் எட்டி அவளின் கையைப் பிடித்தான்.

அவள் ஐயோ, என்னை ஒன்றும் செய்துவிடாதே, என் புருஷன் கண்டால் உன்னைச்சும்மா விடமாட்டான், கொலையே பண்ணிவிடுவான். வீண் வம்பில் மாட்டிக் கொள்ளாதே என்று கையை உதறிவிட்டு ஓட முயன்றாள்.

"உன் புருஷன் இங்கே எங்கே வரப் போறான். அவன் இப்ப தூங்கிக் கொண்டிருப்பான். அதெல்லாம் தெரிந்துதான் வந்தேன்".

"ஐயா என்னை ஒன்றும் செய்யாதே, நீங்கள் எங்கள் போன்றவர்களைத் தீண்டுவதே கூடாது. எங்கள் குலம் என்ன உங்கள் குலம் என்ன? நாங்கள் தாழ்ந்தவர்கள். தயவு செய்து என்னை விட்டுவிடு" என்று அவள் எவ்வளவு கூறியும் கேளாது அவளின் கையைப் பிடித்து இழுத்து அணைக்கப் போனவனின் கையை யாரோ பிடித்து இழுத்துத் தடுத்தார்கள்.

"யாரது?" என்று திரும்பிப்பார்த்தான்.

சேகர் நின்றான்.

"அடே நீயா? நீ எங்கே இங்கு வந்தாய்? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகவேண்டியது தானே. இது என் தோட்டம். நான் எது வேண்டுமானாலும் செய்யமுடியும். என் செயல்களில் தலையிட நீ யார்."

"இது உங்கள் தோட்டமாக இருக்கலாம். அதற்காக உங்கள் விருப்பம் போல் தொழிலாளர்களை ஆட்டிப்படைக்க முடியாது, இன்று காலம் மாறிவிட்டது."

"என்னடா, எனக்கே அறிவுரை கூற வருகின்றாயா? படித்துப் பட்டம் பெற்று விட்ட திமிரா? எங்கள் பணத்தில்தானே நீங்கள் எல்லாம் படித்தீர்கள். எதுக்குமே வக்கில்லாதவர்கள் என்னையே எதிர்க் கின்றீர்களா?".

"ஐயா, நாங்கள் தொழிலாளர்கள்தான், ஏழைகள்தான், என்றாலும் எங்களுக்கும் மானம் உண்டு. எங்கள் தோட்டத்துப் பெண்கள் உழைத்துப் பிழைப்பார்களே தவிர முறை தவறி நடக்க மாட்டார்கள். உங்கள் பணத்தினால் எங்கள் உழைப்பைத்தான் வாங்க முடியும். எங்கள் பெண்களின் கற்பை வாங்க முடியாது" என்றான் சேகர்.

"இரு இரு உன்னைக் கவனிக்கிறேன்" என்று கூறியவண்ணம் சுந்தரம் சென்று விட்டான்.

சுந்தரம் சென்றதும்.

"ஏன் அக்கா நீ தனியாக இந்த நேரத்தில் வரலாமா, கந்தசாமி அண்ணன் வீட்டிலேதானே இருப்பார்".

"அவரைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே. தூக்கம் ஒன்றுதானே பிரதானம். வேலை செய்யவே வரமாட்டார். அதுவும் எங்கள் குலத்தொழிலை என்றுமே செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டார். வேறு வேலையும் கிடைக்கவில்லை."

"எதற்கும் இனிமேலாவது தனியே வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் அக்கா."

வீட்டை அடைந்ததும் பார்வதி கணவன் கந்தசாமியை தூக்கத்திலிருந்து எழுப்பினாள்.

"என்ன பார்வதி தூக்கத்தைக் கெடுத்து விட்டாயே" என்றான்.

"ஆமா உங்களுக்கு இந்தத் தூக்கம் ஒன்றுதான் பிரதானம். அந்தத் தம்பி சேகர் இல்லாட்டி இப்பநான் இங்க வந்திருக்கமாட்டேன், அந்த ஆத்திலே மிதந்திருப்பேன்."

"ஏன் ஆத்திலே வெள்ளமா?"

"ஆத்திலே வெள்ளமும் இல்லை ஒன்றுமில்லை, அந்த சுந்தரம் என் கையை புடிச்சு இழுத்துட்டான். சேகர் தம்பிதான் வந்து காப்பாத்திச்சுது."

"அந்தப்பயலை என்ன செய்கிறேன் பார்" என்றான் கந்தசாமி.

"நீங்க அவனை என்ன பண்ணமுடியும்? உங்களுக்கு ஒரு வேலையும் இல்லை, அவனைப் பகைச்சுட்டா என் வேலையும் போய்விடும். சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீங்க. நீங்க பேசாம இனிமேல் என்கூட வேலைக்கு வாங்க."

"உனக்குத்தான் தெரியுமே, எங்கள் குலத்தொழிலை நான் செய்ய மாட்டேன் என்று" வேறு வேலை தேடவேண்டும்."

"என்ன வேலைதான் கிடைக்கப் போகின்றது. நாங்கள் எல்லாம் படிச்சிருந்தாலும், யார் வேலை கொடுப்பாங்க? சுப்பவைசர் வேலைக்கு நீ போனபோது என்ன நடந்தது. ஜாதியைக் கூறி வேலை தர மறுக்கவில்லையா?"

"அது உண்மைதான். ஆனால் இன்று நிலைமை மாறி வருகின்றது. எங்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் சும்மா இருக்கவில்லை. எங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்த வண்ணம் இருக்கிறார்கள். அது உனக்குத் தெரியாதா?"

"தெரியும். ஆனா அதுக்கும் சில முட்டுக்கட்டைகள் இருக்கத்தானே செய்கின்றது."

"இப்ப எங்க தோட்டத்திலே படிச்சவங்க தொகை எவ்வளவு கூடியுள்ளது? ஏன் நீயும் நானும் படிக்கவில்லையா? வேலைதான் கிடைக்கவில்லை."

"எந்த வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும் கல்வி அறிவு இருக்கவேண்டும். கல்வி தொழிலுக்காக அல்ல, அறிவுக்காக என்று எங்கள் வாத்தியார் எப்பொழுதும் கூறுவார்."

"சரி இனி ஒரு வேலை கிடைக்கின்ற வரை உன்னுடன் ஆத்துக்கு வருகிறேன்."

***

"அம்மா இனிமேல் நீங்கள் வேலைக்குப் போகவேண்டாம்."

"ஏன் இந்தத் திடீர் கட்டளை."

"நீங்கள் நாளைக்கு வேலைக்குப் போனாலும் ஒன்று போகாவிட்டாலும் ஒன்று. எப்படியும் உங்களை நாளையிலிருந்து வேலையிலிருந்து நிறுத்தி விடுவார்கள்."

"ஏன் என்ன நடந்தது"

சேகர் பார்வதிக்கு நடந்ததைக் கூறினான்.

"அந்தப் புள்ளைக்குத்தான் இந்தத் தோட்டத்திலே நடப்பது தெரியுமே அப்படி இருந்தும் தனியா ஏன் போகுது."

"நானும் இதைத்தான் கேட்டேன். சரி இனிமேல் நீ வேலைக்குப் போக வேண்டாம். எனக்குத் தான் வேலை கிடைத்துவிடுமே. நீ ஏன் வேலை செய்யவேண்டும். இதுவரை கஷ்டப்பட்டு உழைத்து என்னைப் படிக்கவைத்துவிட்டாயே. இனி ஓய்வெடுத்துக் கொள்."

"நான் உழைத்தே பழகிவிட்டேன். சும்மா இருக்கமுடியுமா? ஏன் நான் தோட்டத்தில் வேலை செய்வது உனக்கு வெட்கமா?"

"இல்லை அம்மா. அந்த உழைப்புத்தானே என்னைப் படிக்கவைத்தது. நீ ஓய்வெடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் கூறினேன்.

***

"அப்பா இந்தாருங்கள் கோப்பி" என்று கல்பனா கூறியதும்தான் வாத்தியார் அம்பலவாணர் சுய நினைவிற்கு வந்தார்.

"என்னப்பா யோசனை?"

"எல்லாம் உன்னைப் பற்றியது தான்."

"என்னைப் பற்றியதா?"

"ஆமாம். எனக்கும் வயதாகிவிட்டது. எனக்கு எதுவும் நடக்குமுன் உனக்கொரு வழி செய்யவேண்டாமா? என்னிடம் என்ன பணமா இருக்கின்றது? என்னால் உனக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்க முடிந்தது அறிவு ஒன்றுதான்."

அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டு கல்பனா சென்று கதவைத் திறந்தாள்.

"தோட்டக்கணக்கப்பிள்ளை வந்திருக்கின்றார் அப்பா" என்றாள்.

"என்னையா ஸ்கூல் வீட்டைக் காலி பண்ணச்சொல்லி முதலாளி உன்னை அனுப்பினாரா?" என்றார் வாத்தியார்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இந்த வீட்டை உங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளேன், கவலையே படாதீங்க"

"மிக்க நன்றி இதை நான் சொந்தமாக வைத்துக் கொள்ளமாட்டேன். என் மகளுக்குத் திருமணமாகிவிட்டால் இதைத்திரும்பத் தந்துவிடுவேன்."

"அந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம். உங்க பொண்ணைச்சீதனம் இல்லாமலே கலியாணம் பண்ண ஒருத்தர் முன்வந்துள்ளார்."

"யாரையா அது என் பெண்ணைச்சீதனம் இல்லாமல் கல்யாணம் பண்ண முன் வந்தது."

"வேறு யாருமில்லை எங்க சின்னையா சுந்தரம்தான்."

"என்ன சுந்தரத்திற்கா? என் பெண்ணையா?"

"ஏன் அவரைப் போல உன் பொண்ணுக்கு வேறு யார் கிடைப்பான். அவரைக் கலியாணம் செய்ய குடுத்து வைச்சிருக்கவேண்டும்" என்றார் கணக்கப்பிள்ளை.

"எனக்குக் கலியாணம் ஆகாவிட்டாலும் காரியமில்லை. கன்னியாகவே இருந்து விடுகின்றேன். அந்தக் காமுகனைக் கட்டிக் கொண்டு கஷ்டப்படுவதைவிட, ஆத்திலே குளத்திலே விழுந்து உயிரை விடலாம்" என்றாள் கல்பனா.

"என்னவோ சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். இனி உங்கள் இஷ்டம்" என்று கூறியவண்ணம் சென்றார் கணக்கப்பிள்ளை.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த சுந்தரம் கணக்கப்பிள்ளையின் வருகையால் மீண்டும் சுய நினைவுக்கு வந்தான்.

"என்னையா இந்த நேரத்தில்"

"ஒரு முக்கிய சங்கதி. ஆனா துரை ஏதோ யோசனையில் இருக்கிறீங்க போல"

"ஆமா ஐயா அந்தப் பயல் சேகர் திமிரைப் பாத்தியா? ஏதோ டாக்டராகிட்டானாம். அந்தத் திமிரிலே என்னையே எதிர்க்க வந்துட்டான். என் கூடத்தான் படிச்சான். நான் எத்தனைதரம் டெஸ்ட் எடுத்து பெயில் ஆகிட்டேன். ஒரு பாடம் கூடப் பாஸ் செய்யவில்லை. அவன் பாசாகி டாக்டராகவும் ஆகிட்டான். அது மட்டுமா பேசவேற பழகிட்டான். அதெல்லாம் இந்தத் தொழிச்சங்கக்காரங்க செய்யிற வேலை. தொழிலாளர்களுக்கு எல்லா வசதியும் செய்து கொடுக்கிறாங்க. அதனாலே அவங்கள் எல்லாம் எங்களைக் கணக்கெடுக்கிறதில்லை."

"அதைவிடுங்க துரை. அந்த வாத்தியார் பொண்ணு, அவளுக்கும் படிச்ச திமிர். உங்களை வாயில் வந்தபடி ஏசினாள். காமுகன் என்று வேறே சொன்னாள். வீட்டைக்காலி பண்ணச் சொன்னதுக்குத்தான் ஏசினாள்".

"அப்படியா சொன்னாள்"

"அதுமட்டுமில்லை. வீட்டைக் காலி பண்ண முடியாதாம். முடியுமானால் வீட்டை விட்டு அனுப்புங்கள் பார்க்கலாம் என்று வேறே சொன்னாள்".

"நாளைக்கே பார் இவங்கள் எல்லோரையும் என்ன செய்கிறேன் என்று."

***

சேகரின் வீட்டில் தோட்டக்கமிட்டித் தலைவரும் மற்றும் அங்கத்தவர்களும் கூடி இருக்கின்றனர்.

"என்ன தலைவர், எல்லோரும் எங்க வீடுதேடி வந்திருக்கிறீங்க. ஏதாவது விஷேசமா?"

"ஒரு வகையிலே பார்த்தா விஷேசம்தான். தம்பி சேகர் டாக்டராயிட்டாரு. அவருக்கு இன்றைக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் ஒழுங்கு செய்திருக்கிறோம். நம்ம பெரிய தலைவரும் கொழும்பிலே இருந்து வருவதாக செய்தி அனுப்பியிருக்காரு, அதைச் சொல்லிவிட்டுப் போக வந்தோம்."

"அதெல்லாம் எதுக்கு மாமா. நீங்கள் எல்லாம் பெரியவங்க, அதுவும் நம்ம பெரிய தலைவர்வேறே வருகிறார் என்று சொல்லுறீங்க. நான் சின்னவன். அவங்க முன்னுக்கு உட்காரலாமா?"

"தம்பி நீங்க சின்னப்பிள்ளைதான். ஆனா படிப்பாலே எங்கள் எல்லோருக்கும் பெரியவராகிட்டீங்க. கட்டாயமா கூட்டத்திற்கு வந்துடுங்க. எல்லா ஏற்பாடும் செய்துட்டோம்."

"சரி மாமா. இனி உங்க விருப்பம்."

***

"ஏ கணக்கப்பிள்ளை, என்னையா பண்ணிக்கிட்டிருந்தே. அந்த சேகர் பயலுக்கு இன்றைக்கு ஏதோ வரவேற்புக் கூட்டமாம். பெரிய தலைவரும் வாறாராம். என்னை வேறு வரச் சொல்லுறான்கள். அவனுக்குப் பக்கத்திலே நான் எப்படி ஐயா இருக்கிறது. ஏதாவது செய்து கூட்டத்தை நிறுத்தப்பாரு."

கணக்கப்பிள்ளை யோசிக்கின்றார்.

"என்ன யோசனை பண்ணுறாய். நீதான் திட்டம் தீட்டுறதிலே சகுனியையும்விட மிஞ்சியவனாச்சே. ஏதாவது பண்ணு, இல்லாட்டி என் மானம் போயிடும்."

"அப்பிடி ஒன்று உனக்கு இருந்தாத்தானே" என்று கணக்கப்பிள்ளை மனதுக்குள் எண்ணிக்கொண்டு

"அது கொஞ்சம் கஷ்டம். கொழும்பிலே இருந்து தலைவர் வருகிறதாலே பொலிஸ் காவல் வருமே."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது கூட்டம் நடக்கக்கூடாது அவ்வளவுதான்."

"சரி பார்க்கிறேன்" என்று கணக்கப்பிள்ளை இடத்தைவிட்டு நழுவினார்.

***

தோட்டத்துத் தொழிலாளர்கள் பிள்ளைக்குட்டிகளுடன், தோட்டப் பாடசாலையில் கூடினார்கள். கணக்கப்பிள்ளை தன் கை ஆட்களுடன் சென்று கூட்டத்தைக் கலைக்க முயன்றார். அந்த நேரம் பார்த்து பெரிய தலைவருடன் பொலீசும் வந்தது. கணக்கப்பிள்ளையும் அவர் ஆட்களும் பொலீசாரினால் கைது செய்யப்பட்டனர்.

கூட்டம் தொடங்கியது.

சேகரை வரவேற்றும் பாராட்டியும் அனைவரும் பேசினார்கள்.

கூட்டம் முடிந்ததும் சேகர் அனைவரிடமும் விடை பெற்றுச் சென்றான்.

ஆசிரியர் அம்பலவாணர் சேகரின் தாயாரைச் சந்தித்து சேகருக்குத் தன் மகள் கல்பனாவைத் திருமணம் செய்து வைக்க விரும்புவதாகக் கூறினார்.

"கல்பனாவை மருமகளாக அடைய நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றாள்.

"எதற்கும் சேகரையும் ஒரு வார்த்தைக் கேட்டு வைத்தால் நன்று" என்றார் ஆசிரியர்.

"அவன் நான் சொல்வதைத் தட்டவே மாட்டான். அது மட்டுமல்ல நீங்கள் கூறுவதையும் தட்டவே மாட்டான்" என்றாள்.

***

"என்ன வாத்தியாரே, வீட்டைக்காலிபண்ண முடியவில்லை, பேச மட்டும் தெரிகிறது. அது மட்டுமில்லை என்னை கண்டபடி ஏசினாளாமே உங்கள் மகள். இந்தத் தோட்டத்தில் உள்ளவர்கள் எல்லோருமே எங்கள் பணத்தில்தான் வயிறு வளர்க்கின்றார்கள் என்பதை மறந்துவிட்டீர்களா?" என்றான் சுந்தரம்.

"நீங்கள் ஒன்றும் எங்களுக்குச் சும்மா பணம் கொடுக்கவில்லை. உழைப்புக்கு ஊதியம் கொடுக்கின்றீர்கள். இந்தத் தொழிலாளர்கள் இல்லாவிட்டால் தெரியும் உங்கள் பெருமை. அவர்களின் நெற்றி

வியர்வைதான் உங்கள் பெட்டியில் பணமாக இருக்கின்றது என்பதை மறந்துவிடாதீர்கள். அவர்கள் இரண்டு நாள் வேலை நிறுத்தம் செய்தால் தெரியும் உங்கள் நடப்பு" என்றாள் கல்பனா.

"ஒன்றுக்கும் வக்கில்லாவிட்டாலும்" வாய் மட்டும் இருக்கிறது.

"தம்பி கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசுங்கள். எங்களிடம் பணம் இல்லைத்தான். ஆனால் மானம், மரியாதை இருக்குது" என்றார் வாத்தியார்.

"மானம், ரோசம் இருந்தால் வீட்டை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு எங்காவது போவதுதானே."

"நாளைக்கே உன் வீட்டைப் பாரமெடுக்க உன் ஆளை அனுப்பு" என்றார் வாத்தியார்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத சுந்தரம் எதுவும் பேசாது சென்றுவிட்டான்.

"என்னப்பா திடீர் என்று இப்படிக் கூறிவிட்டீர்கள். எப்படி நாளைக்கு வீட்டைக் கொடுக்கப் போகின்றோம்."

"கல்பனா, நான் சொல்வது உண்மைதான். நாளைக்கு சேகர் எங்களை வந்து கூட்டிப் போவதாகக் கூறியுள்ளான். எல்லோரும் கண்டிக்குப் போகின்றோம். சேகருக்கு கண்டியில் வேலை கிடைத்துவிட்டது. பெரிய வீடும் கிடைத்துவிட்டது. அதுமட்டுமல்ல, சேகரை உனக்குக் கணவனாக்கவும் ஏற்பாடுகள் செய்துவிட்டோம்" என்றார்.

* * *

"தம்பி சேகர் என் புருஷன் வேலைதேடி ஒன்றுமே கிடைக்கவில்லை. நீங்கள்தான் ஏதும் உதவி செய்யவேண்டும்" என்றாள் பார்வதி.

"சரி, நாளைக்கே இரண்டு பேரும் இங்கே வந்து எங்களுடனே இருங்கள். கந்தசாமி அண்ணனுக்கும் வேலை தருகின்றேன். நீங்கள் வீட்டிலே அம்மாவுக்கும் கல்பனாவுக்கும் உதவியாக இருங்கள்" என்றான் சேகர்.

* * *

"தம்பி சேகர் யாரையோ சத்திர சிகிச்சைக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அடிபட்டு பலத்த காயங்கள் என்றார்கள், சென்று பார்த்தேன் அவன் வேறுயாருமில்லை சுந்தரம்தான். அதனாலேதான் மெதுவாக வருகிறேன். நீங்க ஒன்றும் அவசரமாகப் போக வேண்டியதில்லை" என்றான் கந்தசாமி.

"என்ன சுந்தரத்துக்கு ஆபத்தா? உடனே போகவேண்டும்" என்று யாரிடமும் கூறாது கந்தசாமியையும் கூட்டிக்கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தான்.

சுந்தரத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்து சிகிச்சையும் அளித்துவிட்டு வீடுதிரும்பினான். தாயிடமும் கல்பனாவிடமும் நடந்தவற்றைக் கூறினான்.

"ஏன் என்ன நடந்தது" என்றாள் கல்பனா.

"என்ன வழமையான வேலைதான். இம்முறை நன்றாக யாரிடமோ மாட்டிக்கொண்டார். யாரோ நன்றாக அடித்து இங்கு கொண்டுவந்து விட்டார்கள்."

சுய நினைவுக்கு வந்த சுந்தரம் தனக்கு சிகிச்சை அளித்தது சேகர் என்று அறிந்ததும் மிகவும் வெட்கப்பட்டான்.

சேகர் சுந்தரத்தைப் பார்க்க வந்தான்.

"சேகர் என்னை மன்னித்துவிடு. உன்னைத் தவறாக எண்ணிவிட்டேன்."

"சீ இதெல்லாம் என்ன. நான் எதையுமே மனதில் வைத்துக் கொள்ளவில்லை. நீ ஓய்வெடுத்துக்கொள். சாப்பாடெல்லாம் வீட்டில் இருந்தே அனுப்புகிறேன். கந்தசாமி உனக்கு உதவியாக இருப்பார்" என்றான்.

சேகர் சென்றதும்.

"ஏழைகளாக இருந்தாலும் எவ்வளவு பண்புடன் நடந்து கொள்கிறார்கள். நான்தான் பணத்திமிரில் எதை எதை எல்லாமோ பேசினேன், செய்தேன். நான் செய்தவற்றை மனதில் வைத்து பழிவாங்காது உதவி செய்து என்னைக் கூனிக்குறுகச் செய்து விட்டார்களே" என்று எண்ணிய சுந்தரத்தின் கண்களில் நீர் மல்கியது.

# இருட்டு

## மெய்யன் நடராஜா

அது ஒரு ஆடி மாதம். மலைக்குன்றுகள் எல்லாம் விதவைகளாய் வெண்முகில் சேலைகளைப் போர்த்திக்கொண்டு கண்ணீர் விடுகின்ற மாரிகாலம். தொடர்ச்சியாகப் பெய்த அடை மழையினால் நெருப்பும் குளிராகி தொட்டவர்களைச் சுட மறுத்து மரத்துப் போயிருந்தது. அப்படிப்பட்ட நெருப்பில் ஈர விறகை வைத்து எரித்து நனைந்த தனது ஈரச் சேலையை உலர்த்த கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தாள் அலமேலு.

சேலையின் ஒரு பக்கத்தை ஒருவாறு உலர்த்திக் கொண்டிருந்தவள், மெல்லக் கதவைத் திறந்து மழை குறைந்துள்ளதா என வெளியே எட்டிப்பார்த்தாள். அது இப்போதைக்கு விடுவதில்லை என மேலும் வலுத்துக்கொண்டிருந்தது. வயிற்று வலியென்று மருந்தெடுக்கச் சென்ற கணவன் இருளாண்டி, பாதையிலேயே இறந்து போய் தன்னைப் பாதியிலேயே விட்டுவிட்டுச் சென்றபோது கதறி அழுது புலம்பியபோது கொட்டிய கண்ணீரைப் போல் மழை விடாமல் கொட்டிக் கொண்டே இருந்தது.

அடைமழை என்றாலும் காற்று இல்லாமல் மழை கொட்டியதால் ஏழாம் நம்பர் லயத்தில் எட்டாம் நம்பர் வீட்டில் வசிக்கின்ற அலமேலுவின் வீட்டுக்கூரை படபடக்காமல் இருந்தது. இளைய மகன் சின்னராசும், மகள் சித்ராவும் சாப்பிட்டு விட்டதால் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். மூத்தவன் சிவராமுக்கு ஏனோ தூக்கம் வராமல் இருக்கவே, அம்மாவுடன் சமையல் அறைக்கு வந்து அடுப்புத்திண்ணையில் அமர்ந்து அம்மா அலமேலு உலர்த்திக்கொண்டிருந்த சேலையை ஒரு கையில் பிடித்துக் கொண்டு அடுப்பு எரிய விறகை வைத்து உதவிக் கொண்டிருந்தான்.

அலமேலுக்கென்று உடுத்திக்கொள்ள இருந்தது இரண்டே நூல்சேலைகள். ஒன்று ஓரளவு மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. மற்றொன்று மானத்தைக் காற்றில் பறக்கவிட தயாராகிக் கொண்டிருந்தது. மலைக்கு வேலைக்குச் செல்லும்போது தேயிலைச் செடிகள் சேலையை பதம் பார்த்துவிடாமல் இருப்பதற்காக இடையில் சாக்கை சுற்றிக் கொள்ளும் அலமேலுவுக்கு, அந்தச் சாக்கும் தன் ஆயுளைக் குறைத்துக் கொண்டு அவளின் அந்தச் சேலையில் கைவைத்து விட்டதால், இப்போது ஆத்துக்கு அப்பால் உள்ள முனியம்மா அக்கா கொடுத்த யூரியா வரும் சாக்கொன்றுதான் அவளுக்கு உதவுகிறது. சேலையில் ஓரளவு கிழியாத பாகங்களை முந்தானைப் பகுதிக்கு அணிந்து கொண்டு, கிழிந்த பக்கங்களை

இடைக்கு அணிந்து அதன்மேல் யூரியா சாக்கைக் கட்டிக்கொள்வது அலமேலுவுக்கு மாத்திரமே புரிந்த இரகசியம்.

மீனாட்சி தோட்டத்தில் பிறந்து வளர்ந்த அலமேலுவுக்கு இரண்டு அண்ணன்மார். அம்மா அப்பாவை சின்ன வயதிலேயே இழந்துவிட்ட அவள் அண்ணன்மாரின் வளர்ப்பிலேயே துன்பம் என்பதைக் காணாமல் வளர்ந்தாள். வீட்டில் இவள் மாத்திரமே பெண் பிள்ளை என்பதால் தங்கச்சியை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணிய அண்ணன் இரண்டு பேரும் தோட்டத்தில் பெருமையாக பேசிக் கொண்டதன் விளைவாக பக்கத்துத் தோட்டத்தில் இருந்த இருளாண்டி அலமேலுவின் கணவனானான்.

அலமேலுவைப் போலவே அம்மா அப்பா இல்லாதவன் என்பதால் அலமேலுவைக் கண் கலங்காமல் பார்த்துக்கொள்வான். அவனிடம் எவ்வித கெட்டப்பழக்கமும் இல்லை. அத்தோடு பக்கத்துத்தோட்டம், ஒரு அவசரம் என்றால் உடனே வந்திடுவாங்க, நாமலும் அடிக்கடி அலமேலுவைப் போய்பார்த்துக் கொள்ளலாம் என்று அந்த தோட்டத்தில் உள்ளவர்கள் சொல்லிக் கொண்டதால், தங்கச்சியின் வாழ்க்கை வளமாவதற்கு இருளாண்டிதான் சரியான ஆள் என்று அவனுக்கு அவளை கல்யாணம் செய்து வைத்து மகிழ்ந்தார்கள் அவளின் அண்ணன்மார்.

இருளாண்டிக்கும் அலமேலுவைப் பிடித்துப் போயிருந்ததால் அலமேலுவோடு அவன் வாழ்க்கையை மிகவும் சந்தோஷமாக ஆரம்பித்தான். அவர்களின் சந்தோஷத்திற்குச் சாட்சியாக அலமேலு அடுத்தடுத்து மூன்று குழந்தைகளுக்குத் தாயானாள். மூன்றாவது குழந்தை சின்னராசு பிறந்தபோது அலமேலுவின் வயிற்றில் ஒரு சிறிய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி வந்துவிட்டது. இதனால் அலமேலு ஒரு நான்கு மாதம் வரையில் தோட்டத்து வேலைக்குப் போகாமல் இருந்தாள்.

இந்த காலகட்டத்தில் தோட்டத்திலும் கிழமைக்கு நான்கு நாள் வேலை மாத்திரமே வழங்கினார்கள். இந்த நான்கு நாள் வேலையில் மனைவியையும், பிள்ளைகள் மூன்று பேரையும் கவனிக்க மிகவும் சிரமப்பட்டான் இருளாண்டி. இவனது சிரமத்திற்கு ஓரளவு ஈடுகொடுக்கும் முகமாக தோட்டத்தில் வேலை இல்லாத நாட்களிலும், வேலை செய்யும் நாட்களில் ஓய்வு நேரங்களிலும் தோட்டத்திற்கு வெளியில் வீடுகட்டும் மேஸ்திரி ஒருவரிடம் வேலைக்குச் சென்றான்.

தினசரி அதில் கிடைக்கும் வருமானத்தில் வீட்டிற்கு அரிசி, பருப்பு என்று வாங்கிக்கொண்டு, மிஞ்சி இருக்கின்ற சில்லறைக்காசில் உடம்பு அயர்வை போக்கவென்று அந்த சூழ்நிலையில் மெல்ல கள்ளுக்கடைக்குச் செல்ல ஆரம்பித்தான் இருளாண்டி. அந்த சின்ன ஆரம்பம் நாளடைவில் இருளாண்டியை அந்தத் தோட்டத்தின் தலைமை குடிகாரனாய்

ஆக்கிவிட்டது. கள்ளால் தன் குடியுலக வாழ்வில் காலடி எடுத்து வைத்த இருளாண்டி இப்போது சாராயம் வரை முன்னேறியிருந்தான்.

ஆரம்பத்தில் கஸ்டப்படுகின்ற மனுசன்தானே என்று இருளாண்டி குடித்துவிட்டு வருவதைக் கண்டும் காணாமல் இருந்தாள் அலமேலு. அவள் அதைக்கண்டு கொள்ளாமல் இருந்ததை தனக்கு சாதகமாக்கி தான் குடித்தால் தன்னைத் தட்டிக்கேட்பதற்கு ஆளில்லை என்ற தைரியத்தில் இருந்தவனை ஒருநாள் அலமேலு அவன் குடித்துவிட்டு வந்தபோது குறுக்கிட்டு கேள்வி கேட்டாள். அலமேலு நியாயமாகக் கேட்டதை அநியாயம் என்று எண்ணிய இருளாண்டி “பொத்தடி வாயை! நான் சம்பாதிக்கிறேன், நான் குடிப்பேன்” என்று தர்க்கம் புரிந்தான். வாய்த்தர்க்கம் கைத்தர்க்கமாகி போதை கண்ணை மறைத்திருந்த அந்த வேளையில் தன் கையில் அகப்பட்ட தேங்காய்த்துருவியால் இருளாண்டி தாக்க அது அலமேலுவின் இடுப்பில் பல தையல்களைப் போடும் அளவிற்கு மாறியது. அந்த நிகழ்வால் மீண்டும் ஒரு மாதம் வரையில் ஆஸ்பத்திரியில் இருந்தாள் அலமேலு.

ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறியபோது, கொஞ்ச நாட்களுக்குக் கஷ்டமான வேலை எதையும் செய்ய வேண்டாம் என்று டாக்டர்கள் அலமேலுவிடம் சொன்னார்கள். தலையசைத்துக் கொண்டு வந்தவள் அண்ணன்மாரை நினைத்துப் பார்த்தாள். அலமேலுவைக் கல்யாணம் செய்து கொடுத்த ஒரு வருடத்தில், இந்திய வம்சாவளியினராய் பதியப்பட்ட அவர்கள் இந்தியாவிற்குச் செல்ல வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தினால் இந்தியாவிற்குச் சென்றுவிட்டார்கள். அண்ணன்மார் இரண்டு பேரும் இந்தியாவிற்குச் சென்றதன் பின்னர் பிறந்த வீட்டையும் மறந்துவிட்டாள். இந்தியாவுக்குச் சென்ற அண்ணன்மார் இருவரும் முன்பெல்லாம் அலமேலுவின் சுகசெய்தி கேட்டும், எப்படியாவது இந்தியாவிற்கு வந்துவிட வேண்டும் என்றும் கேட்டு மாதத்திற்கு ஒரு கடிதம் இருளாண்டியின் பெயருக்கு அனுப்பி வைப்பார்கள். அதில் எந்தக் கடிதத்தையும் பார்த்து பதிலே போடாமல் விட்டுவிட்டான் இருளாண்டி. இருளாண்டிக்கு இந்தியா செல்ல விருப்பம் இல்லாததால் அவன் இலங்கை பிரஜையாகவே பதிவு செய்து கொண்டான். இதனால் அவனுக்கு இந்தியாவில் இருந்து வருகின்ற கடிதங்களைக்கூட படிக்க விருப்பம் இல்லாமல் இருந்தது.

அண்ணன்மாரின் மேலுள்ள பிரியத்தால் அலமேலு அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் காட்டி கடிதத்தின் சேதியைப் படித்தறிவாள். இப்போது இந்தியாவில் இருந்து கடிதமும் வருவதில்லை. இதனால் தனது மனவேதனைகளைச் சொல்லி அழுவதற்கு சொந்தமென்று ஒன்று இல்லை என்று தவித்தாள் அலமேலு. இருளாண்டிக்கும் சொந்தமென்று யாருமே அந்தத் தோட்டத்தில் இல்லாமல் இருக்கவே, தான் நினைத்ததே சட்டம், தன்னை மீறி அந்த வீட்டில் எதுவும் நடக்கக்கூடாது என அலமேலுவை

கொடுமைப்படுத்தினான். தாலி கட்டிய மனைவி தன் வார்த்தைக்கு எதிர்வார்த்தைப் பேசக்கூடாது என்று அவளை ஒரு அடிமைபோல் நடத்தினான்.

இந்நிலையில் அலமேலுவின் உழைப்பு அந்தக் குடும்பத்திற்கு இல்லாமல் இருந்தால் இன்னும் சில நாட்களில் அங்கோர் பட்டினிப்போர் நடக்கும் என்பதை சொல்லாமலேயே உணர்ந்து, ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் சொன்னதையும் கேளாமல், தனது குழந்தைகளுக்காக மறுநாளே கூடையைத் தலையில் மாட்டிக்கொண்டு மலையேறினாள் அவள்.

அலமேலுவின் உழைப்பு சாப்பாட்டிற்கும், இருளாண்டியின் உழைப்பு அவன் குடிப்பதற்கும் சரியாக இருந்தது. மிச்சம் பிடிப்பதற்கென்று ஒன்றுமில்லை. அலமேலுவின் காது கழுத்துகளில் மின்னிய தங்க நட்சத்திரங்கள் எல்லாம் ஏற்கனவே அடைவுக்கடை வட்டியின் குட்டிகளின் பசிக்கு இரையாகிப் போயிருந்தது. பிள்ளைகள் மூவரின் உடைகளும் கூட கிழிசலாய்தான் இருக்கும். பாவம் அலமேலு, அவள் என்னதான் செய்வாள்? அவள் ஒருத்தியின் உழைப்பில் உண்ண உணவு வாங்குவாளா? இல்லை, பிள்ளைகளுக்கு உடுக்க உடை வாங்குவாளா? இதை எல்லாம் கொஞ்சம் கூட எண்ணிப்பாராமல் தன் போக்கில் தானுண்டு, சாராயக்கடையுண்டு என்றிருக்கும் இருளாண்டியிடம் எதையாவது கேட்டு தினசரி உதை வாங்குவாளா? வெளிச்சத்தைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் வீழ்ந்துவிட்ட நிலையில் அலமேலுவுக்கு அவன் பெயரைக்கூட பிடிக்காமல் போய்விட்டது. இப்படி இருக்கையில் ஒரு நாள் குடித்துக் குடித்தே ஈரல் கருகிப்போன இருளாண்டி, அலமேலு இனிமேல் உன் வாழ்க்கையும் உன் பிள்ளைகளோட எதிர்காலமும் இருள்தாண்டி என்று சொல்லாமல் அவர்களை தவிக்கவிட்டு இறந்து போனான்.

ஒரு சின்ன வேலை கூடச்செய்யாமல் பிறந்த வீட்டில் சொகுசாய் வாழ்ந்துவிட்ட அலமேலுவுக்கு, காலம் ஒரு குடும்பத்தின் சுமையைத் தூக்கி அவள் தலையில் வைத்துவிட்டபோது தடுமாறினாள். ஒரு கொஞ்சநேர வெறிக்காகக் குடித்துவிட்டுக் கும்மாளம் போட்ட இருளாண்டி குடியின் பின் விளைவுகளைக் கொஞ்சம் எண்ணிப்பார்த்து செயல்பட்டிருந்தால், இன்று நான் இந்த நிலையில் உடுக்க ஒரு புடவை கூட இன்றி அவஸ்தைப்படும் நிலை வந்திருக்குமா என தனது கடந்த காலங்களை எண்ணிப்பார்த்த அலமேலுவின் விழிகளின் ஓரம் நீர் கசிந்திருந்தது.

அலமேலுவின் கண்களில் கண்ணீரைக் கண்ட சிவராம், "ஏம்மா.... அழுகிற" என்றபோது, "அது ஒன்றுமில்லை புகை கண்ணுக்குள்ள போயிடிச்சு. நீ அடுப்பை ஊது" என்று அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு கண்களைத் துடைத்துக்கொண்ட அலமேலு, இன்று இரவைக்கு சாப்பாட்டு விசயம் ஒரு மாதிரி முடிந்துவிட்டது. ம்.... இனி நாளைக்குக் காலையில்

என்ன செய்யலாம் என்று எண்ணியபோது, கொழுந்து பறிக்கையில் ஆத்துக்கு அப்பால் இருக்கும் மேட்டு லயத்து முனியம்மா அக்கா, அடுத்த வாரம் திருப்பித் தருவதென்றால் ஒரு சுண்டு அரிசி தருவதாய் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. உடனே மலை வேலை நேரங்களில் மழையில் நனையாமல் இருக்க பாவிக்கும் பொலித்தீன் சீட்டை எடுத்து தலையில் போட்டுக்கொண்டு மூத்தமகன் சிவராமிடம், நீ போய் தங்கச்சியோடும் தம்பியோடும் படுத்துக்கொள். நான் முனியம்மா அக்கா வீட்டில அரிசி வாங்கிட்டு வாரேன் என்று கூறிவிட்டு, கதவை வெளிப்பக்கம் சாத்திக்கொண்டு வீதியில் இறங்கி ஆத்துப்பக்கத்து மேட்டுலயத்தின் பக்கமாக நடந்தாள்.

சேறு அப்பியிருந்த வீதியெங்கும் இருள் குடும்பம் நடத்திக் கொண்டிருந்தது. வழமையாய் நடக்கும் பாதையென்பதால் சற்று தட்டுத்தடுமாறி மெல்ல மெல்ல நடந்த அலமேலு பிரட்டுக்கலத்தைத் தாண்டிச்சென்றபோது அந்தப்பாதையில் கால் வைத்து நடப்பதற்கே சிரமமாக இருந்தது. சேலையை சற்று மடித்துக் கட்டிக்கொண்டு சகதியில் கால் வைத்துச் சென்று ஆற்றைக் கடப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. ஒருவாறு முனியம்மா அக்காவின் வீட்டுக்கதவைத் தட்டியபோது நல்ல வேளையாக அவள் விழித்திருந்தாள். கேட்டு வைத்தபடி அரிசியை அவளிடம் இருந்து பெற்றுக்கொண்டு மிகவும் சந்தோஷத்தோடு திரும்பினாள் அலமேலு.

முதல் நாள் அடைமழைக்கு பின் மறுநாள் அழகாகப் புலர்ந்தது. மழை நின்றிருந்தது. சற்று தாமதமாகியே நித்திரைக்குச் சென்றபோதும், அன்று அதிகாலையிலேயே விழித்துக்கொண்ட அலமேலுவின் மூத்தமகன் சிவராம் கதவிடுக்கின் வழியாக பரவிய வெளிச்சத்தின் மூலம் விடிந்து விட்டதை யுணர்ந்து எழும்பிச்சென்று கதவைத் திறந்தான். கதவு வெளிப்பக்கமாக தாழிட்டிருக்கவே, மறுபடி வீட்டினுள் நுழைந்து அம்மா.... அம்மா.... என்றான். ஆனால் அம்மாவைக் காணவில்லை. அம்மாவைக் காணாமல் இருக்கவே தம்பியையும் தங்கையையும் உறக்கம் கலைத்து எழுப்பி விட்டான். இரவு அம்மா அரிசி வாங்க ஆத்துப்பக்க மேட்டு லயத்திற்கு போய் அங்கேயே தங்கிவிட்டாள் என்று எண்ணி பக்கத்து வீட்டுக்காரர் களிடம் விசயத்தைச் சொல்லி வெளியில் தாழிடப்பட்டிருக்கும் கதவைத் திறக்கச் செய்து வெளியே வந்தான்.

விடியற்காலையில் வேலைக்குச் செல்வதற்காக தொழிற்சாலையில் ஊதிய சங்கொலியின் மூலம் மணி 6.30 என்பதனை அறிந்து அம்மாவை இன்னும் காணவில்லையே என்று தம்பி தங்கையையும் அழைத்துக் கொண்டு ஆத்துப்பக்க மேட்டு லயத்திற்குச் சென்றான். இடையில் பிரட்டுக்கலத்திற்கு முன்பாக ஓரிடத்தில் சிலர் கூடிநின்று எதையோ வேடிக்கைப் பார்ப்பதை தூரத்தில் நின்று கவனித்த சிவராம், அது என்ன

அங்கே எல்லோரும் கூட்டமாக நிற்கிறார்கள் என்று சற்று விரைவாக அவ்விடத்திற்குச் சென்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

அங்கே நேற்று இரவு பெய்த மழையின் காரணமாக பெரிய மண்சரிவு ஏற்பட்டிருந்தது. அந்த மண்சரிவிற்கு இருட்டில் அரிசி வாங்கித் திரும்பிக் கொண்டிருந்த அலமேலு பலியாகி இறந்து கிடந்தாள். எப்படியோ அவளின் கையில் இருந்த அரிசிப்பை வெளியே தென்பட்டதை வைத்து, இரவு அலமேலு அரிசி வாங்கக் கொண்டு வந்திருந்த அந்த பையைப் பார்த்து, உள்ளே அலமேலு அகப்பட்டுள்ளாள் என்று அதை வேடிக்கை பார்க்க வந்த முனியம்மா அக்கா கூறியதால் பிணத்தைத் தோண்டி எடுத்து வைத்திருந்தார்கள்.

சற்று நேரத்தில் அங்கு மேலும் கூடிய சனங்கள், பாவம்! அலமேலுவை நேற்றைய இருட்டு மண்சரிவு மூலம் பலியெடுத்துவிட்டதே என்று வருந்திக்கொண்டிருந்தார்கள். இருட்டு அவளை மட்டும் பலி எடுக்கவில்லை. ஒளிமயமான எதிர்காலத்தைக் காணவேண்டிய அவளின் மூன்று குழந்தைகளின் எதிர்காலத்தையும் பலிவாங்கி இருட்டாக்கி விட்டதே! இன்று அங்கே கையில் அரிசியோடு வந்து கடைசியில் மண்ணோடு புதைந்து இறந்துபோன அலமேலுவைக் கட்டிக்கொண்டு அழுகின்ற அந்த மூன்று குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களின் உறவுக்கு தாய் என்றோ தந்தை என்றோ சொல்ல யாருமில்லா அநாதையான இருட்டாய் அல்லவா நேற்றைய இருட்டு அவர்களை இன்றைய வெளிச்சத்தில் தவிக்க விட்டுவிட்டது.

# இங்கெவர் வாழவோ?

## ஏ.எஸ். பாலச்சந்திரன்

அந்த வளைந்து நெளிந்து போகும் மண் ரோட்டில் தோட்டத்து ட்ரெக்டர் வண்டி கொழுந்து ஏற்ற போய்க் கொண்டிருந்தது.

பாதி தூரம் போனதும் மற்றொரு வளைவில் பிள்ளைகள் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். "ஆ.... அந்தா... டக்கு வருது... டக்கு வருது" சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தான் சாக்குக்கார சடையன்.

"அண்ணே.... தொரசாமி அண்ணே டக்க நிப்பாட்டுங்க.... இன்னைக்கு மேம்மல கொழுந்து.... அதா.... புள்ளைங்க எல்லாம் சாப்பாட்ட வச்சுக்கிட்டு டக்குல வர்றதுக்கு நிக்குதுக", சடையனின் குரல் கேட்டு ட்ரெக்டரை நிறுத்தினார், டிரைவர் துரைசாமி.

"ஆங்.... எல்லா ஏறு..... ஏ.... சின்னபுள்ளே நீனும் இன்னைக்கு ஸ்கூலுக்கு போகலையா" என்று சின்னப்புள்ளை என்று அழைக்கப்படும் கல்யாணியைப் பார்த்து கேட்டான் சடையன். "இல்ல அண்ணே இன்னைக்கு போகல மேமலனால அம்மாவுக்கு சாப்பாடு கொண்டு போகணுமேன்னு நின்னுட்டே" என்றாள் கல்யாணி.

"அட..... கட்டையனும் நிக்குறான். ஏன்டா நீனு ஸ்கூலுக்கு போகலையா? ஒங்கம்மா இன்னைக்கு சொகமில்லனு வீட்டுல தான இருந்துச்சி" என்று கட்டையன் என்றழைக்கப்படும் கணேசனிடம் கேட்டான்.

"மேம்மலயில மரம் வெட்டுறாங்கதானே அதாண்ணே கொஞ்சோ குச்சு பொறுக்கி டக்குல போட்டுக்கிட்டு வரலாமுன்னு ஸ்கூலுக்கு போகாம இருந்துட்டேன்" என்றான் அவன். இப்படி ஒவ்வொருவரிடமாக குசலம் விசாரித்து எல்லோரையும் ட்ரெக்டரில் ஏற்றினான் சடையன். "எல்லோரும் ஏறியாச்சா" என்ற சாரதியின் குரல் கேட்டு "ஆ.... அரிஹரி.... போங்க" என்றான் சடையன். பிள்ளைகளின் கூச்சலுடன் ட்ரெக்டர் மேம்மலையை நோக்கி இரைச்சலுடன் போய்க் கொண்டிருந்தது.

சடையன்தான் அந்த தோட்டத்தில் சாக்குக்காரன். அதற்கு முன் அவனுடைய அப்பா செல்லையா செய்த வேலை அது. அவருக்கு பென்சன் கொடுத்ததும் அந்த வேலையை அவன் பிடித்துக்கொண்டான். அதுவும் சும்மா இல்லை. பெரிய கிளாக்கருக்கு ஒரு போத்தலும், பெரிய கணக்குப்பிள்ளைக்கு ஒரு போத்தலும் தள்ளினான். அது மட்டுமில்லை. தினமும் இவர்களிருவருக்கும் ஒவ்வொறு கட்டு புல்லோ அல்லது குழையோ கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் அவன் இவ்வளவு காலம் சாக்குவேலை செய்ய முடியுமா என்ன?

சடையனை அந்த தோட்டத்திலுள்ள எல்லோருக்குமே பிடிக்கும். எல்லோரிடமும் மரியாதையாக நடந்து கொள்வான். அவன் முகத்தில் எப்போதும் சோகத்தின் சாயல் படருவதே இல்லை. எந்த நேரமும் சிரித்த முகத்துடனும் ஏதாவது 'ஜோக்' அடித்துக் கொண்டும், தமாஷாய் கதைத்துக் கொண்டும்தானிருப்பான். இதனால் அவன் யாருக்கும் பகையாளி இல்லை. அவனுக்கு எதிர்ப்புமில்லை.

"மேம்மல வந்தாச்சு.... எல்லாரும் எறங்குங்க" - அதிகாரத் தோரணையில் சொன்னான். பிள்ளைகள் எல்லோரும் மகிழ்வுடன் இறங்கி சாப்பாடு, தண்ணீரை எடுத்துக் கொண்டு போனார்கள். "ஏன்டா சடையன் இன்னக்கு லொறி இல்லையா" என்று கங்காணி கருப்பையா கேட்க, "இல்லங்க அண்ணே லொறி பெரிய தொரவுட்டு மரக்கறிய ஏத்திக்கிட்டு கொழும்புக்கு போயிருச்சு.... இன்னைக்கு டக்குதான் கொழுந்து ஏத்தும்" என்று பதில் அளித்துக் கொண்டே கொழுந்து சாக்குகளை ஏற்றினான்.

"சடையண்ணே வாங்க தேத்தண்ணி குடிச்சுட்டுப் போகலாம்", வேர்வை கொட்டக்கொட்ட சாக்குகளை அடுக்கிக் கொண்டிருந்தவனை செண்பகத்தின் குரல் தடுத்தது. "இரு புள்ள அடுக்கிட்டு வாரேன்" என்று கடமையிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தான். செண்பகம்தான் அவனுக்கு தினமும் தேனீர் கொடுப்பவள். அவனின் வருங்கால மனைவி அவள்தான்.

செண்பகமும் பெயருக்கேற்றபடி மலையகத்தின் எழிலரசிதான். அவளை வர்ணிக்க இடமில்லை. நல்ல வேலைக்காரி. அவளோடு யாரும் கொழுந்து பறிக்க முடியாது. சாக்குகளை அடுக்கும் வேலை முடிந்தவுடன், "டைவர் அண்ணே வாங்க தேத்தண்ணி குடிப்போம்.... செண்பகமும் நம்மளுக்காக பாத்துக்கிட்டிருக்கா.... ஏ.... புள்ள.... இன்னக்கு என்ன ரொட்டிதானா" என்று கேட்டுக்கொண்டே பொட்டலத்தை பிரித்தான். "ஏது தோச.... இன்னக்கு ஒங்கம்மா வீட்டுலயா" என்று கேட்டுக்கொண்டே தனக்கு கொஞ்சத்தை எடுத்துக் கொண்டு துரைசாமியிடம் மிகுதியை கொடுத்தான்.

"சரி... புள்ள.... நேரமாச்சு... டீமேக்கரு ஐயா சொணங்கிருச்சுனா கெட்ட மாதிரி பேசுவாரு..... நாங்க போயிட்டு வாரோம்", என்று அவள் கன்னத்தில் செல்லமாக கிள்ளிவிட்டு ட்ரெக்டர் பெட்டியில் ஏறிக்கொண்டான்.

மீண்டும் ட்ரெக்டர் வந்ததை விட கூடிய இரைச்சலுடன் அதே நெளிந்து வளைந்த பாதையில் தேயிலைத் தொழிற்சாலையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. நிறைய கொழுந்து என்பதாலும், பாரம் அதிகம் ஆனதாலும் ட்ரெக்டர் திக்கித் திணறியது, சத்தமும் அதிகமாகியது. வேறு எந்த ஓசையும் கேட்கவில்லை. பாதித்தூரம் வந்து ஒரு பெரிய வளைவில் திரும்பும்போது.... "ஐயோ.... அம்மா" என்ற குரல் மலைக்குன்று களுக்கிடையே முட்டி மோதி எதிரொலியாக ஒலிக்கக்கேட்டு ட்ரெக்டரை

நிறுத்தினார் துரைசாமி. அங்கே சடையன் ரோட்டில் விழுந்து கிடந்தான். அவன் மேல் கொழுந்து சாக்கு மூட்டைகள் உருண்டு கிடந்தன. அதற்கிடையில் மலையிலுள்ள ஆட்கள் எல்லோரும் ஓடிவந்து சாக்குகளை அகற்றிவிட்டு அவனைத்தூக்கி நிமிர்த்தினர். கை, கால், முகத்திலும் சரளைக்கற்கள் கீறிக்கிழித்த காயங்களிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டிருக்க மயக்க நிலையில் கிடந்தான் சடையன். ஒரு சிலர் அவனுக்கு தண்ணீர் தெளித்து காற்று வீசிக்கொண்டு இருந்தார்கள். சிலர் துரைசாமியிடம் சண்டை பிடித்தார்கள். சிலர் அவன் எப்படி விழுந்திருப்பான் என்று ஆராய்ந்ததில் சாக்குகள் சரியப் போகின்றனவே என்று அவற்றை பிடிக்கப் போய் தானும் அவற்றுடன் சேர்ந்து விழுந்திருக்கக்கூடும் என்ற முடிவுக்கு வந்தார்கள். "நெஞ்சில் நல்ல அடிபட்டுடிச்சு.... போயி டாக்டர கூட்டிக்கிட்டு வாங்க". சிலர் டாக்டரிடம் ஓடினார்கள்.

"டாக்டர் ஐயா..... நம்ம சாக்கு சடையன் டக்குல இருந்து கீழே விழுந்து மயக்கமா கெடக்குறான்.... சீக்கிரமா அம்பிலேன்சுக்கு துண்டுதாங்க" என்றார்கள் பதறியபடி. தன் செல்லநாயுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த டாக்டர் "அப்படியா.... காயம் ஏதுமில்லையே அம்புலேன்ஸ் பெரிய டீமேக்கர் ஐயாவோட சம்சாரத்துக்கு சொகமில்லனு இப்பதான் ஏத்திக்கிட்டு ஆஸ்பத்திரிக்கு போகுது நா.... வந்து பாக்குறே", என்று மெதுவாக மருந்துகளைத் தேடினார். "ஐயா சீக்கிரமா வாங்க..... ரொம்ப காயம் ரெத்தம் ஆறா ஓடுது" என்று அவசரப்பட்டார்கள். ஒருவாறு மருந்துகளைத்தேடி எடுத்துக்கொண்டு தன் மோட்டார் பைக்கில் ஏறி உசுப்பினார். அது அப்போதுதான் இயங்க மறுத்தது. பின் ஒருவாறு 'ஸ்டார்ட்' பண்ணிக்கொண்டு அவ்விடத்தை நோக்கி விரைந்தார்.

ஆனால்.... அங்கே... அவர் வரும் முன்பே சடையன் இந்த உலகத்தை விட்டே போய்விட்டான். அவன் உடலும் உதிரமும் தேயிலைச் செடிகளுக்கே உரிமை ஆகின. தமக்கு நல்ல உரம் கிடைக்கப்போகிறது என்ற களிப்பில் தேயிலைச் செடிகள் உற்சாக மிகுதியில் ஆடிக்கொண்டிருந்தன.

அந்த உயர்ந்த மலைக்குன்றுகளுக்கிடையில்.... "ஐயோ.... அம்மா" என்ற அவன் குரலும், "என்னைய விட்டுட்டு போயிட்டீங்களா?" என்ற செண்பகத்தின் குரலும் ஒன்றிணைந்து குன்றின் குரலாய் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

# சாபக்கேடு

## நளாயினி சுப்பையா

மார்கழிக்குளிரில் உடலெல்லாம் வெடவெட என நடுங்குகிறது. போர்வையால் தலையை இழுத்து மூடிக்கொள்கிறேன். அப்படியும் குளிர் குறைந்தபாடில்லை. தலையை இழுத்து மூடியதில் போர்வை காலை மூட மறுக்கிறது. கால் குளிருகிறது. முந்தாநாள்தான் அம்மா தரையை மெழுகினாங்க. அதுவேறு குளிரைப் பன்மடங்காக்கியது. காலையும் தலையையும் சேர்த்துப் போர்த்தினால் ஒருவேளை குளிரைச் சமாளிக்கலாம். இழுத்துப் போர்த்தித் தோல்வியடைகிறேன். ஏனெனில் போர்வை போதாது. அப்படியானால் குளிரிலிருந்து தப்புவதற்கு வேறு என்னதான் வழி? உடம்பைக் குறுக்கி வளைத்து போர்த்திக் கொள்கிறேன்.

குளிரைச் சமாளிக்கலாம். ஆனால் உடம்பு கேள்விக்குறி போல வளைந்துவிடுகிறது. ஆம்! மலையகத்தில் பிறந்துவிட்டதால் எமது உடம்பு மட்டுமல்ல வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்டது.

தங்கச்சிய கொழும்பில ஒரு உத்தியோகத்தர் வீட்டில வேலைக்கு விட்டிருக்கு. அவளைப் பார்க்க அப்பா போன வாரம்தான் கொழும்புக்குப் போயிருந்தார். அப்போதுதான் இந்தப் போர்வையை வாங்கி வந்திருந்தார். ஆஹா! கம்பளிப்போர்வை, குளிரிலே வெடவெடத்தபோதெல்லாம் எனக்குக் கிடைக்காதா என்று ஏங்கிய போர்வை. அதை வைத்து பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அடுத்தவீட்டு மாமாவின் கண்ணில் அது பட்டுவிடுகிறது.

மாமா கொழும்பில் கடையொன்றில் வேலை செய்கிறார். இரு வாரமொருமுறை ஊருக்கு வருவார். வரும்போது கொழும்புப் புதினங்களைப் புதியதும் பழையதுமாக அள்ளிவந்து தருவார். பேப்பரே படிக்கமுடியாத எங்க தோட்டத்துச் சனங்களுக்கு அவையெல்லாம் பெரிய புதினம்தான். “ஏனண்ணே! இந்தக் கம்பளிப்போர்வையை ‘பேமண்டில்’ வாங்கினீங்களா? இது பாவிச்ச துணியாச்சே? இதெல்லாம் வாங்கக்கூடாதுங்க. வெளிநாட்டுக்காரங்க இங்க வந்திட்டுப் போறப்ப இதையெல்லாம் அரைவிலை, கால் விலைக்கு இங்க தள்ளிட்டுப் போயிடுவாங்க. இதுகளாலதான் அண்ணே ‘எயிட்ஸ்’ வாறதாம்.”

“‘எயிட்சு’ பெரிய எயிட்ச கண்டுபிடிச்சிட்டாங்க. இந்த குளிரில சாகிறதைவிட அது ஒண்ணும் பெரிசில்ல. நீங்க சும்மா போங்க மாமா” போர்வையைப் பத்திரம் பண்ணுகிறேன்.

"ஏண்டா ராமு! அந்தப் போர்வையை இரண்டா வெட்டி ஒண்ண தம்பிக்கு குடுத்திடு."

"சரிப்பா."

நல்லவேளை தங்கச்சிய வேலைக்கு அனுப்பிட்டாங்க. இல்லேன்னா போர்வையை மூணா வெட்டுன்னு சொல்லியிருப்பார். எனக்குள் எண்ணிக்கொள்கிறேன். வளைந்த உடம்பைப் போர்வைக்குள் சுருட்டிக் கொண்டு மீண்டும் கண் அயருகிறேன்.

"ஏண்டா ராமு! ஸ்கூலுக்கு நேரமாகல்ல. எழுந்திருடா. சீக்கிரமா புறப்படு. பாலைக்கொண்டுபோய் மில்க் போட்டில குடுத்திட்டு ஸ்கூலுக்கு போ. ஏண்டா இன்னிக்கு இலவசமா உடுப்பு குடுக்கிறாங்க இல்ல. நானும் ஸ்கூலுக்கு வரணும் இல்லியா?"

"ஆமா அம்மா, அம்மா அப்பா யார் சரி வராவிட்டால், உடுப்பு குடுக்க மாட்டாங்களாம்? நீ எப்படியாவது ஸ்கூலுக்கு வந்திடும்மா"

"ஏண்டா ராமு! ஆளுக்கு ஒண்ணு குடுப்பாங்களா? தம்பிக்கும் குடுப்பாங்களாடா?"

"ஆமா அப்பா. தம்பிக்கும் குடுப்பாங்க. ஆனா அவனுக்கு இன்னிக்கு ஸ்கூலுக்குப் போட்டுபோக உடுப்பு இல்லியே. அவன் நாளைக்குப் போய் எடுத்துக்கலாம்."

"ஏண்டா தங்கச்சிக்கு குடுக்க மாட்டாங்களா?"

"தங்கச்சிட பேர் இன்னும் வெட்டல்லதானே அப்பா? அவளுக்கும் எடுக்கலாம். கனநாள் வருத்தமா ஸ்கூலுக்கு வராம இருக்கிற பிள்ளைகளுக்கு அவங்கட யாரையாவது வந்து கையெழுத்துப் போட்டு எடுக்கச் சொன்னாங்க அப்பா."

"ஏண்டி கோகிலம். நீ போய் எப்படியும் இன்னிக்கு எல்லா பிள்ளைகளுக்கும் துணியை வாங்கி வந்துவிடு."

"சரிங்க."

வழமையைவிட இன்று உற்சாகமாக ஸ்கூலுக்குப் புறப்படுகிறேன். இன்னிக்கு தம்பி வரமாட்டான். எங்கவீட்டில இருக்கிறது ஒரேயொரு காற்சட்டையும் சேட்டும்தான். நான் வாரத்தில மூணுநாளைக்கு ஸ்கூலுக்குப் போனா தம்பி ரெண்டு நாளைக்குப் போவான். இது எங்கட வழக்கம். அதுவே பழக்கமாகவும் மாறிவிட்டது. ஏதோ இடாப்பில இருந்து பேரை வெட்டிவிடக் கூடாதே என்று இந்த ஏற்பாடு.

அப்பாவும் அம்மாவும் உழைக்கிறாங்கதான். தங்கச்சியையும் வீட்டு வேலைக்கு விட்டிருக்கு. அது உழைச்சு அனுப்பறது பெரிதாக

இல்லாவிட்டாலும் இங்கே அதுக்குப் போடுற சோறு மிச்சம்தானே? பசுமாடும் கொடுக்கிற புல்லுக்குப் பாலைத்தான் தருது. ஆனால் எல்லாம் வந்தும் அப்பாட தலைகால் தெரியாத குடியை இவையெல்லாம் ஈடு செய்துவிடாது.

ஒரு நாள் அம்மாவிடம் சாடைமாடையாகச் சொன்னேன் "ஏனம்மா! அப்பாகிட்ட நீயாவது கொஞ்சம் எடுத்துச் சொல்லக்கூடாதா? எத்தனை நாளைக்குத்தான் நாங்க அரை வயிறும் கால் வயிறுமா இருக்கிறது?"

"என்னடா ராமு செய்யிறது? அப்பாவும் மலை ஏறி உழைக்கிறார். போதாக்குறைக்கு மாட்டுக்குப் புல்லும் அவர்தானேடா வெட்டுறார். உடம்பு அலுப்புக்கு மருந்துபோல கொஞ்சம் குடிப்பார். நீ இதையெல்லாம் கண்டுக்காதடா"

ஏதோ அப்பாவிற்காக அம்மா பரிந்து பேசுவதாகத்தான் நான் நினைத்தேன். ஆனால்! ஆனால்! அம்மாவின் நோய்க்கும் அதுதான் தினம் தினம் மருந்தானபோது! நான் இடிந்துவிட்டேன். அம்மா சொன்னது சரிதான். நான் கண்டுக்காம இருப்பதுதான் எனக்கு மரியாதை.

"என்னடா ராமு! இன்னிக்கு இலவச உடுப்பு குடுக்கிறாங்கதானே? உங்க அம்மா வரல்லியா?"

எண்ண அலைகள் தடைப்படுகின்றன. திரும்பிப் பார்க்கிறேன். செல்வராஜ்.

"வருவாங்கடா செல்வராஜ். பத்து மணி போல வருவதாகச் சொன்னாங்க. ஏண்டா செல்வராஜ் முன்னால போறது பாபுதானே?"

"ஆமாண்டா நம்ம கணக்குப்பிள்ளை ஐயாவோட மகன்தான். ஓட்டப்போட்டியில் என்னை முந்த அவனால முடியவே முடியாதுடா. எப்பவும் நான்தான் முதல்ல வருவன். ஆனா மாவட்டப் போட்டிக்கு அவனத்தாண்டா சேர் அனுப்புவார். ஏன்னா எங்கிட்ட நல்ல உடுப்பு இல்லியாம்டா. ஏண்டா ராமு! இனிமேல்தான் நீயும் போகலாமே? உனக்குத்தான் புது உடுப்பு கிடைக்குமே?"

"ஆமாண்டா செல்வராஜ். சீக்கிரமா நட ஸ்கூலுக்கு நேரமாச்சு".

பாடசாலைக்குள் போனதும் முதலில் தென்பட்டவள் மாலினி டீச்சர்தான். ஏன் டீச்சர் போனமுறை தமிழ்த்தினப் போட்டியில என்னுடைய மனசைச் சாட்டையால் அடிச்சவங்க நீங்கதானே? மனதுக்குள் கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சம்பவத்தை என்னால் மறக்கமுடியாது.

பாடசாலைப் பேச்சுப்போட்டியில் நான்தான் முதலிடம். ஏன் கோட்டப்போட்டியிலும் நான்தான் வென்றேன். ஆனால் மாகாணப்

போட்டிக்கு என்னைக் கொழும்புக்குக் கூட்டிப் போகல்ல. ராமு என்று என்னுடைய பெயரிலேயே இருக்கும் எஸ்டேட் கிளாக்கர்ட மகனைக் கூட்டிப்போனாங்க. ஏன்னா? கொழும்புக்குப் போறமாதிரி எங்கிட்ட உடுப்பு இல்லையாம். எங்கப்பா குடியாம். பிள்ளைகளைக் கூட்டிப் போறதெண்டா செலவுக்குப் பணம் குடுக்க மாட்டாராம். நான் ஸ்கூலுக்கு ஒழுங்காக வருவதில்லையாம். ஏன் டீச்சர்! உடுப்பில்லை என்று இனிமேல் என்னைத் தள்ளி வைக்க மாட்டீங்களே? தம்பிக்கும் உடுப்புக் கிடைக்கும். இனி நாங்க ரெண்டு பேரும் ஒழுங்கா ஸ்கூலுக்கு வருவோம். மனதில் பெரும் ஆசையுடன் அம்மாவின் வரவைப் பார்க்கிறேன்.

"ராமு! என்ன புது உடுப்பு பார்சல் வாங்கிட்டியா?"

"ஆமா சேர்"

"இனிமே ஒழுங்கா ஸ்கூலுக்கு வருவியா?"

"ஆமா சேர். உடுப்பு இருக்குத்தானே வருவன் சேர்."

"நீ நல்ல கெட்டிக்காரன். கவனமா படி. என்ன உதவி வேணுமென்டாலும் தயங்காமல் கேள்."

"சரிங்க சேர்." அவரின் இரக்கத்தையும் அன்பையும் என்னால் மறக்கமுடியாது.

"இன்றைக்கு சாப்பாடு கொண்டுவராதவங்க எழும்புங்க. சாப்பாடு கொண்டு வராதவங்களுக்கு மூன்று ரூபா இன்றைக்கு போட மாட்டன்" இது அவருடைய வழமையான தாரக மந்திரம்.

"ஏன் ராமு! நீ இன்னிக்கு சாப்பாடு கொண்டுவரல்லதானே? இந்தா பால்சோறும் சம்பலும். எனக்கு இது கூட நீ கொஞ்சம் எடுத்துக்க" இவரல்லவோ குரு. அறிவுடன் அன்பையும் அள்ளித் தருபவர். எப்ப வேணுமெண்டாலும் உதவி கேட்கச் சொன்னார். இன்னிக்கு கேட்பமா?

சே! கேட்பது அவ்வளவு அழகல்ல. மனம் அலைபாய்கிறது.

"என்ன ராமு! என்ன யோசிக்கிறாய்?"

"இல்ல சேர் இலவசமா உடுப்பு குடுத்திட்டாங்க...." வார்த்தை தொண்டைக்குள் சிக்கியது.

"என்ன ராமு. என்னிடம் சொல்ல ஏன் தயங்குகிறாய்? சொல்லுடா."

"இல்ல சேர். தையல் கூலிக்கு என்ன செய்வது என்றுதான்."

"இதுக்காகவா இவ்வளவு தயக்கம்? நான் உனக்குத் தையற்கூலி தருகிறேன். நீ தைச்சுக்கோ. இந்த உதவியையும் செய்யாவிட்டால் எப்படி?

நீ ஒரு நல்ல கெட்டிக்காரன். நல்ல நிலைக்கு வரவேண்டும். உங்களைப் போன்ற கெட்டித்தனமான ஏழைகளுக்கு, இதெல்லாம் ஒரு வரப்பிரசாதம்."

திங்கட்கிழமை டெய்லர் அண்ணனிடம் கொடுத்து அழகாகத் தைத்துவிட வேண்டும். திங்கட்கிழமை வழமையைவிட எனக்கொரு புதிய நாளாக விடிகிறது. குளிரையும் பாராமல் பீலியிலே குளிக்கிறேன். சுத்தமா தேய்த்துக் குளிக்கிறேன். டெய்லர் அண்ணன் அளவெடுப்பாரே!

"அம்மா! பாலைக் கொஞ்சம் சீக்கிரமா ஊத்தம்மா. நான் ஸ்கூலுக்குச் சீக்கிரமா போகணும்."

"காலில கொதிநீரை ஊத்தினமாதிரி ஏன்தான் இப்படிப் பறக்கிறானோ?"

அம்மாக்கு என்ன தெரியும்? புதிய உடையுள் என்னைப் புகுத்திக் கற்பனை பண்ணிப்பார்க்கிறேன். டேய்! செல்வராஜ்! இம்முறை ஓட்டப்போட்டியில என்னுடைய பெயர்தாண்டா பேப்பர்ல வரும்.

டேய் ராமு! என்னுடைய பேர்ல நீ போய் மாகாணப்போட்டியில தோற்று வந்தியாடா. இனிமேல 'ஒரிஜினல்' ராமு ஜெயிச்சு வருவான்டா. இன்று எனக்குப் பசியும் இல்லை. டெய்லர் அண்ணனிடம் சொல்லி எப்படியும் இரண்டு நாளில உடுப்ப தைச்சு எடுத்திட வேணும்.

அம்மாவின் ஒரே சொத்தான டிரங்குப் பெட்டியைத் திறக்கிறேன். என்ன! துணியைக் காணவில்லையே! ஓகோ! அம்மா கெட்டிக்காரிதான். அவவின் பிள்ளையை புது உடுப்பில் பார்ப்பதற்கு அவவிற்கு துடிப்பு இருக்காதா?

"ஏம்மா எங்க தோட்டத்து டெயிலர் அண்ணகிட்டத்தானே தைக்கக் குடுத்தீங்க?"

"இல்லடா வந்துடா வந்து...."

"என்னம்மா? எங்கம்மா என்னுடைய புதுத்துணி?"

"இப்ப துணிக்கு என்னடா அவசரம்? இன்னும் இரண்டு மாசத்தில இன்னொருக்கா துணி தாற எண்டுதானே சொன்னாங்க."

"அம்மா எனக்கு என்னுடைய துணி வேணும்."

"சும்மா கத்தி ஊரைக் கூப்பிடாதடா. அந்தத் துணியைத் தாற என்று சொல்லி அப்பா போன மாசமே வேலு அண்ணகிட்ட அட்வான்சா காசு வாங்கிட்டார்டா. வேலு அண்ணனும் துணிகுடுத்த அன்னிக்கே வந்து எல்லா துணியையும் வாங்கிட்டுப் போயிட்டார்.

"அம்மா!....." நான் அலறுகிறேன். வானம் அதிருகிறது. நான்..... நான்.... எனக்கு வார்த்தை வரவில்லை.

அப்பாவின் குடியை நிறுத்தத்தெரியாத அம்மா. அது மருந்தென்று ஒத்தாசை புரியும் அம்மா. இந்தத்துணியை அப்பா விற்பதற்கு ஒத்தாசை புரிவது ஒன்றும் புதுமை இல்லையே!

டேய்! செல்வராஜ் கவலைப்படாதடா இம்முறையும் போட்டியில நீதான் ஜெயிப்பாய்.

ராமு! உன்னுடைய படம்தாண்டா பேப்பர்ல வரும். தம்பி! இனிமேலும் வழமைபோல நீ ரெண்டு நாளைக்கு ஸ்கூலுக்கு போ. அதே காற்சட்டை சேட்டைப் போட்டுக்கொண்டு நான் மூணு நாளைக்குப் போறன்.

"ராமு! உங்களைப் போன்ற கெட்டித்தனமான ஏழைகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம்" சேரின் வார்த்தைகள் மனதில் ரீங்காரமிடுகின்றன.

"இல்லை சேர் இல்லை" வரப்பிரசாதமில்லை இது ஒரு சாபக்கேடு. நான் தேம்புகிறேன்."

"கோகிலம்! கோகிலம்!"

"என்ன வேலு அண்ண?"

"இந்தா கோகிலம். இதில நூறு ரூபா இருக்கு வைச்சுக்க. அடுத்தமுறை துணி வெகு சீக்கிரத்தில குடுப்பாங்களாமே, அதையும் எனக்கே தந்திடு. இத அட்வான்சா வைச்சுக்க."

கசிப்பு வடிக்கும் பெருமாள்கள் இருக்கும்வரை, அதை வாங்கிக் குடிக்கும் அப்பாக்கள் இருக்கும்வரை, அதற்கு ஒத்தாசை புரியும் அம்மாக்கள் இருக்கும்வரை, யார்தான் எமக்கு உதவ முன்வந்தாலும் எங்கள் சாபக்கேட்டை மாற்ற யாராலும் முடியாது.

# பசி

## பா. ரஞ்சனி

கிட்டத்தட்ட இரண்டு மைல் தூரத்தை வேகாத வெயிலில் கையில் கனக்கின்ற சுமையோடு கடந்து வந்த அசதி பிடர் பிடித்துத்தள்ள அந்த பஸ்தரிப்பு நிலையத்தை வந்தடைந்தான் வடிவேலு. அவனது வயது தந்த முதிர்ச்சிக்கு இது அதிகப்பட்ச சுமைதான். ஆனாலும் சுமையைப் பார்த்தால் முடியுமா என்ன? இதனால் கிடைக்கப்போகிற ‘சில்லறை’தான் இன்றைய இரவில் அடுப்பை புகைய வைக்கப் போகிறது. பிள்ளைகளின் வாட்டமான முகங்களை நினைக்கையில் மனசில் ஏறுகிற சுமையோடு பார்க்கையில் வடிவேலுவுக்கு இந்த ‘கைச்சுமை’ தூசாகப்பட்டது.

“ம்.... எப்ப இந்த தோட்டத்து கொழுந்துகல்லாம் கருகத் தொடங்கிச்சோ, அன்னிக்குப் பிடிச்ச சனியன் இது! ரெண்டு நாவேள கூலியில என்னத்த செய்யுறதாம்? மத்தவங்களுக்காச்சும் கூலிவேல செய்ய ஒடம்புல வலுவிருக்கு. எனக்கு......? ஏதோ ‘இதுனாலதான்’ கஞ்சியோ கூழோ குடிக்க முடியுது!” தனக்குள் பேசியபடியே அந்தத்திட்டில் குந்திக்கொண்டு முகத்தில் வழிந்த வியர்வையைத் தலைத்துண்டால் அழுந்த துடைத்துக் கொண்டான். அந்த துண்டையே விசிறியாக்கி காற்றை வரவழைத்துக் கொண்டு தற்செயலாகத் திரும்பியவன் மருண்டு போனான்.

“அங்க... வாறது.... பெரியதுரையும் சின்ன தொரையுமில்லயா? ஐய்யய்யோ என்ன செய்யுறது?” என உள்ளுக்குள் பதறியவன் எந்தவொரு தீர்மானத்துக்கும் வருமுன்பாகவே பெரியதுரை அவனருகில் வந்து நின்றார்.

“என்ன வடிவேலு.... டவுனுக்கு போறாப்பல.... இது என்ன பையில?” அவர் சாதாரணமாகத்தான் கேட்டார். இவன் தடுமாறிப்போனான். வடிவேலுவின் பதறலே அவனுக்கு யமனானது. கண்களில் சந்தேகம் மின்ன, பையின் அருகில் வந்த துரை, தன் கைத்தடியால் இலேசாக பையைத் தட்டினார். ஒரு அதிர்ச்சியுடன் சந்தேகப் பார்வையும் கலக்க “பையில என்ன?” அதட்டியமாதிரி கேட்டார். வடிவேலு தலைகுனிந்து நின்றான்.

பையின் அருகில் நெருங்கியவர் பையைத் திறந்தார். “கப்”பென்று மணம் வீச.... பெரியதுரையின் முகம் ரத்தமாய் சிவந்து போனது. கண்களில் ஓர் உக்கிரம் தெரிய சின்னதுரையின் பக்கமாகத் திரும்பி ஆங்கிலத்தில் ஏதோ சொன்னார். அவரும் பையை எட்டிப் பார்த்துவிட்டு அதிர்ச்சியோடு நிமிர்ந்தார்.

“வடிவேலு உண்மையைச் சொல்! எங்கிருந்து உனக்கு இவ்வளவு தேயிலைத்தூள் கெடச்சுது?” வினயமாகக் கேட்டார் துரை. வடிவேலுவின்

தலைநிமிரவில்லை. "ஏய்... கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல மாட்டீயா?" அதட்டினார் சின்னதுரை.

மெதுவாக நிமிர்ந்தான் வடிவேலு. பார்வை நிலைகொள்ளாமல் தடுமாறியது. மெதுவாகச் சொன்னான். "இது.... இது.... எனக்கு எப்பவும் ஸ்டோரில குடுக்கிற தூளு தாங்க."

"ஏய்! வௌயாடறீயா நீ? இவ்வளவு தேயிலயா ஸ்டோரில குடுக்கிறாங்க? அதோட இது ஒண்ணாம் நம்பர் தேயிலயாச்சே.... என்ன ஏமாத்தப் பாக்குறியா? உண்மையைச் சொல்லு. ஸ்டோரிலயிருந்து களவெடுத்தியா நீ.....?"

விசுக்கென நிமிர்ந்தான் வடிவேலு. "ஐயா நா திருடலீங்க! என்ன நம்புங்கய்யா! சத்தியமா நா களவெடுக்கலீங்க" இத்தனை வருட வாழ்க்கையில் சுமந்தேயிராத இந்தக் குற்றச்சாட்டை ஏற்க முடியவில்லை அவனால்.

பெரியதுரைக்கும் தெரியும், நிச்சயமாய் இவன் திருடியிருக்க மாட்டான். ஆனால் "என்னவோ நடந்திருக்கிறதே" தான் ஊகித்ததை சின்னதுரையிடம் சன்னமாக வெளியிட்டார். அவரும் தலையாட்டவே மீண்டும் வடிவேலுவிடம் ஆதரவாகக் கேட்டார்.

"வடிவேலு நீ திருடவும் இல்லை என்கிறாய், இது ஸ்டோரில ஒனக்கு குடுத்த தேயிலயுமில்ல.... அப்படீன்னா.... இது எப்படி ஒனக்கு கெடச்சது? யாரு குடுத்தாங்க.... சொல்லு வடிவேலு....!"

கண்களில் நீர் நிறைய நிமிர்ந்த வடிவேலுவைப் பார்க்க பாவமாக இருந்தது. உதடுகள் நடுங்கியது. ஆனாலும் மனதில் தான் செய்து கொடுத்த சத்தியம் தெரிந்தது. தன் சம்பாத்தியம் பிள்ளைகளின் பசியைத் தீர்க்கப் போதாமையால் அவர்களின் பசியைக் காணப் பொறுக்கமாட்டாமல் என்றைக்கு இந்தப் பாழும் வேலையை செய்யத் தொடங்கினானோ, அப்போ செய்து கொடுத்த சத்தியம் இப்போது நினைவுக்கு வந்தது. "எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் காட்டிக் கொடுக்கமாட்டேன்" என்று செய்துகொண்ட உறுதிமொழி ஞாபகத்துக்கு வந்ததும் பெரியதுரையிடம் இருந்த தன் பார்வையைச் சட்டெனத் திருப்பிக் கொண்டான் வடிவேலு. அவனது இந்தச் செயல் பெரியதுரைக்கு ஆத்திரத்தை வரவழைத்தது. இவ்வளவு நேரமும் கட்டிக்காத்து வந்த பொறுமை சொல்லாமல் கொள்ளாமல் மறைய, தன் கோபத்தை எல்லாம் சேர்த்து ஓங்கி வடிவேலுவின் கன்னத்தில் அறைந்தார். அவன் நிலைகுலைந்து போனாலும் வாயை மாத்திரம் திறக்கவேயில்லை. களைத்துப்போன துரை அவனைத் திட்டியபடி ஜீப்பில் ஏற்றி பொலிசில் சென்று ஒப்படைத்த பின்தான் ஓய்ந்தார்.

சேதி அறிந்ததும் தோட்டத்தில் வடிவேலுவின் குடும்பம் தத்தளித்து விட்டது. நித்திய நோயாளியான வடிவேலுவின் மனைவி காமாட்சி மயங்கியே போனாள். மூத்தவள் பத்மா - பதினைந்தே வயது நிரம்பியவள், மற்றைய நான்கு சின்னஞ்சிறுசுகளும் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்க, தோட்டத்துத் தலைவரிடம் ஓடினாள்.

"தலைவரய்யா.... தலைவரய்யா.... எங்கப்பாவ பொலிசுல வைச்சிருக்காங்களாம்! ஆத்தா இதக்கேட்டதும் மயங்கி விழுந்துருச்சு! நா என்னா பண்ணுவேன்...." புலம்பியபடி தலையில் கை வைத்து அமர்ந்து 'ஓ'வென அழ ஆரம்பித்தாள் பத்மா.

தலைவர் கருப்பையாவுக்கு தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை. பத்மாவுக்கும் விபரமாக எதையும் சொல்லத் தெரியவில்லை. அவளையும் இழுத்துக்கொண்டு எப்படியோ வடிவேலு இருந்த லயத்துக்கு வந்தார் அவர்.

மயக்கம் தெளிந்து அலறிக் கொண்டிருந்த காமாட்சியிடமிருந்து பகீரதப் பிரயத்தனத்தின் பின் விபரங்களைத் தெரிந்து கொண்ட தலைவர் பெரியதுரையிடம் சென்றார். துரைக்கு இருந்த கோபத்தில் தலைவரிடம் பொரிந்து தள்ளினார். கடைசியாகச் சொன்னார்.

"வடிவேலு நல்லவன்னு எனக்குத் தெரியும். சாதாரணத் தொழிலாளியான அவன இங்க யாரோ பயன்படுத்திக்கிறாங்க. உண்மையில தண்டனைய அனுபவிக்க வேண்டியவங்க அந்த "யாரோ"தான். ஆனா, அது யாருன்னு இவன் சொல்ல மறுக்கிறானே கருப்பையா! பொலிசுக்கு இவன பத்தி தெரியாது. அதனால வடிவேலுதா திருடியிருக்கான்னு கேஸ் எழுதப் போறாங்க, இந்தப் பாவிப்பய யார் தேயிலைய குடுத்ததுன்னு சொன்னா இந்த பிரச்சினையேயில்ல. கருப்பையா! நீங்களாச்சும் அவனுக்கு கொஞ்சம் புத்தி சொல்லுங்க."

கருப்பையாவுக்கு ஒன்று மாத்திரம் புரிந்தது. வடிவேலுவின் இந்த "பிசினசு" அவனுடைய வீட்டில் யாருக்குமே தெரியாது என்பதை அவர் திடமாக நம்பினார். எனவே "இது விசயமாக வடிவேலுக்கிட்டதா நாளைக்கு கதைக்கணும்!" என தீர்மானித்துக் கொண்டார்.

நினைத்த மாதிரியே அடுத்த நாள் வடிவேலுவைக் காணச் சென்றார் கருப்பையா. இவரைக் கண்டதுமே கண்கலங்கினான் வடிவேலு!

"தலைவரய்யா.... எனக்கு வந்த கதிய பாத்தீங்களா?"

"என்னப்பா வடிவேலு! இது நீயாவே தேடிக்கிட்டதுதானே! யாரு குடுத்தாக தூளு விக்க சொல்லி? இத சொல்லிப்புட்டீன்னா நீ பாட்டுக்கு வீட்டுக்கு வந்துறலாமில்ல! அத விட்டுப்புட்டு பொட்டச்சியாட்டம் அழுதுட்டா ஆச்சா? சொல்லுவே! யாரு குடுத்தாக.....?"

கரிசனத்தோடு கூறி ஆர்வம் மின்ன அந்த வினாவைத் தொடுத்தார் தலைவர். அவரைப் பார்த்துவிட்டு பெருமூச்சோடு மோட்டுவளையை வெறித்தபடி, சொன்னான் வடிவேலு!

"தலைவரய்யா! அத மட்டும் கேக்காதீங்க! எம்மேல என்ன பழி வந்தாலும் சரி! நா... சத்தியம் தவற மாட்டேய்யா! இந்த செயிலுக்குள்ளேயே மாண்டு போறதுன்னாலும் பரவாயில்ல. நா காட்டிக் குடுத்தவனுங்கிற பேரோட உசிர வச்சுக்கிட்டு இருக்க மாட்டேன்! புள்ளைங்க வயித்துப் பசியில்லாம இருக்கணுமின்னு என்னிக்குப் புத்திக் கெட்டு போயி இந்த வேலய செய்ய ஆரம்பிச்சேனோ, அன்னிக்கு அவுக முன்னால நா செஞ்ச சத்தியமே இதுதாங்க! "என்னைய வெட்டிக் கொன்னாலும் நா காட்டிக் குடுக்கவே மாட்டேன்னு" சத்தியம் பண்ணிப்புட்டு இப்ப நா என்னங்க சொல்லிவிட முடியும்?"

கம்பிகளில் தலையைப் பதித்து அழுதவனைப் பார்க்க தலைவருக்கும் அழுகையாய் வந்தது.

"அழாதப்பா, நம்ம சனங்களுக்கு சொத்துன்னு இருக்கிறதே இந்த சத்தியமும் உண்மையும்தானேப்பா! ஆனா..... அநியாயமா இப்புடி அவஸ்தைப்பட வேண்டியிருக்கே, அத நெனச்சா தா கவலையா இருக்கு! எல்லாத்தையும் மேல இருக்கிற அவனே பாத்துக்கட்டும்!!"

அவனைத் தேற்றியபடி தன்னையும் ஆற்றிக்கொண்டார் தலைவர்! "ஐயா காமாச்சி, புள்ளங்க எல்லாம் எப்படி இருக்காங்கய்யா? அவங்களுக்கு ஒரு வேள கஞ்சி ஊத்த இனிமே யாரிருக்காக?" என்றபடி மீண்டும் கண்கலங்கினான்.

"என்னப்பா நீ! நம்ம சாதி சனங்கள பத்தி என்ன நெனச்சுக்கிட்டு இருக்கிற? ஒரு பருக்கைன்னாலும் பங்கு போட்டு சாப்பிடற சாதியில்ல நம்ம சாதி! அவுகள கவனிச்சுக்க நாம இருக்குறோம். அது சரி நீ சாப்பிட்டியாப்பா?"

ஆதுரத்தோடு கேட்டார் தலைவர்.

"சாப்பாடு தந்தாகய்யா! எனக்குத்தா சாப்புடவே பிடிக்கல. இத்தன வருஷமா நேர்மையா வாழ்ந்த என்னப்பாத்து தொரை "நீ களவெடுத்தியா"ன்னு கேட்டுப்புட்டாரே! இதக் கேட்டுக்கிட்டு கூட நானு உசிரோட இருக்கேனே, எனக்கு சாப்பாடும் ஒரு கேடா?"

மீண்டும் அழ ஆரம்பித்தவனை ஒருவாறு தேற்றிவிட்டு வீடுவந்த தலைவருக்கு தூக்கமே வரவில்லை. "இத எப்புடி தீர்க்கிறது?" என்று யோசித்தபடியே இருந்தவர், விடிந்ததும் இந்த பிரச்சினை தீர்வே காணமுடியாமல் போனதைக் கண்டு நிலைகுலைந்து போனார். எந்த தீர்வுமே காணமுடியாதபடி நிகழ்ந்திருந்தது அது!

ஆம்! வடிவேலு ஜெயிலிலே இறந்துபோனான். தன் மேல் சுமத்தப்பட்ட அபாண்டங்களை சுமக்க மாட்டாமலும், தன் ஈனச்செயலுக்காக தானே கூனிக்குறுகியவனாயும், இறுதிவரை தன் சத்தியத்தையும் கைவிடாமலேயே, தன் குடும்பத்துக்காக எதையும் செய்யமுடியாத கையாலாகத்தனத் தோடேயே மாரடைப்பால் இறந்து போனான்.

தோட்டமே திரண்டு வந்து வடிவேலுவின் காரியத்தை முடித்து வைத்தது. இனி என்ன செய்வது என தீர்மானிக்க முடியாதவராய் களைத்துப் போய் படுத்திருந்தார் தலைவர். ஏதோ சந்தடி கேட்டு எழும்பியவர் வாசலில் தோட்டத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் நிற்பதைக் கண்டார்.

"வாங்க வாங்க.... என்னா விசயம்?" என்றார்.

அவர்கள் வந்து அமர்ந்தனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன் எழும்பி பவ்யமாக கையைக் கட்டியபடி சொல்லத் தொடங்கினான். "ஐயா! வடிவேலு அண்ணே அநியாயமா உசிர விட்டுட்டாருங்க. நெசமாவே செயிலுக்கு போக வேண்டியவுக காலுக்கு மேல கால் போட்டுக்கிட்டு சந்தோஷமா இருக்காக. வடிவேலண்ணே, தன்னோட சத்தியத்த காப்பாத்திக்கிட்டு போயிட்டாரு. இப்ப அவரோட குடும்பம் நடுத்தெருவில் நிக்குதே, இத கேக்க யாரிருக்கா? ஐயா! வடிவேலண்ணே சொல்லாட்டாலும்... அவருக்கு தூளு கொடுத்து விக்கச் சொன்னது யாருன்னு தெரிஞ்சு போச்சு! எல்லா இந்த ஸ்டோர் கீப்பரு செஞ்ச வேலதாங்க. அவங்களுக்கு பெரிய பெரிய மனுஷங்களோட ஆதரவு இருக்கு. அதுனால தப்பிச்சுட்டாக, இப்போ அநியாயமா போனது வடிவேலு குடும்பம்தான்".

அவன் சொல்ல சொல்ல தலைவருக்கும் ஆத்திரமாய் வந்தது. கூடவே அவருக்குள் ஒரு கேள்வியும் எழுந்தது.

"அது சரிப்பா! ஸ்டோரு கீப்பருதா குடுத்திருக்காருன்னு தெரிஞ்சுகினு சும்மா இருந்தீகளா? இப்ப வந்து சொல்றத அன்னிக்கே சொல்லியிருந்தா வடிவேலுவ காப்பாத்தியிருக்கலாமில்ல."

"உண்மைதாய்யா! நாம விசயம் இந்தளவுக்கு போகுமின்னு நெனக்கல. வடிவேலுவோட சாவுக்கு பின்னால தா நமக்கு புத்தி வருது. நம்மள கூலிமாடுகளா நெனச்சுக்கிட்டு எது வேணாலும் செய்யலாமின்னு இருக்காகளேன்னு கோபமா வருதுய்யா! இத இப்புடியே விட்டுடக்கூடாதுன்னு தா எல்லோருமா சேர்ந்து விசயத்த கண்டுபிடிச்சோம். ஐயா! கண்டுங்காணாம விட்டுட்டமின்னா அவங்க தப்பு பண்ணிக்கிட்டேதா இருப்பாங்க! நீங்க பெரிய தொரைக்கிட்ட சொல்லி எதுனாச்சும் செய்யுங்கய்யா"

அவர்கள் விடைபெற்று செல்ல, மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார் கருப்பையா. அடுத்த நாள் பெரியதுரையிடம் விடயத்தை கூறுவது என்ற தீர்மானத்துடன் உறங்கச் சென்றார். பெரியதுரையும் விடயத்தைக் கேட்டதும் யோசித்தார். பின் "நீங்க சொல்றது உண்மையா இருக்கலாம். ஆனா ஸ்டோர் கீப்பர்தான் குடுத்தாருங்கிறதுக்கு என்ன அத்தாட்சி இருக்கு? வடிவேலுக்கிட்ட அவர் தேயில குடுத்தத யாராவது பார்த்தாங்களா? அவங்க வந்து சாட்சி சொல்லுவாங்களா? அப்படீன்னா, நாம மேற்கொண்டு எதுவும் செய்யலாம். அப்படியில்லாம வெறும் சந்தேகத்த வச்சுக்கிட்டு எப்படி இவர தண்டிக்க முடியும்? நீங்களே யோசிச்சு பாருங்க கருப்பையா?" என்றார்.

இதை அப்படியே இளைஞர்களிடம் போய் சொன்னார். கொதித்தெழுந்தார்கள் அவர்கள். "ஆமா, அவரு அப்புடித்தா சொல்லுவாரு ஏன்னா அந்த ஸ்டோரு கீப்பரு தொரையோட சொந்தக்காரனாச்சே! வாங்கடா நாம போவோம் தொரைகிட்ட. இன்னிக்கு ரெண்டுல ஒன்று பாத்துடவேண்டியதுதான்". தடுக்க நினைத்த தலைவரும் முடிவில் அவர்களோடு சேர்ந்து கொண்டார், அவர்களது வாதத்தில் இருந்த நியாயத்தால்.

துரை மசியவில்லை. "சாட்சியில்லாம ஒண்ணும் பண்ணமுடியாது" என்ற பிடியிலேயே இருந்தார். "ஸ்டோர் கீப்பரையே சொல்ல வைக்கிறோம். கூட்டி வாங்கடா அவர" எவனோ ஒருத்தன் கத்தினான்.

பிறகுதான் தெரிந்தது! ஸ்டோர் கீப்பர் தோட்டத்தில் இல்லை!!

தலைவர் கருப்பையா முன்னால் வந்தார்.

"தொரை, எங்க ஸ்டோர் கீப்பர்? நேத்து கூட இருந்தாரே!"

துரை தடுமாறினார். கண்களில் ஒரு பொய்மை படலம் தெரிந்தது!

"ஸ்டோர் கீப்பர் இல்லியா? எனக்குத் தெரியாதே!"

கருப்பையாவுக்கு ஆத்திரம் மேலிட்டது! "தொரை.... ஒங்கள என்னவோ நெனச்சேன். கடேசில நீங்களும் ஒங்க பெரிய மனுஷ புத்திய காட்டிப்பிட்டீங்களே! ஸ்டோர் கீப்பரு ஒங்க சொந்தக்காரங்கிறதால அவருக்கு ஒரு சட்டம். மாடுகளா, அடிமைகளா ஒழைக்கிறதால நமக்கொரு சட்டம் இல்லியா? நல்லாருக்கு தொர. ரொம்ப நல்லாருக்கு.... நீங்க ஒங்க சக்திய காட்டிப்புட்டீங்க, நாம நம்ம பலத்த காட்றோம்.... ஸ்டோரு கீப்பரு வந்தாகணும். இதுக்கு ஒரு முடிவு எடுக்கிற வரைக்கும் நாம இந்த எடத்த விட்டு நகரப்போறதில்ல. ஆமா! எல்லாரும் அப்படியே ஒக்காருங்க. நாளயிலயிருந்து ஒரு பயலும் வேலக்கு போறதில்ல. நடக்கிறத நாமுந்தா பாத்துப்புடுவோம்" ஆவேசமாய் சொன்னபடி அமர்ந்தார்.

கூட்டம் மொத்தமும் அப்படியே அமர்ந்தது. சேதியறிந்த தோட்டத்து சனம் பூராவும் கோஷங்களோடு வந்து சேர்ந்தது.

விடிந்தது! பெரியதுரை வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டார். இளைஞர்கள் கோபத்தோடு அவர் மீது பாய முற்பட்டார்கள். தலைவர் தடுத்தார். "வேணாம், நமக்கு இந்த அடாவடித்தனமெல்லாம் வேணாம். அவரு என்ன செய்யிறாருன்னு பொறுத்திருந்து பார்ப்போம்."

தோட்டமே அங்கே கூடியிருந்தது. பொலிஸ் வந்தது. சுற்றி நின்று காவல் காத்தது. பெரியதுரை வந்தார் போனார். எதுவுமே நடக்கவில்லை.

கூட்டம் சோர்ந்துவிடாது உட்கார்ந்திருந்தது, மூன்றாவது நாளாக! வீடுகளில் போட்டது போட்டபடியிருக்க அடுப்பு மூட்டிய அரவமே இல்லாமல், தங்களுக்கே வந்த சோகமென ஒட்டுமொத்தமாய் அமர்ந்திருந்தது. கூட்டத்தில் காமாட்சியும் குழந்தைகளும் கூட இருந்தார்கள். சீவனேயில்லாமல் சாய்ந்திருந்த தாயை அணைத்தபடி, கண்கள் வீங்கி பார்வையை எங்கோ வெறிக்கவிட்டபடி இருந்தாள் பத்மா, எவருடைய ஆறுதல் மொழிகளுக்கும் அசையாமல் சிலையென அமர்ந்திருந்தாள் அவள்.

தலைவரை தனியே அழைத்த பெரியதுரை "இதப்பாருங்க கருப்பையா! ஸ்டோர் கீப்பர் வேலைய ராஜினாமா பண்ணிட்டாரு. இன்னிக்குத்தான் கடுதாசி அனுப்பியிருக்காரு. நீங்க இப்படி ஒக்காந்து இருக்கிறதால யாருக்கு நஷ்டம்? ஏதோ யோசிச்சு செய்யுங்க" என்றார். எல்லோருக்கும் எரிச்சல்! இந்த துரைதான் ஸ்டோர் கீப்பரை தப்பிக்க வைத்துவிட்டார் என்று ஆத்திரம்!

"தலைவரய்யா! அவரு வேலய விட்டுப்புட்டாருன்னு எப்படி நம்புறது. பெரிய துரை நம்மள ஏமாத்த பாக்குறாரு! நாம இந்த எடத்த விட்டு நகரக்கூடாது!" ஆவேசமாய் கூறினான் ஒருவன். கூட்டமும் ஆமோதித்தபடி மீண்டும் அமர்ந்து கொண்டது.

ம்ஹூம் நாட்கள் நான்காயின! பெரியதுரை தான் சம்பந்தப்படாத விஷயம் மாதிரி நடந்து கொண்டார்.

சிறுவர் எல்லோரும் துவண்டு போயினர். சாப்பாடு, தண்ணீர் எதுவுமில்லாமல் எல்லோரும் ஒன்றாக இருக்கக் கிடைத்த சந்தோஷத்தில் எல்லாவற்றையும் மறந்திருந்த அவர்களுக்கு இப்போ இந்த 'வேலை வெட்டியில்லாத' சந்தோஷம் அலுக்கவும், பசி எட்டிப் பார்த்தது. நச்சரிக்கத் தொடங்கினார்கள்.

"யம்மா! பசிக்குதும்மா" அதட்டலுக்கெல்லாம் அடங்காமல் நச்சரிப்புத் தொடரவே பெண்கள் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். "புள்ளைங்க பாவம்! பசிக்காதா என்ன?" கூட்டம் அமைதியாகியது.

அந்த அமைதியை கிழித்தபடி மீண்டும் ஓர் பையனின் குரல்.

"பசிக்குது ஆத்தா! வூட்டுக்கு போவோமே!!!"

"வடிவேலு மாமாவ அநியாயமா கொன்னுட்டாங்கல்ல! அதப்பத்தி ஒரு முடிவும் தெரியாமே நாம எப்புடி வீட்டுக்கு போறது தம்பி!!" தலைவர் பையனைப் பார்த்து ஆதரவாக சொன்னார். பையன் சட்டென ஆர்வமாய் கேட்டான்.

"தாத்தா.... அப்படீன்னா, நாம இப்புடியே ஒக்காந்து இருந்தா வடிவேலு மாமா இப்ப உசிரோட வருவாரா??!"

கூட்டம் மொத்தமாய் அதிர்ந்தது.

நேரம் நகர்ந்தது. தலைவர் எழுந்தார். துண்டை உதறி தோளில் போட்டபடி லயத்தை நோக்கி நடந்தார். மெதுவாக ஒருவர் பின் ஒருவராக எழும்பத் தொடங்கினார்கள்.

அழுத பையனை அணைத்தபடி "அழாதேடா, வூட்டுக்கு போயி ஆக்கித் தாறேன்" என்றபடி நடந்தாள் ஒரு தாய்.

எல்லோரும் போய்விட்டார்கள். தாயை மடியில் கிடத்தியவாறு வானைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த பத்மாவை அவளது தம்பி கூப்பிட்டான். "யக்காவ் போவோங்க்கா, எனக்கும் பசிக்குது" கூறியபடி ஓடுகின்ற தம்பியை தொடர்ந்து, தாயை எழுப்பி நடத்தியபடி கடைசி ஆளாய் பத்மாவும் கூட லயத்தை நோக்கி......!!!

# சமர்ப்பணம்

## த. மயில்வாகனம்

மூடு பனியை ஊடுருவிக்கொண்டு எனது வெண்ணிற டொயோடா வெகன் கார் கற்பாறை லயத்தை - என் பிறப்பிடத்தை அண்மிக்கிறது.

"டாடி, உங்கள் ஊர் வெளிச்சத்துக்குள்ளும் இருட்டாய் இருக்கிறதல்லவா" எனது மகள் குத்திக்காட்டுவது போல எனக்குப்படுகிறது.

"டாடி....." அவள் மீண்டும் தொடரும் முன்பே, "ப்ளீஸ் டார்லிங் லெட் மீ டிரைவ்" கொஞ்சம் கடுமையாகவே சொல்லி முற்றுப்புள்ளி வைத்து விட்டேன்.

நேரம் மாலை நாலரை ஐந்திருக்கும். நிறைநிறையாக பெண்கள் வெற்றுக் கொழுந்து கூடைகளோடும் - வேலை செய்த களைப்போடும் வந்து கொண்டிருப்பது மங்கலாய்த் தெரிகிறது. மகள் மயூரி வியப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

வீட்டுக்குக் கொஞ்சம் தள்ளி காரை நிறுத்திவிட்டு மகளோடும் மனைவியோடும் வீட்டை அண்மிக்கிறேன். அம்மா வியப்போடு ஓடிவந்து என்னை உச்சி முகர்கிறார். மெழுகு பொம்மையைப் போன்ற என் அழகு மகளைக் கட்டி அணைக்கிறார். எங்கள் குடும்பத்தை நீண்ட நாட்களுக்குப் பின் பார்க்கிற சந்தோஷம். மனைவியை ஆதுரமாகப் பார்த்து "வாம்மா சுலோ, வாங்க சீக்கிரம், கண்ணு கிண்ணு பட்டுட போகுது" சொல்லிக் கொண்டே என் மகள் மயூரியை அழைத்துக்கொண்டு - அணைத்துக் கொண்டு உள்ளே விரைகிறார்.

பாரதியாரின் மீசை மட்டுமல்ல அந்த ஆண்மை, வீரம், நெஞ்சுறுதி, கம்பீரம் எல்லாமே என் அப்பாவின் சிறப்பம்சங்கள். கொஞ்சம் படித்திருந்தாலும் நிறைய அனுபவ அறிவு. தொழிற்சங்க நடவடிக்கைகளில் - வேலை நிறுத்தங்களின்போது தரப்படுகிற பொய்யான வாக்குறுதிகளை இனங்கண்டு கொள்வதில் அவருக்கிருந்த அபாரத் திறமையை வேறு யாரிடமும் நான் கண்டதில்லை. நிறைய எதிர்பார்ப்புகளோடு என்னைப் படிக்க வைத்த அவருக்கு, படிப்பில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கொழும்பில் பெரிய உத்தியோகமும், பணக்காரப் பெண்ணும் அந்தச் சூழலுக்குள் மாறிப்போன நானும் பெரிய ஏமாற்றத்தைத் தந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாத திடமனது அவரது.

மயூரியை அணைத்துக் கொண்ட வண்ணம் சுலோசனாவைப் பார்த்து "வீட்ல எல்லாம் சௌக்கியந்தானே...?" அவள் ஆமென்றவண்ணம் என் அம்மாவோடு அடுப்படிக்குள் நுழைகிறாள்.

எங்கள் லயம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நினைவுச்சின்னம். பக்கத்துக்குப் பத்து வீடாக இருபது வீடுகள். எங்கள் தாத்தாவின் அப்பா காலத்து வரலாற்று சிறப்புடையது எங்கள் வீடு – லயத்து காம்பரா ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், எங்கள் வீடு மட்டும்தான் ஒரே நெட்டாக இரண்டு வீடுகளும் உடையது. அந்தக்காலத்தில் ஐந்து ஆறு பேருக்கு மேல் வேலை செய்தால் மட்டும்தான் அந்த வரப்பிரசாதம். நிறைய தரம் ரீகண்டிஷன் செய்யப்பட்டும் அந்த பழைய 19ஆம் நூற்றாண்டுப் பொலிவை (!) இழக்காதது எங்கள் லயம்.

படுக்கையறை, லிவிங், டைனிங் இத்யாதிகளோடு வாழ்ந்து பழகிவிட்ட என் மனைவிக்கு "நாம் தோட்டத்துக்குப் போகிறோம்" என்றதுமே மூட் அவுட். "அங்கே குளியலறை கிடையாது. மலசல வசதிகூட ஒழுங்காய் இல்லை என்று என்னென்னவோ சாக்குபோக்குச் சொல்லிச் சமாளிக்கப் பார்த்தாலும் கண்டிப்பான அவளின் அப்பாவினது கட்டளையைத் தட்ட முடியாமல் வந்த சுலோ தவிக்கிறாள். மயூரிக்கோ புதிய அனுபவம். நிறைய விஷயங்களை அறியும் ஆவல்.

"இங்க உள்ளவங்க வாழ்க்கைக்கும் சோமாலியாவில் உள்ளவங்க வாழ்க்கைக்கும் நான் பெரிசா எந்த வித்தியாசத்தையும் காணல, ஏன் டாடி சோமாலியாவில உள்ளவங்களுக்கு கொடுக்கிற முக்கியத்துவம் கூட இந்த மக்களுக்கு டி.வி.யில ரேடியோவில தர்றதில்ல?"

"தர்றதில்ல மயூரி, தர வெக்கணும்" கரகரப்பான குரல் கேட்டு நிமிர்ந்து பார்க்கிறேன். என் அக்காவின் மகன் அருண் வந்து நிற்கிறான். இன்னுமோர் புதுமைநாடி இவன். க.பொ.த. உ/த பாஸ் பண்ணிவிட்டு பக்கத்து தோட்டப்பாடசாலையொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றான். பாரதியின் ஏகலைவன் இவன்.

மயூரியைப் பார்த்தவன் "அப்புறம் மயூரி ரொம்ப பெரிய ஆளாயிட்ட" என்று சொல்லி முடிக்குமுன்பே "இவரு மட்டும் என்னவாம் மீசையும் தாடியும் வளத்துகிட்ட அது சரி எங்க படிப்பிக்கிறீங்க பெரிய ஸ்கூலா? நிறைய பிள்ளைக படிக்கிறாங்களா?" என மயூரி கேட்டுக்கொண்டே போக,

"யப்ப யப்பா ஒன்னு ஒன்னா கேளு தாயி" என அருண் இடைமறித்தான்.

"இங்கேயிருந்து அஞ்சு மைல் தூரத்துல உள்ள ஸ்கூல்லதான் படிப்பிக்கிறேன். ஒங்கப்பா புண்ணியத்துல ஒரு சைக்கிள். முன்னூறு புள்ளைங்க! நாலு வாத்தியாரு! எப்படியோ ஓட்டியடிக்கிறோம்".

அவன் முடிக்குமுன்பே,

"என்னது முன்னூறு புள்ளைகளுக்கு நாலு வாத்திமாரா? என்ன அநியாயம்டா இது?" மயூரி அதிர்ந்து போகிறாள்.

“அட நீ ஒண்ணுமா இப்பயாவது நாலு பேரு, முந்தி ஒரே வாத்தியார்னா பாத்துக்கோயேன்” மயூரி இன்னும் மீளவில்லை.

“அநியாயங்களுக்கும் அளவிருக்கணும்” மயூரி தனக்குள்ளே பொரிந்து கொள்கிறாள்.

“அருண் நாளக்கி என்னையும் ஒங்களோட பள்ளிக்கூடத்துக்கு - இந்த தோட்டத்தையெல்லாம் சுத்திப்பார்க்க கூட்டிட்டுப் போறீங்களா?” அருண் சற்றே திகைத்தவனாக என்னைப் பார்க்க அதற்குள் எனது அப்பா

“என்னடா இது நாளக்கி கட்டிக்கப் போறவன்தானே! கூட்டிட்டுத்தான் போயேண்டா.”

மயூரி கன்னங்குழிவிழ நாணத்தோடே சிரிக்கிறாள். மனதுக்குள் நானும் வாழ்த்தி வைக்கிறேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. இரவு தாத்தாவோடு தூங்குகிற அருண் நாங்கள் வந்துவிட்டதால் கொஞ்சதூரம் தள்ளி இருக்கிற எனது அக்காவுக்கு புதிதாக கிடைத்திருக்கிற குவார்ட்டர்ஸில் தங்க போய் விட்டான். இந்த குவார்ட்டர்ஸ் இப்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நவீன வீடமைப்புத் திட்டத்தில் ஒன்று. இரண்டு வீடுகள் கொண்ட ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு படுக்கையறை ஒரு சிறிய வரவேற்பறை, சிறிய குசினி. பெரும்பாலும் ஒருவரும் அதனை பாவிப்பதில்லை. எல்லோருமே தாங்களாக வீட்டுக்குப் பின்னால் மண்ணால் குசினி கட்டிக் கொள்வார்கள். மலசலகூடம் தனியாக இருக்கும். எங்கள் லயத்தோடு ஒப்பிடும்போது இது மிகவும் வசதியுடன் கூடிய வதிவிடம்.

ஞாயிற்றுக்கிழமை காலை சைக்கிளைத் தள்ளிக்கொண்டு அருண் வந்து நிற்கிறான். எனது அம்மா “இருடா கொஞ்சம் இப்பதான் இடியாப்பம் புளுஞ்சி வெச்சிருக்கேன், கொஞ்ச நேரத்தில அவிஞ்சிடும்”. இருப்புக் கொள்ளாத அருண் “பாட்டி நேரமாவுது யாராவது வந்தா சாப்பாடு கொடுத்து அனுப்பு” போகப் புறப்படுகிறான்.

அதுவரை அமைதியாக இருந்த எனது மனைவி சுலோ, “எங்க அருண் ஞாயித்துக்கிழமையும் அதுவுமா” என்று கேட்டவண்ணம் வெளியே வருகிறாள், மயூரியும் உடன் தொடர.

“இல்ல அத்த. இன்னக்கி நானும் மத்த மூணு டீச்சருமா அஞ்சாம் வகுப்பு புள்ளகளுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வெச்சிருக்கிறோம் அதுதான்!”

“ஓ பிரைவெட் டியூஷனா?” மயூரி இடையில் புகுகின்றாள்.

மயூரியை நிமிர்ந்து பார்த்த அருண் “இல்லவே இல்லை மயூரி. இத ஒரு வகைல சேவ மனப்பான்மையோட செய்யிறோம். கொப்பி பென்சில்கூட வாங்க சல்லி இல்லாத ஜனங்ககிட்ட டியூஷன் பீஸ் வாங்கற அளவுக்கு

மனுஷ தன்ம இல்லாதவங்க இல்ல நாங்க. பணம் மட்டும் குறிக்கோளா படிச்சவங்க எல்லாமே வசதி தேடி கொழும்பு கண்டின்னு ஓடிட்டா இந்த ஜனங்கவுட்டு எதிர்காலம் என்னாகும்?....." உணர்வோடு பேசுகிறான். குரலில் உறுதி தொனிக்கிறது.

"ஆமா இவரு பெரிய ஒபகாரி கையில நாலு துட்டு இல்ல. ஆனா சேவக்கி மட்டும் கொறச்சலில்லை" எனது அக்கா புலம்புகிறாள்.

"பணம் என்னடா பணம் பணம்?" பாடலோடு எனது இரண்டாவது அண்ணன் தனது மாளிகையிலிருந்து வருகிறான். இவனுக்கு என்னைவிட ஒரு வயதுதான் கூட. ஆனால் தனக்குள் விவேகானந்தரை பதித்துவைத்து அவர் கூறிய வண்ணமே நடக்கத்தலைப்பட்டு பலரது விமர்சனத்திற்கு ஆளானவன். வீட்டையொட்டி இருக்கிற மரக்கறித் தோட்டத்திலே பழைய மாட்டுப்பட்டியொன்றைத் திருத்தி தனது மாளிகையாக்கி வாழ்பவன். வீட்டோடு இருந்தால் நண்பர்களோடு வாதவிவாதங்களில் ஈடுபட முடியாது என்பதற்காகவே தனியாகிப் போனவன் அவன். குடும்பம், மனைவி, மக்கள் இந்த பந்தங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட பிரம்மச்சாரி. இவனிடம் கட்டு கட்டாய் நிறைய நாடகப் பிரதிகள் இருக்கும். பல சமூக நாடகங்களை வெற்றியோடு மேடையேற்றியவன். இன்றும்கூட 'வீர லெச்சுமணன்' நாடகம் போடுகிறான்.

சுலோசனாவைப் பார்த்து ஒரு மெல்லிய புன்முறுவலோடு "சொகமா இருக்கியா அம்மா. நேத்து நாடகத்து கடைசி ஒத்திகை விடியகிட்டதான் முடிஞ்சுது. அதனால வந்து பாக்க முடியல. எங்க சின்ன தம்பி உள்ளுக்கா இருக்கான்?" என்று கூறியவண்ணம் உள்ளே வந்து என்னைத் தழுவிக் கொள்கிறான். நாங்கள் அண்ணன் தம்பி என்பதை விட நல்ல நண்பர்களாகத்தான் இருந்திருக்கிறோம் என்பதே உண்மை.

"பெரீப்பா ஒங்க நாடகம் ராமாயணத்தில வர்ற லெட்சுமணனை பத்தினதா?" மயூரி ஆவலோடு வினவுகிறாள்.

"அட நீ ஒண்ணுமா அதுக்கெல்லாம் கிருபானந்த வாரியார் அவுங்க இவுங்கன்னு ஏராளமா ஆளுங்க இருக்காங்க. இந்த லெச்சுமணன் எங்களோட வாழ்ந்து எங்களுக்காக உயிர தியாகம் செய்த டைவன் லெச்சுமணன். இன்னக்கி கொலனிகாரங்கள் கிட்டயிருந்து தப்பிச்சி நிம்மதியா இருக்கோம்னா அது அவனாலதாம்மா. அந்த போராட்டத்திலே அவன் உயிர் நின்னு போனதோடே நெலம் அளக்கிறதும் நின்னுபோச்சி" அண்ணனின் கண்கள் ஓரத்தில் பனிக்கின்றன.

"ஏம்மா மயூரி அருண்கிட்ட சொன்னியாமே தோட்டத்தெல்லாம் சுத்தி காட்டச் சொல்லி. நா எதுக்குமா இருக்கேன். வா ஒரு சுத்து சுத்திட்டு

வருவோம்" என்றவாறு மயூரியோடு என் அண்ணன் பார்த்திபன் நடக்கத் தொடங்குகிறான்.

இரவு கோயில் முன்றலில்... ஜன வெள்ளத்தில்.... குறிப்பிட்ட நேரத்துக்கு தொழிலாளி ஒருவர் விளக்கேற்றி வைக்க நாடகம் ஆரம்பாகிவிட்டது. எழுபதுகளின் பஞ்சம் - கியூ வரிசை - வீதியோர பட்டினிச் சாவுகள் என்று அந்த அரசாங்க காலத்தில் மலையக மக்கள் அனுபவித்த வேதனைமிக்க அனுபவங்களை எல்லாம் பின்னணித் திரைகளில் வரைந்து அன்றைய காலகட்டத்தை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தி வைத்திருந்தனர். எனக்குப்பெரிய அதிர்ச்சி என்னவென்றால் நாடகத்தில் அருண்தான் கதாநாயகன் - லெச்சுமணன். மிக இயல்பாக நடித்துக் கொண்டிருக்கிறான் கொஞ்சம்கூட அலட்டிக்கொள்ளாமல்.

இறுதியில் பொலிஸின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்கான லெச்சுமணனின் உடல் ரத்த வெள்ளத்தில் மிதக்கிறது. பார்த்துக் கொண்டிருந்த ஜனங்களுக்குள் ஏதோ புதிய பிரவாகம். "லெச்சுமணன் வாழ்க" வானதிர கோஷம் மலைகளுக்குள் எதிரொலிக்கிறது. எல்லாவற்றையும்விட எனக்குள் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது நாடகத்தின் பின்பகுதிதான்.

தொழிற்சங்கத் தலைவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள். காலம் கழிகிறது. லெச்சுமணனின் புதைகுழியே மறந்துவிடுகிறது அவர்களுக்கு. திடீரென லெச்சுமணன் ஆவியாக வந்து அவையோரை நோக்குகிறான்: "மகா ஜனங்களே! என்னருமைத் தொழிலாளத் தோழர்களே! எப்போதெல்லாம் அதர்மம் தலையெடுக்கிறதோ அப்போதெல்லாம் ஒன்றல்ல ஆயிரமாயிரம் லெச்சுமணர்கள் உருவாக வேண்டும் - உருவாகுவார்கள் - அதுவரை முதலைக்கண்ணீர் வடிப்பவர்களின் வார்த்தைகளில் ஏமாந்து போகாதீர்கள்." ஆவி மறைந்து விடுகிறது. நாடகம் முடிகிறது. அருணுக்கு பாராட்டுகளும், பரிசுகளும் குவிகின்றன. என்னோடு சுலோவும் மயூரியும் முன் வரிசையில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர். விருட்டென எழுந்த மயூரி அருணை கைகுலுக்கிப் பாராட்டுகிறாள் - அவனும் அதற்கே காத்திருந்தவன் போல நெகிழ்ந்து போகிறான்.

மறுநாள் கொழும்புக்குப் புறப்பட்டு விட்டோம். வழி நெடுக மயூரிக்கு அருண் புராணம்தான்.

அன்று வேலைவிட்டு வீடு திரும்பிய எனக்கு வீட்டுக்குள் ஏதோ ஒரு பெரிய பூகம்ப பிரச்சினை உருவான சந்தடி கேட்கிறது. நடுவே என் மாமனார் அமர்ந்திருக்க ஒரு பக்கம் சுலோவும் மறுபக்கம் மயூரியும் பெரிய வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் வந்ததும் வராததுமாக சுலோ அழ ஆரம்பிக்கிறாள்.

“பாத்தீங்களா? இவ மயூரி பேசறத. ஹப்புத்தளயில எக்கவுன்டன்ட் ஜொப்புக்கு எப்ளை பண்ணி இப்போ போகவும் போறாளாம். அங்க போயி அருணோட சேந்து சமூக சேவை இன்னும் என்னமோவெல்லாம் செய்யப் போறாளாம். நா அப்பவே சொன்னே இவள எங்கேயும் கூட்டிட்டு போக வேணான்னு கேட்டீங்களா” என்று ஒப்பாரி வைக்கிறாள்.

மயூரியைப் பார்க்கிறேன். அமைதியாக - தெளிவாக இருக்கிறாள். “என்னம்மா இதெல்லாம்?.....” நான் முடிக்குமுன்பே “அருணோட சேர்ந்து மலையக மக்களுக்காக உழைக்கப் போகிறேன்” என்கிறாள் மயூரி.

எதை எப்படிச் சொல்வது? எனக்குள் எழுந்தது சோகமா அல்லது ‘புதியதோர் உலகம் செய்வோம்’ எனப் புறப்பட்டவளை எண்ணிய மகிழ்ச்சியா?

“நீ போம்மா” குரல் வந்த திக்கை வியப்போடு நானும் சுலோவும் பார்க்கிறோம். அது என் மாமனார்தான்.

“மலயக மண்ணு மிஞ்சி இருக்கிறதே அருண் மாதிரி ஆளுகளாலதான். அந்த மண்ண செழிக்க வைக்கணும்னா மயூரி மாதிரி ஆளுக அதுல சேரணும். நீ போம்மா” ஒரு உறுதியோடு நீதிபதியைப் போல சொல்லி முடிக்கிறார்.

மயூரி துள்ளிக்குதித்து ஓடுகிறாள். என் கண்களின் ஓரத்தில் பனிக்கிறது ஆனந்தத்தின் அடையாளமாய்! அவள் பாதப்பதிவுகளைப் பார்த்துப் பிரமிக்கிறேன்.

# சட்டி சுட்டுவிடும்

ரோஹினி முத்தையா

தேயிலை மலையிலிருந்து மாணிக்கம் தலைதெறிக்க ஓடி வந்தான்.

"நம்ம கன்னையாவ பாம்பு கடிச்சிருச்சி. புல்லு வெட்டிக்கிட்டு இருக்குறப்ப விரியன் கடிச்சிருச்சாம். பின்னால தூக்கிட்டு வாராங்க" என்ற மாணிக்கத்தின் பதற்றம் கேட்டவர்களையும் தொற்றிக் கொண்டது. அதற்குள் கன்னையாவை இருவர் சுமந்துவந்து அந்த எஸ்டேட்டின் வைத்தியசாலையில் கிடத்தினர். வைத்தியர் தேவையான முதலுதவிகளைச் செய்தாலும் உடனடியாக நகர வைத்தியசாலைக்குக் கொண்டுபோகும்படி கூறிவிட்டார். அதற்குப்பிறகுதான் எல்லோரும் அங்குமிங்கும் ஓடுகிறார்கள்.

"ஐயையோ! தோட்டத்து லொறியும் காலயிலயே டவுனுக்குப் போயிருச்சே. இப்ப என்ன செய்யிறது" என எல்லோரும் பதறியபடி நிற்க, ஆபத்பாந்தவனாய் அத்தோட்ட முகாமையாளரின் கார் வந்து நிற்கிறது. காரின் பின் இருக்கையில் முகாமையாளரோடு அவரின் மனைவியும் அலங்கார பூஷிதையாய் அமர்ந்திருக்க டிரைவர் தலையை காருக்கு வெளியில் நீட்டி விபரமறிய விழைகிறான். அதற்குள் யாரோ நிலைமையை எடுத்துச்சொல்ல முகாமையாளரது மனம் கணக்கு போடுகிறது. பாம்பு கடித்தவனை காரில் ஏற்றினால் அவனுக்குத் துணையாக இரண்டு மூன்று பேர் வருவார்கள்; பிறகு நாம் கல்யாணத்திற்கு போன மாதிரிதான் என அவரது அன்பு மனைவியும் காதைக் கடிக்க, டொக்டரை அருகில் அழைத்து ஆங்கிலத்தில் ஏதோ கதைக்கிறார். டொக்டரும் கோயில் மாடாய் தலையை ஆட்டிக் கொண்டு நிற்க, புரியாத அவர்கள் பேச்சை வாய்பிளந்து கேட்டபடி கூட்டம் நிற்கிறது.

பேச்சு முடிய கார் 'விர்'ரெனப் பறக்கிறது. "அவுங்க அவசரமா போகணுமாம், போற வழியிலே எம்புலன்ஸுக்கு சொல்லிட்டுப் போறாங்களாம்; அது வந்து ஏத்திகிட்டு போகும்; நோயாளிய எம்புலன்ஸுலதானே கொண்டு போகணும்" என டொக்டரும் முகாமையாளருக்கு சரியாய் தாளம் போடுகிறார். கூட்டம் எதுவும் செய்ய இயலாது முணுமுணுத்தபடி நிற்கிறது.

அந்த எஸ்டேட்! போக்குவரத்து மற்றும் எல்லா வசதிகளிலுமே பின்தங்கித்தான் இருந்தது. ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் தலைகாட்டும் பஸ் சில நாட்களில் அதுவுமின்றி காலை வாரிவிடும். எந்த வேலைக்கும் 'நடை'வண்டிதான். எஸ்டேட் தேவைகளுக்கென ஒரு வாகனம் வழங்கப்பட்டிருந்தது. அதைவிட பக்கத்து எஸ்டேட்டுக்கும் இதற்கும் என சேர்த்து ஒரு 'எம்புலன்ஸ்' வழங்கப்பட்டிருந்தது. அதுவும் கூட பக்கத்து 'எஸ்டேட்'டின் பொறுப்புதான். பரம்பரையாய் அங்கு காலம்

தள்ளுபவர்கள் கூட நடந்து போவது வருவதைத்தான் பெருமையாய் பீற்றிக் கொள்வார்களே தவிர இதைப் பற்றியெல்லாம் அவர்கள் அக்கறைப்பட்டுக் கொண்டதில்லை. இப்படி ஏதாவது அவசர சமயங்களில் மட்டும் தடுமாறுவார்கள்.

தோட்ட முகாமையாளர் சொன்னபடி ஒரு மணி நேரம் கழித்து கன்னையாவை ஏற்றிக்கொண்டு போக 'எம்புலன்ஸ்' வந்ததுதான் மிச்சம். பாதி வழியிலேயே கன்னையா தன் வாழ்வை முடித்துக் கொண்டுவிட்டான். இடுப்பிலொன்றும் வயிற்றிலொன்றுமாய் குழந்தைகளை சுமந்து கொண்டு கன்னையாவின் மனைவி கதறிய கதறல் சுற்றி நின்றிருந்தவர்களையெல்லாம் உலுக்கியது. "அவசரத்துக்கு கூட உதவாத இந்த துரை எங்களுக்குத் தேவையில்ல" என இளைஞர் பட்டாளம் வீராவேசமாய் முழங்கியது. கன்னையாவின் நல்லடக்கத்தைத் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். "இந்தத் துரையை அனுப்புற வரைக்கும் யாரும் வேலைக்குப் போவதில்லை. மனிதத்தன்மையில்லாத இவன் எங்களுக்குத் தேவையில்லை" என கோஷமிட்டபடி முகாமையாளரது வாகனம் செல்லும்போது கல்லெறிந்து தம் எதிர்ப்பைக் காட்டினர். அவர்களது ஆவேசத்தைக் கண்டு முகாமையாளர் அரண்டு போனதால் சட்டப்படி தனக்கு பாதுகாப்பைத் தேடிக் கொள்கிறார். எந்நேரமும் போலீஸ் பாதுகாப்போடு பங்களாவினுள் அடைக்கலமானார். ஆவேசம் இருந்தளவு அறிவுபூர்வமாகச் சிந்தித்து செயலாற்ற முடியாத கூட்டம் மௌனமாய் தன் வேலைநிறுத்தத்தைத் தொடர்கிறது.

வேளா வேளைக்கு உணவு, உயர்ரக குடிவகை என உபசரிக்கப்பட்ட போலீஸாரும் முகாமையாளருக்கு விசுவாசமாய் உழைத்தனர். பற்றாக் குறைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு வேறு அறிவுரை வழங்கினர். "இந்த ரோட்டு செய்யணும்; ஸ்கூல் கட்டணும்னு முயற்சி செய்யாமே.... தேவையில்லாம ஏன் ஸ்டிரைக் பண்ணுறீங்க. உருப்படியா எதையாவது செய்யப் பாருங்க" என சிங்களம் கலந்த அரைகுறை தமிழில் போலீஸார் மொழிந்தது சிலருக்கு உறைத்தது.

தொடர்ந்து ஒரு வார கால வேலைநிறுத்தம் சில 'பெரிசு'களை முணுமுணுக்க வைத்தது. வாரந்தோறும் புதன்கிழமை கிடைக்கும் அரிசி, மா என்பன அந்த வாரம் கிடைக்காது போனதால் பல தொழிலாளர் வீட்டு அடுப்படிகளில் பூனை உறங்கியது. 'பசி வந்திட பத்தும் பறந்து போகும்' என்பதை நிரூபிப்பதாய் பெரியவர்களின் அங்கலாய்ப்பு கேட்டது. "வாகனம் கெடைக்காமலா கன்னையா செத்தான்? அவன் விதி அவ்வளவுதான். பாம்பு கடிச்சு சாகணும்னு அவன் தலையெழுத்து போய்ச் சேர்ந்தான்" என கிழவர்கள் முணுமுணுக்க அவர்களுக்கு சார்பாக கிழவிகளும் தொணதொணத்தனர்.

"இப்ப இவனுங்க எல்லாரையும் பட்டினி போட்டு கொன்னுடுவாங்க போலருக்கே. புருசன பறிகொடுத்துட்டு இருக்குற புள்ளதாய்ச்சிய காப்பாத்த நம்மளாவது நல்லாருக்க வேணாமா" என கன்னையாவின் தாயாரே புலம்பியபோது வேலைநிறுத்தம் செய்வோரின் மன உறுதி சிறிது ஆட்டம் கண்டது. "முப்பது நாளும் வேல செஞ்சே வயிறார சாப்புட முடியாது, இதுல வேல ஸ்டுரைக்கு அது இதுன்னு...." என மூலைக்கொருவராய் முனகியது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த இளைஞரையும் மனம் மாற வைத்தது.

வேலைநிறுத்தம் செய்வது சரி, ஆனால் சாப்பாட்டுக்கு என்ன வழி? ஒவ்வொரு நாளும் வேலை செய்தால்தானே சம்பளம்... இப்போதே ஆறு நாட்களாய் வேலையில்லை. ஒரு நாளைக்கு எழுபத்து ரெண்டு ரூபாபடி இப்போதே எவ்வளவு நட்டம்? என ஒவ்வொருவரும் மனக்கணக்கு போட ஆரம்பித்தனர். தங்களுக்குள் தளர்வடைந்தாலும் வரட்டுப் பிடிவாதத்தில் பெரியவர்களைக் கடிந்து கொண்டனர். முக்கியமாய் மாணிக்கம் வெகு மும்முரமாய் கோஷமிட்டான்; போஸ்டர்கள் எழுதினான் என்றாலும் வருமானமில்லாத அவர்கள் வாழ்க்கை அவர்களைத் தளர வைத்தது.

உயரதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையிலும் ஒரு முடிவு கிடைக்காது காலதாமதம் ஏற்பட்டபோது பட்டினி பலரையும் தாலாட்டத் தொடங்கியிருந்தது. அடுத்த வாரமும் அரிசி, மா கிடைக்காத நிலைமை அவர்களால் சமாளிக்க முடியாதளவுக்குப் போனதால் வேலை நிறுத்தம் புஸ்வாணமாய் போனதுதான் மிச்சமானது. மறுபேச்சின்றி தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு மீண்டும் வேலை செய்யக் கிளம்பியபோது தோட்ட முகாமையாளர் வெற்றிப் புன்னகை செய்தார். நியாயம் அவர்கள் பக்கமிருந்தும் அதை நிலைநாட்ட முடியாதவர்களாய் அவர்கள் நின்றபோது பரிதாபப்படத்தான் முடிந்தது.

நியாயம் பேசினால் தாங்களும் தோட்ட முகாமையாளரின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் உத்தியோகத்தர்களும் உள்ளுக்குள் நத்தையாய் சுருண்டனர்.

யார் வாழ்ந்தாலும் எவர் தாழ்ந்தாலும் காலம் தன் கடமையில் தவறுவதே இல்லை. நாட்களை வாரங்களாய் மாதங்களாய் விழுங்கி விட்டிருந்தது.

அடுத்து சில மாதங்கள் அமைதியாய் கழிந்தாலும், வேலைநிறுத்தத்தில் மும்முரமாய் செயற்பட்டவர்களின் மேல் தோட்ட முகாமையாளர் ஒரு கண் வைத்தே இருந்தார். அதற்கு ஒரு சந்தர்ப்பமாய் அந்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால், அநேகமானோர் நகரத்தை நோக்கிப் படையெடுத்திருந்தனர். அன்றும் டொக்டர், நர்ஸ், டிரைவர் என எல்லோரும் எஸ்டேட்டை விட்டு வெளியேறிவிட்ட நிலையில் மாணிக்கத்துக்கு சோதனை மனைவியின்

மூலம் வந்தது. பிரசவ வேதனையில் துடித்த மனைவியைப் பார்க்க மருத்துவர் இல்லாது திண்டாடிப் போனான் மாணிக்கம். நகர வைத்தியசாலைக்குப் போக வாகனமிருந்தும் டிரைவர் இல்லாது போனதுதான் மிகப்பெரிய சோதனையானது.

பக்கத்து எஸ்டேட்டிலுள்ள எம்புலன்ஸுக்காக அவசர செய்தி யனுப்புவதென்றாலும் தொலைபேசி என்பதெல்லாம் இன்னும் அங்கு அறிமுகமாகாத ஒன்று. வாகனம் என்பது தோட்ட முகாமையாளரிடம் மட்டுமே இருந்ததால் பரபரத்து ஓடி நிலைமையைப் பதறியபடி விளக்கினான் மாணிக்கம்.

அமைதியாய் செவிமடுத்தவர் சாவதானமாய் கூறிய பதில் மாணிக்கத்துக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது. "காருதானே வேணும். எடுத்துக்க டிரைவர் லீவுல போய்ட்டான் நாளைக்குத்தான் வருவான்" என அவர் கேலியாகச் சிரித்தபோது, அவர் அவனைப் பழிவாங்கி விட்டது மாணிக்கத்துக்கு மட்டுமல்ல உடன் வந்தவர்களுக்கும் கூட புரிந்தது. ஆனால் எதுவும் செய்ய இயலாத கையாலாகாத்தனத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

ஐந்து மைல் தொலைவிலிருக்கும் அடுத்த எஸ்டேட்டுக்குப் போய் எம்புலன்ஸைக் கொண்டு வரும்வரை கூட அவள் தாக்குப் பிடிக்கமாட்டாள் என்பது தெரிந்தும் கடைசி முயற்சியாய் அங்கும் இருவர் ஓடினர். அவர்கள் திரும்பும் முன், எதுவும் முடியாது எல்லோரும் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே தாயும் சேயும் கண்களை நிரந்தரமாய் மூடிக்கொண்டனர்.

"இதுதான் நான் அன்னைக்கே அவனுக்கு சொன்னேன். துரையை பகைச்சுக்காதடா ஒரு நாள் இல்லேன்னா இன்னொரு நேரத்துக்கு அவரு ஒதவி நமக்கு தேவப்படுமுன்னு தலையால அடிச்சிகிட்டேன் கேட்டானா?" என இறந்து போன கன்னையாவின் தந்தையே நாக்கில் நரம்பின்றி விமர்சித்தபோது மாணிக்கத்துக்கு 'சுருக்'கென்று தைத்தது. இவர்களுக்காக அவரை பகைத்துக்கொண்டது முட்டாள்தனமாகப்பட்டது. பற்றாக் குறைக்கு கன்னையாவின் மனைவி வேறு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தாள். "அவரு போய்ட்டாலும் இந்த மகராசன் தொரையால நானும் புள்ளைகளும் ஒரு கொறையுமில்லாம இருக்குறோம்" என முகாமை யாளரை வாயார வாழ்த்தியது மாணிக்கத்துக்கு எரிச்சலாய் இருந்தது. அவளுக்கென்ன? பிள்ளைக் காப்பகத்தில் வேலை கிடைத்தது வசதியாய் வாழ வைக்கிறது. அவரவர்க்கு வசதி கிடைத்தபிறகு மற்றதெல்லாம் இரண்டாம் பட்சமாகி விடுவது மாணிக்கத்துக்கு அப்போதுதான் புரிந்தது.

மாணிக்கத்தின் மனைவியை அடக்கம் செய்யும்போதே அவனைச் சேர்ந்தவர்கள் கொதித்தார்கள். "இதோட எத்தன முற தொர அவனோட

பணக்கார திமிர காட்டிட்டான்! இந்த முற அவனை வெரட்டாம விடுறதில்ல. பட்டினி கெடந்து செத்தாலும் பரவாயில்ல. அவன் போறவரைக்கும் 'ஸ்டுரைக்கு பண்ணனும்' என வீரமுழக்கம் செய்ததைப் பார்க்க மாணிக்கத்துக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது. இந்தக் கொதிப்பு எத்தனை நாளைக்கு? ஒரு வாரத்துக்கோ அல்லது ஒரு மாதத்துக்கோ இருக்கும். வசதி கிடைத்தவுடன் கன்னையாவின் மனைவி போலவோ தந்தையைப் போலவோ நாக்கு நாலா பக்கமும் புரண்டு பேசும் என நினைக்க வெறுப்பு வந்தது.

சிந்தித்துப் பார்த்ததில் அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை எனத் தோன்றியது.

பணம், படிப்பு, பதவி என எல்லா வகையிலும் உயர்ந்தவர்களால் எதையும் சாதிக்க முடிகிறது. ஆனால் படிப்புமில்லாது, உழைத்தால்தான் ஒவ்வொரு நாளும் உணவு என வாழ்க்கையை ஓட்டும் தொழிலாளர் வர்க்கம் என்ன செய்யும்? எல்லோரும் ஒரே நோக்கில் ஒற்றுமையாய் இருந்தாலாவது எதையாவது சாதிக்கலாம். ஆனால் அதற்கும்தான், ஒன்று மேட்டுக்கிழுத்தால் மற்றது பள்ளத்துக்கிழுக்கும்போது என்ன செய்வது?

இதெல்லாம் அந்த நேரத்துக்கு எழும்பும் கொதிப்பு, அது உடனே அடங்கிவிடும் அல்லது அடக்கப்பட்டு விடும் என்பது புரிந்தவனாய், வேலை நிறுத்தம் செய்யத் திட்டமிட்டிருக்கும் கூட்டத்தினின்றும் விலகி நடக்கிறான் மாணிக்கம்.

# இது ஒன்றும் புதிதல்ல

## செல்வி. இ. இமானுவேல்

மார்கழி தொடங்க இன்னும் சில நாட்களே இருந்தாலும் பனியின் ஆக்கிரமிப்பு அந்த வைகறைப்பொழுதில் அதிகமாகவே காணப்பட்டது. இன்னும் இருள் மண்டி அந்த அதிகாலையிலும் இரவுபோல காட்சியளிக்கச் செய்தது.

பொழுது புலர்வதை அறியாது ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியிருந்த சிவம்மையை பீலி அடியில் நிறைந்திருந்த பெண்களின் ஆரவாரம் தட்டி எழுப்பியது. சோம்பல் முறித்தவாறு எழ முயன்ற சிவம்மையை அவளின் மார்பில் கிடந்த கணவனின் கை தடுத்தது. இரவு பட்ட அடிகளினால் உடம்பு கனத்தது. எரிச்சலாக இருந்தது. கையை விலக்கிவிட்டு எழுந்தவள் காலின் அடியில் கிடந்த இளையமகன் கண்ணப்பனைத் தன் படுக்கையில் கிடத்திவிட்டு உடையைச் சரி செய்து கொண்டாள். அடுப்படிப்பக்கம் திரும்பியவள் அடுப்பில் இருந்து கரித்துண்டொன்றை எடுத்து வாயில் போட்டவாறே தேநீருக்கு தண்ணீரை ஊற்றி கொதிக்க வைக்கும்போது இன்று தோட்டத்திற்கு சிறிது நேரத்தோடு வருமாறு கங்காணி கூறியது நினைவுக்கு வரவே சிறிது சுறுசுறுப்பானாள். குடத்தை இடுப்பில் ஏந்தியவாறே பீலி அடிக்கு விரைந்தாள்.

பனிக்காற்று நடுங்கச் செய்தது. பீலி அடியில் கூட்டம் குறைந்திருந்தது. சுறுசுறுப்பாக கழுவ முனைந்தவள் நீரை அள்ளியவுடன் கைகள் மரத்துப்போனதை உணர்ந்தாள். சமாளித்தவாறே காலைக்கடனை முடித்து நீரையும் குடத்தில் எடுத்துக்கொண்டு வரும்போது காகங்களினதும், வண்டுகளினதும் இரைச்சல் பொழுது சீக்கிரமாகவே புலரப் போவதை உணர்த்தியது. பயத்துடனேயே விரைவாக நடையைக் கட்டினாள்.

கணவன் நித்திரை விட்டு இன்னும் எழும்பாததைக் கண்டு ஒருவித மனநிறைவுடன் வீட்டினுள் நுழைந்தாள். கொதித்திருந்த நீரில் தேனீரைத் தயாரித்து வைத்துவிட்டு செம்பில் நீருடன் கணவனை எழுப்பச் சென்றாள். தட்டி எழுப்பியதும் பொழுது விடிந்ததுக்காக முனங்கிக் கொண்டு முந்திய இரவின் குடி மயக்கம் தெளிவதை விரும்பாதவனாக மறுபக்கம் திரும்பிப் படுத்தவனை எரிச்சலோடு மீண்டும் தட்டி தேனீரை தந்துவிட்டு மூத்தவள் கண்ணம்மையை தட்டவே ஏற்கனவே பெற்றோரின் சம்பாஷணையில் விழித்திருந்தவள் உடனேயே எழுந்துவிட்டாள்.

உள்ளே சென்றவள் வாயைக் கொப்பளித்தவாறே நேற்று இரவு தாய் பள்ளிக்குச் செல்லவேண்டாம் என்று கூறியிருந்ததை நினைவுபடுத்தினாள். “அம்மா, இன்னைக்கு பள்ளிக்கு வராட்டி உணவுக் கூப்பனை வெட்டி விடுவாங்களாம்” என்றபோது “திக்” என்றிருந்தது சிவம்மைக்கு.

வீட்டுத்தேவையில் சிறிதளவாவது நிறைவேற்றுவது அந்தக் கூப்பனே, அதுவும் இல்லாவிட்டால் என்ன செய்வது? இன்று வழமையாகக் கவனிக்கும் அடுத்தவீட்டு ஆயி நேற்று மகன் வீட்டுக்குப் போய்விட்டாள். அவள் திரும்பி வர இரண்டு நாட்கள் ஆகும். அதுவரை கஸ்டமாகத்தான் இருக்கும். தனக்கும் வீட்டில் இருக்கமுடியாது.

கணவனின் உதவி இந்த நேரத்தில் கூட பெறமுடியாது. ஆண் என்ற பெருமை இந்த பத்து வருட தாம்பத்தியத்தில் அவள் படும் அவஸ்தை மட்டும்தான்.

மகளுக்குப் பதில் கூறாது சிந்தித்தவாறே காலை உணவுக்கு ஆயத்தப்படுத்தினாள். இன்று பகல் வீட்டுக்கு வரமுடியாது. புதிய மலையில் வேலை இருப்பதால் அதற்கு நேரம் இருக்காது. ரொட்டியைச் சுட்டு பகிர்ந்து வைத்து விட்டு தனக்குப் பசியில்லை என்பதால் எடுத்து வைத்தாள்.

கொங்காணியையும் கூடையையும் எடுக்கும்போது முறைத்துப் பார்க்கும் கணவனைப் பொருட்படுத்தாது பிள்ளைகளுக்கு சொல்லிவிட்டு வேகமாக வெளியில் இறங்கி நடந்தாள். இரவு பட்ட அடியை உடம்பு வலி நினைப்பூட்டியது. இருந்தாலும் தோளின் பாரம் கனத்தாலும் மடியின் பாரம் இல்லை என்பதால் கனப்பது பொருட்டாகப்படவில்லை.

தூரத்திலேயே கூட்டம் தனக்கு முன் கூடிவிட்டதைப் பார்த்து மனம் லேசாக கனத்தது. எல்லோருக்கும் வேலை கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்தது.

கங்காணி பெயரை அழைத்து அழைத்து அவரவரை வேலைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்.

நீண்டவரிசை என்பதால் சிறிது சிறிதாகவே வரிசை குறைந்துகொண்டு வந்தது.

இவளுக்கு முன் ஆறாவதாக நின்ற அடுத்த லயத்து கருப்பாயியின் முறையுடன் கங்காணி வேலை கொடுப்பதை முடித்துவிட்டு நகர்ந்தார்.

பின்னால் சென்று சிவம்மை கெஞ்சிப் பார்த்தாள். கையை விரித்துவிட்டு அவர் நகர்ந்தார்.

சிவம்மைக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. இரவு சாப்பாட்டுக்கும் கணவனின் குடிக்கும் அவள் என்ன செய்வது?

இது அவளுக்கு புதியது இல்லைதான். இருந்தாலும் இப்போது கஸ்டமாகத்தான் இருந்தது.

நிதானித்துக் கொண்டவள் பிள்ளையையாவது பள்ளிக்கு அனுப்பலாம் என்ற யோசனையோடு லயத்தை நோக்கி நடந்தாள்.

# மலையகத்தின் பத்திரிகை முன்னோடி கலைஒளி முத்தையாபிள்ளை

ஆங்கிலேயத் துரைத்தன ஆட்சியின்போதும், சுதந்திரத்திற்குப்பின் தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்களாலும், சபிக்கப்பட்ட மக்களாக - பழிவாங்கப்பட வேண்டிய கூட்டமாக மலையக மக்கள் கருதப்பட்ட நிலையில் அவர்களின் மத்தியிலிருந்து இந்த ஒடுக்குமுறைகளை எதிர்கொள்ள வலிமை வாய்ந்த மக்கள் அரசியல் இயக்கம் எழுச்சி பெறாது விட்டமை இம்மக்கள் வரலாற்றின் துயரமான பகுதி. அம்மக்கள் மத்தியில் ஆழ வேரூன்றியிருந்த தொழிற்சங்க இயக்கங்களோ மலையகத் தொழிலாளரின் நாளாந்தத் தொழிற்பிரச்சினைகளில் துவந்தயுத்தம் நடத்தியதிலேயே தம் முழுப்பலத்தையும் காட்டியிருந்தனர். இந்தத் தொழிற்போராட்டத்திற்கு அப்பால் மலையக சமுதாயத்தின் எதிர்காலம் குறித்தும் மலையகத்தின் இனத் தனித்துவம் குறித்தும் சமூக, அரசியல், கலாச்சாரத் தளத்தில் சிந்தித்த மலையகத்தின் படித்த இளைஞர் பரம்பரை ஐம்பதுகளின் பிற்பகுதியில் மலையக அரங்கில் தோற்றங்காட்டியது. அக்கட்டத்தில் மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம் இதன் எழுச்சிக்குரலாக ஒலித்தது என்பதில் கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

"இந்தப்புது உத்வேகத்துக்கு வேராய் நின்று வலுவும் நீராய் நின்று வளமும் சேர்த்தவை மலையகத்தில் அவ்வப்போது தோன்றிய பத்திரிகைகள். மலையகப் பற்றுக்கொண்டவர்கள் ஒரு ஆர்வத்துடன், ஒரு வெறியுடன் எதுவித பொருளாதாரப் பலமோ, பணம் தேடும் நோக்கமோ இன்றிப் பத்திரிகைகளை வெளியிட்டனர்."

சமூக விழிப்புணர்வை நாடிநின்ற மலையகத்தின் பத்திரிகை வரலாற்றில் 'கலை ஒளி' முத்தையாபிள்ளை தனித்த இடத்தை வகிக்கிறார் என்றால் அது மிகையாகாது. மலையகத்தில் சஞ்சிகைகள், பத்திரிகைகள் நடத்துவது என்பதோ, நூல்கள் வெளியிடுவது என்பதோ அசுர சாதனைதான் என்பதை இந்த வெளியீட்டுத்துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் எவரும் உணர்வர். மலையகத்தின் குறைந்த வாசகப்பரப்பு, பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கும் பொருளாதாரச் சக்தியின்மை, பத்திரிகையை அச்சிடுகையில் ஏற்படும் தனிப்பிரதியின் தலா அடக்க விலையின் உச்சம், முத்திரைச் செலவு, விளம்பரதாரர்களின் ஒத்துழைப்பின்மை போன்ற பல்வேறு பிரச்சினை களையும் கணக்கில் எடுத்துப்பார்க்கும்போது 1962-63 காலப்பகுதியில் "கலை ஒளி" என்ற மாத சஞ்சிகையை மு. முத்தையாபிள்ளை தொடர்ச்சியாகப் பதின்மூன்று இதழ்கள் வரை வெளிக் கொணர்ந்தமையினை ஒரு சாதனை யாகவே கருதவேண்டும்.

விசேஷமாக ஊவா மாகாணத்தில் 'கலை ஒளி'யைத் தெரியாத தோட்டங்களே இல்லை என்று கூறுமளவுக்கு 'கலை ஒளி' சஞ்சிகை

அக்காலத்தில் தோட்டங்களின் வீட்டுப்பெயராக அறியப்பட்டிருந்தது. ஒரு கட்டத்தில் 'கலை ஒளி' 4000 பிரதிகள் அச்சிடப்பட்டன என்ற தகவலை இப்போது நினைவு மீட்டிப் பார்க்கையில் பிரமிப்பு ஏற்படவே செய்கிறது.

பதுளை, இல:6, மயிலகஸ்தன்னை வீதி முகவரியிலிருந்து வெளியான கலை ஒளி சஞ்சிகையின் பெரும்பாலான இதழ்கள் பதுளை காந்தி அச்சகத்திலேயே அச்சிடப்பட்டன. பெரிய அளவில் வெளியான அதன் பதின்மூன்றாவது இதழ் மட்டுமே கொழும்பில் அச்சிடப்பட்டு வெளியானது.

காந்தி, கவி தாகூர், பாரதி, ஸ்டாலின், லெனின், நேரு ஆகியோரின் படங்களை முகப்பு அட்டையில் தாங்கி 'கலை ஒளி' சஞ்சிகை வெளியாகி யுள்ளது.

வெலிமடை கவிஞர் குமரன் 'கலை ஒளி' சஞ்சிகையில் எழுதிய "ஊற்றிவிட்டார் தேயிலைக்கே உதிரத்தை நீராக்கி" என்ற கவிதை பிரசித்தம் பெற்ற கவிதையாகும். ப. வடிவழகன், தமிழோவியன் போன்றோரின் ஆக்கங்களும் 'கலை ஒளி'யில் இடம் பெற்றுள்ளன.

"தமிழர் வரலாற்றில் தாலி" போன்ற சீர்திருத்தவாத ஆய்வுக்கட்டுரை களுக்கும் 'கலை ஒளி' களம் அமைத்துள்ளது. "குறளின் குரல்" என்ற கட்டுரைத்தொடர் இச்சஞ்சிகையில் திருக்குறளின் அறக்கருத்துக்களை விளக்கும் பாங்கில் அமைந்திருக்கிறது. "கேள்வி-பதில்" பகுதி கலைஒளியை வாசகர் மத்தியில் எவ்வளவு பிரபல்யமாக்கியுள்ளது என்பதைப் பல்வேறு தோட்டப்பகுதிகளில் இருந்து வந்து குவிந்த கேள்விகள் தெளிவு படுத்துகின்றன. "அறிவு வளர்ச்சிப் போட்டி" என்ற குறுக்கெழுத்துப் போட்டி நிறைந்த அளவில் வாசகர்களை 'கலை ஒளி'க்குச் சேர்த்துக் கொடுத்துள்ளது. கலை ஒளியில் வெளியான வாசகர் கடிதங்கள் பரந்த அளவில் அது ஆதரவு பெற்றிருந்தமையையே பிரதிபலிக்கிறது. பதுளைக் கச்சேரிக்கு அடுத்ததாக 'கலை ஒளி'ப் பத்திரிகை அலுவலகத்திற்கே ஆகக்கூடிய கடிதங்கள் வருவதாகப் பதுளைத் தபால்நிலைய அதிபர் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவித்திருப்பதும் கலை ஒளியின் பரந்துபட்ட வாசகர் ஆதரவைத் தெரிவிக்கும்.

கனவரல்ல, பசறை, தெமோதரை, அப்புத்தளை, எலதலை போன்ற தோட்டங்களில் கலை ஒளியை எடுத்துச்சென்று லயங்களில் தொழிலாளர்கள் மத்தியில் அவர்களுக்கு முத்தையா பிள்ளை சஞ்சிகையை வாசித்துக் காட்டியுமிருக்கிறார். தனிப்பிரதியின் விற்பனையில் கலை ஒளி பெரிதும் தங்கியிருக்கவில்லை. பத்திரிகைச் சந்தாக்களின் பலத்திலேயே கலை ஒளி தொடர்ந்து இயங்கியது. தொழிலாளர்கள், தோட்டத்துப் பாடசாலை ஆசிரியர்கள், கிளார்க்மார், டீமேக்கர் போன்ற சகல தரப்பினரதும் ஆதரவை அவர் பெற்றுக் கொண்டிருந்தார். அவரின் எளிமையான பண்புகளும் இனிமையாகப் பழகும் சுபாவமும் அவருக்கு இப்பேராதரவைத் தேடிக் கொடுத்திருக்கிறது.

முத்தையாபிள்ளை பத்திரிகையை அச்சிட்டு விட்டு மூலையில் கட்டிவைத்துக் கொண்டிருப்பவரல்ல. பத்திரிகையை அடித்துக் கொண்டு போய் ஒரு நூறு பேரிடம் கூட விற்றுக்கொள்ள முடியாதவர்கள் எப்படிப் பத்திரிகை முயற்சிகளில் இறங்க முடியும் என்று முத்தையா பிள்ளை அடிக்கடி கூறுவதுண்டு. கலை ஒளி வாசகர்கள் அனைவரையுமே அவர் தனிப்பட அறிவார். ஒரு மாதம் விட்டு மறுமாதத்தில் என்றாலும் கலை ஒளி பத்திரிகையின் வாசகர்களை அவர் தோட்டத்தில் சென்று சந்திக்காமல் விட்டதில்லை. பத்திரிகைக்கும் வாசகருக்குமிடையே கலை ஒளி முத்தையா பிள்ளையைப் போல் நேரடியான-நெருங்கிய பிணைப்பைப் பேணியவர்களைப் பத்திரிகைத்துறையில் அரிதாகவே காணமுடியும்.

சலங்கண்டியில் கண்டக்டராகப் பதவி வகித்ததிலிருந்து அவர் நிறையத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். வெலிமடையில் காட்டப்பெட்டித் தோட்டத்திற்கருகில் அவரது மனைவி சிவமாலையின் வழியில் ஐந்து ஏக்கர் தேயிலைத் தோட்டம் அவருக்கு இருந்தது. 1957ல் “சில்வா எஸ்டேட்” என்று பதுளை கணுபெலேல்ல வீதி மார்க்கத்தில் பதுளுஓயா ஆற்றுக்கு அப்பால் தள்ளியிருந்த 40 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தையும் சொந்தமாய் நடத்தியிருக்கிறார். எஸ்டேட் சப்ளையராக இருந்திருக்கிறார். பெரும் நஷ்டங்களில் முடிந்த இத்தொழில்களுக்குப் பின்னாலும் அயராது அவர் மேற்கொண்ட சுயதொழில் முயற்சிகள் அனந்தம். ஆனால் இந்தத் தொழிலால் எல்லாம் யாரும் இவரை அறியமாட்டார்கள். ஆக ஒன்றரை வருடம் மட்டுமே நடத்திய ‘கலை ஒளி’ பத்திரிகையின் பெயராலேயே அவர் இறுதிக்காலம் வரையிலும் அறியப்பட்டமை அவரது பத்திரிகைச் சாதனையையே கோடிட்டுக் காட்டுகிறது. எவ்வளவு ஆத்மார்த்தமாக அவர் தனது பத்திரிகையில் ஈடுபாடு காட்டியிருக்கிறார் என்பதனையே இது புலப்படுத்துகிறது.

அமரர் மு. முத்தையாபிள்ளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் வடகாடு கிராமத்தில் பிறந்து, புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் கல்வி கற்றவர். இக்கிராமத்திலிருந்து ஆங்கிலக்கல்வி பயின்ற முதல் நபர் இவரேயாவார். கல்வியை முடித்துக்கொண்டு இலங்கை வந்து தோட்டத்தில் கண்டக்டராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார்.

“பெருந்தோட்டங்களில் உத்தியோகம் பார்ப்பவர்களுக்குத் தெரியும் ‘கண்டக்டர்’ பதவி பற்றி. அந்தப் பதவியை நம்மவர்கள் வகித்தால் கண்டக்டர். வெள்ளைக்காரன் வகித்தால் எஸ்.டி அதாவது ‘சின்ன தொரை’. தொழிலாளர்களுடனான நேரடித் தொடர்பும் துரைமார்களுடனான நேரடிப் பொறுப்பும் வாய்ந்த ஒரு இக்கட்டான பதவி இது. மேலேயும் அடி கீழேயும் அடி என்னும் மத்தளத்தன்மை பொருந்திய உத்தியோகம். மனிதாபிமானம்-ஈவிரக்கம் கொண்டவர்களால் நீண்டநாள் நின்று பிடிக்க இயலாத உத்தியோகம்!” என்று இந்தக் கண்டக்டர் பதவியை விபரிக்கிறார் மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப். கதிர்காமக்

கந்தனைத் தரிசிப்பதற்காகத் தனக்கு லீவு வேண்டும் என்று கேட்டு தோட்டத்துரை அனுமதி கொடுக்க மறுத்ததற்காக தனது கண்டக்டர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு தோட்டத்தை விட்டு வெளியேறிய கிளர்ச்சிக்காரராக இவரை நாம் காண முடிகிறது. இதற்குப்பின்னால் எந்தக்கஷ்டங்களின் மத்தியிலும் யாரிடத்திலும் வேலை பார்க்கிற ஒருவனாக அவர் என்றைக்குமே இருந்ததில்லை. எவ்வளவு கஷ்டநஷ்டங்களைச் சுமந்தபோதிலும் அயராத ஒரு சுயதொழில் முயற்சியாளனாகவே அவர் இறுதிவரை இருந்திருக்கிறார்.

விடாமுயற்சி, கடுமையான உழைப்பு, நேர்மை, நாணயம் என்பன இவர் வாழ்வின் இறுதிவரை கைக்கொண்ட நன்னெறிகளாயிருந்தன. எத்துணை கஷ்டங்களிலும் செம்மை சான்ற வாழ்க்கையை மேற்கொண்ட உயர்ந்த மனிதன் அவர். நாணயத்தில் வெகு சுத்தமானவர். போலிப் பெருமைகளிலும் ஆடம்பரங்களிலும் இம்மியும் நாட்டம் செலுத்தாதவர். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்வதையும் ஊதாரித்தனமான செலவுகளைப் பெருமையாக நினைப்பதையும் அவர் அறவே வெறுத்தார். கடுமையான உழைப்பும் கண்ணியமான வாழ்க்கையும் அவருடைய லட்சியமாயிருந்தது. அந்த வகையில் அவரிடம் ஒருவித protestant ethic இருந்தது. இனிய புன்னகையுடன், வீட்டுக்கு வந்தவரை வரவேற்று விருந்தோம்பி உபசரிக்கும் பெரும் பண்பு அவரிடம் இறுதிவரை இருந்தது.

எந்தத்தொழிலிலும் கஷ்டப்பட்டுத் திறமை காட்டி உழைத்தோரை அவர் பெரிதும் மதித்தார். அவர் ஒரு எதிர்நீச்சல்காரர். "ஒரு இறாத்தல் சீனியை ஒழுங்காய்ச்சுற்றி நிறுத்துக் கொடுக்கத்தெரியாத" பேர்வழிகளெல்லாம் முதலாளிகள், வியாபாரிகள் என்று உலவியதை அவர் பார்த்துச் சிரித்திருக்கிறார். "முட்டாள் பயலையெல்லாம் தாண்டவக்கோனே - காசு முதலாளி ஆக்குதடா தாண்டவக்கோனே" என்ற பாடலை அவர் சிரித்துக்கொண்டே சொல்லுவதை நேரில் கேட்க வேண்டும்.

அரசியற்கொள்கையில் அவர் காந்தியத்தைத் தழுவி நின்றார். காந்தியடிகளை அவர் வையந்தழைக்க வந்த மாமணியாகவே கருதினார். காந்தியடிகளின் "சத்திய சோதனை"யும் ராஜாஜியின் "சிறையில் தவம்" என்ற நூலும் முத்தையாபிள்ளையின் ஆதர்சு நூல்களாகும். அரிச்சந்திரனின் வாழ்க்கை அவர் நெஞ்சில் நிறைந்த ஒன்று. காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து அவர் இதனைச் சிலாகிக்கக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். காந்தியடிகளைக் கடுமையாகச் சாடி ஒருவர் காந்தியடிகளிடம் கடிதம் எழுதிக் கொடுத்தபோது 'உங்கள் கடிதத்தில் பிரயோசனமாயிருந்த பொருள் அந்தக் குண்டூசி மட்டுந்தான், அதை நான் எடுத்துக்கொண்டேன்' என்று அவர் சிரித்துக் கொண்டே பதில் சொன்னதை அலுப்புச் சலிப்பில்லாமல் முத்தையாபிள்ளை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். காந்தியடிகளின் வாழ்க்கையில் இப்படிப் பல கதைகளை நிறையச் சொல்லிக் கொண்டிருப்பார். இந்தியத் தேசியத்தின் விளைபொருளான

முத்தையாபிள்ளை காந்தி, நேரு, இந்திரா காந்தி போன்றோரில் பெரும் அபிமானங் கொண்டிருந்ததில் வியப்படைய எதுவுமில்லை.

காந்தியடிகளின் உப்புச்சத்தியாக்கிரகப் போராட்டம் அவர் நெஞ்சிற் பதிந்துபோன மிக முக்கிய அரசியல் போராட்டம் எனலாம். அறநெறியிலும், ஆத்மீகத்திலும் நம்பிக்கை கொண்டவர்களின் கையில் ஒரு நாட்டு அரசியல் நிர்வாகம் அமைவதுதான் சிறந்ததென்று அவர் கருதினார். நேரு, ராதா கிருஷ்ணன், ராஜாஜி போன்ற அறிஞர்களை அவர் மிக உயர்வாகப் போற்றினார்.

பின்னாளில் அவர் தமிழகத்தில் வாழ்ந்த வேளையில் புதுக்கோட்டையில் வெள்ளையும் கதருமாய் வயதான ஒரு காங்கிரஸ்காரர், “போன முறை ஊரில் சாராய ஏலம் அ.தி.மு.க.விற்குப் போய்விட்டது; இந்த முறை காங்கிரஸிற்குத்தான் கொடுத்தாக வேண்டும். அதுதான் முறை” என்று கோரியபோது காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு கேவலமாகச் சீரழிந்து போய்விட்டார்கள் என்று வியப்புற்றார்.

தமிழகத்தில் தலைவிரித்தாடும் லஞ்சத்தையும், அதிகாரவர்க்கத்தினர் இந்தியா போன்ற ஏழைநாட்டில் பொதுமக்கள் மீது காட்டிய அதிகாரத் திமிரையும், தமிழக அரசியல்வாதிகளின் போலித்தனத்தையும் பணத்தைத்தவிர வேறு எந்த சமூக தர்மங்களுக்கும் விழுமியங்களுக்கும் இடமில்லாத அளவிற்குச் சீரழிந்து போன இந்தியக் கிராமங்களின் நிலையைக் கண்டும் அவர் பெரும் விசனமுற்றார். புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் தாயகம் திரும்பிய மலையகத்தமிழர் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திமிர்த்தனமாகக் கதைக்க முற்பட்டபோது, “நீ மக்களுக்கு வேலை செய்யும் அரசாங்க ஊழியன் மட்டும்தான்” என்று கொதித்துப்போய், வெள்ளை வேட்டி, சட்டையில் அந்த மெலிந்த மனிதர் ஆங்கிலத்தில் சத்தம் போட்டபோதெல்லாம் முத்தையாபிள்ளையின் முத்திரையை அங்கு காணலாம்.

நமுனுகுலை மலையடிவாரத்திலிருந்து தேயிலைத் தோட்டங்கள் வரம்புகட்டித் தொடங்குவதைப் பார்த்து இந்தப் பெரிய காடு, மலைப்பகுதிகளைத்தான் தொழிலாளர்கள் எப்படி அழித்துக் கஷ்டப்பட்டு உருவாக்கியிருப்பார்கள் என்று ஒவ்வொரு முறையும் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிவார்.

1958 மே மாதம் இலங்கையில் நடந்த தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலை அவர் நெஞ்சில் ஆறாத ரணத்தை ஏற்படுத்தியிருந்தது. கந்தகெட்டியவிலிருந்து வந்திறங்கிய சிங்களக் காடையர்கள் ஹாலி-எல, பதுளை போன்ற இடங்களில் நடத்திய வெறியாட்டம் அவர் மனதில் பெருங்கிலேசத்தை ஏற்படுத்தியிருந்தது. 1976, 1981 என்று மலையகத்தில் தொடர்ந்து இடம்பெற்ற இனக்கலவரங்கள் 1983ல் விசுவரூபம் எடுத்தபோது அவர் மனம் மிகத்தளர்ந்து போனவராயிருந்தார். “பால் வடியும் பதுளை” எனப்பட்ட பதுளை நகர் 83 இனக்கலவரத்தின்போது

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நகர்களில் ஒன்று. பதுளையில் இடம் பெற்ற கோர இனப்படுகொலைக்குப் பலியான 52 பேருமே - சிறு குழந்தைகளைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் அவ்வளவு பேருமே அவர் அன்றாடம் கண்டு, கதைத்து உறவு கொண்டிருந்தவர்களே. அந்த 52 பேரில் அவர் அறியாதவர்கள் யார்?

இராணுவ ட்ரக்குகளில் வீட்டிலிருந்து ஏற்றப்பட்டு பதுளை சரஸ்வதி வித்தியாசாலையில் அகதியாகச் சென்று சேர்ந்த துயரநிகழ்வு சுயமரியாதை மிகுந்த அந்த மனிதனின் மனதில் பெருங்கிளர்ச்சியை ஏற்படுத்தியது. காந்தியத்திலும் அறநெறியிலும் நம்பிக்கை மிகக்கொண்டிருந்த அவரால் இந்த வன்முறைகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தமிழகம் திரும்பிய பின்னருங்கூட மலையக மக்களின் இன்னல் குறித்து அக்கறை கொண்டவராகவேயிருந்தார். தாயக மண்ணை நம்பித்தமிழகம் திரும்பிய மலையகத் தொழிலாளர்கள் தமது பூர்விக மண்ணிலும் வேண்டப் படாதவர்களாக நடத்தப்படுவதைக் கண்டு வருந்தினார். அறியாமை மலிந்த இந்த மக்கள் கூட்டத்தின் மீது கலெக்டர்களும் வேறு அதிகாரிகளும் திமிர்த்தனங்காட்டும் மனோபாவத்தைக் கண்டு கொதித்திருக்கிறார்.

மலையக சமுதாயம் கல்வியில் முன்னேற்றங்காண வேண்டும் என்பது அவரது பேரவாவாகவிருந்தது. பெண்கள் கல்வி கற்று முன்னேறுவதிலும், ஆண்களுக்கு நிகராய் பொதுவாழ்வில் பங்கு கொள்வதிலும் அவர் எப்போதும் ஆர்வமாய் இருந்திருக்கிறார். கல்வியில், ஆற்றலில் திறமை காட்டிய பெண்களுக்கு அவர் தனிமதிப்புக் கொடுத்திருக்கிறார். பெண்களுக்கு முதன்மை அளிக்க இன்றும் அறிவுஜீவிகளே தயங்கும் நிலையில் முத்தையாபிள்ளை அவர்கள் மிக நவீனமான மனிதராகவே தோற்றந்தருகிறார்.

வாழ்க்கையின் நீடித்த போராட்டங்களும் அவரின் முழு உழைப்பையுமே வேண்டி நின்ற அவரது தொழில் முயற்சிகளும் தொடர்ந்து இலக்கியவுலகில் சிரத்தையைக் குவிக்க அவரை அனுமதிக்கவில்லை. எனினும் தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். ராமையாவின் நூல் வெளியீட்டுக் கூட்டங்களில் அவர் மிகுந்த அக்கறையோடு கலந்து கொண்ட முன்வரிசைக்காரராகவே இருந்திருக்கிறார்.

முல்லைக்குத் தேர் வழங்கும் மென்னுணர்வு அவரிடமிருந்தது; நம்பி வந்தோருக்கு உதவி நல்கும் விசாலமனம் அவரிடத்திலிருந்தது. நேர்மை மிகுந்த அந்தத்தூய மனிதனின் எளிமையான வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறையவேயுள்ளன. மனுக்குலம் மாமனிதர் களாலும் வெற்றிப்பிரபல்யங்களை அடைந்தவர்களாலும் மட்டுமே வழிநடத்திச் செல்லப்பட்டு விடுவதில்லை. முத்தையாபிள்ளை போன்ற மனிதர்களின் அறநெறி சார்ந்த வாழ்க்கை நடத்தைகளால்தான் மனுக்குலத்தின் ஜீவன் பேணப்படுகிறது.

# எழுத்தாளர்களின் விபரங்கள்

**அல் அஸூமத்**




மாத்தளை டிக்கிரியா தோட்டத்தில் பிறந்த இவருக்கு பெற்றோரிட்ட பெயர் வேலாயுதம். பிறகு வந்துவிட்ட பெயர் அல் அஸூமத். 1957ம் ஆண்டில் இலக்கிய உலகில் மரபுக் கவிஞராக அறிமுகமான இவரின் கவிதைகள் "புலராப் பொழுதுகள்", "மலைக்குயில்" ஆகிய தொகுப்புகளாக வெளி வந்துள்ளன. "அறுவடைக் கனவுகள்", "அமார்க்க வாசம்" என்பன "தினகரனி"ல் வெளியான இவரது நாவல்கள். கிட்டத்தட்ட முப்பது சிறுகதைகள் வரை எழுதியுள்ள இவர் "கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு" வழங்கிய முதற்பரிசுச் சிறுகதைக்கான (1993) 7500/- பரிசுத் தொகையை சுவீகரித்துக் கொண்டவர்.

**மாத்தளை வடிவேலன்**




எழுபதுகளில் எழுத ஆரம்பித்த இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் தொடுவானம், நுனிக் கரும்பு ஆகிய தொடர்கதைகளையும் எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. "மலையக பாரம்பரியக் கலைகள்" (1992) என்ற இவரது கள ஆய்வுநூல் இத்துறையில் ஒரு முன்னோடி முயற்சியாகும். வீரகேசரி நடத்திய நான்காவது மலையகச் சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.

**கே. கோவிந்தராஜ்**



கொழும்பில் அச்சக முகாமையாளராகப் பணி புரியும் இவர் நாடகாசிரியராயும் உதவி இயக்குநராயும் இருந்து "ரூபவாஹினி"யில் தயாரித்தளித்த "மலை ஓரம் வீசும் காற்று" என்னும் தொலைக்காட்சி நாடகத் தொடர் இவருக்கு பிரபல்யத்தைத் தேடிக் கொடுத்தது. சிறுகதைகள், குறுநாவல், நடைச் சித்திரங்கள் என்பன இவர் ஈடுபாடு கொண்ட ஏனைய துறைகள். மலையக நூல் வெளியீட்டு முயற்சிகளில் கடுமையாக உழைத் தவர். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் செயலாளர்.

**மு. சிவலிங்கம்**



அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவர் இருபத்தைந்து சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ளார். இவரின் "மலைகளின் மக்கள்" என்ற சிறுகதைத் தொகுதி 1991ம் ஆண்டிற்கான சாகித்தியப் பரிசினைப் பெற்றுக் கொண்டது. நாடகங்கள், நடைச்சித்திரங்கள், கவிதை, கேலிச்சித்திரங்கள், சினிமா ஆகியன இவர் ஈடுபாடு கொண்ட பிற துறைகள். வீரகேசரி நடத்திய மூன்றாவது மலையகச் சிறுகதைப் போட்டியில் (1966) முதற்பரிசு பெற்ற சிறுகதை இவருடையதாகும்.

**மல்லிகை சி. குமார்**




அறுபதுகளில் எழுத ஆரம்பித்த இவர் மலையகத்தின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவராவர். முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். கவிதை, ஓவியம், நாடகம் ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்ட இவரின் ஆக்கங்கள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. 1993 தேசிய சாகித்திய விழாவில் "தமிழ்மணி" விருது பெற்றார்.

**புலோலியூர் க. சதாசிவம்**



புலோலியூர் புற்றளையில் 1942ல் பிறந்த இவர் மருத்துவராக மலைநாட்டுடன் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்டவர். "யுகப்பிரவேசம்" (1973) இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு. "மூட்டத் தினுள்ளே..." (1978), "நாணயம்" (1981) ஆகிய நாவல்கள் இவரைச் சிறந்த நாவலாசிரியராகவும் அறிமுகப்படுத்தியுள்ளன. தீபம், தாமரை, வீரகேசரி ஆகிய சஞ்சிகைகளில் எழுதியுள்ள இவர் பல்வேறு சிறுகதைப் போட்டிகளில் பரிசில்களையும் பெற்றவர்.

**பெ. ராஜதுரை**




நுவரெலியா மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் ஈடுபாடு மிகுந்தவர். "தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்" என்ற இவரின் சிறுகதை இவருக்குப் பாராட்டைத் தேடிக் கொடுத்தது. இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் தற்பொழுது இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதியாண்டில் பயின்று வருகிறார்.

**சுகந்தி வெள்ளையகவுண்டர்**



நுவரெலியா கந்தப்பளை – கோட்லோஜ் தோட்டத்தைச் சேர்ந்த இவர் நு/நல்லாயன் மகளிர் கல்லூரியில் பயின்றவர். இலக்கியத் துறையில் ஈடுபாடு மிகுந்த இவரின் முதற் சிறுகதையே இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

**இரா. பரமேஸ்வரன்**



ஹட்டன் கணக்காளர் நிறுவனத்தில் பணிபுரியும் இவரின் சிறுகதைகள், இலக்கிய, சமயக் கட்டுரைகள் ஈழத்துத் தினசரிகளில் பிரசுரம் பெற்றுள்ளன. 1959ம் ஆண்டு வீரகேசரியும் இலங்கை தமிழ் மறைக் கழகமும் இணைந்து நடத்திய திருக்குறள் கட்டுரைப் போட்டியில் தங்கப்பதக்கம் பரிசு பெற்றுள்ளார்.

**மெய்யன் நடராஜா**



பூண்டுலோயாவைச் சேர்ந்த இவரின் கவிதைகள், கட்டுரைகள் ஈழத்துப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. மலையகத்தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளிலும் (1993) பரிசில்கள் பெற்றுள்ளார். "இஸ்லாமிய மித்திரன்" என்னும் மிகப்பழைய இஸ்லாமியப் பத்திரிகையைத் தேடிக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தியவர்.

**ஏ.எஸ். பாலச்சந்திரன்**



உடபுஸ்ஸல்லாவ தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 1992ம் ஆண்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றுள்ளார். இவரது கவிதைகளும் சிறுகதைகளும் வானொலியிலும் பத்திரிகையிலும் இடம்பெற்றுள்ளன.

**நளாயினி சுப்பையா**



கண்டி – தெல்தெனியா ஆசிரியப் பயிற்சி நெறியின் போதனாசிரியையாகவும் வளவிரிவுரையாளராகவும் பணியாற்றிவரும் இவர் நாட்டியம், சங்கீதம், தையற்கலை, ஓவியம், சமையற்கலை ஆகியவற்றிலும் பயிற்சியும் ஈடுபாடுங் கொண்டவர்.

பாலரஞ்சனி சர்மா



பாலரஞ்சனி சர்மா வளர்ந்து வரும் மலையகப் பெண் படைப்பாளர்களில் ஒருவர். மாத்தளை பாக்கிய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான இவர் மாத்தளை ரத்வத்த தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார். ஏற்கனவே பல சிறுகதைகளைப் படைத்துள்ள இவர் ஹைக்கூ கவிதைகள், மெல்லிசைப் பாடல் ஆகிய துறை களிலும் கவனத்தைக் குவித்து வருகிறார்.

த. மயில்வாகனம்



எல்ல-நியூபர்க் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கவிதை, சிறுகதை, ஓவியம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். "சமர்ப்பணம்" சிறுகதை பிரசுரம் பெறும் இவரின் கன்னிப்படைப்பு.

ரோஹிணி முத்தையா



நாவலப்பிட்டி கந்தல்ஓய தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணிபுரியும் இவர் இலங்கை வானொலிக்காகக் கடந்த மூன்று ஆண்டுகளாக எழுதி வருகிறார். இருபதுக்கும் மேற்பட்ட இவரின் சிறுகதைகள் ஒலிமஞ்சரி, மங்கையர் மஞ்சரி, கல்விச்சேவை நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுள்ளன.

பேபிராணி இமானுவேல்



கொழும்பில் தனியார் துறை நிறுவனத்தில் பணிபுரியும் இப்பெண் எழுத்தாளரின் கன்னிப்படைப்பு இது. எழுத்தில் தீவிர ஆர்வங் கொண்ட இவர் தொடர்ந்து எழுதுவதில் சிரத்தை கொண்டவர்.

மலையகத்தின் பத்திரிகை முன்னோடியான பதுளை கலைஒளி முத்தையாபிள்ளை நினைவாக நடத்தப்பட்ட மலையகச் சிறுகதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட பதினாறு எழுத்தாளர்களின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

"உண்ட மயக்கத்திற்கும் உறக்கத்துக்கு மிடையிலான மெத்தை மிதப்பு களுக்கும் போகமறுக்கும் பொழுதைப் போக்கிக் கொள்வதற்கும் எழுதப் படும் கதைகள் அல்ல இவை.... சிறுகதை என்னும் கலைவடிவிற்குள் ரத்தமும் சதையுமாகக் காட்டப்படும் மலையகத்து வாழ்க்கைப் பின்னங்கள்."

– தெளிவத்தை ஜோசப்

"வீட்டுக்கொல்லையின் பின்பக்கம் மண்வெட்டியால் தோண்டிப் பார்க்கையில் காதறுந்த செருப்பு, வெற்றுப் பவுடர் சுண்டு, பூரான், பூச்சி, நெளிந்த கும்பா, பிளாஸ்டிக் பை, அப்பா ஆறு வருஷத்துக்கு முன் தொலைத்த தங்க மோதிரம் எல்லாமே அகப்படுகிற மாதிரித்தான் இதுவும். இத்தொகுப்பில் எங்கோ ஒரு மோதிரம் இருக்கிறது என்ற எங்களின் நம்பிக்கை வீண் போகாது என்று நம்புகிறோம்."

– எச்.எச். விக்ரமசிங்க

கலைஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு